# கலாலக்ஷ்மி

## கதைகள்



# கலாலக்ஷ்மி கதைகள்

கலாலக்ஷ்மி தேவராஜா

கலா லயம் பதிப்பகம்

# கலாலக்ஷ்மி கதைகள்

கதைகளும் குறிப்புகளும்
- கலாலக்ஷ்மி தேவராஜா

© அபிலாஷா தேவராஜா

செம்மனச்செல்வி என்ற புனைபெயரில் ஒக்ரோபர் 2017இல் வெளிவந்த மகரகாவியம், பூமராங், றோசாப்பூ ஆகிய நூல்களில் இடம்பெற்ற கதைகளும் வேறு புதிய கதைகளும்

**நினைவில் வாழும் கலாலக்ஷ்மி தேவராஜாவின் ஈராண்டு நினைவாக**

முதல் பதிப்பு : 28, மார்ச் 2021
பக்கம் : 228
பிரதி : 1000
விலை : ரூ 400/=

**வெளியீடு:**

கலா லயம் பதிப்பகம்
இல. 68, நீதிமன்ற வீதி,
மல்லாகம்,
இலங்கை.
E.Mail: sothevarajah@gmail.com

**அட்டை ஓவியம்:**

ஓவியர் ஆசை இராசையா

**அட்டை வடிவமைப்பு:**

எஸ். ரி. அனுஜன்

**பக்க வடிவமைப்பு:**

சிவ பரதன்
செருக்கற்புலம், சுழிபுரம்

**அச்சு:**

ஜே.எஸ். பிறின்டேஸ்,
சில்லாலை வீதி
பண்டத்தரிப்பு

**ISBN :**

# பதிப்புரை

*செம்மனச் செல்வி என்ற புனைபெயரில் கலாலக்ஷ்மி தேவராஜாவின் கதைகள் ஒக்ரோபர் 2017இல் மகரகாவியம், பூமராங், ரோசாப்பூ ஆகிய நூல்கள் மறுமலர்ச்சி மன்ற வெளியீடாக வந்தன. வாசகரின் வரவேற்பைப் பெற்ற இக் கதைகள் சமூக சாதிய பெண்ணிய அடக்குமுறைகளை சாடுவனவாக அமைந்திருந்தன.*

*28.3.2019 இல் எதிர்பாராத விதமாக அவரது இழப்பு ஏற்பட்ட போதும் அழியா நிலையில் அவரது படைப்புகள் ஊடாக அவரது நினைவுகள் எமது நெஞ்சங்களில் நிறைகின்றன.*

*ஓராண்டு நினைவாக அவரது பிரசுரமான கதைகளையும் கையெழுத்துப் பிரதிகளாக இருந்த படைப்புகளையும் தொகுத்து வெளியிடும் எமது முயற்சி உலகெங்கும் பரவிய கொரோனா தாக்கத்தால் இயலாமல் போயிற்று.*

*தற்போது எமது முயற்சி கைகூடி அவரது ஈராண்டு நினைவுநாளில் கலாலக்ஷ்மி கதைகள் நூலை உங்கள் முன் சமர்ப்பிக்கின்றோம்.*

*யாழ்ப்பாண பேச்சு வழக்கில் அமைந்த 27 கதைகளும் மகரகாவியம் எனும் குறுநாவலும் பிற குறிப்புகளும் அடங்கிய தொகுப்பாக வெளிவரும் இந்நூலை வரவேற்று வாசித்து சிந்தையில் கொள்வீர் என்று நம்புவதோடு இத் தொகுப்பு வெளிவர அனைத்துவகையிலும் ஒத்துழைத்த அனைவருக்கும் நன்றி நவில்கிறோம்.*

**கலாலயம் பதிப்பகம்**
**நீதி மன்ற வீதி,**
**மல்லாகம்**

*28.03.2021*

# உள்ளடக்கம்


1. பிஞ்சுகள் ..... 5
2. பிள்ளைக் கறி ..... 12
3. ஞானப் பழம் ..... 14
4. புரிதல் ..... 17
5. செல்விருந்தும் வருவிருந்தும் ..... 22
6. இரத்த உறவுகள் ..... 29
7. பற்று ..... 34
8. ஒரு ஒப்புதல் வாக்குமூலம் ..... 49
9. பக்கத்து சீற்றிலை பாட்டி உக்காந்தா அல்லது மாற்றங்களை வேண்டி ..... 69
10. ஒரு டாக்குத்தரின் டயறியிலிருந்து ஒரு பக்கம் ..... 76
11. அங்கிடுதத்திகள் ..... 80
12. கந்தசஷ்டியும் கணவனும் ..... 82
13. விக்ரோறியா ..... 94
14. இறுதி விருப்பம் ..... 100
15. பூமராங் ..... 113
16. மெசி ஒவ்வா  நன்றி, போயிற்று வாறன் ..... 119
17. எங்கள் ஊர் சாமி ..... 126
18. எல்லை தாண்டல் ..... 136
19. அம்மா அறிவது ..... 144
20. பிளீஸ் கிவ் மீ 20000/= றுப்பீஸ், ஐ வோண் ரூ சேன்ஜ் மை...! ..... 154
21. துளசி ..... 158
22. ஓ சாரா நீற்றா! ..... 160
23. இராஜதிருமணம் ..... 162
24. ஆண்டாள் பாசுரங்கள் ..... 171
25. றோசாப்பூ ..... 174
26. மயிர் நீப்பின் அல்லது இடைவெளி ..... 179
27. ஆச்சியும் மண்ணாங்கட்டியும் ..... 189
28. மகரகாவியம் ..... 198
29. குறிப்புகள் ..... 216
30. ஒஸ்ரியோ ஆதரைட் ..... 221
31. திண்...டாட்...டம் ..... 224
32. நான் யார் ..... 227

# பிஞ்சுகள்

*காலை வேளை ஞாயிறு பேப்பர் பார்க்கும் ஆவலில் வீரகேசரிப் பேப்பருடன் முன் விறாந்தையில் குந்துகிறாள் இராசம்.*

*04.03.2007 கேசரி கதம்பத்தில் ஒரு கட்டுரைத் தலைப்பு. சிறுவர் துஷ்பிரயோகங்களைத் தடுக்க பெற்றோரின் பாதுகாப்பு அவசியம் என்பது. அதில் பிறருடைய நடத்தைகளால் சிறுவர்கள் எவ்வாறான பாதிப்புக்குள்ளானாலும் அது சிறுவர் துஷ்பிரயோகம் தான். சிறுவர்களைத் தூற்றுதல், அடித்தல், பாலியல் ரீதியாகத் துன்புறுத்தல், உளரீதியாகத் துன்புறுத்தல் என்பவை பிரதானமாக அடங்குவதுடன் அவர்களின் கருத்துக்களுக்கு செவிமடுக்காமல் புறக்கணித்தலும் சிறுவர் துஷ்பிரயோகம் தான்.*

*இத்தலைப்பை இராசம் பார்த்ததும் அவள் நினைவு பின்னோக்கியும், முன்னோக்கியும் தடம் புரள்கிறது. இராசம் சின்னப்பிள்ளை, கனகாலத்துக்குப் பின் நான்கு அக்காமாருக்குப் பின் பிறந்த கடைசித் தங்கச்சி. அவளுக்கு வேலை விளையாட்டு, அக்காமாரின் பிள்ளைகளைத் தூக்கல். இவளின் தகப்பனாரோ இவளோடு சினந்தபடி இருப்பார். இவள் தகப்பன்ர கண்ணுக்குப் படாமல் சந்தோஷமாய் இருந்து வருகிறாள். அவர் வெறி போட்டால் எந்த நேரமும் இவளைக் கூப்பிடுவார். கூப்பிட்டு நித்திரை ஆகும் வரையும் பாடு, ஆடு எனக் கேட்பார். நரைத் தலைமயிரை தன்னுடைய தலையிலை பிடுங்க விடுவார்.*

*சுயமாக உள்ளபோது இதென்ன உன்ர தலை, பிடிச்சு அரிஞ்சு போடுவன். வாழைநார் எடுத்துத்தான் கட்டுவன் எண்டு ஏசுவார். இராசத்துக்கு அப்ப தலையைப் பிடிச்சு கூட்டிக் கட்டத் தெரியாது. தேத்தண்ணி போட்டரச் சொல்லுவார். அவளுக்கு*

அடுப்பு மூட்டவோ, எரிக்கவோ தெரியாது. ஒரு மாதிரி தேத்தண்ணியை போட்டுக் கொண்டு போய் கொடுத்தால் இதென்ன பேணியின்ர நிறம், பேணியை மினுக்கிக் கொண்டு வா எனத் திருப்பி விடுவார். பேணியை மினுக்கித் தேத்தண்ணியை கொண்டு போய்க் குடுத்தால், தண்ணி ஆறிப்போச்சுதெண்டு கூறி அவள் முகத்திலே சுழட்டி எறிவார். அவள் தான் தேநீர் தயாரித்துக் கொடுத்ததைக் தன் தகப்பனார் பாராட்டுவார் என எதிர்பார்த்துக் கொண்டிருந்த வேளை, எதிர்பாராத கணத்தில் தன் முகத்தில் வீசப்படும் சுடுதண்ணித் தாக்குதலுக்குள்ளாவாள். இது மட்டுமா?

ஒருமுறை வயலில் அரிவிவெட்டு நடைபெற்றுக் கொண்டிருந்தபோது அவளை வயல் நடுவில் போடப்பட்டிருந்த கொட்டிலில் தேநீர் போடும்படி தந்தையார் சொல்கிறார். மழையும் கொட்டுகிது. ஈர விறகு அடுப்பை மூட்டத் தெரியாத இராசம் அடுப்பை மூட்டு மூட்டென்று மூட்ட நெருப்புக் குச்சியை ஒன்றொன்றாகக் கொழுத்தி நெருப்புப் பெட்டிக் குச்சிகளை முடித்து விடவே அவளின் தகப்பனாரால் தன் கன்னத்தில் கையால் பொத்தி அடிக்கப்பட்டு முகத்தினில் காறாப்பித் துப்பப்பட்டவள். அவள் இத் துன்ப மிகுதியில் வீட்டினுள் இருந்த பொலிடோல் போத்தல் மூடியை உடைக்கத் தெரியாததால் தன் தற்கொலை முயற்சியில் தோற்று உயிர் பிழைத்த சிறுமி அவள்.

ஒருமுறை இராசத்தின்ரை ஊர்க் கோவிலிலை திருவிழா நடந்தது. சில திருவிழாக்களுக்கு இராத் திருவிழாவிலை கூத்துகள். சின்ன மேளங்கள், வில்லுப்பாட்டுகள் நடக்கிறது வழக்கம். இராத்திருவிழா இரவு தொடங்கி விடிய விடிய நடக்கும்.

அப்படி ஒரு இராத்திருவிழாவுக்கு கூத்துப் பார்க்கப் போய் வந்த இராசம் அடுத்த நாள் பகல் பாடசாலை இல்லாததால் பகல் நித்திரை கொள்ளுறாள். இடையில் தகப்பனார் அதட்டவே எழும்பியவளை, தகப்பன் கையில் இழுத்துக் கொண்டுபோய் வளவுக்கை இருத்திப்போட்டு அவளின் தலையில் கொழ கொழவெண்டு வாளியால் தண்ணீரை கொட்டுகிறார். நித்திரை அசதியிலிருந்த பிள்ளை திடுக்கிட்டு விழிக்கிறது. அப்பொழுதுதான் அதுக்குத் தெரிகிறது. தனக்கு தகப்பன் நடுவளவுக்கை இழுத்துக்கொண்டு போய் தண்ணியை

கொட்டியதை. ஆருக்குச் சொல்லி அழ. இராசம் தன்பாட்டில் அழுது போட்டு உடுப்பை மாத்துகிறாள்.

இதைப் பார்த்த இராசத்தின் தாய் ஏன் நான் இந்தப் பிள்ளையை உங்களுக்குப் பெறேல்லையோ எனக் கேட்டு அழுகிறாள். அடுத்துப் பிறந்த ஐந்தாவதும் பெண் பிள்ளை என்பதால் தான் இவள் மீது இவ்வளவு வெறுப்போ?

இராசத்தின்ர தகப்பனின் தாய் (அப்பாச்சி) அவவுக்கு பெண் பிள்ளைகள் இல்லை. எல்லாம் ஆண்கள். அவர்கள் திருமணமாகி தம் தம் மனைவிமாரின் வீடுகளுக்கு சென்று வாழ்ந்து வருவதால் தனித்து விட்டப்பட்டவர். ஊரின் எல்லையில் உள்ள வயல் கரையில் தனித்து வாழ்ந்து வருகிறாள். அவாவை சனி, ஞாயிறு விடுமுறை தினங்களில் கட்டாயம் சென்று பார்த்து வரவேண்டும் என்பது இராசத்தின் பொறுப்பு.

ஆனால் அவான்ர வீட்டுக்கு போற வழியிலை புளிய மரங்கள், இலுப்பை மரங்கள், கடிநாயள் எல்லாம் நிக்குது. அதாலை தனிய போறதுக்கு இராசத்துக்கு பயம். அதாலை இராசம், அப்பாச்சி வீட்டை போறதெண்டால் பக்கத்து வீட்டு கூட்டாளிப் பொடியள் பெட்டையளைக் கூட்டிக் கொண்டுதான் போறது வழக்கம். அதுக்கு அவை யின்ரை அம்மா அப்பாட்டை பெமிஷன் எடுத்து கூட்டிக் கொண்டு போகவேணும். பள்ளிக்கூட நாளுகளிலை பால்கஞ்சி, இட்லி, தோசை, பால்புட்டு, பாலப்பம் செய்துவிட்டால் பள்ளிக்கூடம் போகமுந்தி அப்பாச்சிக்கு அந்த சாப்பாட்டைக் குடுத்திட்டுத்தான் பள்ளிக்கூடம் போகலாம்.

ஆனால் பள்ளிக் கூட நாளுகளிலை கூட்டாளியளின்ர பெற்றார் இராசத்தோட ஊரெல்லையிலிருக்கும் அப்பாச்சி வீட்டுக்குப் போக அனுமதி தரார்கள். அவர்கள் அரசாங்க உத்தியோகத்தரின் பிள்ளைகள். அதால அப்பெற்றாருக்கு தம் பிள்ளைகளின்ர படிப்பில அக்கறை கூட. அந்த நாட்களில் இராசம் ஓடி ஓடி நாயைக் கண்டால் வயிரவரே வயிரவரே எண்டு கும்பிட்ட படியும், நாய்க்கு எச்சில் துப்பியபடியும் போவாள். நாயைக் கண்டதும் வயிரவரே வயிரவரே எண்டு வயிரவரைக் கும்பிட்டாலும் நாய்க்கு எச்சில் துப்பினாலும் நாய் கடிக்காதெண்டு இராசத் தின்ர கூட்டாளியள் சொல்வார்கள். புளிய மரம், இலுப்பை மரம் வாற இடங்களிலை றோட்டாலை

ஆரும் போனால் அவர்களுடன் சேர்ந்து போக காத்திருப்பாள். இவ்வாறு காத்து காத்து அப்பாச்சி வீடு போய் வந்து திண்டது பாதி தின்னாதது பாதியாய் பள்ளிக்கூடம் போய் லேற்கம்மர்ஸ் லிஸ்ரில் முழங் காலில் நிண்டு அடிவாங்கி, நான் இனிமேல் பாடசாலைக்கு பிந்தி வர மாட்டேன் என நூறு தடவை, இருநூறு தடவை என தண்டனை வழங்கும் ஆசிரியரின் மனவிருப்புக்கேற்ப தண்டனை வழங்கப்பட்டு வகுப்பிற்குள் போக முதலாம் பாடம் முடிந்து விடும். கணக்குப் பாடம் தான் முதல் பாடமாய் எப்பவும் ரைம் ரேபிளிலை இருக்கும். இதாலை கணக்கிலை இராசம் வீக்.

ஒருமுறை தீபாவளிக்கு புதுச்சட்டை போட்டு பலகாரம் கொண்டு போகேக்கை புளிமரத்தை தாண்ட ஆக்களை காவல் காத்துக்கொண்டு நிண்டாள். ஒருத்தரும் பாதையாலை வராத தால் நிக்க நேரம் போய் மழையும் பிடிக்கவே சாப்பாட்டைத் திருப்பி வீட்டுக்கு இராசம் கொண்டு வந்துவிட்டாள். கொண் டாட்ட நாட்களில் ஆர் ஊரின் எல்லைக்கோ, வயலிற்கோ போகிறார்கள். குடிமனையள் உள்ள இடத்திலை தானே கொண்டாட்டம் நடக்கும். இரவு சாமம் பதினொரு மணிக்கு தகப்பன் வெறிமுறிந்து இராசத்தை எழுப்பி 'அப்பாச்சி வீட்ட போனனீயா' என 'இல்லை' எனக் கூற சாமத்திலும் தகப்பனால் அடிபட்டவள். இராசம் சாப்பாடு கொடுக்கத்தான் போனவள். பயத்தால் பாதை தாண்ட முடியாத அவளது நிலையை அவளது தந்தை உணரத் தவறி விட்டார். போகாமல் திரும்பியதற்கான காரணத்தை தந்தையார் கேட்டு அந்த இடத்திலாவது அவளின் பயத்தைப் போக்கியிருந்தால்!...

ஐந்தாவதாகப் பிறந்த பெட்டை என்பதற்காக மட்டுமல்ல அவளுக்குப் பின் கன காலத்திற்குப் பிறகு பிறந்த அருமை ஆண் பிள்ளைக்கும் கூட.

ஒருமுறை ஆடி அமவாசை விரத நாள். இராசத்தின் தகப்பனார் விரதம். வயல் வேலையை முடித்து வந்த தாயார் விரதக்கார கணவனுக்கு அவசரமாகச் சமைத்துக் கொண்டு நிற்கிறாள். அப்பொழுது இராசத்தின் நான்கு வயது தம்பி 'கோழி என்னண்டு வந்தது' என்கிறான். 'முட்டையிலிருந்து' தாயார் பதில். 'முட்டை என்னண்டு வந்தது' பிள்ளை கேள்வி. 'கோழியிலிருந்து' தாயார் பதில். பிள்ளையின் சந்தேகம் தீராமல்

போகவே அந்த இரண்டு கேள்விகளையும் மீண்டும் மீண்டும் கேட்டு தாயாரின் சேலைத்தலைப்பைப் பிடித்திழுக்கவே வேலை அவசரத்தில் மகனின் அரியண்டம் தாங்காத தாயார் இராசத்தின் தந்தையிடம், ‘தம்பியை ஒருக்காப் பாருங்கோ கரைச்சல் தாறான். சமைக்க விடுறானில்லை’ எண்டு சொல்ல; தந்தையார் குழந்தையை ஒற்றைக் கையைப் பிடித்து தோள் மூட்டுப் பிடுங்கக் கூடியதாய் தூக்கிச் சென்று முன் விறாந்தை இறப்பிலை கட்டித் தொங்கவிட்டுவிடுகிறார். பின் தாயாரும் இராசமும் குளற இரண்டு மூன்று நிமிடத்தால் இறக்கி விடுகிறார். அதன் பிறகு பிள்ளை எந்த ஒரு சந்தேகங்களையும் பெற்றாரிட்டை கேட்டதாக இராசத்துக்கு நினைப்பில்லை.

ஆனால் ஒருமுறை இராசத்துக்கு வயித்துக் குத்து வந்தது. நான்கு, ஐந்து நாளாய் வைத்தியம். இராசத்தினை நல்ல செல்லமாக் கவனிக்கினம். இராசத்துக்கு குறிப்பிட்ட நேரம் வரவும் வருத்தம் வரத் தொடங்கி விடும். ஏழாம் நாள் தகப்பனார் இராசத்தைக் கூப்பிட்டு தனக்கு ‘மந்திரம் தெரியும். அதனாலை வயித்துக் குத்தை உடனை மாத்திக் காட்டுறன்’ என்று கூறி திருநாவுக்கரசருக்கு சூலை நோய் வந்தபோது அவரின் தமக்கையார் திலகவதியார் விபூதி தரித்து நோய் நீக்கியதையும், சம்பந்தப் பெருமான் விபூதி கொடுத்து பாண்டிய மகராஜனின் வெப்பு நோயை நீக்கியதையும் கூறி “மந்திரமாவது நீறு..” எண்ட தேவாரப் பதிகத்தை இராசத்தைக் கொண்டு பாடவைத்து அவளுக்கு விபூதி தரித்த பின்னர் “இப்ப வயித்துக்குத்து இல்லைத்தானே” எனக்கூறி இராசத்தின் வாயால் வயிற்றுக்குத்து உணர்வு மாறியுள்ளதாகக் கூற வைக்கிறார். அடுத்த நாளும் வருத்தம் வரவே இதனை தொடர்ந்து செய்ய வேண்டும் எண்டு சொல்லி மாலை ஆறு மணிக்கு விபூதி மந்திரம் செய்து வருத்தம் மாறிய உணர்வை இராசத்திற்கு ஏற்படுத்தி விடுகிறார்.

இராசத்திற்கு இவ்விடயம் நம்பக் கூடியதாகவும், நம்ப முடியாததாகவும் இருக்கிது. எனினும் தன்ரை மனத்தை மாத்திற சக்தி தன் தந்தையாரிடம் இருப்பதை அவள் உள்ளுணர்கிறாள். இப்பிடியான மனோவசியமான தன் தந்தையார் தன் ஏனைய நடவடிக்கைகளையும் ஏன் இப்பிடியான மனம் நோகாத முறை யைக் கையாண்டு செயற்படுத்த நினைக்கக் கூடாதென்று அவ்வப் போது தன்னுள் அங்கலாய்ப்பாள். இந்நிகழ்வு தவிர

தன் தந்தையாரினால் எந்நிகழ்வுகளிலும் பாராட்டுதலைப் பெறாதவள்.

உதாரணத்திற்கு பரீட்சைப் பெறுபேறுகளைக் காட்டும் போது பெற்ற புள்ளிகளுக்காக பாராட்டுதலைப் பெறாது, பெறாத புள்ளிகளுக்கு திட்டுதல் கிடைப்பதே வழக்கம். ஆங்கிலத்தில் எழுத்துக்கூட்டச் சொல்வார். இராசத்துக்கு பயத்தால் தெரிந்த சொற்களும் பிழை பிழையாக வரத் தொடங்கிவிடும்.

இத் தாக்குதல்களால் தகப்பனில் கிலி கொண்ட இராசம் சாமி கும்பிடும் போதெல்லாம்; ‘இண்டைக்கு ஐயா என்னை அடிக்கக்கூடாது’ எண்டு வேண்டியவள் நாளாக ஆக தனது ‘தந்தையார் இறக்க வேண்டும் சாமியாரே’ என வேண்டத் தொடங்கினாள்.

சமையலிலும், குடும்பத்திலும் தங்கியிராமல் எவ்வாறு ஒரு பெண் வாழமுடியும் என்ற ஆராய்வில் கல்வியினால் முன்னேறி உத்தியோகம் பார்த்தால் இச்சுமையிலிருந்து நீங்க முடியும் என்ற தெளிவை அடைகிறாள்.

கல்வியில் இரவு பகல் முயன்று பல்கலைக்கழகத்திற்கும் சென்று விடுகிறாள். அவளின் குடும்பத்தில் எவரும் எட்டாம் வகுப்பையும் தாண்டியவர்களல்லர். பட்டதாரியாக வெளியே வந்தவளுக்கு திருமணம் ஒன்று பொருந்தி வருகிறது.

அவள் தன் கணவனுடன் முதல் முதல் பேசும்போது தனக்கு ‘அடுப்பெரிக்கத் தெரியாது, கரண்ட் அடுப்பிலைதான் சமைப்பன்’ என்று கூறுகிறாள். கணவனும் ஒத்துக் கொள்கிறார். பிள்ளை குட்டிக்காரி ஆகிறாள். ஒருநாள் கணவனின் அதிகமான செலவு பற்றி கேட்டபோது; அவர் தன் செலவிற்கு காரணம் காட்ட முடியாமல்; ‘உங்களுக்குச் சமைக்கவே தெரியாது’ எண்ட குற்றச்சாட்டை அவள் பேரில் திருப்பி விடுகிறார்.

அதன்பின் அவள் மூன்றரை வயதுக் குழந்தையையும் நான்கு மாசக்குழந்தையையும் வீட்டில் உள்ள வேலைக்கார கிழவியிடம் விட்டுவிட்டுச் சமையல்பற்றிப் படிக்கப் போகிறாள். அங்கு அவள் புட்டு அவிப்பதெப்படி, கீரை சமைப்பதெப்படி என்பதிலிருந்தே சமையலில் ஒன்றும் தெரியாதிருந்தாள். இவளின் இக்கட்டான நிலை உணர்ந்த சமையல் கற்பிக்கும் ஆசிரியை ‘தாவர போசன சமையல்’ திருமதி. புஷ்பாஞ்சலி முருகேசுப்பிள்ளை என்னும் எழுத்தாளரின் புத்தகம் பற்றி

*அறிமுகம் செய்கிறார். அதனுதவியுடன் அவள் சமையலில் எல்லோரையும் விட முன்னேறி விடுகிறாள்.*

*நாட்டுப்பிரச்சினை மோசமாகவே யாரின் உயிரிற்கும் உத்தரவாதமற்ற நிலையில் தன்ரை உழைப்பிலை தான் தங்கி யிருக்க வேண்டும் என முடிவெடுத்து ஆசிரியைத் தொழி லெடுத்து ஊரை விட்டு வெளியேறுகிறாள்.*

*ஆனால் இராசம் இப்பொழுதும் தேநீர் கோப்பி குடிப் பதில்லை. அது அவளின் பிஞ்சு வயதில் பதிந்து போய்விட்ட ஆழ் மனதின் வடு.*

*“பேப்பரைத் தாங்கோ, எவ்வளவு நேரமாய் பேப்பரை வைச்சிருக்கிறீங்கள்” எண்டு கணவன் கேட்கவே தன் சிந்தனை குலைந்தவளாய் சிறுவர் துஷ்பிரயோகத்திற்குள்ளாகும் குழந்தை களையிட்டு பெருமூச்சொன்று வெளியேறுகிறது. பேப்பரைக் கைமாற்றுகிறாள்.*

# பிள்ளைக் கறி

*இவள் வீட்டை வாறவைக்கு நல்ல வடிவாய் சமைச்சு சாப்பாடு குடுக்கமாட்டாள். இவளுக்கு என்ன குடுத்தாலும் அடங்காது. ஆக்கள் ஆரும் சாப்பிட வந்தால் செலவுக்கு காசு வேணும் எண்டு காசு காசு எண்டு உயிரெடுத்துப் போடுவாள். இதிலை அவளைச் சொல்லியும் பிழையில்லை. நானும் இப்பிடியான நாட்களிலை தான் அவளுக்கு கேட்கிற காசை மன முவந்து அன்பளிப்பன். எனக்குந்தான் எத்தினை பிரச்சினை. புத்தகம் அடிக்க வேணும், நோட்டீஸ் அடிக்க வேணும். இப்பிடி இப்பிடி எத்தனை வேலையள். எனக்கொரு நினைப்பு. புத்தக அறிவை மக்களுக்கு ஏற்படுத்திவிட்டால் சமுதாயம் தானே முன்னேறும். அப்ப என்ரை குடும்பமும் முன்னேறிவிடும் எண்ட நினைப்பு.*

*இப்படி இருக்க அண்டைக்கொரு நாள் எனக்கு புத்தகம் வித்த நூற்றைம்பது ரூபா, இருநூறு ரூபா சேர்ந்தது. அது எனக்கொரு பெரிய பொக்கிசமாய் இருந்தது. புத்தகத்தை சனங்கள் வாசிக்கிறதுக்காக நாங்கள் அதை அடிச்சுப்போட்டு வாசிக்கிறதுக்காக அவையிட்டை குடுக்கேக்கை சிலர் மரி யாதைக்காக தேத்தண்ணியை, பிஸ்கற்றை எடுக்கிற மாதிரி எடுக்குதுகள். சிலர்தான் காசு தருவினம். அப்பிடித்தான் ஒரு முறை அந்த இருநூறு ரூபா சேர்ந்தது.*

*எனக்கதை எடுத்துச் செலவழிக்க மனமில்லாமல் போகவே நானொரு உண்டியல் எடுத்து அதுக்குள்ளை போட்டு வைச்சன். அதுக்குப் பிறகு 2, 3 நாள் பஸ்சுக்கும் போக காசு தட்டுப் பட்டுது. மனிசிட்டையும் பத்து ரூபா கடன்கேட்டு அவா இருபது ரூபா தர வாங்கிக் கொண்டு போனனான். காசிருந் தால் சில பல நாளுகளில முந்நூறு மீற்றர் தூரத்தைக் கூட வீட்டை வரேக்கையே ஓட்டோவிலை வாறனான் எண்டதையும் இதுக்கிடையிலை நான்சொல்ல வேணும்.*

இப்பிடி இருக்க அடுத்தடுத்த நாட்களிலை எனக்கொரு விருந்தாளி வீட்டை வாறதாய் இருந்தது. என்னட்டை காசுப்பற்றாக்குறை இருக்கிறது தெரிஞ்சு மனிசி என்னத்தைச் சமைக்கிறது எண்டு என்னோடை கலந்தாலோசிச்சது. நானும் ஏதோ சிம்பிளா ஐடியாவைக் குடுத்திட்டுப் போயிட்டன்.

அவா விருந்தினர் வர ஓரளவு தராதரமாய் சாப்பாடு பரிமாறினார். எனக்கு வலுபுழுகம். மனிசி மானத்தைக் காப்பாற்றிப் போட்டுது எண்டு.

அண்டிரவு படுக்கேக்கை அவவை நான் பாராட்டு முகமாக அண்டைய இரவுச் சாப்பாடு பற்றி அவவோடை பிரலாபித்த போது மடியிலை கையை வைச்சாளே பாவி.

“என்னப்பா என்னண்டு இண்டைக்குச் சமாளிச்சனீங்கள். சாப்பாடு வலு எழுப்பம்” எண்டு சொல்ல, “அதப்பா அந்த உண்டியலை தான் உடைச்சனான். அதுக்கை இருந்த இருநூறு ரூபாவையும் தான் எடுத்து இண்டைக்கு சமாளிச்சது. நாளைய செலவுக்கு காசு கொண்டந்தனீங்களோ” எண்டு கேட்க, “தாலியறுத்துப் போட்டுது. அந்த உண்டியல் காசையே எடுத் தனீங்கள். அதை நான் என்னவோ கற்பனையிலையெல்லே (புத்தகம் விற்று வந்த காசை சேர்த்து அதை வைச்சு கொண்டு தான் இனி அடுத்த புத்தகம் அடிச்சு வெளியிடுறது) சேர்த்து வைச்சனான். என்ர பிளானிலை மண்ணை அள்ளிக் கொட்டிப் போட்டியள்” எண்டு ஏச அவள் பயந்து கொண்டு, “விருந் தினரை எப்படி வரவேற்க வேணும் எண்டதுக்குப் பிள்ளைக்கறி சமைச்சு விருந்தினருக்கு குடுத்த சைவப் பெரியாரின்ரை கதையை அடிக்கடி சொல்லுவியளே! இப்ப எங்கை போட்டுது உங்கடை பிள்ளைக்கறி காச்சி விருந்தினரை உபசரிக்கிற தத்துவம் எண்டாளே போ”

ஆருக்குச்சொல்லியழ...

# ஞானப் பழம்

*அவள் ஒரு கெட்டிக்காரி. சின்ன வயதிலையிருந்தே போராட்ட குணாம்சம் நிரம்பியவள். இலங்கையிலை யாழ்ப் பாணத்திலை இந்தியன் ஆமியின்ரை காலம் கரண்டுகள் இல்லாமல் மண்ணெண்ணெய் விளக்கிலை சீவிச்சகாலம். அப்ப அவளுக்கு வயது 8 மாதம். விளக்கிலை பாஞ்சு பாஞ்சு தொடு வாள். விளக்கு சுடும் சுடும் என்றாலும் கேட்க மாட்டாள். விளக்கிற்கு கையைக் கொண்டு போவாள்.*

*ஒருநாள் தாயார் சுட்டுப் பார்க்கட்டும் எண்டு விளக்கின் சிமிலியைத்தொட விடவே, தொட்டுச் சுட்டு பட்டறிவு பட்டவா அவா. அதுக்குப் பிறகு விளக்குப் பக்கமே போகாத பிள்ளை.*

*மூன்றரை வயதில் ஏதோ தகாத காரணத்திற்காக அவளின் தகப்பன் அவளுக்கு அடிக்கவே ஒரு சட்டி சாம்பலைத் தூக்கி அந்தச் சின்னப் பிஞ்சுக் கைகளால் தகப்பனுக்கு மேல் எறிந்து தகப்பனுக்கு சாம்பல் அபிஷேகம் செய்த கைங்கரியக்காரி அவள்.*

*அநியாயங்களுக்கெதிராக சிறுவர் துஷ்பிரயோகம், பெண் அடக்குமுறை, சாதி அடக்குமுறை, கூலித்தொழிலாளர் சுரண் டப்படுதல் போன்ற சந்தர்ப்பங்களிலெல்லாம் அவ்வப்போது சிறு பிள்ளையானாலும் துணிந்து கருத்துக்களை வெளியிடும் சிங்காரி.*

*வகுப்பில் ஐந்தாம் ஆண்டு ஸ்கொலஷிப்பில் ஓயெல், ஏயெலில் எல்லாம் மிகவும் கூடிய புள்ளிகளைப் பெறும் மாணவிகளில் ஒருத்தி. ஆசிரியர்களின், அதிபர்களின், நண்பர் களின், பெரியார்களின், உறவினர்களின் என அனைத்து தரப்பினராலும் மிகவும் விரும்பப்படும் ஒருத்தி. ஒரு அழகானவளும் கூட, அவளுக்கு இருபது வயதாகி திருமண*

*ஒப்பந்தமாகி இருந்த காலத்தில் ஒரு நாள் அறேக்கை என்னவோ சத்தம் கேட்டுது. புருஷன் பெண்சாதி கதைக்கேக்கை நான் வெளியிலை போகக்கூடாது. இடையிலை என்னெண்டு கேட்டு குறுக்கிடப்படாது. அந்த விஷயத்தை காதாலையும் கேட்கப்படாது எண்டு போட்டு குசினிக்கை நிண்டு மனம் கேட்காமல் சமைச்சுக் கொண்டு நிக்கிறன்.*

*என்ன பிரச்சினை எண்டு வாய்விட்டு கேக்கேல்லையே ஒழிய மனசானது; இடையிலை காதிலை விழுகிற சில சொல்லு களையும், சத்த அனுக்கத்தையும் வைத்து தன் பாட்டிலை பேசிக் கொண்டு இருக்குது.*

*இதென்ன இந்தப் பெட்டை. நெடுகலும் போய் அந்தப் பொடியனோடை கதைச்சபடி. சும்மா எந்த நேரமும் கதைச்சு அருமையில்லாமல் போகுது. என்னத்துக்கு நெடுகலும் கதைப் பான். ஐயோ இந்த வாழ்க்கையும் அநியாயமா இல்லாமல் போகப்போகுது போலை. இந்தப் பிள்ளையை நான் என்ன செய்யிறது. உவா தனிய இருக்கத்தான் சரி எண்டு மனதிலை திட்டியபடி, சமையல் முடிய அடுக்களையை விட்டு வெளியிலை போறன்.*

*அந்த நேரம் பார்த்து என்ரை மேள் குசினிக்கு வாறா. அப்ப நான் கேட்கிறன் என்ன பிரச்சினை ஏன் சத்தம் போட்டனீங்கள். என்னத்துக்கு நெடுகலும் போய் அவனோடை நிக்கிறாய். அருமை குலையாதை. உன்ரை அறேக்கே என்னாலும் புத்தகத்தை எடுத்துப் பார் எண்ணுறன்.*

*அம்மா சத்தம் போடாதேங்கோ. அவருக்கு கேட்கப் போகுது. பிறகு அந்தாளும் வந்து என்னைப் பேசும். அதொண்டுமில்லை... அதொண்டுமில்லை... எண்டு மழுப்புகிறாள்.*

*நான் விடாது அரிக்கவே அண்டைக்கு அவர் வயிறு எரிய எரிய பசியோடை இருக்க அது தெரியாமல் நான் சாப்பாடு குடுக்காமல் இருந்தனான். அது தான் நான் உடனை கொஞ்ச மிளகாய்த் தூளை நக்கி வயிறெரிஞ்சால் எப்பிடி இருக்கும் எண்டு பாத்தனான். அதை நான் கதைப் பிராக்கிலை அவருக்குச் சொல்லிப் போட்டன். அது தான் அவர் கத்தினவர் எண்டு சொன்னா.*

*ஆ... அதோ சங்கதி. அப்பிடியோ புதினம். இதென்ன பழக்கம். என்ன உடன்கட்டை ஏறப்போறியே, இதுக்கே இவ்வளவு*

நாளும் உன்னை நாங்கள் வளத்தது. உதே உன்ரை படிப்பு. பெஸ்ற் றிசல்ட் எல்லாம் பொய்யாய்ப் போச்சுதோ உன்ரை மிளகாய்த்தூள் செயற்பாட்டோடை. போடி போ போய்ச்சா... என்று நான் திட்டவே, மருமகனுக்கு இந்தச் சத்தம் காதிலை விழ அவர் வந்து அன்ரி எனக்கு வயிறெரியிறது பொலிடோன் குடிச்ச மாதிரித்தான் எரியுறது. அப்ப இவா பொலிடோனையும் குடிச்சுப் பார்ப்பாவோ, என்று ஏசினார். அவா தன் தோல்வியைத் தழுவி, 'இனிமேல் இப்பிடி மோட்டுக் காரியங்கள் செய்யமாட்டன்' என்று தனக்குத் தானே வெட்கமடைந்தார்.

மருமேன் இது பற்றி சண்டை பிடிக்கேக்கை, இனிமேல் எனக்கு நீங்கள் ஒரு உதவியும் கூட செய்து தர வேண்டாம். நீங்கள் சமைக்க வேண்டாம். சாப்பாடு தரவேண்டாம். நான் அப்பப்ப கடையிலை சாப்பிடுகிறன். நீர் எனக்கு இனிமேல் இப்பிடி துன்பம் தராததையும், என்று பயமுறுத்தியிருக்கிறார். அதுக்குள்ளை நான் அந்தப் பொடியனைப் பற்றி அப்பிடி இப்பிடியும் நினைத்தேனே.

'தான் செய்தது பிழையெண்டு அவா தெளிவடைந் திருப்பா' எண்டு நம்புறன். அவாவுக்கு இப்ப நாங்கள் ஒரு பேர் வைச்சிருக்கிறம். அது தான் ஞானப்பழம்.

# புரிதல்

கணவன்: சாப்பாட்டைக் குடு சாப்பாட்டைக் குடு

மனைவி: என்னத்தை நான் குடுக்கிறது?

கணவன்: இருக்கிறதைக் குடு, இருக்கிறதைப் பாத்துக்குடு.

மனைவி: என்னத்தையெண்டப்பா நான் இருக்கிறதைப் பாத்துக் குடுக்கிறது.

கணவன்: உனக்கென்ன விசரே. என்னத்தை யெண் டாலும் குடு.

மனைவி: ஐயோ என்னத்தை நான் குடுக்கிறது.

கணவன்: ஏன் நேத்து வீட்டிலை கொஞ்ச உருளைக் கிழங்கும், அரிசி மாவும் கிடக்குதெண்டியள்.

மனைவி: ஓ இப்ப அதுக்கென்ன.

கணவன்: அதிலை டக்கெண்டு கொஞ்சப் புட்டவிச்சு இருக்கிற உருளைக் கிழங்கையும் பொரிச்சுக்குடு.

மனைவி: அதுக்கு நீங்கள் போய்ப் பொரியுங்கோ. என்னாலை ஏலாது.

கணவன்: உண்ணாணைச் சொல்லிப்போட்டன். பேந்து நடக் கிறது வேறை.
ஆக்களுக்கை நான் சாப்பாடு கேட்டு நீ அவைக்கும் சாப்பாடு சாப்பிடக் கொண்டராமல் விட்டியோ மெய்யாய் இண்டைக்கு ஆக்கள் வந்திருக்கினம் எண்டும் பார்க்க மாட்டன் கையை நீட்டிப் போடுவன்.

மனைவி: ஓம் நீர் கையை நீட்டுவீர். என்ர கை புளியங்காய் பறிச்சுக்கொண்டு நிக்கும் என்ன?

கணவன்: உண்ணாணை உன்னைக் கும்பிட்டன். இண்டைக்கு மட்டும் அவிச்சுத் தாருமப்பா. கொஞ்சம் யோசிச்சு நடவும். இளந்தாரிப் பிள்ளையள். இந்த வயதிலை

உமக்குச் சொன்னாலும் விளங்காது. பாவங்களப்பா அதுகள் வேலை முடிஞ்சு வீட்டுச் சாப்பாடில்லாமல் அலையுதுகள்.

மனைவி: இப்பத்தைப் பொடியளைப் பார்க்க எனக்கும் கவலையாய் இருக்கு. ஓம் அதை நான் இல்லையெண்டு சொல்லேல்லை. எனக்கும் அதுகளைப் பாக்கக் கவலைதான். ஆனால் என்ன செய்யிறது. என்னாலையும் இண்டைக்கு ஏலாதே. (கோலிங் பெல் அடிக்குது)

மனைவி: ஆர் மதுவே வாருங்கோ. வாருங்கோ. அங்கிள் குளிக்கிறார். இப்பிடி இருங்கோ மது. என்ன மது. வாடிப்போனீங்கள். களைச்சுப் போனீங்கள்.

மது: ஓமன்ரி கொழும்பிலை எத்தினை நாளைக்குக் கடைச் சாப்பாடு. அலுத்துப் போச்சுது. எவ்வளவு உழைக்கிறம். ஆனால் நல்ல துப்பரவான சாப் பாட்டுக்கு அல்லாட வேண்டிக் கிடக்குது. பாப்பம் அம்மா ஊரிலை இருந்து இங்கை வாறாவாம் அக்காவோடை.

அதோடை அம்மாவை வைச்சு எங்களோடை வைச்சு வீடெடுத்து சமைச்சுச் சாப்பிடுவம் எண்டு பாக்கிறன்.

மனைவி: ஓம் அது நல்லம். அம்மா எப்பிடி வாறா. இப்ப ஊர் இடப்பெயர்வெல்லாம் என்ன மாதிரி மது.

மது: எங்கடை ஊரெல்லாம் இடம்பெயர்ந்திட்டினமாம். என்ர அக்காவும் அத்தானும் டொக்ரேர்ஸ்தானே. அவைக்கு இரண்டு சின்னப்பிள்ளையள். ஒரு வய திலையும் இரண்டு, மூண்டு வயதிலையும் இருக் கினமாம். அவையைப் பார்க்க அம்மாக்கும் பாஸ் கிடைச்சிட்டுது.

மனைவி: அப்ப அக்கா அத்தானுக்கு உங்கடை ஊரிலையிருந்து அதுதான் வன்னியிலையிருந்து வெளியிலை வர எப் பிடி சும்மா பாஸ் எடுக்க முடிஞ்சுது?

மது: ஓம் அவை டொக்ரேர்ஸ் தானே. அத்தான் மேற் படிப்புப் படிக்கிறதுக்காக நாட்டைவிட்டு வெளியேற விரும்புறார் எண்டதன் பேரிலை மேலிடம் பாஸ் குடுத்திட்டுது.

மனைவி: அப்ப நல்ல வேளை அவை தப்பியிட்டினம் என்ன?

மது: ஓமன்ரி

கணவன் குளித்து உடை உடுத்தி தலை சீவி வருகிறார். 'என்னப்பா இரண்டுபேரும் கதைச்சுக் கொண்டிருக்கிறீங்கள்' எண்டு என் கணவர் அந்தரப்படுகிறார். எனக்குத் தெரியும் அவரின் அந்தரம் ஏன் என்று. அதுதான் இப்ப உங்களுக்கும் இதிலை ஆருக்கும் அவர் ஏன் அந்தரப்படுறார் எண்டது விளங்கியிருக்குமோ எண்டது எனக்குச் சரியாய்த் தெரியாது.

ஆனால் அதுதான் நானும் என்ர புருஷனும் இந்தப் பொடியன் வரமுதல் கதைச்ச சம்பாஷனையின் தாக்கம் தான் அது. ஓம், நான் அது விளங்காத மாதிரி...

மனைவி: இல்லையப்பா... மதுவின்ரை அக்கா அத்தான் பிள்ளையள் அம்மா எல்லாரும் எனி இஞ்சை கொழும்புக்கு வருகினமாம்.

கணவன்: ஆ... அப்ப நீங்களெல்லாருமாய்ச் சேர்ந்து வீடெடுத்து ஒண்டாய் இருந்து சமைச்சுச் சாப்பிடலாம் என்ன? ஓ... வீடெடுக்கிறதும் ஆச்சு. எல்லாரும் ஒண்டாய் இருக்கிறதுமாச்சு. வீட்டுச் சாப்பாடுமாச்சு. என்ன மது. அப்ப எனி உங்கடை வீட்டுச் சாப்பாட்டுப் பிரச்சினை தீருது. என்ன மது!

மது: ஓமங்கிள் எத்தினை நாளைக்கு இப்பிடி. அது தான் பாத்துக்கொண்டிருக்கிறன். எப்ப வந்து சேருவினமோ தெரியாது. எப்பிடியும் தைக்கிடையிலை வந்த சேர்ந்து விடுவினம் எண்டு நம்ப வேணும்.

கணவன்: ஏன் மது. அவை ரான்ஸ்ஃபர் எடுத்தால் இஞ்சாலை வாறதிலை வேறையும் ஏதும் கஷ்டமிருக்கோ.

மது: இல்லை அங்கிள் வன்னிப் பயணங்கள் சொல்லிக் கொண்டே. எதுவும் எப்பவும் நடக்கலாம். ஆனால் இப்ப பொதுசனம் அவங்கடை பிரதேசத்தை விட்டு வெளியிலை வாறதுக்கு இரண்டு பகுதியாலையும் கைவிடப்பட்ட பிரதேசம் ஒண்டு உருவாகியிருக்கு தாம். அதுக்குள்ளாலை வழமையைப் போலை ஒரு வெள்ளைக் கொடியைப் பிடிச்சுக் கொண்டு வாறதுதான் வருகுதுகளாம்.

மனைவி: ஆ... அப்ப ஏதோ சனங்கள் சண்டையளுக்குள்ளாலை வெளியேற ஒரு பாதை இப்ப தற்காலிகமாகவேனும் திறந்திருக்காம் எண்டு வைக்கலாம் என்ன? சனங்கள் பாவங்கள் என்ன மது?

மது: இல்லையன்ரி இஞ்சாலையும் வந்து என்னென்னவோ! முந்தி நடக்குறதுகள், நடந்ததுகளும் தெரியும் தானே.

மனைவி: ஆ... அப்பிடியெண்டால் சனங்கள் பாடு திண்டாட்டம். பாவங்கள் சனங்கள். அதுகளுக்கு எல்லாம் தொல்லைதான் என்ன. ஆப்பிழுத்த குரங்குகளின்ர நிலை போல என்ன. ஐயோ பாவங்கள் அதுகள்.

கணவன்: அது சரி உதென்ன மது கையிலை சாப்பாடோ. கடையிலை வாங்கிக் கொண்டு வந்தனீங்களோ. அப்ப இண்டைக்கும் கடைச்சாப்பாடுதான்.

மது: ஓமங்கிள் கடைச்சாப்பாடு, முட்டையப்பம் நாலு வாங்கினனான். அது நாலும் என்ர கையுக்குள்ள பாசலுக்கை வாறதுக்கிடையிலை எத்தினை கை மாறுபடுகுது. எனக்கு அருவருக்குது. ஆத்திரமும் வருகுது. என்ன செய்யிறது. சாப்பிடத் தானே வேணுமெண்டிட்டு என்ர கையை வடிவாய்க் கழுவிப் போட்டு சாப்பிடுறது தான். என்ர கையழுக் கெண்டாலும் என்ர வயித்துக்கை போகாமல் இருக்க வேணுமே எண்டதுக்காக.

மனிசன் என்ர மனிசன் என்னை என்னைப் பாக்குது. நான் அதைப் பாக்காமல் அங்காலயே பாத்து வேறை கதை ஏதோவைத் தொடக்கிறன்.

எனக்கிண்டைக்குக் காச்சல் வந்து நாப்பத்தைஞ்சு நாளைக்கு மேலை. காச்சல் முழுமையாய் ஒரு நாளும விட்டபாடா யில்லை. கை காலெல்லாம் நோகுது. தண்ணி கை கால்லையே பட ஏலாமல் கிடக்குது. உண்மையாய் சுடுதண்ணியை வைச்சுக் குளிக்க ஏலாமல் இரண்டு வாளி ஒரு வாளி பச்சத் தண்ணி யிலை தான் நான் மேல் கழுவுறது. அப்பிடியும் இருக்க நாக்கு வெந்து அவிஞ்சு போய்க் கிடக்குது. சுவையிலை உப்பைத் தவிர வேறொண்டையும் ஒண்டரை மாதமாய்த் தெரியாமல் கிடக்கிறன்.

அப்பிடியிருக்க இரவிலை எட்டு மணிக்குச் சமைச்சு அவருக்கு இரவுச் சாப்பாடும் காலமைச் சாப்பாடும் குடுத்துத்தான் இடையிடை ஏலுமான நாளையிலை செய்து விடுறனான்.

இண்டைக்குக் காலைமை புட்டை அவிச்சு நேற்று ராத்திரியான் கறியோடை குடுத்தனான். மத்தியானம் என்ர புட்டுப்பங்கை நான் சாப்பிடேல்லை. எனக்குக் காச்சல்.

அப்ப இரவு அந்த என்ர மத்தியானப் புட்டுப்பங்கை இவருக்கு மரக்கறியளிலை வெட்டிப் போட்டுக் கலந்து மரக்கறிப் புட்டும் அந்த இருக்கிற மத்தியானத்துக்கு எனக்கெண்டு வைச்சிருந்த எருத்தினி கறியையும் குடுத்துச் சமாளிப்பம் எண்டு பாத்தால் வந்த பொடிப் பயலுக்கு வந்த பொடி என்ரையும் ஃபிரன்ட் தான் என்னைக் கொண்டு அந்தப் பொடிக்கு இண்டைக்கு எப்பிடியும் சாப்பாட்டைக் குடுத்துப் போடவேணும் எண்டதிலையே திரும்பவும் பிடியாய் நிக்கிறார் நிக்கத் தொடங்கியிட்டார் என்ர மனுசன்.

ஆனால் நானோ கவனியாமல் பொடியை வேற கதையைக் கேட்டு பிராக்காட்டி உரிய நேரம்வரை போயிட்டுவர அனுப்பியிட்டன். பொடியன் போனதுதான் தாமதம்;

“சாப்பாட்டை எடுங்கோ, சாப்பாட்டை எடுங்கோ பசி உயிர் போகுது மத்தியானமும் கடையிலைதானே விழுங்கினது. கொண்டாப்பா சாப்பாட்டை” எண்டு என்னை முன்னிலை ஒருமையிலை முன்னிலை மரியாதைப் பன்மைச் சொல்லைத் தவிர்த்து அதாவது சாப்பாட்டைக் கொண்டாங்கோப்பா சாப் பிடுவம் நேரம் போயிட்டுது எண்டு வழக்கமாக நோமலாய் இருக்கும்போது சொல்லும் சொல் தவிர்த்து சாப்பாட்டைக் கொண்டா... எண்டது சாப்பாட்டைக் கொண்டா இப்ப எண்டதாய் முடியுது.

எனக்குத் தெரியும்தானே இவர் ஏன் இண்டைக்கு இந்தப் பாசை கதைக்கிறார் எண்டு. பாவம் இப்பிடித்தான் நான் மற்ற வைக்குச் சாப்பாடு அவிக்க முடியாமல் குடுக்க முடியாமல் போகும் சந்தர்ப்பங்களிலெல்லாம் பேசுறவர். அதைப் புரிஞ்சு கொண்ட நான் அவருக்கு வடிவாய்ச் சாப்பாட்டைப் போட்டு அன்புடன் குடுக்கிறன்.

# செல்விருந்தும் வருவிருந்தும்

*நாங்கள் கொழும்பிலை ஒரு வீட்டிலை இருந்தனாங்க. ஒரு காட்டுப்புறம் மாதிரி ஒரு இடம். எங்கடை சொந்தக்காரனும் ஊர்க்காரனுமான ஒரு ஃபிரெண்டின்ரை வீடுதான்.*

*அவனும் எங்களோடைதான் கொழும்புக்கு தன்ரை குடும் பத்தோடை அகதியா வந்தவன். ஆனால் வாடகை வீட்டில குடியிருந்து பட்ட அனுபவத்திலை ஒரு வீடு தான் குடியிருக்க சொந்தமாக வாங்கியிட்டான். நாங்கள் அப்பவும் வாடகை வீடுதான்.*

*யாழ்ப்பாணத்திலை இருந்து வாறவைக்கு கொழும்பிலை வாடகை வீட்டு அனுபவம் ஒரு தனிச் சு(மை)வை. இருந்திருந்து ஒவ்வொரு வீட்டிலையும் இருந்து பாக்கேக்கைதான் ஒவ்வொரு அனுபவத்தைப் பெற்றுத் தெளிவம்.*

*வீட்டுக்காரராலையும் எங்களோடை வந்து தங்குற விசிற் றேசாலையும்.*

*உதாரணத்துக்கு ஒரு விசிற்றேசின்ரை கதையை நான் உங்களுக்குச் சொல்லப் போறன். இதில சரி பிழையை நீங்கள் ஒழுங்காகச் சொல்லுங்கோ பாப்பம்.*

*நாங்கள் யாழ்ப்பாணத்தில இருந்து கொழும்புக்கு வந்த புதுசில அல்லோல கல்லோலப்பட்டு அவையை இவையைப் பிடிச்சு சந்து பொந்துகள் புறாக் கூடுகளையெல்லாம் வீடெண்டு காட்ட எங்கடை முகத்திலை விருப்பு வெறுப்பொண்டையும் காட்டாமல் வேண்டாம் எண்டதைப் 'பேந்து சொல்லுறன்' எண்டு ஹவுஸ் ஓணேர்சுக்கு சொல்லி போட்டு வாறதை இப்ப நினைக்கச் சிரிப்புத்தான் வருகுது. காத்து வராத அறையைக் காசாக்கிப் போடுற அவைக்கு குடியிருக்கிறதுகளின்ரை பாட் டைப் பற்றி அக்கறையென்ன!*

அப்பிடி இருக்கேக்கை ஒரு நல்ல வீடு– இரண்டு அறை, ஒரு ஹோல், கிச்சின் அம்பிட்டுது. ஆளைப் பிடிச்சுச் சுத்தம் செய்து வீட்டை என்ரை மனசிற்கேத்த மாதிரிப் பண்ணிப் போட்டன்.

அப்ப எங்கடை சொந்தக்காரக் குடும்பம் ஒண்டு பெற்றா விலை லொட்ஜிலை இருந்ததுகள். நானும் எட்டு வயசுப் பிள்ளையும் மூண்டு வயதுப் பெண் பிள்ளையும் தானே வீட்டிலை எண்டிட்டு ஒரு றூமை அதுகளை சும்மா வந்து இருக்க விடுவம் எண்டிட்டு அவையளை "நீங்கள் வந்து சும்மா இருங்கோ. காசு தர வேண்டாம்" எண்ண, அவை என்ன நினைச்சினமோ நினைக் கேலையோ நான் கேக்கிறனே எண்டதுக்காக எங்களோடை வந்து இருந்தினம்.

என்ரை அவர் யாழ்ப்பாணத்திலை தான் வேலை. நான் தான் குடும்ப பொறுப்பை எடுத்து நடத்திறன். நான் விடியவும் எழும்ப வேணும். பிள்ளையள் பள்ளிக்கூடம் நேசறி போறதுகள். அவையின்ரை றூமுக்காலைதான் குசினிக்குப் போறது.

அவை எல்லாரும் பெரிய ஆக்கள். நான் காலைச் சாப்பாடு முடிச்சு மகனை வெளிக்கிடுத்தி ஸ்கூலுக்குக் கூட்டிக் கொண்டு போய் விட்டிட்டு மாக்கற் முடிச்சு வரேக்கையும் அவை படுத் திருப்பினம்.

நான் பேந்து, "எழும்புங்கோ வீடு கூட்ட வேணும்" எண்டு சொல்ல எழும்புவினம். முகங்களை பாத்றூமிலை (ஒரு கிணறு தண்ணியிலை) கழுவிக் கழுவிப் போட்டு வந்து வெளியிலை செற்றியிலை இருப்பினம். தண்ணிக்கும் கொழும்பிலை பில் எண்டது அவைக்குச் சொன்னாலும் விளங்காது.

நான் 'தேத்தண்ணி குடிச்சீங்களோ' எண்ண 'இல்லை' எண்டு போட்டு பெரிய கதை அமளியிலை இருக்க நான் போய் ரீ போட்டந்து குடுப்பன். குடிச்சுப் போட்டு ரீ கப்பைக் கதிரைக்கடியிலை வைப்பினம்.

நானும் காலமை வேலை முடிச்ச களைக்குக் கொஞ்ச நேரம் அவையளோடை அளவளாவுவன். கதைக்கப் பேச நல்ல மனிசர்.

நேரம் ஒன்பதரை பத்து ஆகுது. எனி மத்தியானச் சாப் பாட்டுக்கு துவங்க வேணும். "காலைமைச் சாப்பாட்டை முடியுங்கோவன்" எண்ண அவை அலுங்கல் உலுங்கல் பட்டு

காலைச் சாப்பாட்டை முடிப்பினம் மனசின்றி. ஏனெண்டால் அவை ஒன்பது ஒன்பதரைக்குத் தானே நித்திரையாலை எழும்பி ரீ குடிச்சதுகள். பாவங்கள்.

என்ரை ஆக்கினைக்குக் சாப்பிட்டு முடிய மதிய சமைய லுக்கு நான் ஆயத்தம் செய்ய அவை அவசர அவசரமாக பாத்றூமுக்குள் போய் தங்கடை உடுப்புகளைத் தோய்க்கத் துவங்கியிடுவினம். சமையல் முடிய நான் நேசறிப்பிள்ளையை ஓடிப்போய் பதினொண்டரைக்கு எடுத்துக் கொண்டு வர அவை படுத்திருப்பினம்.

நான் வந்து தேசிக்காய் தண்ணி கரைச்சுக் கொண்டு ஒண்டரைக்கு ஓடிப்போய் இரண்டு மணிக்கு ஸ்கூல் முடியிற பிள்ளையையும் எடுத்தந்த பிறகு சாப்பாடு குடுக்கேக்கை அந்த குடும்பத்தின்ரை தலைவி சோறு கறி சட்டி பானையள் எல்லாத்தையும் தனக்கு முன்னாலை வைச்சு எல்லாருக்கும் பங்கிடுவா.

பேந்து இரவுச் சாப்பாடு. இப்பிடியே இரண்டு இரண்டரை மாதம் வாழ்க்கை ஓடுது. இதுக்கை எனக்கு வேலைச் சுமை கூடிப் போட்டுது போலை. நெஞ்சுக்குத்து முதுகுக் குத்தெண்டு எனக்குப் புதுப் புது வருத்தங்களும் வரத் தொடங்கியிட்டுது.

ஒரு நாள் நான் "என்னாலை ஏலாமல் இருக்குது அன்ரி. இண்டைக்கு இரவைக்கு நீங்கள் புட்டவியுங்கோ" எனக் கேட்க, "புட்டை என்னத்துக்கு? பாணைச் சாப்பிடுவம்" எண்டா.

எனக்குப் பாணெண்டால் கண்ணிலையும் காட்டக் கூடாது. சிறிமாவின்ரை ஆட்சிப் பஞ்ச காலத்திலை புழுப் பாண் பச்சைப் பாண் திண்ட அனுபவத்திலை பாணெண்டாலே தொட்டுப் பாக்கிறேல்லை. அவ்வளவு அருவருப்பு. அவையிலை ஒரு ஆள் அரை இறாத்தல் சாப்பிடும்.

எனக்குப் பிடிக்காததாலை நான் எல்லாருக்குமாய்ச் சேர்த்து புட்டுத்தான் அவிக்கிறனான்.

இண்டைக்கொரு நாள் கேக்க, அந்த மனிசி அவிக்க மாட்டன் எண்டிட்டுது. நான் சுகவீனமாய் இருக்கிற நாளிலை பாண் வேண்ட வெளிக்கிட்டால், 'என்ன பாணோ புட்ட வியுங்கோ' எண்ணுவா. எனக்கு ஆளைச் சாடையாய் விளங்கிற மாதிரி இருக்குது.

*என்ரை மனுஷன் யாழ்ப்பாணத்திலை இருந்து வேலை அலுவலாய் கொழும்புக்கு வந்து இப்ப இரண்டு கிழமையாய் நிக்கிறார். அவர் ஒவ்வீசுக்குப் போறதும் வாறதுமாய் இருப்பார்.*

*இந்த நாட்களிலை, சில வேளையிலை அவ குசினிக்கை ஓடியந்து குசினியை அடைச்சுப் பிடிச்சுக் கொண்டு என்னாலை வேலை செய்ய முடியாதபடி இடிச்சுக் கொண்டு இடைஞ்சலாய் நிற்பா.*

*நான் "ஏன் அன்ரி நீங்கள் வெளியிலை போய் நில்லுங்கோ. இதுக்குள்ளை நீங்கள் நிக்கிறது எனக்கு வேலை செய்ய ஏலாமல் இருக்கிது" எண்டு சொன்னால் "ஏன் பறவாயில்லை. நான் செய்யிறன்" எண்ணுவா.*

*அப்ப நான் இடைஞ்சல் படாமல் வெளியிலை வந்து பாத்தால் வீட்டு வாசல்லை என்ரை புருஷன் வந்து நிற்பார். அப்ப எனக்கு நல்ல சந்தோசம். அவர் வாற நேரம் எனக்கு வேலையில்லாமல் இருக்கிது. அவரோடை ஃபிறீயாக் கதைக் கலாம் எண்டு.*

*ஆனால் என்ரை மனிசன் என்னை "அன்ரி எங்கை" எண்டு கேப்பார். நான் அவா குசினிக்கை எண்ண, "அவ வேலை செய்ய நீங்கள் இதிலை கதிரையிலை சுகமாயிருக்கிறியளோ" எண்டு ஏசுவார்.*

*நான் "இல்லை. இவ்வளவு நேரமும் நான் தான் வேலை செய்தனான். இப்பதான் அன்ரி குசினிக்கை வந்தவ. அதுக் குள்ளை இரண்டு பேர் நிண்டு வேலை செய்யேலாது. ஒரு ஆள் உள்ளுக்கை போனால் மற்றாள் வெளியிலை வரேலாது. அவ்வளவு இட்டுமுட்டான சின்ன இடம் தெரியுந்தானே" எண்டு சொல்ல, அவர் "தெரியும் தெரியும்" என பல்லை நெறுமிக்கொண்டு தன்ரை அன்ரியைப் பார்க்கக் குசினிக்குப் போவார்.*

*போய் "என்ன அன்ரி வேலை போல" எனக் கேட்க அவ சிரிச்சு "அதுக்கென்ன" எண்டு சொல்லி தானே முழு வேலை யளையும் செய்தது மாதிரி ஒப்புக் கொள்ளுவா. எனக்கு தர்ம சங்கடாமாயிருக்கும்.*

*பேந்து என்ர கணவன் தன்ரை அன்ரி குடும்பத்தோடையே எந்த நேரமும் கதைச்சுக் கொண்டு இருப்பார். என்னோடை*

கதையாமல் நான் வேலை செய்யாமல் இருக்கிற ஆத்திரத்திற்கு இந்த நிகழ்வு.

குசினிக்குள்ள அவ வேலை செய்ய வாறதும் நான் குசினியால வெளிலைவாறதும் என்ர அவர் வாறதும் அவர் நான் வேலை செய்யிறேல்லை அன்ரிதான் வேலை செய்யிற தெண்டு கூறுவதும் அவர் சமையல் வேளைகளில வீட்டிற்கு வரும் போது இடம்பெறுவது ஒரே மாதிரித் தொடரவே, அவ என்ர அவர் வரும் வேளைகளில் மட்டும் வேலையைப் பொறுப்பு எடுக்கிறது எனக்கு வினையாகிறது.

ஒரு நாள் கையிலை காசில்லை. நான் "என்னட்டைக் காசில்லை" எண்டு சொன்னன். அவ ஐயாயிரத்தை வைச்சுக் கொண்டு தன்னட்டைக் காசில்லை எனக்கூறினா. "உதில இரண் டாயிரத்தை தாங்கோ" என நான் கேட்டு வாங்கி விடுறன்.

இரண்டாயிரம் எத்தனை நாளைக்கு காணும். நாலாம் நாள் மீதிக் காசையும் கேட்கிறன். அவ காசை எடுத்துத் தருவதற்கு மனச் சங்கோசப்படுகிறா. இரண்டு இரண்டரை மாசமாய் எங்கடை செலவிலை தானே அவை சாப்பிட்டவை.

என்ர அவர் கொழும்பில இருந்திருந்தால் நான் இவேட் டைக் காசு கேட்டிருக்க மாட்டன். அவர் தருவார் தானே. அவர் யாழ்ப்பாணத்துக்குப் போனவர். ஆனையிறவு அடிபாட் டுக்கை அங்கை அம்பிட்டுட்டார். இங்காலை வரேலாது. அது தான் நான் இவையிட்டை காசு கேட்கிறன்.

இவவின்ர புருஷன், மூண்டு பிள்ளையள் வெளிநாட்டிலை தானே உழைக்கினம். அவை வந்து இரண்டரை மாதமும் நான் ஒரு காசும் வேண்டாமல் அவையளுக்குச் சாப்பாடு போட்ட னான் தானே. என்ரை அவர் இல்லாத இடத்திலை இந்த அன்ரி காசு எனக்குத் தந்தே தீரவேணும் எண்டது எனக்கு மிக மிக சரியாய்ப்படுகிது.

அவாவால தன்ரை பணத்தைப் பேசாமல் எடுக்க மனசு வருகுதில்லை. நான் ஒரு தீர்மானத்திற்கு வாறன். "அன்ரி நீங்கள் இஞ்சையிருக்கிறது உங்களுக்கு கரைச்சல். எங்களுக்கும் கரைச் சல். நீங்கள் இஞ்சையிருந்தால் என்னட்டை காசில்லாட்டால் நான் உங்களிட்டைக் கேட்கத்தான் செய்வன். அப்ப உங்கடை காசு முடிஞ்சு போகும். ஏன் உங்களுக்குச் சிரமம். அதாலை நீங்கள் வேறை வீடெடுங்கோ. வீடெடுத்தால் சமைச்சுச் சாப்பி

டலாம். லொட்ஜிலை கடைச் சாப்பாடு தானே" எண்டு சொல்லிறன்.

அவ "ஏன் ஏன்" என்கிறா. அவவை எங்கடை வீட்டிலை கூட்டியந்து விட்ட அவவின்ரை நெருங்கின உறவினரும் எங்களுக்கு கொஞ்ச தூரத்து உறவினரும் எங்கடை வாடகை வீட்டுக்கு வாறார். நான் இவர்களை வேறிடத்தில் இருத்தும்படி சொல்லுறன்.

அவர் அவ சொன்ன கதையளை வச்சுக் கொண்டு என்னிடம் பல குற்றச்சாட்டுக்களையும் வைச்சு ஞாயம் கேட்கிறார். "உங்கட கணவன் அவேட்டைக் கடமைப்பட்டவர். அவையைப் பார்க்க வேண்டியது உங்கடை கடமை" எண்ணுறார்.

நான் அவற்றை கேள்வியளுக்குப் பதிலளிக்காமல் நடந்ததுகள் பற்றியும் விபரிக்காமல் "அவை அவைக்குத் தெரியும் அவை அவை செய்யிறது சரியோ பிழையோ எண்டு. எனக்கு நான் செய்யிறது சரி. அவையை கூட்டிக் கொண்டு போங்கோ" எண்டு உறுதியாச் சொல்லுறன். அவர் என்ரை கணவர் எனது இந்த நடத்தையால் என்னிலை கோவிப்பார். அப்ப என்ன செய்வியள் எண்டு கேக்கிறார்.

"அவர் அவர்களிடம் கடமைப்பட்டிருந்தால் அவர் தான் அவைக்குச் சேவை செய்ய வேண்டியதே ஒழிய அவர் கடமைப்பட்டதுக்காக அவரைக் கட்டிய அவற்றை மனுசி அவரை பிள்ளையள் எல்லாம் அவைக்கு அடிமை சீட்டு எழுதிப் பிறந்து வரேல்லை. நான் எனக்கு வேலைப்பழு அதிகரிக்கப்படாது எண்டதுக்காகவே கன பிள்ளையளைப் பெறாமல் இரண்டு பிள்ளையளை மட்டும் பெத்தனான்".

அரசாங்க உத்தியோகத்திலிருந்த நான் குடும்பத்தோடை இரட்டைச் சுமையைத் தாங்க ஏலாது எண்டு தான் வேலையைக் கைவிட்டனான்.

"தயவு செய்து அவையை வீட்டால கூட்டிக் கொண்டு போய் வேறை இடத்திலை அவையை விட்டு, எனக்குக் கொஞ்சம் நிம்மதி தாருங்கோ" எண்டு அவரிட்டைக் கேக்கிறன்.

அவர் அவையைக் கூட்டிக் கொண்டு போறார். அந்த மனிசி அழுது அழுது சூட்கேசைத் தூக்கிப் போகுது. அவவின்ரை

*பிள்ளையள் என்ரை பிள்ளைகளுக்கு கொஞ்சிப் போட்டுப் பிரியினம். என்னட்டை எந்தவித சலனமும் ஏற்படேல்லை.*

*கொழும்பிலை இருக்கிற வாடகைக் குடியிருப்பாளர் பற்றி எவருக்கும் நல்லபிப்பிராயம் ஒரு போதும் இருக்கிறேல்லை! ஆண் மூச்சுக் கொண்டவள் எண்டு சொல்லுவினம்.*

*இவள் தன் இடைஞ்சல்களைத் தானே முடிவெடுத்து களையிறதாலையா?*

*இதில எங்கை சரி பிழை எண்ட முடிவை உங்களிட்டை எதிர் பாக்கிறார் குடியிருப்பாளர்.*

*- தாயகம் 70 ஏப்ரல்-ஜூன் 2008*

# இரத்த உறவுகள்

"செல்வியக்கா செல்வியக்கா... நான் குயிலினி வந்திருக்கிறன். கதவைத் திறவுங்கோ". "வாங்கோ"

"ஆ குயிலினியே வாங்கோ என்ன இந்த நேரத்திலை" காலை 10.30. சனம் கூடி நிக்குது.

"ஓம் செல்வியக்கா, நான் இப்ப வந்திருக்க கூடாது. இண்டைக்கு ஞாயிற்றுக்கிழமை. உங்கட அவர் நிக்கிற நாள். அவரிட்டை சனங்களும் வரும். உங்களுக்கு கரைச்சல். இண்டைக்கு உங்களுக்கு வேலையள் கூடின நாள்"

"பரவாயில்லை வாங்கோ. பின்னுக்கிருந்து கதைப்பம்"

"இல்லை. அம்மா சென்ரரிலை நிக்கிறா. நான் வீட்டை போவம் எண்டு வீட்டை வந்தால் வீட்டுக்காறி வீட்டைப் பூட்டிக் கொண்டு எங்கையோ போயிட்டாள்"

'ஆ... சாப்பிட்டீங்களே?'

"இல்லை. இண்டைக்கு இன்னும் இல்லை"

"தோசை சாப்பிடுங்கோவன். நாலு தோசையிருக்கு".

"செல்வியக்கா, நான் யாழ்ப்பாணத்திலையிருந்து அம்மா வோட கப்பலிலை திருகோணமலைக்கு வரேக்கை அம்மா என்னைப் பேசினவா, ஆக்களுக்கை வைச்சு"

"என்னவாம்?"

"இனிமேல் நான் பிள்ளையார் முருகனைக் கும்பிடக் கூடாதாம். தங்கடை சாமியைத்தானாம் சென்ரரிலை வந்து கும்பிட வேணுமாம். இல்லாட்டில் விசர் ஆஸ்பத்திரியிலை என்னைப் பிடிச்சுக் குடுத்திடுவாவாம்"

"ஏனாம்"

இடையில தோசையைக் குடுக்க இரண்டு கையாலையும் வாங்கி மளமளவெண்டு குயிலினி சாப்பிடுறாள்.

"நான் யாழ்ப்பாணத்திலை இருந்திருப்பன் செல்வியக்கா, அங்கை என்ரை அக்கா, நாங்கள் தங்களோட நிக்கிறதாலை வீட்டு வேலை முழுவதையும் என்னைக் கொண்டே செய் விக்கிறா. தான் போய் பக்கத்து வீடுகளில இருந்து கதைச்சுக் கொண்டிருப்பா. அவாவைப் பாத்துப் பாத்து களைச்சுப் போய் பிறகு நான்தான் எல்லா வேலையளையும் செய்ய வேணும்"

"ஏன் நீங்கள் எல்லா வேலையளையும் செய்ய வேணும். அவா ஒண்டும் செய்யாவோ?"

"அவா நினைக்கிறா, எங்களை வைச்சு தான் சாப்பாடு போடுறதுக்கு எங்கட வேலையாலை கூலியை எடுத்துப் போட வேணும் எண்டு".

"ஏன் நீங்கள் காசொண்டும் குடுக்கிறேல்லையோ?"

"ஏன் செல்வியக்கா... எங்கட தம்பிட்டை லண்டனிலை யிருந்து காசு வேண்டி எடுக்கிறவ தானே? ஏன் இந்த மாதமும் நாங்கள் எல்லாம் தன்னோட நிக்கிறம் எண்டு சொல்லி மூண்டு தரம் இருபதாயிரம் இருபதாயிரமாய் வாங்கி எடுத்தவதானே. இது நானறிய நடந்தது".

"அம்மா என்ன சொல்லுறா?"

"அவா என்னத்தைச் சொல்லுவா? அவா அக்காவுக்கு வேலையைச் செய்து குடு எண்டுதான் சொல்லுவா. தட்டித் தவறி என்னாலும் வேலையை அக்கா செய்தாலும் என்னைப் பேசிப்போட்டு அவாட்டையிருந்து அந்த வேலையை வாங்கி என்னைச் செய்யச் சொல்லுவா"

"நீங்கள் என்ன செய்வியள்?"

"நான் பயத்தில வாங்கிச் செய்யிறது தான். மூண்டு கொத்து அரிசி கூடப் போட்டு இடிக்கிறதுதான்"

"நீங்கள் இல்லையெண்டால் அவா இடிப்பாதானே"

"மில்லில குடுத்து அரைப்பா"

"ஏன் அம்மா உங்களைப் பேசிறவா? அவையிட்ட கடமைப்படுகிறதை நீங்கள் செய்யிற வேலையால கழிப்பம் எண்டோ?"

"சும்மா விசர்க்கதை கதைக்கிறியள் செல்வியக்கா. தம்பி கலியாணம் கட்டேக்கை அம்மா தான் பொம்பிளை பகுதி யிட்டை வேண்டின காசிலை அஞ்சு லட்சம் என்ரை பேரிலை பாங்கில போட்டு வைச்சிருந்த காசையே எடுத்து அக்காக்கு ஒட்டோ வாங்கக் குடுத்தவா. இரண்டரை லட்சம் மிச்சத்தை என்ன செய்தவா எண்டதும் எனக்குத் தெரியாமல் கிடக்குது எண்றன்."

"ஏன் அப்பிடி ?"

'அவா நினைக்கிறா கலியாணம் கட்டாத எனக்கென் னத்துக்கு காசு. அக்கா தானே பிள்ளை குட்டிக்காறி எண்டு போலை."

"ஏன் அக்காக்கு கஷ்டமோ ?"

"கஷ்டமோ? அவாக்குத்தானே வீடு. வளவு அஞ்சு பரப்பு. நகை இருபத்தைஞ்சு பவுண். காசு அந்தக் காலத்திலை ஐம்ப தாயிரம் எண்டு. எல்லாத்தையும் குடுத்தவா. அக்கா இப்ப காரும் வாங்கி வீட்டுக்கை விட்டு வைச்சிருக்கிறா. அதுக்கு கீழை நாலு குமர் இருந்தம். பசியாலை வாயை வாயைப் போட்ட டிச்சம். என்ரை தங்கச்சியள் இரண்டு பேர் இயக்கத்தில போய் (இருக்குதுகளோ இல்லையோ) சேந்ததிக்கு ஆர் காரணம். என்ன அதுகள் விடுதலை இயக்கத்திலை சேந்ததுக்கு நாட்டுப் பற்றே காரணம் எண்டு நினைக்கிறியள். பசி, பசி எத்தினை நாளுக்கு அதுகள் பசி கிடக்குங்கள் ?"

"சரி இப்ப இனி நீங்கள் என்ன செய்யப் போறியள் ?"

"என்ன செய்யிறது. அவா சொல்லுறது மாதிரி அவா சொல்லுற சாமியிட்டை விடிய விடியப் போய் வரத்தான் வேணும். எனக்கு விடியிறதெண்டாலே விருப்பமில்லாமல் இருக்குதக்கா. என்னை அந்த மனிசி அவையின்ரை சாமி சென்ரருக்குக் கூட்டி கொண்டு போயிடும் எண்டு சொல்லி, அவாவுக்கென்னக்கா அவாவின்ரை சென்ரரிலை அவாக்கு கதைக்க ஆக்கள் இருக்கினம். அங்கை வேலை செய்து குடுப்பா, சாப்பிடுவா, குளிப்பா, இராப் படுக்கைக்கு வீட்டை வருவா. இஞ்சை வீட்டில நானொருத்தி இருக்கிறனே. பிள்ளை என்ன சாப்பிடுது எண்ட நினைப்பே கிடையாது"

"ஒரு கிழமைக்கு கால்கிலோ சீனிதான் வேண்டித்தருவா. அதுக்கும் கன நாளாக் கேட்ட பிறகு தான். நீர் உழைச்சு நீர்

சாப்பிட வேண்டியது தான் எண்டு சொல்லிச் சொல்லித் தான் தருவா. நானும் ரியூசன் குடுக்கிற காசைத் தான் பொத்திப் பொத்திச் சாப்பிடுறது. இரண்டு நேரம் பாண். ஒரு நேரம் பொரிமா. தேங்காயும் வேண்டித் தரமாட்டா. றோட்டுகளிலை கிடக்கிற சண்டியிலையைப் பிடுங்கியந்து அதைத்தான் போட்டு றொட்டி வறை எல்லாம் செய்யிறது".

"அப்ப அவா தன்ரை சாமியின்ரை இந்தியத் தலைமை நிலையத்திற்கு போக வருஷம் வருஷம் ஐம்பது, அறுபதா யிரம் செலவழிக்கிறாவே, குயிலினி அது செலவில்லையோ, அதை நீங்கள் கேக்கிறேல்லையோ?"

"அது போகட்டும் செல்வியக்கா, அது போனது இவ் வளவு நாளும் தான் தனிய. இந்த வரியம் என்னையும் வரட்டாம். நான் என்ன செய்யிறது. தின்னக் குடிக்க வழி யில்லாமல் நான் திரியிறன். அவா பிளேன் ஏறி அங்க எங்கையோ வரட்டாம். அந்த மனிசிக்கு விசர். அது நினைக்குது. தின்னாமல் குடிக் காமல் கிடந்து அங்கை போய் வந்தால் இந்தப் பிறவியோடை துன்பமெல்லாம் முடிஞ்சு மறுபிறவி இல்லாமல் சொர்க்கத்திலை இருக்கலாம் எண்டு".

"நீங்கள் அவாக்கு விசரெண்ணுறியள். அவா உங்களை விசராஸ்பத்திரியிலை விடுவாவாம் எண்ணுறியள்"

"ஓம் செல்வியக்கா. போன முறை வருத்தம் வந்த நேரம் அவவின்ர சென்ரர் வானிலைதான் என்னை ஏத்திக் கொண்டே அந்த ஆஸ்பத்திரியிலை என்னைச் சேர்த்தவை. அங்கை பாசையும் தெரியாது. ஒண்டும் தெரியாது. நான் எனக்குத் தெரிஞ்ச ஒண்டு இரண்டு இங்கிலீஷ் சொல்லை வைச்சுதான் என்ரை வருத்தங்களைச் சொல்லி மருந்தெடுத்தனான். நல்ல காலத்துக்கு ஒரு முஸ்லீம் பிள்ளையொண்டு அதுக்கை ஏன் வந்துதோ தெரியாது. அதுக்கும் வருத்தமோவும் தெரியாது. அதுதான் நான் சொல்லுற வருத்தங்களை டொக்ரேசுக்கு சிங்களத்திலை சொல்லி உதவி செய்தது..."

"ஆனால் செல்வியக்கா எனக்கப்ப... பசியிலையும் மனச் சோர்விலையும் என்ரை வாழ்க்கை பற்றிய பயத்திலையும் தான் வருத்தம் வந்தது. நான் இப்ப நல்ல தெம்பாயிருக்கிறன். அக்கா. மனிசி இப்ப என்ரை சாமியையும் கும்பிட விடுகுதில்லை. என்னை என்ன செய்யுமோ எண்டு தெரியுதில்லை. இந்த

முறை என்னை அந்த ஆஸ்பத்திரியிலை கொண்டேய்ப் போட்டா வெண்டால் எனக்கு விசரில்லாமலேதான் விசருக்கு டொக்ரேர்ஸ் வைத்தியம் பாப்பினம். இந்த மனிசி நினைக்குதோ என்னை அங்க கொண்டேய் தள்ளி விட்டால் தனக்கு ஒரு சிலவும் பொறுப்பும் இல்லாமல் இருக்கலாம் எண்டு. என்ன மனிசி செல்வியக்கா இந்த மனிசி. இதுகும் ஒரு தாயோ?"

"ஏன் குயிலினி நீங்கள் கலியாணம் செய்யக் கூடாது,"

"ஆர் செல்வியக்கா எங்களைக் கலியாணம் கட்டினம். எங்களிட்டை காசும் இல்லை. வயதும் நாற்பத்திநாலு ஆச்சுது."

ஆள் சிவந்த அழகானவள். கண் கலங்குகிறாள். என் கண்ணிலும் நீர் முட்டுகிது.

"குயிலினி ஆரோ வந்திருக்கினம். கொஞ்சம் பொறுங்கோ, அவையைப் போய்ப் பாத்திட்டு வாறன்." நான் முன்னுக் குக்குப் போறன். சிறிது நேரத்தில அவளும் நான் குடுத்த சாப்பாட்டை சாப்பிட்டிட்டு 'நான் போயிற்று வாறன்' எண்டு சொல்லிப்போட்டுப் போறா.

அவளின்ரை மேல்படிப்புக்கும் வீட்டின்ரை வறுமை தடையாய்ப் போச்சுது.

மாதம் ரியூசனில வாற ஆயிரத்து அறுநூறிலதான் அவளும் வாழுறாள்.

இது என்னத்துக்குக் காணும்! இந்தப் பொருளாதார யுத்த கால பொருட்களின்ரை விலை உயர்வில!

# பற்று

என்ன சோக்கான இடம். பத்து தர பத்து சதுர அடி அறை. ஒரு பக்கம் ஆறு தர ஆறு யன்னல். எட்டு அடி உயரக் கதவு. கண்ணுக்கு இதமான மாம்பழ மஞ்சள் நிற தடிச்ச கேட்டின் துணிக்கு மேலை நல்ல சீமப்பால் கடும்பு நிற லேஸ் கேட்டின் தொங்குது. யன்னலின்ரை ஒரு கரையிலை ஒரு சின்ன மேசையும் கதிரையும் மேசையிலை படிக்கப் படிக்கத் திகட்டாத ஒரு திவ்வியமான புத்தகமும் யன்னலின்ரை மற்றப் பக்கத்தில சில காயிதங்களும் பேனையும். நான் கும்பிடிற றோசும் வெள்ளையும் சேர்ந்த கடவுள் சிலையும் நிலவாய் ஒளிருற விளக்கும் பூக்களும். மற்றப்பக்கம் என்ரை உடுப்பலுமாரியள் எண்டு பலதும். நிலத்துக்கு காப்பற் விரிப்பு.

இதுதான் நான் இருக்கிற, உண்மையாய் ஒரு புருசன் பெண்சாதியும் இரண்டு சின்னப் பிள்ளையளும் வடிவாய் இருக்கக் கூடிய பெரிய அறை. இப்பிடி ஒரு வடிவான அறையை என்ரை அப்பா, அம்மா கனவிலையும் கண்டிருக் காயினை. ஏன் முந்தி நானும் கண்டனானே.

அறை நடுவிலை ஒரு கிங் சைஸ் கட்டில். அதின்ரை மெத்தை எண்டால் சொல்லி வேலையில்லை. அவ்வளவு குசன். சும்மா ஆளிருந்தால் துள்ளும். படுத்தால் உள்ளுக்கை புதைஞ்சு போற சொகுசு மெத்தை.

எனக்குப் படுத்தால் நித்திரை வருகுதில்லை. ஒரே யோசினை. ஒரே யோசினை. நித்திரை வராட்டிலும் வெளியிலை நான் போயிருந்து மற்றவையோடை சேர்ந்து கதைக்கிறதோ ரீ வி பாக்கிறதோ எண்டு பொழுதைக் கழிக்கன். அவமாய், நெஞ்சிலை பாரம் கூடக் கூட நான் என்ரை அறேக்கை வைச்சிருக்கிற புத்தகத்தை வாசிக்கிற பக்கங்கள் தான் கூடும்.

நேரம் போகிறதுக்கு ஏதேன் வேலை தன்னும் செய்வ மெண்டால் நான் தனி ஓராளுக்கு என்ன பெரிய வேலை.

ஒருக்காச் சமைச்சதை மூண்டு நேரமும் இரண்டு நாளைக்கு வைச்சுச் சாப்பிடுவன். கூட்டித் துடைச்சு கழுவி வைச்சது வைச்சபடி எல்லாச் சாமானுகளும் அந்தந்தப்படி கிடக்கும். நான் ஆடம்பரமாய் உடுத்திறதுமில்லை. உடுத்துற உடுப்புகள் ஊத்தையும் அவ்வளவாகாது. எனக்குச் செலவும் பெரிசா யில்லை. பேந்து ஆருக்கு அதிகம் உழைக்கவேணும்.

வேலை நேரம் எட்டு மணித்தியாலம் போக என்ரை வீட்டுவேலைக்கு இரண்டு மணித்தியாலம் போக பொழுது படுமட்டும் தொண்டுதான் நான் செய்யிறது. ராவிலை கட் டில்லை நித்திரை வராமல் புரண்டு புரண்டு என்ரை பழசு, பந்துகளை சும்மா யோசிச்சுக் கொண்டு கிடப்பன். எத்தினை நாளைக்கு இந்தத் தனிமை வாழ்க்கை. எண்டைக் கெண்டாலும் ஒருநாள் இந்த நரக வாழ்க்கை மாறும். கடவுள் வேதனையைக் குடுத்து என்னைச் சோதிச்சு என்ரை மனத்தைப் புடம் போடு றார் எண்டுதான் நான் மனம் தள்ளாடுற நேரமெல்லாம் என்னை ஆத்துறது. வியாளன் இரவு வந்தால் சந்தோசம். வெள்ளி இரவு என்ரை பிள்ளையள் என்ரை வீட்டை வருவினம். பிறகு அவை ஞாயிறு பின்னேரம் போனால் திங்கள், செவ்வாய் வரையும் அவை வந்திட்டுப் போனது வரை நடந்ததுகளை மீட்டி மீட்டிக் கொண்டிருப்பன். பிறகு செவ்வாய் பழையபடி என்னைத் தனிமை தொற்றியிடும். பிறகு பழையபடி வெள்ளியை எதிர்பார்த்துக்கொண்டு... இப்பிடியே என்ரை துயர நாடகமும் புத்தகமும் கடவுள் துணையும் தான் என்ரை வாழ்க்கை.

முந்தி ஊரிலை பிள்ளையள் இரண்டு பேரும் முத்த த்திலை விளையாடிக் கொண்டிருப்பினம். நான் அவையை இடையிடை கூப்பிட்டுச் செக் பண்ணிக்கொண்டு என்ரை வீட்டலுவல்களிலை கவனமாயிருப்பன். மூத்தவள் சாடை யாய் என்னைப் போலை. ரண்டாவது பெட்டை உரிச்சுக் கழட்டி அசல் அவரே தான். அவளைப் பாக்கப் பாக்க ஆசை ஆசையாய் இருக்கும். எனக்கு என்ரை அவரிலை சரியான விருப்பம். ஆனால் அவரை இப்பவும் நேரை அவ்வளவாய்ப் பாக்கமாட்டன். வெக்கம். அவர் சொந்த மச்சான்தான். அவர் நான் சாமத்தியப்பட்டநேரம் எங்கடை வீட்டை வரேக்கை அவரை என்னோடை சேர்த்துக் கலியாணம் பேசி நெளிச்ச தாலை எனக்கு பன்ரண்டு வயசிலையிருந்தே அவரோடை ஒரு வெக்கம். மரியாதை.

என்ரை கலியாணதுக்கு முதலே அவர் சவுதி போய் ரண்டு மூண்டு தரம் உழைச்சுக் கொண்டு வரேக்கை எல்லாம் எனக்கும் துணிமணியள் எல்லாம் தன்ரை தாயிட்டை குடுத்தனுப்புவார். நான் ஏ. எல் சோதினை எடுத்த பிறகு கலியாணம் என்னைக் கட்டினார். அவர் அந்த மாதிரி வடிவு. நானும் வடிவுதான். என்னை மாம்பழம் எண்டுதான் கூப்பிடுறது. என்ரை நிறம் மஞ்சள் கலந்த வெள்ளை. ஊரிலை எல்லாரும் எங்களை நல்ல சோடிப் பொருத்தம் எண்டு சொல்லுவினம்.

நான் கலியாணம் கட்டின பிறகு எங்களுக்குச் சீதனமாய்த் தந்த வளவுக்கை கிடந்த கொட்டில் வீட்டுக்கை போய் வாழ்க்கை நடத்தினம். இந்த வளவு என்ரை அப்பாச்சியின்ரை வளவு. அதை அவ தன்ரை மற்றப் பிள்ளையள் காசுக்கெண்டாலும் தங்களுக்குத் தரச்சொல்லிக் கனமுறை கேட்டும் அவை ஒருத்தருக்கும் குடுக்காமல் என்ரை அப்பருக்குத்தான் மனம் விரும்பி நன்கொடையாக் குடுத்தவ. காரணம் அது ஒரு குற்றம் பொறுக்காத காணி. அதுக்குள்ளை ஒரு வைரவர் கோயில் இருக்குது. அதைச் சுத்தி வேப்பமரங்கள் ஏழெட்டு நிக்குது. புளி, ஐஞ்சாறு தென்னை, பனை, இலுப்பை, மா எண்டு வளவு முழுக்கச் சோலை தான். ஆரும் மச்சம் தின்னுறவை மச்சம் மாமிசம் திண்டிட்டு குளிக்காமல் அந்த வளவுக்குள்ளை வந் தாலே கிணத்துக்கை காகமோ, அணிலோ தவக்கையோ செத்து மிதக்கும் எண்டு அப்பாச்சி குளறிக் குளறி அடுத்தநாள் மெசின் பிடிச்சு கிணத்தை இறைப்பிப்பா.

அதாலை அவ ஆகாரத்திலை வலு கவனம். வளவுக் குள்ளை ஒருத்தரையும் லேசிலை கால் வைக்கவிடா. நல்லநாள் பெரிய நாளிலைதான் அப்பாச்சி தன்ரை வளவுக்கை வாற வையை வடிவா வரவேற்பா. இல்லாட்டில் படலையடியிலை ஆற்றையும் தலை தெரிஞ்சாலே உடனை, 'தாருது தாருது நில்லங்கை நில்லங்கை நான் பங்கை வாறன். நில்லுதிலை' எண்டு நாய் மாதிரிக் கத்திக்கொண்டு போவா. சனம் அவவின்ரை சத்தத்திலையே பயந்துபோய் தகரப் படலையடியிலையே நிண்டு போடுங்கள்.

காரணம் இந்த எங்கடை அப்பாச்சியின்ரை புருஷன்.. அதுதான் எங்கடை அப்பப்பா இளசாயிருக்கேக்கை ஒருநாள் அந்த ஊர்ச் சாமி கோயில் வேட்டைத் திருவிழாக்கு றோட்

டாலை வீதியுலா வரேக்கை தன்ரை றோட்டுப் படலை யடியிலை தான் வரமுதல் தன்ரை வாசல்லை கொஞ்சநேரம் சாமி நிக்காமல் புறப்பட்டிட்டுதெண்டு தன்ரை வளவான் அடுத்த கேற்றுக்காலை போய் சாமி மற்ற றோட்டாலை வரேக்கை வெறியிலை சாமியின்ரை சிலையைத் தொங்கி இழுத்து வாளாலை வெட்டிச் சிலையை விழுத்தினதோ என்னவோ எண்டு ஏதோ பாரதூரமாய் நடந்ததாம். அதுக்குப் பிறகு அடுத்த நாள் வீட்டை விட்டு வெளிக்கிட்டவர்தானாம். போனவர் போனது தான். ஒரே போக்கு. இன்ன இடம் ஏது இடம் எண்டு ஒருத்தருக்கும் ஒண்டும் தெரியாதாம். அதுக்குப் பிறகு அப்பாச்சிதான் தனிய தன்ரை ஐஞ்சு பிள்ளையளையும் அப்பம் சுட்டு வித்து வளத்து ஆளாக்கினது.

அதாலை அதுக்குப் பிறகு அவாக்கு தெய்வக் குற்றத் துக்குச் சரியான பயம். தன்ரை பிள்ளையளுக்கும் அந்தத் தீட்டு வந்திடக் கூடாதேயெண்டுதான் அவ தன்ரை மற்றப் பிள்ளை யள் எல்லாம் காசுக்குத் தன்னும் தங்களுக்குத் தரச் சொன்ன காணியை அவைக்குக் குடுக்காமல் கடைசிவரை மச்சம் தின்னாத தன்ரை பிள்ளை சைவத்துக்குக் குடுத்தது.

சைவமும் தன்ரை அந்தக் காணியை தன்ரை மற்றப் பிள்ளையளுக்குச் சீதனமாய்க் குடாமல் சொந்த மச்சானைக் கலியாணம் கட்டின தன்ரை இளசுக்குக் குடுத்தது. இனசனம் எண்டதாலை எங்கடை விருப்பு வெறுப்புகளை சின்ன னிலையிருந்தே தெரிஞ்சு வச்சிருக்கிறதாலை சொந்த பந்தங் களை அனுசரிச்சுப் போகுங்கள் எண்டு.

என்ரை அவரும் அப்பிடித்தான். நல்ல மாதிரி. விடிய நாலு மணிக்கு எழும்பி வளவு முழுக்கக் கூட்டி அள்ளி கோயில் கழுவி கோயில் பித்தளைச் சாமான்களை பளபளக்க புளி போட்டு மினுக்கி தோஞ்சு குளிச்சுப் பூ ஆஞ்சு மாலை கட்டிப் போட்டு என்னையும் பிள்ளையளையும் பூசைக்குக் கூப்பிடு வார். சரியாய் அஞ்சு அம்பத்தைஞ்சுக்கு .

நானும் விடிய நாலு மணிக்கு அவரோடையே எழும்பி அடுப்படிச் சாம்பல் அள்ளி அடுப்பு புகடு மெழுகி வீடு வாசலுகள் கூட்டி அள்ளி வீட்டுக்கு மஞ்சள் தண்ணி தெளிச்சு முத்தத்துக்கு சாணி கரைச்சுத் தெளிச்சு சட்டியள் பானையள் மினுக்கி உடுப்புகள் தோச்சு குளிச்சுவிடுவன். பிள்ளையளும் இந்த

நேரமே எழும்பி கால் முகத்தைக் கழுவிப் போட்டு திருநீத்தைப் பூசிக் கொண்டு இருந்து படிச்சுப் போட்டு அவையும் குளிச்சு ஆறு மணிப் பூசைக்கு றெடியாவிடுவினம். அப்பாச்சியும் தானே சுடுதண்ணி வைச்செரிச்சுத் தோஞ்சு தீட்சை வைச்சு றெடியாவிடுவா. பூசைக்கு நாங்கள் ஐஞ்சு பேரும் தான். வேறை ஆக்களை அப்பாச்சி வளவுக்கு நுளைய விடா சுத்த பத்தம் பாத்து.

இப்பிடி இருந்து வரேக்கை நாட்டிலை சண்டை தொடங்கி யிட்டுது. சமாதானத்துக்கு வந்தவன் சண்டை துடங்க வீட்டிலை ஆம்பிளையளை வைச்சிருக்கிறது பயமாப் போக பாதுகாப்பில் லாததாலை என்ரை அவரும் மற்றவையப் போலை வெளிநாடு போகவேண்டி வந்திட்டுது. அப்ப வெளிநாட்டுப் பாதையள் கொஞ்சம் ஓட்டம் கூடவாயிருந்து அவர் ஜேர்மன் போன பிறகு பூசையை நான் தான் செய்யிறது. அப்ப எனக்கு அவற்றை கோயில் வேலையளும் என்ரை வீட்டு வேலையளுமாய் வேலை கூடத்தான். ஆனால் அதிலை ஒரு ஆத்மதிருப்தி.

எனக்குத் துடக்கு நாளேல்லை அஞ்சு நாளைக்கு நான் என்ரை அம்மா வீட்டிலை தான் இருப்பு. அந்த அஞ்சு நாளும் என்ரை அவர் தான் ஒரு சிணுங்கல்படாமல் கோயில் வேலை யோடை வீட்டு வேலை, சமையல், தன்ரை தொழில் எண்டு என்னவோ தன்னாலை ஆனதைச் செய்யிறது.

இவர் ஜேர்மன் போன பிறகு என்ரை துடக்கு நாளேலை என்ரை அப்பர் தனக்கேலாட்டாலும், நான் அம்மா வீட்டை போக அவர் வந்து கோயில் அப்பாச்சி, என்ரை பிள்ளையள், சமையல் எல்லாத்தையும் பாக்கிறது.

ஆனால் இவர் ஜேர்மன் போன பிறகு கோயில் அலுவல்கள், வீட்டலுவல்கள் எல்லாம் என்ரை பொறுப்பிலை வந்ததிலை சின்னாக்களை கவனிக்கிறதுதான் கொஞ்சம் குறைவாப் போச்சு.

நாங்கள் சின்னாக்களை பக்கத்து வீடுகளுக்கெல்லாம் போக விடுகிறேல்லை துடக்குக் காத்து.

அதாலை அவை ரண்டுபோரும் தான் வளவுக்கை கெந்தித் தொட்டோ, ஒளிச்சுப் பிடிச்சோ, கொக்கான் வெட்டியோ, சிப்பிக் கோடோ எண்டு வளவுக்கை என்னண்டாலும் விளை யாடுவினம். வளவுக்கை ஒரு குறுணிக் கல்லுக் கூட அவைக்குக் குத்தாது. மணல் வார்ந்தோடிப் போய்க் கிடக்கும்.

தகப்பன் இருந்தால் அவர் அவையோடை கிட்டி புள் விளையாடுவார். நவீன கிறிக்கற். தகப்பன் வெளிநாடு போனாப் பிறகு பிள்ளையள் ரண்டும் கிட்டிபுள்தான். புள்ளு கண்ணுகள் மூக்குகளிலை பட்டிடும் எண்டு நான் விளையாடவேண்டாம் எண்டு மறிச்சாலும் தகப்பன்ரை நினைவாலையோ என்னவோ அதைத்தான் நெடுக விளையாடுவினம். நானும் அதாலை கண்டும் காணாமல் விட்டிடுர்றது.

ஒரு நாள் இப்பிடி இரண்டு பேரும் விளையாடேக்கை சின்னன்ரை கண்ணிலை நான் பயந்தாப்போலை புள் பட்டிட்டுது. கண் சிவந்து போச்சுது. ஆஸ்பத்திரியளுக்கு போறதுக்கும் பயம். இந்தியன் ஆமியின்ரை அட்டகாசம். பொம்பிளையள் எண்டும் பாக்காங்கள். உடம்புகளைத் தொட்டுச் செக் பண்ணுவாங்கள். எனக்கும் கோயில் அலுவல்கள் வீட்டலுவல்கள் எண்டு வேலையளும். அறிஞ்ச சனம் ‘முட்டை அவிச்சுக் கண்ணிலை கட்டினால் இரண்டு நாளையிலை நோவை இழுத்துப் போடும். அதோடை எல்லாம் சரியாப் போம்’ எண்டுதுகள். நாங்கள் சைவம். முட்டை மச்சம். அது செய்யேலாது. சிலர் தாய்ப்பாலைக் கண்ணுக்குள்ளை மூண்டு நேரம் விட்டால் சரி எண்டினம். நான் தாய்ப்பால் தேடிப் போனால் ஊரிலை அந்த நேரம் எங்கடை செல்லன்ரை பெட்டை தான் பிள்ளைப் பெத்திருந்துது. நான் பலதையும் பத்தையும் யோசிச்சுக் கொண்டு அப்பாச்சியிட்டைக் கேட்டால் அவா விடமாட்டன் எண்டிட்டா.

குழந்தைக்கு ஒரு வைத்தியமும் செய்யாமலே சுடு சோத்தை வெள்ளைத் துணியிலை பொட்டலம் கட்டி ஒத்தணம் குடுக்கிறன். மூண்டுநாள் போயிட்டுது. பிள்ளைக்கு வலி. பிள்ளை அழுகுது. கண் நல்லா வீங்கி மூடிப்போட்டுது. திறக்கேலாமல், ஆத்தாமல் வலி கூடிக்கொண்டுபோக தாங்கேலாமல் யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரிக்கு என்ரை அப்பரையும் கூட்டிக் கொண்டு போனால், டொக்ரேர்ஸ் ஏன் உடனையே குழந்தையை கொண்டரேல்லை எண்டு எங்களை ஏசிப்போட்டு குழந்தையை உடனேயே வாட்டிலை மறிச்சுப் போட்டினம்.

நான் குழந்தைக்கு வாட்டுக்குத் தேவையான சாமான் ஒண்டும் கொண்டு போகேல்லை. என்ரை அப்பரை வாட்டிலை பிள்ளையோடை விட்டிட்டு, ‘இந்தா உடனை ஓடி

வாறன் அம்மப்பாவோட இருங்கோ' எண்டு குழந்தையைச் சமாதானப்படுத்திப்போட்டு வீட்டை போற பஸ்சைப் பிடிச்சு அவசர அவசரமாய்ப் போய் மெயின் றோட்டிலை இறங்கி அங்காலை உள்ள ஒரு மைல் தூரத்தை ஓட்டமும் நடையுமாய் போகேக்க எங்கடை செல்லன்ரை ஆக்களின்ரை ஒரு பெட்டை கேட்டாள். 'எங்கையும் ஓட்டமும் நடையுமாய் ஏதன் அவசரமே. பின்னாலை கரியலிலை ஏறுமன். வீட்டிலை படக் கெண்டு கொண்டே விடுறன்' எண்டு கேட்கவும் ஆபத்துக்குத் தாய்ப்பாலே நாங்கள் வேண்டி கண்ணிலை விடாததை நான் நினைச்சுப்போட்டு அவளின்ரை கதையைப் பறுவா பண்ணாமல் வீட்டை போனால், அப்பாச்சி ஆஸ்பத்திரித் துடக்குக்குப் படலேக்கை மூண்டு வாளி தண்ணி அள்ளியந்து படலேக்கை வைச்சு தோயவாத்து வளவுக்கை விட்டா. பிறகு நாலைஞ்சு வாளி கிணத்திலை தண்ணியை விறுவிறெண்டு அள்ளி உடம்பை முழுசாய் நனைஞ்சு தோஞ்சுபோட்டு வீட்டுக்கை போய் தேவையான சாமான்களை எடுத்துக் கொண்டு கேவியூக்கு முதல் ஆஸ்பத்திரிக்குப் போய்ச் சேந்து அப்பரை வீட்டை அனுப்பினது கண்ணுக்கை நிக்குது.

அதுக்குப் பிறகு என்ரை அப்பர்தான் என்ரை வீட்டிலை போய் இருந்தவர். வளவுக்கை கோயில் கடமையிருக்குதே. தெய்வ காரியம் தடங்கப்படாது.

ஆனால் வைத்தியம் தொடர்ந்தும் ரண்டு கிழமையிலை என்ரை பிள்ளையின்ரை கண் படிப்படியாய் நோ குறைஞ் சாலும் ஒரு கண்ணிலை சாடையாய் பார்வையிலாமல் குறைஞ்சு போச்சு. ஐயோ நான் செய்த பிழையென்ன. என்ரை கடவுளே உனக்கொரு பாவம் பழியும் நான் செய்யேல்லையே. என்ரை செல்வத்துக்கேன் இந்தக் குறையை விட்டாய் எண்டு அழுது உள்ள கோயிலெல்லாம் திரிஞ்சன். வெத்திலைச் சாத்திரி, பொங்கல், படையல், மடை, எள்ளெண்ணைச் சட்டி எரியல், காகத்துக்குப் பிண்டம், நூல் கட்டல், கந்தசட்டி, காவடி, பால்குடம் அது இது எல்லாம் எடுத்தன். என்ரை மனிசன் பறவைக் காவடி எடுக்கிறதாயும் நேந்தன். ஒரு நேரச் சோறு, மண் சோறெண்டு எத்தினையோ நேத்தி வைச்சும் நான் தோத்துப் போனன். காத்திலை பறக்கிற நூலாய் ஓடி ஓடி எல்லா ஆஸ்பத்திரியளுக்கும் கல்லு வைச்ச எங்கட எல்லாக் கோயில்களுக்குமாய் அலைஞ்சன்.

அந்த நேரங்களிலை எங்கடை றோட்டாலை ஒரு குறிப்பிட்ட நேரம் ஒவ்வொருநாளும் சாம்பல் கலர் சீலை உடுத்துக்கொண்டு ஒரு பத்துப் பன்னிரண்டு பெண்டுகளிருக்கும் கையிலை ஒரு புத்தகமும் மணிமாலையும் கொண்டு போறதை நான் பாத்தன். ஆனால் கனநாளுக்குப் பிறகு தான் அவையை நான் 'உதாராக்கள் உதாலை எங்காலை உவை போயினம்' எண்டு என்ரை பக்கத்து வீட்டு அக்காவை நான் கேக்க அவா, 'உதுகளோ அதுகள் தான் உந்த வேதக்கார ஆக்கள். அவை எங்களை மதம் மாத்தத் திரியினம். கஷ்டப்பட்ட ஆக்களுக்கு கடைசியிலை தங்கடை கடவுள்தான் அனுக்கிரகம் புரிவாராம். சாத்தான்களைக் கும்பிடுறவைதானாம் விக்கிரக வழிபாடு செய்யிறவை. அது இது எண்டு எங்கடை கடவுளுகளை சமயத்தைப் பற்றி குறைச்சலாய்ப் பேசுறாளவை. அதாலை நாங்களொருத்தரும் உவளவையை மதிக்கிறேல்லை'

'சிலநாள்ளை நாங்கள் உந்தக் கிறகங்கள் றோட்டாலை போகேக்கை ஒளிச்சு நிண்டு கூக்காட்டிறதும் உந்தச் சவங்கள் எங்கடை ஊருக்கு அங்காலை இருக்கிற அந்தாக்களின்ரை திக்குக்குத்தான் போறாளவை. உந்த நாயளை எங்கடை ஊருக்காலை போக விடப்படாது. ஆனால் றோட்டு அரசாங் கத்தின்ரையெல்லே. நாங்கள் ஒண்டும் செய்யேல்லாது பார்' எண்டா.

பிள்ளேன்ரை ஒரு கண் பார்வை அரைவாசி மங்கிப் போச்சுது. பிள்ளை உலாவக் கொஞ்சம் தட்டுமுட்டுப் படுகுது. அதைப் பாக்க என்ரை நெஞ்சுக்கை ரத்தம் சொட்டுது.

இரவிரவாய் எனக்கு நித்திரையில்லை. ரண்டுமாதம் முடிஞ் சுது. ஒருநாள் சாம்பல் சீலைக் கூட்டத்தை நான் றோட்டிலை கண்டன். அவையை நான் சாடையா நோட்டம் விட அவேன்ரை கதேக்கை காதை விட்டன்.

நானும் இவை என்ன சொல்லினம் எண்டு கேட்டுப் பாப்பம் எண்டு. அவை எனக்குப் பேச்சுக் குடுக்கினம். தங்கடை சமயக் கொள்கையளைச் சொல்லி தங்கடை ஆண்டவர் நடக்கமுடியாத முடவனை நடக்கப்பண்ணின அற்புதத்தையும் தொழுநோயாளியை சுகப்படுத்தியதையும் எண்டு கனக்க உதாரணங்களையும் சொல்லி தங்கடை மதத்தை விசுவாசிக்கச் சொல்லிச்சினம். என்ரை கஷ்டம் இதுதான். என்ரை

பிள்ளையின்ரை கண் வருத்தம் மாறும் எண்டும் தாங்களும் என்ரை பிள்ளைக்காக ஜெபிக்கிறதாயும் சொல்லிச்சினம்.

‘கேளுங்கள் தரப்படும் தட்டுங்கள் திறக்கப்படும் தேடுங் கள் கிடைக்கு’ மென்றார்.

இது எனக்கு சின்னனிலையும் நெடுகலும் கேட்ட பாட்டு. அந்த அடி திரும்பத் திரும்ப என்ரை மனசுக்குள்ளை அண்டைக்கு முழுக்க உருளுது.

எனக்கு ஒரே யோசினை. என்ரை கடவுளுகளிலை எல்லாம் கேட்டுக் கேட்டுக்கொண்டு வந்தாலும் இதுகும் எனக்கொரு புது பற்றுக்கோடோ.

கோயில் வேலையளை முடிச்ச கையோடை எதுக்கும் போய்ப் பாப்பம் எண்டிட்டு அடுத்தநாள் விடிய சேச்சுக்கு போறன். என்ரை பிள்ளையும் கொண்டு. ஆளளவு மெழுகுதிரி கொழுத்த.

அங்கை நான் போனநேரம் அண்டைய தொழுகை நடந்து கொண்டிருக்குது. அந்த fபாதரின்ரை அன்பான பிரசங்கம் என்னை ஆசுவாசப்படுத்துகிது. அந்த மதத்திலை ஒரு நல்ல பற்று வருகுது. அந்த மதம் பற்றி, அதாலை ஒரே தேடல். நான் அவேயின்ரை பைபிள் எல்லாம் வாங்கியந்து அண்டைக்கு ஒரே படிப்பு. பிறகு என்ரை வீட்டை என்னை சேச்சுக்குப் போக வழிசொன்ன பொம்பிளையள் வந்ததோடை என்ரை அப்பாச்சியின்ரை எதிர்ப்பு வீட்டிலை வந்திட்டுது. தன்ரை வளவுக்காலை வெளிகிட்டி எண்டா. நான் அங்கை இருக்க முடியாத நிலை வந்திது. நான் புதுசாய் வரிச்ச மதமும் எனிமேலும் நான் அந்த சாத்தான்களை கும்பிடுகிற ஆக்கள் இருக்கிற இடத்திலை அதுகளோடை கூட வசிக்கிறது பாவம் எண்டு சொல்ல, அப்பாச்சி வீட்டை விட்டிட்டு என்ரை அம்மான்ரை வீட்டை போறன்.

அங்கையும் ஒருத்தரும் என்னோடை என்ரை மதப் பற்றோடை ஒத்துழைக்கேல்லை. உன்ரை கொப்பப்பர் செய்த பாவம் காணாதெண்டே நீ இப்ப இந்த வேதம் விட்டு அந்த வேதத்திலை போய்ச் சேந்திருக்கிறாய். உப்பிடி எண்டால் நீ எங்கடை வீட்டிலையும் இருக்கப்படாதெண்ண என்ரை அவற்றை தாய்வீட்டை தேடிப் போறன். என்ரை பிள்ளையளோடை. என்ரை மாமி என்னையும் பிள்ளையளையும் கூப்பிட்டு அன்பாய் வைச்சிருந்தா.

ஆனால், என்ரை புது மதத் தொடுப்புப் பற்றி என்ரை அவருக்கு கடிதம் எழுதிப் போட்டிட்டா. அவர், 'என்ரை செல்லம் எங்கடை குலத்துக்கு நீயும் பாவம் பழி தேடிப் போடாதை. உன்னை நான் விரும்பினதே உன்ரை பூசை புனஸ்காரங்களைப் பாத்துத்தான். ஆற்றை கண்ணூறோ பட்டிட்டுது. எல்லாத்துக்கும் சேர்த்து ஒரு ஐயரைப் பிடிச்சுச் சாந்தி செய்து போட்டு கொழும்புக்கு வா. நான் உன்னை இஞ்சை(வெளிநாடு) கூப்பிடுகிறன். இஞ்சை எல்லா வருத்தத்துக்கும் மருந்து செய்யலாம். இல்லாத வசதி யில்லை இந்த நாட்டிலை. நீ வாவன். பிள்ளையின்ரை வருத்தத் தையும் மாத்தி நாங்கள் இந்த சொர்க்க புரியை அனுபவிப்பம். உண்மையாய்த்தான் இஞ்சை ஒவ்வொரு இடங்களையும் பாக் கேக்கை ஐயோ நீ இல்லையே என்னோடை சேர்ந்து இதை ரசிக்க எண்டு நினைப்பன். அந்த நேரம் நான் உன்னை இஞ்சை வரக் கேட்டதுக்கு நீ வந்தால் கோயிலை ஆர் பாக்கிறதெண்டு நீ கேட்க, நானும் அதுகும் சரிதான் எண்டு போட்டு நாட்டிலை சண்டை முடியுமட்டும் தானே நான் இஞ்சை இருக்கிறது எண்டிட்டு பேசாமல் இருந்திட்டன்.

சரி எனி நீ வா என்னட்டை. நானும் நீயும் எனி இஞ்சை சேர்ந்திருக்கிறதுதான் தெய்வசித்தம் போலை. நாட்டிலை சண் டையும் வரவர கூடிக்கொண்டுதானே போகுது. எதுக்குமாய் நீ உடனை கொழும்புக்கு வந்துவிடு. எல்லாம் சுகம் வரும் வைரவர் துணை' எண்டு கடிதம் எழுதியிருந்தார்.

நான் இதை என்ரை புது மதக்காரரிட்டைச் சொல்ல, அவை 'ஓம் அது நல்லதுதான். நீங்கள் அங்கை போனால் வைத்தியம் எல்லாத்துக்கும் வசதி. ஆனால் அதோடை உங்கடை குடும்பம் முழுத்தையும் எங்கடை தேவனுக்கு விசுவாசியள் ஆக்கிப் போடவேணும்' எண்டு ஒரு வேண்டுதலையும் விட்டினம். எனக்கொரு விசேச பிரார்த்தனையும் நடத்தி அங்கையுள்ள அவையின்ரை மதத்தோடை தொடர்புடைய ஆக்களின்ரை விலாசம், ரெலிபோன் நம்பர்களையும் தந்து ஆசீர்வதிச்சு விட்டினம்.

பிறகு நான் உடனை என்ரை பிள்ளையளையும் கொண்டு என்ரை ஒரு ஒண்டுவிட்ட சகோதரத்தோடை கொழும்புக்கு வந்து- அப்பர் என்னோடை எனி வரார். அவர்தான் இப்ப அப்பாச்சியின்ரை கோயில் பராமரிப்பு- ஏஜென்சியாலை என்ரை அவர் இருக்கிற ஊருக்குப் போயிட்டன். அவற்றை

ஜேர்மனிக்கு நான் போகேக்கை அந்த என்ரை ஒண்டுவிட்ட சகோதரம் 'சரி உனக்குப் பிடிச்ச சனியெல்லாம் இத்தோடை துலைஞ்சுது. எனிப்போய் மனிசனோடை சந்தோசமாய் இரு' எண்டு சொல்லி வழி அனுப்பி வைச்சது இப்பயும் காதுக்கை கேக்குது.

அங்கை நான் போனதும் எயாப் போட்டிலை என்ரை அவர் என்னைக் கண்டதும் கண்கலங்கினபடி கட்டிப் பிடுச்சுக் கொஞ்சி அழுது கொண்டு பிள்ளையள் ரண்டையும் தன்ரை ரண்டு கையிலையும் தூக்கிக்கொண்டு எங்களைக் கூட்டிக்கொண்டு போனார்.

அந்த ஊரிலை வழியிலை பாக்கிற இடமெல்லாம் பனிமூடி பஞ்சுக்கூட்டங்களாய்த் தெரிஞ்சுது. குளிரோ கிடு கிடுக்க வைச்சுது. பிள்ளையள் தகப்பனோடை ஒட்டிக் கொண்டிருந்திச்சினம். வெளியிலை ஒரு காட்சியும் தெளிவாய்த் தெரியுறதாயில்லை. ஆனால் சேச் அமைப்பிலை ஒரு கட்டிடம் பனிமூடி இருக்க 'அது சேச்சோ' எண்டு எனர அவரிட்டைக் கேக்க 'ஓம் சேச் தான்' எண்டு என்ரை அவர் சொல்ல 'ஒருக்கா கொஞ்ச நேரம் அதிலை நிப்பாட்ட ஏலுமோ' எண்டு நான் கேக்க, 'ஓம் நிப்பாட்டலாம்.' ஆனால் 'ஏன்' எண்டார். நான் சொன்னன் "நான் உங்களிட்டை வந்தவுடனை கோயிலுக்கு உடனையே வாறதாய்.. அதுதான்' எண்டு சொன்னன். அவர் 'நிப்பாட்டவேண்டாம். இங்கை நாங்கள் போகத் தேவையில்லை. எங்கடை கோயில் இஞ்சை இப்ப இருக்குதெல்லே. நீங்கள் இஞ்சை வந்து சேர்ந்தால் அண்டே அரிச்சனை செய்யிறதாய் நேந்தனான். வா அங்கை போவம்' எண்டார். 'இல்லைப் பறுவாயில்லை. ஒரு நிமிசம் நிப்பாட்டுங்கோ. ஒருக்கா இந்த மண்ணிலை மிதிச்சுப் போட்டு வாறன்.' எண்டு சொல்ல அவர் பேசாமல் கார்க் கதவைத் திறக்க, நான் அவரையும் என்னோடை இறங்கச் சொல்லிக் கெஞ்ச அவரும் இறங்க அந்த இடத்திலேயே முழந்தாழிட்டு யேசுவை மன்றாட அவர் 'இதென்ன இது நீ நடுறோட்டிலை நிண்டுகொண்டு இப்பிடி. அதுகும் இந்தப் பனிக்குள்ளை' எண்டு ஏசி என்னைக் காருக்குள் பிடிச்சு ஏத்தினார். எனக்கு இதுபோதும். முதல் வெற்றி. முழுவதும் வெற்றி. ஊரை விட்டு வெளிக்கிடத் தீர்மானிச்ச உடனை நான் என்ரை கடவுளிட்டை வேண்டின முதல் பிரார்த்தனை இது. அதுதான் நான் என்ரை அவரிட்டை போன உடனை முதல்லை அவரையும் கூட்டிக்

கொண்டு உன்ரை பாதத்திற்கு வாறன் எண்டது. என்ரை முதல் பிரார்த்தனை பலிச்சிட்டுது.

அடுத்தது நான் சேர்ந்த மதம் என்னட்டை கேட்ட வேண்டு கோளை நிறைவேற்றித் தருவன் எண்டது. 'உம் முடைய விசு வாசியாகிய நான் அதுக்கான என்னாலான எல்லா முயற்சி யையும் எடுப்பன் ஆண்டவரே' எண்டு அவரை மனசுக்குள் செபிச்சுக் கொண்டு என்ரை அவரோடை காரிலை அவற்றை வீட்டை போனன்.

வீட்டிலை அவற்ரை றூமிலை பெரிய முருகன் படம். பழனி ஆண்டிக்கோலம். அறேக்கை கற்பூரத்தின்ரை வாசம். எனக்கு அறேக்கை போக முடியேல்லை. அவரிட்டை 'இதென்ன இது ஒரே கற்பூர மணம் அறேக்கை. அப்பாச்சியிலை மணக் கிறது மாதிரி' எண்டு கேக்க, 'ஓம் எங்கடை வீட்டின்ரை கோயில் நினைப்புக்கு இதை வேண்டி வைச்சிருக்கிறன். வா வந்து குளிச்சுட்டு வந்து சாமி கும்பிடு. கெதியாச் சாப்பிடுவம். இப்பதான் பசிக்குது. ஒரு கிழமையாய் என்னாலை சரியாய்ச் சாப்பிட முடியேல்லை' எண்டார்.

'நான் கும்பிடுறது இருக்கட்டும். என்ன சாப்பாடு? உங்கடை வெளிநாட்டுச் சமையல் எப்பிடி இருக்கெண்டு பாப்பம்' எண்டுகொண்டு அவற்றை சாமியை கும்பிடாமல் தவிர்த்து குசினிக்குள்ளுக்கு போயிட்டன்.

ஆனால் பின்னேரம் 'முருகன் கோயிலுக்குப் போவம். வெளிக்கிடுங்கோ' எண்டு அவர் கேக்க 'நான் வரேலாது நீங்கள் போங்கோ' எண்டதும் அவர் எனக்குச் சுகமில்லை யெண்டு நினைச்சுக் கொண்டு, 'என்னெண்டு பிளேனுக்குள்ளை சமாளிச் சனீர். இண்டைக்கு எத்தினை நாள்' எண்டார். எனக்கு அவருக்குப் பொய் சொல்ல முடியேல்லை. 'ஆண்டவருக்கு மேலை ஸ்தோத்திரம். உண்மையிலை நான் இனி சைவக் காரற்றை கோயிலுக்கை வரமாட்டன்' எண்டன்.

'அப்ப நீர் ஆர்' எண்டு அவர் பகிடியாய்க் கேக்கிறார். 'நான் கிறீஸ்துவின்ரை குழந்தை. அவரைத் தவிர ஆரையும் தொழன்' எண்டன் அவருக்கு.

அவர் 'உமக்கென்ன விசரே. பேசாமல் வெளிக்கிடும். முதல் கோயிலுக்குப் போயிட்டு வந்து குழந்தையளை இரவுச் சாப்பாட்டைக் குடுத்து வேளைக்கு நித்திரையாக்குவம். பிறகு

நாங்கள் களையாறி நாளைக்கு விடிய வேளைக்கு வேலைக்கு எழும்பிப் போகவேணும்' எண்டார். 'ஏன் நாளைக்கே போகப் போறீங்களோ' எண்டு நான் கேக்க 'இல்லையப்பா, இப்ப ஐஞ்சு நாளாய் நான் லீவு. நீங்கள் வாறதுக்கு வீட்டுக்கு அடுக்குகள் பண்ணினதாலை. எனி என்ன, நாங்கள் எனி வாழ்க்கை முழுக்க எனி இஞ்சைதானே ஒண்டாய் இருக்கப் போறம். கிணத்துத் தண்ணியை வெள்ளமா கொண்டு போகப் போகுது' எண்டு என்னைப் பாத்துச் சிரிச்சுக்கொண்டு "பகிடியை விட்டுட்டு சுறுக்காய் வெளிக்கிடுமம்மா' எண்டார்.

நான் சிரிச்சுக்கொண்டு, 'பறவாயில்லையப்பா நீங்கள் போயிட்டு வாங்கோ. நான் கொண்டந்த சாமானுகளை ஒழுங்கு பண்ணுறன்' எண்டு அவற்றை கோயிலுக்குப் போகாமல் விட்டிட்டன்.

அவர் கவலையோடை 'சரி, நான் போயிட்டுவாறன். என்ன உங்கள் எல்லாரோடையும் வாறதாய் கடவுளிட்டை வேண்டினனான். பறவாயில்லை' அவர் தன்ரை கோயிலுக்குப் போயிட்டு டப்பெண்டு வந்து 'இன்னொரு நாளைக்கு எல்லாரும் போவம்' எண்டிட்டு எங்களோடை நல்ல புழுகம் புழுகமாய் இருந்தார். அப்ப கதைக்கேக்க 'இனிமேல் தான் நான் நல்ல நிம்மதியான நித்திரை கொள்ளப்போறன். அப்பப்பா நாலு வரியமும் நாப்பது வரியமாய் இருந்திது. நான் உங்களை இப்பிடி இவ்வளவு கெதியிலை காணுவன் எண்டு கனவிலையும் நினைக்கேல்லை. சண்டை எப்ப நிக்கிறது நானெப்ப உங்களைக் காணுறதெண்டு இருந்தன். எல்லாம் கடவுள் விட்டவழி' எண்டார்.

ஆனால் நாள் செல்ல என்னைத் தேடி என்ரை மதப் பிரிவினர் என்ரை விலாசத்துக்கு வந்து போதனை செய்யத் துடங்க 'ஏன் இஞ்சை வேறை ஆக்கள் வருவான். ஒருத்தரும் வரப்படாது' அடியடா பிடியா எண்டு என்ரை அவர் என் னோடை பூனைகடி நாய்கடியாய்ப் பாயத் தொடங்கியிட்டார். எனக்கெண்டால், கடவுள் விசயத்திலை என்ரை பிள்ளை யின்ரை கண்ணிலை பார்வையை ஓரள வேனும் விட்டுத் தந்த எல்லாம் வல்ல யேசுபிரானை விட்டுக் குடுக்க முடியேல்லை.

'நான் என்ரை கடவுளுகளிட்ட இரந்து பேயாய் அலைஞ்சு திரிஞ்ச நேரம் இடையிலை வந்த இந்தச் சாமியின்ரை

அனுக்கிரகம் தானே என்ரை பிள்ளையை காப்பாத்தினது. எனவே அந்த மதத்தைவிட்டு விட்டால் தெய்வ நிந்தைக் காளாக வேண்டி வந்திடுமே. போனால் போகுது. தெய்வ குற்றத்தை விட மனித குற்றம் எந்தளவுக்கு மேலாகப் போகுது. எப்படியும் இந்தப் பூலோகத்தின்ரை அநித்திய சந்தோஷத்தை விட பரலோகத்தின்ரை நித்திய சந்தோஷம் என்ரை குடும்பத் துக்குக் கிட்டும்' எண்ட அசையாத நம்பிக்கையிலை என்ரை கணவனோடை அவரின்ரை மதக் கொள்கையிலை உடன்பட மறுத்திட்டன்.

அவர் என்னைப் பலவழியாலையும் திருத்தப் பாத்தார். பேசினார். அடிச்சார். சாப்பாடு தராமல் விட்டார். வீட் டாலை வெளியேத்தினார். விவாகரத்து வழக்கு வைச்சார். பிள்ளையளை என்னட்டையிருந்து பிரிச்சார். வழக்கு வைச்சு கோட்டுத் தீர்ப்பின்படி வருமானம் உள்ள தனக்குரித்தாக்கினார் பிள்ளையளை. எல்லாமாய் ஆறு வருசம் தனிய என்னைப் பிரிஞ்சிருந்தார். வேறை கலியாணம் கட்டப் போறன் எண்டும் சொன்னார். சொன்ன மாதிரி என்னை விட்டுட்டு என்ரை அவர் வேறை ஒரு கலியாணமும் கட்டினார் ஒரு இந்துப் பொம்பிளையை. முதல்லை என்ரை அவற்றை அந்த ரண்டாவது பொம்பிளை இந்துப் பொம்பிளை என்னைப் பாத்துப் பயந்திது. நான் அந்தப் பிள்ளைக்குச் சொன்னன்.

'நீங்கள் ஏன் எனக்குப் பயப்பிடுறீங்கள். அவர் உங்களைக் கட்டாட்டிலும் வேறை ஆரையும் ஒராளைக் கட்டியிருப்பர் தானே. அதாலை நீங்கள் எனக்குப் பயப்பிடாதையுங்கோ. எனக்கும் என்ரை புருஷனுக்குமிடையிலை தடையாயிருக்கிறது எங்கடை மதங்களே. என்ரை அவர் ஒரு நல்ல பிள்ளை. என்ரை பிள்ளையள் சரியாய் அவரைப் போலத்தானே.

எனக்கதுகள்ளை சரியான உயிர். அவை கோட்டுத் தீர்ப்புப் படி சனி, ஞாயிறு என்னட்டை வாறவை. அதாலை எனக்குப் பறவாயில்லை. நான் அவையிலை அவரைக் காணுறன். என்ரை ரண்டாவது பிரதீபா சரியாய் அவரைப் போலை. அதாலை தான் அவளின்ரை கண்ணிலை வருத்தம் வந்தால் போலை நான் துடிச்சு அந்த வருத்தத்தை மாத்திறதுக்கு என்னை நான் என்ரை மதத்துக்கு அர்ப்பணிச்சிட்டன். அவள் ஓரளவுக்கு சுகமாயிருக்கிறது எனக்கு என்ரை அவர் சுகமாயிருக்கிறதுக்குச்

*சமன். அவரை நீங்கள் வடிவாய்ப் பாருங்கோ, அவருக்கு நல்லெண்ணை விட்டுச் சுட்டதோசை நல்ல விருப்பம். ஆரும் சுடச்சுடக் குடுத்தால் நல்லாச் சாப்பிடுவார். அவற்றை உங்கடை இந்தப்பிள்ளை சரியாய் அப்பிடியே பிரதீபா தான். இஞ்சை தாங்கோ இந்தப் பிள்ளையை' எண்டு சொல்லி கேட்டு வேண்டி என்ரை ஆசைதீர கொஞ்சி அவவிட்டைக் குடுத்தன்.*

*அதே கண். என்ரை பிரதீபான்ரை கண்கள். என்ரை அவற்ரை கண்கள். என்ர அவரைத்தான் இந்தக் குழந்தையும் அப்பிடியே வைச்சுரிச்சுப் பிறந்திருக்குது. அப்பிடியே பிரதீபா தான். ஆனால் எனக்கு ஒரு துளி தன்னும் அவர் என்னை விட்டுப் பிரிஞ்சிட்டார் எண்டு அவரோடை கோவமே வரேல்லை. ஏனென்டால் அவையெல்லாம் அறியாமையெண்ட சாத்தான்ரை பிடியிலை விழுந்திருக்கினம். எண்டைக்கோ ஒரு நாள் அவை கெட்ட சாத்தான்ரை பிடியை விட்டு நான் போற பாதையிலை வருவினம் எண்ட நம்பிக்கை எனக்கிருக்கு. அண்டைக்கு நாங்களெல்லாம் என்ரை ஆண்டவற்றை பாதங் களை ஒண்டாய் சரணடைவம். இப்ப நான் எவ்வளவு கஷ்டப் பட்டாலும் அப்ப எங்களெல்லாருக்கும் நித்திய சுகம் கிடைக்கும். எனக்கு நல்வழி காட்டின எல்லாம் வல்ல இறைவன் என் குடும்பத்தினரையும் என்ரை வழிக்கு இல்லைத் தன்ரை வழிக்குக் கொண்டு வருவான் எண்ட நம்பிக்கையின் பேரிலை என்னட்டை என்ரை மதம் கேட்ட வேண்டுதலை நிறைவேற்றி நான் சார்ந்த கிரிஸ்துவத்திற்கு என்னோடை என்ரை குடும்பம் அதுதான் என்ரை அவர் என்ரை ரண்டு பிள்ளையள் அதோடை என்ரை அவற்ரைப் பொம்பிளை, என்ரை அவருக்கும் அவற்றை புதுப் பொம்பிளைக்கும் பிறந்த பிள்ளை எண்டு ஆறு விசுவாசிகளை உருவாக்கிய சந்தோஷத்தோடை பரலோகம் போவன் எண்ட நம்பிக்கையோடை சுவிசேஷம் ஆண்டவரை மன்றாடுறது தான் என்ரை வாழ்வாய்ப் போச்சுது.*

*என்னை செய்யிறது! எங்களைப் பிணிச்சுள்ள மதங்களின்ரை சக்தி பற்றித்தான் நான் யோசிச்சுக் கொண்டு இருக்கிறன்.*

*பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்*
*பற்றுக பற்று விடற்கு -திருவள்ளுவர்*

***தாயகம்- 96, ஏப்பிரல்-யூலை 2019***

# ஓரு ஒப்புதல் வாக்குமூலம்

*இனி என்ன, வயது எண்பது. இனி என்ன எனக்குப் பல்லுக் கட்டுறது. பொம்பிளைப் பிள்ளை கலியாணம் கட்டேல்லை. பேரப் பிள்ளையள் காணுற வயசு. என்னி லையும் பிழை. மனிசியிலையும் பிழை. நாங்கள் ரண்டு பேரும் கட்டியிருக்கப்படாது. நான் முப்பதிலை பிறந்தனான். எழுபத்தி மூண்டாம் ஆண்டிலை நாற்பத்திமூண்டு வயசு. அப்ப ரீச்சிங் வந்தது. நான் ரீச்சிங்கை இப்ப எடுத்தால் பேந்து பதினாறு பதினேழு வரியத்திலை எனக்கு அறுபது வர பென்சன் வந்திடும். பேந்து அந்தப் பென்சன் காசை வைச்சுக் கொண்டு என்னத்தைக் சீவிக்கிறதெண்டு லோச் செய்ய வெளிக்கிட்டன். எழுபத்தாறாம் ஆண்டு என்ரை நாற்பத்தாறு வயசிலை கொழும்பிலை. மரி பண்ணினது எழுபத்தெட்டாம் ஆண்டிலை.*

*எழுபத்தாறாம் ஆண்டு என்ரை அல்வாய் மச்சாளுக்கு எனக்கு கலியாணம் பேசி ஆளனுப்பி விட்டன். 'என்னைப் படிப்பிக்க வேணும் பொம்பிளை வீட்டார்' எண்ட ஒப்பந் தத்திலை. அவை, தங்களிட்டைக் 'காசில்லை என்னைப் படிப்பிக்க' எண்டினம். அதாலை அவவை நான் கலியாணம் செய்யேல்லை. அதைப் பற்றி இப்ப கவலைப்படுறன்.*

*ஐம்பத்தாறாம் ஆண்டும் மாமிட்டை ஆளனுப்பி என்னை இந்தியாவிலை விட்டு படிப்பிக்க கேட்கேக்கை மாமி தன்ரை மற்ற மேனைப் படிப்பிக்க காணி ஈடு வைச்சுப் படிப்பிச்ச தாலைதான் நான் கலியாணம் பேசின மச்சாளுக்கு கலியா ணம்கட்டி வைக்க என்ரை ஒப்பந்தப்படி என்னைப் படிப்பிக்கக் காசில்லாமல் போச்சுது.*

*மாமி காணியை ஈடு வைச்சுப் படிப்பிச்ச மற்ற மச்சாளும் தான் படிச்சு முடிச்சு தன்ரை படிப்புக் கடன் அடைச்சு பிறகு கலியாணம் கட்டுற பருவத்திலை இளசா இருந்த தன்ரை மற்றத் தங்கச்சிக்கு கலியாணம் கேட்டுவர வீட்டுக்கு வலிய வந்த*

*வரனை விடப்படாது எண்டு தன்னைப் பற்றி யோசியாமல் அவாக்குச் சீதனம் உழைச்சுக் குடுத்து கட்டி வைச்சதாலை அவாவுக்கு கலியாணம் தப்பியிட்டிது.*

*என்ரை மச்சாளும் இப்பவும் கட்டேல்லை. முப்பத் திரண்டாம் ஆண்டு பிறந்தவ. நான் முப்பது. அவ தன்ரை தங்கச்சியோடை கொழும்பிலை தான் இப்ப இருக்கிறா. நான் அவை வீட்டை செத்தவீடு அந்திரட்டி வீட்டைத் தவிர கசுவலாய்ப் போய் வாறேல்லை. தவிர ஒரு நாள் அவ வீட்டை போனனான். தொண்ணூற்றைஞ்சாம் ஆண்டிலை.*

*கடவுள் விட்ட பிழை. 95ம் ஆண்டிலை யாழ்ப்பாணத் திலையிருந்து இடம்பெயர்ந்து நுணாவிலிலை நான் அகதியாய் இருக்கிறதுக்கு அவை இருக்கிற வீடு தேடி அவவின்ரை தங்கச்சி யின்ரை வீட்டுக்குப் போறன்.*

*நான் கட்ட விரும்பின மச்சாளின்ரை தங்கச்சியார் கொழும்புக்கு போயிட்டா. தங்கச்சியாரின்ரை ஹஸ்பன்ட் இருக்கிறார் வீட்டிலை. அவரிட்டைப் போய் இருக்க வீடிருக்கா என்றன். அவர் 'வீட்டிலை இப்ப இடமில்லை' எண்டு சொல்ல என்ரை ஒன்றுவிட்ட தம்பியிடம் கேட்டுப் பார்ப்பமெண்டு சொல்லி அவையின்ரை வீட்டிலை இருந்து வெளிக்கிடுறன் உடனை.*

*அவர் 'அக்கா இருக்கிறா. இருங்கோ' எண்டு சொல்லி உள்ளை போறார். கொஞ்ச நேரத்திலை என்ரை மச்சாள் வந்தா, மாக்கரைச்ச கையோடை தலையெல்லாம் நரைச்சுக் கிழவியாய்.*

*"இருங்கோ. நீங்கள் கொஞ்சம் முந்தி வந்திருந்தால் வீட்டை உங்களுக்குத் தந்திருப்பன். இப்ப வேறை ஆரோ ரண்டு அகதிக் குடும்பங்கள் அங்கை இருக்குதுகள்" எண்டு விட்டு எலுமிச் சங்காய்த் தண்ணி கரைச்சுக் கொண்டு வரப் போயிட்டா.*

*இதுதான் நான் அவவோடை முதன் முதலாய் கதைச்ச கதை. கடைசியாயும் கதைச்ச கதை. இருபத்தாறு வயதிலை அவவை நான் மனசிலை கட்ட நினைச்சது. அறுபத்தாறு வயதிலை அவவோடை கதைச்சது.*

*கொஞ்ச நேரத்திலை வந்து அவ தன்ரை ரண்டு கையாலையும் எலுமிச்சங்காய்த் தண்ணியைத் தர நான் என்ரை ரண்டு கையாலையும் பக்குவமாய் வேண்டுறன். அவ தந்திட்டு எனக்குப் பக்கத்திலை நிக்கிறா.*

என்னையும் அவவையும் தவிர வேறை ஒருத்தரும் இல்லை. ஆனால் என்னாலை ஒண்டும் அவவோடை வாய் திறந்து கதைக்க முடியேல்லை. என்ரை மனசுக்கை நோ. தாங்க முடியாத நோ. அவவுக்கும் எப்படியோ.

நான் விட்ட பிழை. கலியாணம் கட்டிற நாளேலை நாங்கள் எங்கடை மாமி வீட்டுப் பக்கம் போய் வந்து கதைச்சுப் பேசி பழக்கமில்லை. அப்பிடிக் கதைச்சுப் பேசியிருந்தால் நான் அவவை விடாமல் கலியாணம் கட்டியிருப்பன். என்ன செய்யிறது எண்டு போட்டு சரியான கவலையோடை எனக்கு தொண்டைக்குள்ளை இறங்க மறுத்த எலுமிச்சங்காய்த் தண்ணியை மிண்டி மிண்டிக் குடிச்சன்.

பிறகு அவ என்னைக் கூட்டிக் கொண்டு ஒழுங்கையாலை வந்து ஒரு பனங் கூடலுக்கு உள்ளாலை இருபது நிமிச நடை தூரத்தை நான் இருக்க வீடு கேட்கப் போக விருந்த என்ரை ஒண்டுவிட்ட தம்பியின்ரை வீட்டை காட்டிப் போட்டுப் போயிட்டா.

எனக்கு கலியாணம் வேறை இடத்திலை முற்றாய் விட்டுது. பேச்சு இருபதாயிரம் காசு. நான் லோப் படிச்சு முடியும் மட்டும் மாதம் நானூறு ரூபா கொழும்புக்கு அனுப்ப வேணும். படிப்புத் தொடங்கி ரண்டு வரியமாய் தங்கச்சிட்டைத் தான் காசு பதினையாயிரம் கடன்பட்டுப் படிச்சது. அவாக்கு நான் அந்தக் காசைத் திருப்பிக் குடுக்க வேணும். அவ மரி பண்ணின பிறகு தானே அவவிட்ட நான் கடன்பட்டுப் படிச்சது. என்ரை மச்சாளிட்டை என்னைக் கட்டிறதுக்கு சீதனம் தரக் காசில்லாததாலை நான் தங்கைசசியிட்டை கடன்பட வேண்டிப் போச்சு. அந்தக் கடனடைக்க நான் என்ரை மனிசியிட்டைச் சீதனம் வாங்கி தங்கச்சியின்ரை கடனடைச்சுக் கலியாணமும் கட்டி கொழும்பிலை படிச்சுக் கொண்டன்.

என்ரை பேரன் என்னைப் போல லோப் படிப்புப் படிச்சவர் தான். அவருக்குச் சரியான சொத்துப் பத்து. மாப்பாணர் குடும்பம். அவருக்கு என்ரை அப்பாதான் ஒரே பிள்ளை. என்ரை அப்பா வலு செல்லம். பெரிய படிச்ச வற்றை பிள்ளை. மாப்பாணர் குடும்பத்துக்கு ஒரே ஒரு வாரிசு. செல்வச் சீர். செல்லம் கொட்ட ஆக்கள். ஆள் வலு குழப்படி. படிப்பிலையும் கவனம் செலுத்தேல்லை. வேலையளும் பாக்கேல்லை. வேலையள்

ஒண்டும் பழகவும் இல்லை. அஞ்சாம் வகுப்புத் தான் படிச்சவர். மைனர் வயது வர ஆக்கள் அவர் படிக்கேல்லை எண்டு பகிடி பண்ண என்ரை பேரன் ரோசத்திலை தன்ரை பிள்ளையை மற்றவை படிக்கேல்லை எண்டு குறைவாய்ச் சொல்லவோ எண்டு சனங்களிலை கோவிச்சு ஐநூறு ஏக்கர் வயல் பரப்பு நூற்று முப்பது பரப்பு காணி எல்லாத்தையும் தன்ரை பிள்ளை யின்ரை பேரிலை உறுதி எழுதிக் காசாலை தூக்கி அப்பற்ரை கௌரவத்தை உசர வைச்சிட்டார். அப்பாக்கு தலைகால் புரியாத செல்லமும் செல்வமும். சும்மா இஷ்டம் போலை உலகத்தை அனுபவிச்சுக் கொண்டு சுத்தித் திரிஞ்சார்.

இதுக்குள்ளை ஒரு வறுமைப்பட்ட குடும்பத்துக்கை புன் னாலைக் கட்டுவனிலை ஒரு வடிவான சிவத்தப் பெட்டையை மூக்கும் முழியுமாய் வடிவான என்ரை அம்மாவை கலியாணம் கட்டியிட்டார்.

ஒரு நாள் ராப்போலை தன்ரை சூட்கேசுக்கை உடுப்பு களையும் தன்ரை சாமானுகளையும் எடுத்து வைச்சுக் கொண்டு தகப்பனுக்குத் தெரியாமல் தகப்பன் நித்திரை ஆன பிறகு போனவர் தான் போய் பெட்டை வீட்டிலையே இருந்திட்டார்.

அங்கை மூன்று மாதத்துக்குப் பிறகு இருந்த இடத்திலை இருந்து கொண்டு மாப்பிள்ளை சோறு தின்னுறார் எண்டு பொம்பிளை வீட்டார் புறுபுறுக்கத் தொடங்கின உடனை ரோசத்திலை தன்ரை சூட்கேசையும் தூக்கி கொண்டு விறுவிறெண்டு தன்ரை வீட்டை நடையைக் கட்டினார்.

வீட்டை திரும்பிப் போன என்ரை அப்பாட்டை என்ரை பேரன் நைசாய் எல்லா உறுதியளையும் தன்ரை பேரிலை எழுதி வேறை எதுக்கோ கையெழுத்து வாங்கினது போல அவரிட்டைக் கையெழுத்து வாங்கி சொத்தைத் தன்ரை பேருக்குத் திரும்ப மாத்தியிட்டார். அப்பாக்கு அதிலை எழுதினதுகளை வாசிச்சுக் கையெழுத்துப் போட படிப்பும் இல்லைத்தானே.

பேந்தும் அப்பா சோக்குச் சுதி செய்து கொண்டு அம்மா வையும் அப்பப்பா வீட்டிலை கூப்பிட்டு இருத்தி வைச்சு வாழ்க்கை நடத்திக் கொண்டு வரேக்கை மூன்று பிள்ளையள் பிறந்த பிறகு வங்குறோத்தாகி என்ரை அஞ்சு வயசிலை வீடு வளவு நகை நட்டெல்லாம் வித்துக் குடிச்சு ஆள் தலைமறை வாகியிட்டார். பிறகு எங்கடை பேரன் தான் எங்களை யெல்லாம் பார்த்தவர்.

*என்ரை மகளுக்கு இப்ப முப்பத்தொரு வயது. கொம் பியூட்டர் சயன்ஸ் பி.எஸ்.ஸி. கொழும்பு யூனிவேசிற்றி. அதுக்குத் தான் நாங்கள் கொழும்புக்கு வந்தனாங்கள்.*

*என்ரை மனிசி ஒரு ரீச்சர். அவ முந்தி யாழ்ப்பா ணத்திலை இருக்கேக்கை பெரிய பரிதாபம் பாருங்கோ. விடிய நாலு மணிக்கு எழும்பி மத்தியானத்துக்கு ஆறு சுண்டு அரிசி சோறு அவிச்சு இரண்டு கறியும் வைச்சு காலமைக்கு அஞ்சு சுண்டு மாவிலை புட்டும் அவிச்சு எங்கள் நாலு பேருக்கும் வேலைக்கு வாற ஆரும் கூலியள் இரண்டு பேருக்குமாய்ச் சேர்த்து ஏழு பேருக்குச் சமைச்சு பிள்ளை குழந்தையாயிருக்கேக்கை பிள்ளை யின்ரை சாணைச்சீலையும் தோய்ச்சு ஒரு மைல் தூரம் நடந்து தான், தான் படிப்பிக்கிற பள்ளிக் கூடத்துக்குப் போகும்.*

*நான் பாலை ஹீற்றரிலை காச்சிப் போத்தில்லை விடுவன். இது தான் நான் அப்ப செய்யிற ஒரு வேலை. அப்ப அவ பிள்ளையைப் பாக்க ஆளில்லாமல் போடிங்கிலையும் விட்டது.*

*நான் சும்மா இருந்ததுதான். என்ரை மச்சான்மாரெல்லாம் ஒரு வேலையும் செய்யாமல் சும்மா இருக்க அவைக்கும் என்ரை மனிசி சமைச்சுப்போட நானென்னண்டு அவாக்கு உதவி செய்யிறதெண்டு ஒரு உதவியும் செய்யாமல் நானும் சும்மா இருந்தன்.*

*ஆனால் நான் என்ரை தொழிலையும் லைற்றாய்ச் செய்து கொண்டு அப்ப ரியூஷனும் குடுத்துக் கொண்டு அப்ப நல்லாய் இருந்திருக்கலாம்.*

*நானும் ஒரு போக்குத்தான். அப்ப எனக்கு ஐம்பத்திரண்டு வயது. பெரிய லோயற்றை குடும்பத்திலை பிறந்தே என்ரை மனிசின்ரை ஊரிலை நான் இருந்ததாலை என்ரை தொழிலுக்கு அவவின்ரை ஊரிலை எனக்கு சரியான அடையாளம் இல் லாமல் என்ரை லோயர் தொழிலால அஞ்சு சதமும் உழைக்க வழியில்லாமல் போச்சு.*

*என்ரை கிறான்ட்பா ஏழு கிளாக்கர்மாரை வைச்சு தொழில் செய்தவர். பெரிய சந்திரசேகர முதலி மாப்பாண முதலி பரம்பரை நாங்கள். வசாவிளான் கந்தசாமி கோயில் கொடிக்கம்பத் திருவிழாதான் எங்கடை திருவிழா.*

*இதுக்கை நாலு குடும்பங்கள். இந்த நாலு குடும்பத் துக்கையும் உள்ள பொம்பிளைப் பிள்ளையள் கலப்பில்லாமல்*

*கலியாணம் செய்தும் கலியாணங்கள் செய்யாமலும் செத்துப் போச்சுதுகள். ஆம்பிளைப் பிள்ளையள் சகோதரியளைக் கட்டிக் குடுக்காமல் வீட்டிலை வைச்சிருந்து தாங்களும் கட்டாமல் பெரும்பாலும் சும்மா இருந்து கொண்டு சொத்தை அழிச்சழிச்சு குடிச்சு கூத்தடிச்சும் கூத்தடியாமலும் ஓய்ஞ்சிருந்து அழிஞ்சு போச்சுதுகள். எல்லாம் எங்கடை சாதித் தடிப்புத்தான்.*

*எங்கடை குடும்பம் அடிமை குடிமையள் எல்லாம் வைச் சிருக்கிற ரொப் குடும்பம். எங்கடை அப்பப்பா உறுதி எழு தேக்கை சாட்சிக்காரரர் கையெழுத்துப் போடேக்கை அவை யின்ரை சாதியையும் போட்டு எழுதுறதை நான் எப்பவும் பார்த்திருக்கிறன்.*

*எங்கடை ஆக்கள் தங்கடை ஆக்களுக்கையே சாதி சீதனம் எல்லாம் பாத்துத்தான் அந்தக் காலத்திலை கலியாணங்கள் பேசிச் செய்யிறது. அதுக்கை எங்கடை மாப்பாணர் குடும்பங் கள் தங்கடை லெவலிலை ஒண்டும் குறைஞ்சு போகாமல் எந்த ஒண்டையும் எந்தச் சந்தர்ப்பத்திலையும் விட்டுக் குடுக்காதுகள். எல்லாக் கலியாணமும் இப்பிடித்தான் நடக்கிறதும் நடக்காமல் விடுகிறதும்.*

*இப்ப என்ரை பிள்ளைக்கு ஒரு மாப்பிள்ளை வந்து பொருந்திச்சு. பதினைஞ்சு இலட்சம் காசு வீடுவளவு எண்டு. எங்களிட்டை இருக்கிறது அஞ்சு லட்சம் தான். மீதியை என் னெண்டு குடுக்கிறது. என்ரை பிள்ளைக்குக் குடுக்க பதினொரு பரப்பு வீடு வளவு இருக்குது. நாங்கள் காணியளை வித்து குடுக்கேலாது. எங்கடை வசாவளான் காணியளை ஆரிப்ப வேண்டினம். குடியிருப்பில்லாத பிரதேசம். அரைச்சதம் விலையே போகாது.*

*கலியாணச் செலவுக்குத் தான் இருக்கிற காசு காணும். பேசின மாப்பிள்ளை கொழும்பிலை எங்கையோ அறுபது லட்சத்துக்கு வீடு வாங்கினவராம். அரைவாசி கடனாம். பதினைந்து லட்சம் சீதனம் கேட்கினம். நாங்கள் கடன்பட்டு அவைக்குக் குடுத்தால் அதை என்னெண்டு நாங்கள் பேந்து அழிக்கிறது. நாங்கள் சாகப் போறம். மாப்பிளையின்ரை கடனடைக்க மகளிட்டைச் சீதனம் கேட்கினம்.*

*எனக்கும் கலியாணம் பேசேக்கை அக்கான்ரை கடன் அடைக்க பதினையாயிரம் ரூபாவும் லோ சோதினை பாஸ்*

பண்ணும் மட்டும் மாதம் நானூறு ரூபா கொழும்புக்கு அனுப்ப வேணும் மூண்டு வரியத்துக்கு எண்டது ஒப்பந்தம். என்ரை மனிசியவைக்கும் மாப்பிள்ளை கிடைக்கேல்லை. எனக்கு பொம் பிளை இருந்தது. ஆனால் எனக்கு உழைப்பில்லை. ஆனால் நான் இந்தக் காலகட்டத்திலை கட்டாயம் கலியாணம் கட்ட வேண்டியிருக்கிது.

என்னெண்டால் அப்ப ரண்டாவது தங்கச்சிக்கு முப்பத் திரண்டு வயது நடக்கேக்கை என்ரை ஒரு மாமி வந்து சொன்னா, 'இனி நீ கட்டாமல் வீட்டாக்களோடை இருக்கப் படாது. எங்கையும் கட்டிப் போயிடு. நீ கலியாணம் கட்டாமல் இருந்தியோ உன்ரை தங்கச்சியவை முப்பத்தைஞ்சு வயசுக்கு மேலை. உனக்கு மேலாலை கதைக்கத் தொடங்கிடுவினம். நாற்பது வயது வந்துதோ நீ அவையோடை கதைக்கவே ஏலாது. நாற்பது வந்தால் நாய்க்குணம்' எண்டா. அதாலைதான் அப்ப நான் என்ரை மனிசியை கட்டினது.

மனிசின்ரை ஊரிலை உழைப்பு இல்லாமல் இருக்கேக்கை என்ரை சொந்த ஊரிலை போயிருந்து தொழில் செய்திருந் திருக்கலாம். அது முடிஞ்ச கதை. ஆனால் ஊர் பறிபோன பிறகு நான் என்ரை மனிசியிட்டை நெடுகலும் கேட்பன்.

"வாவனப்பா போய்க் கொழும்பிலை இருந்து தொழில் பாப்பம். நீ உன்ரை ரீச்சிங்கையும் ரியூஷனையும் செய்ய நானும் என்ரை லோத் தொழிலையும் ரியூஷனையும் செய்து கொண்டு நல்லாய் உழைக்கலாம்" எண்டு. மனிசி மறுத்துப் போட்டுது.

தன்ரை சகோதரங்களை கலியாணம் கட்டாததுகளை அங்கை நடுத்தெருவிலை விட்டிட்டு வரேலாதெண்டு. பேந்து அவான்ரை தம்பியார் முதலிலும் தமையன் பேந்தும் செத்த பிறகு தான் என்னோடை கொழும்புக்கு வந்தது.

எழுபது வயசிலை வந்து என்னத்தைக் கொழும்பிலை உழைக்கிறது! சலரோகமும் துவங்கியிட்டுது. வீட்டாலை வெளிக் கிட்டால் றோட்டு மூலை முடக்குகளிலை போய் ஒண்டுக்கு நிக்க வேண்டிக் கிடக்கு. இதுக்குப் பிறகு என்னத்தைச் செய்யிறது. இப்ப வீட்டிலை நோயோடை முடங்கிக்கிடக்கிறன்.

எனக்கு பிள்ளை பெற விருப்பமில்லை. சும்மா கொம் பனியன் லைவ்க்குத்தான் நான் கட்டினது. இந்தப் பிள்ளை வராட்டி ஒரு கரைச்சலும் இல்லை. நாற்பத்தெட்டு வயசிலை

எனக்கு பிள்ளை வரும் எண்டு நினைக்கேல்லை. ஆனால் வந்திட்டுது.

என்ரை மகள் வலு கெட்டிக்காரி. கடைசி நேரம் தான் படிப்பாள். சோதினைக்கு ஒரு இரண்டு கிழமைக்கு முதலாய்ப் புத்தகத்தை எடுத்துப் படிப்பாள். நல்ல மாதிரி சோதினை பாஸ் பண்ணிப் போடுவாள்.

என்ரை மனிசி என்னை விட வலு கெட்டிக்காரிதானே. இது அவளின்ரை மரபணுவின்ரை கெட்டித்தனந்தான். மகள் எந்த நேரமும் தாயோடை இருந்து ஒரே கதை ஒரே அலட்டல். இரண்டு பேரும் சந்தோசமாய்க் கதைப்பினம். என்னும் என்ரை மகளுக்கு நாப்பது வயதாகேல்லைத் தானே.

இவ்வளவு காலமும் என்ரை கெட்டித்தனத்தாலை வேலை யில்லாமல் இருந்து வந்திட்டன். சிகரட், சுருட்டு எப்பவாவது குடிப்பன். கள்ளுக் கிள்ளும் கிடையாது.

எனக்கு முப்பத்தேழாம் ஆண்டு மலேரியாக் காச்சல் வந்தது. அப்ப வரியம் வரியம் அந்தச் சனியன் பிடிச்ச கோதாரி வரும். ஒரே உடல் சோர்வு. அதாலை படிப்பிலை நாட்டமில்லை. அப்ப மருந்து தந்தால் வாயை இறுக்கிப் பிடிச்சுக் கொண்டு மருந்தைக் குடிக்கிறேலை. பள்ளிக்குடத்துக்கு ஒழுங்காய்ப் போறேலை.

அப்ப ஒரு கெட்ட பழக்கத்தை பழகினன். கடதாசிக் கூட்டம் றோட்டுக் கரையளிலை மரங்களுக்குக் கீழை சில வீட்டுத் திண்ணையளிலை இருந்து அது விளையாடுறது. அது தான் உந்தத் தோட்ட வேலையளுக்குப் போறவை தங்கடை வேலையளை முடிச்சுப் போட்டு கிடைக்கிற இடைநேரங் களிலை வரேக்கை அவையோடை சேர்த்து நான் ஒரே காட்ஸ் அடிதான்.

அப்பர் முப்பத்தேழாம் ஆண்டு ஊரைவிட்டு போனபிறகு வந்த மலேரியா பேந்தும் இடையிடை வந்தாலும் நாற்பத் திரண்டாம் ஆண்டு படிக்கேக்கை கடுமையாய் வந்துது. ஆறு மாதம் தொடர்ந்து பள்ளிக்கூடம் போகேல்லை.

அப்ப நாங்கள் திருகோணமலையிலை இருந்தனாங்கள். ரண்டாம் உலக மகா யுத்தத்திலை திருகோணமலையிலை யப்பான் குண்டு போட்ட நேரம் எல்லாரும் எங்கடை ஊருக்கு ஓடினம். அதுக்குப்பிறகு ஆறு மாதம் பள்ளிக்கூடம் இல்லை.

*அப்ப எங்கடை ஊருக்குப் போய் இருந்த காலத்திலை அப்பர் திரும்ப வந்து அங்கை உள்ள மிச்சம் மீதிச் சொத்துப் பத்துகள் எல்லாத்தையும் வித்து முடிச்சு தன்ரை நாற்பத்தாறு வயதிலை செத்துப் போனார். பேரனும் அடுத்த வரியம் தன்ரை எழுபத்திரண்டாவது வயதிலை தன்ரை மகனோடை போயிட்டார்.*

*பேரன் செத்த பிறகோ நாங்கள் நடுத் தெருவிலை. அந்த ரிச்ச அந்த நிலையிலை என்னை திருகோணமலையிலைக்கு என்ரை சித்தப்பா படிப்பிக்கவெண்டு கூட்டிக் கொண்டு போய் தன்னோடை வைச்சுப் பள்ளிக்கூடம் அனுப்பினார். அப்பவும் எனக்குப் படிக்க விருப்பமில்லை. அப்ப எனக்கு பன்ரண்டு வயது.*

*நாற்பத்திரண்டாம் ஆண்டிலை வெள்ளைக்காரன் தன்ரை மிலிற்றிக்கு காம்ப் அடிக்க கூலி ஆக்களை எடுப்பான். அப்ப எனக்கும் கூலி வேலை நம்பர் கிடைச்சது. ஊரிலை நான் கூலி வேலை செய்யேலாது. நாங்கள் நல்லாய் வாழ்ந்து மடிஞ்ச இடம். அங்கை கூலி வேலை செய்தால் எங்கடை குடும்ப கௌரவம் நிலை குலைஞ்சு போயிடும். ஆனா நான் திருகோணமலையிலை கூலி வேலை செய்யிறது பெரிய பிரச்சி னையா ஒருத்தருக்கும் தெரியாது. அதாலை துணிஞ்சு கூலித் தொழில்லை இறங்கியிட்டன்.*

*ஒரு நாளைக்கு அறுபது சதம் கூலி. மாதச் சம்பளத்திலை அரைவாசி வீட்டுக்கு. மீதியிலை மூண்டிலரண்டு என்ரை சாப்பாடுச் செலவு. மீதி என்ரை பிறைவேற் செலவுக்கு. காலத்தின் விதி இது. எத்தனையோ பேருக்கு வேலை குடுத்த நாங்கள் நாளுக்கு அறுபது சதக் கூலி வாங்கினது அப்ப மிகப் பெரிய விசயம் தான்.*

*இப்பிடியே இருக்கேக்கை திருகோணமலையிலை அரிசிப் பஞ்சம். எனக்கு திருகோணமலையிலை கூப்பன் இல்லை. அதாலை தொடர்ந்து திருகோணமலையிலை என்னாலை இருக்கமுடியாமல் திரும்ப ஊருக்குப் போய் எனிப் படிச்சாத் தான் உயிரோடை யாழ்ப்பானத்திலை வாழ முடியும் எண் டது தெரிஞ்சு படிக்க விரும்பித் தெண்டிச்சன். மாப்பாணர் குடும்பத்தார் நாங்கள் ஊரிலை கூலி வேலை செய்தும் பிழைக்கேலாதே!*

*நான் படிக்க காசுக்குச் சீதனம் வாங்கிக் கல்யாணங் கட்டிப் பிள்ளையைப் பெத்து, பிள்ளையைக் கட்டிக் குடுக்கக் காசில்லாமல் எங்கடை பரம்பரைப் பெருமையோடை இருக் கிறன். இருக்கிறம்.*

*நான் செய்த பாவம். என்ரை மச்சாள் இன்னமும் கலியாணம் கட்டேல்லை. நான் என்ரை மனிசியைக் கட்டியிருக்கப்படாது. பிள்ளையைப் பெத்திருக்கப்படாது. என்ரை பிள்ளைக்கிப்ப முப்பத்தொரு வயதாகுது. கையிலை காசில்லை. சீதனம் குடுக்க வழியில்லை. காலப் பிழை. எல்லாம் முடிஞ்சுது.*

*எங்கடை மாப்பாணர் குடும்பங்கள் காசில்லாமல் பழம் பெருமையைக் கட்டிக் கொண்டிருக்க வேண்டியதுதான்.*

*தாயகம்- 71, ஜூலை - செப்ரெம்பர்-2008*

# கணிப்பு

*நாங்கள் இப்ப குடியிருக்கிற தெகிவளையில என்ரை வீட்டு முத்தத்திலை பெரியதொரு மாமரம் நிக்குது. அது நல்ல நிழல் பாருங்கோ. எங்கடை அயலட்டையிலயே முத்தத்திலை மரம் நிக்கிறதெண்டால் அது எங்கடை வீட்டிலை தான். இதால எங்கடை வீடும் குளு குளு எண்டு நல்ல குளிராயிருக்கும்.*

*இந்த மரம் பழ சீசனிலை நல்லாய்க் காய்ச்சுத் தள்ளும். காய் பச்சைப் புளி. பழத்துக்கோ அசல் இனிப்பு. ஆனால் மரம் பழுத்தால் அதை எங்களுக்குப் பிடுங்கத் தெரியாது. இங்கை உள்ள பிடுங்கிற ஆளைக் கூப்பிட்டுக் கூலிக்குப் பிடிங்கினால் பெரிய காயளாத் தங்களுக்கு எடுப்பான். பிடுங்கின இடை யிலையே களவாய் ஓடிப்போய் அரைவாசியை அங்கெங் கையேன் ஒழிச்சு வைப்பான். அல்லாட்டில் பிடுங்கின காய ளைத் தங்களுக்கும் நிலம் அடிபட விழுந்த காயளை எங்களுக்கு மாய்த் தருவான். பச்சைக் கள்ளன். இது என்ர மனிசிக்கும் பெரும் குறை.*

*இந்தக் கள்ளன் இந்த மரத்திலை களவு களவாய் வந்து காயள் பிடிங்கிப் போவான். இவன் எங்கடை வீட்டுக்காரியைக் கண்டால் சிலவேளை விலகியும் சிலவேளை விலகாமலும் நிண்டு மாங்காயைப் பிடுங்குவான். அந்த நேரம் அவனோடை எங்கடை வீட்டுக்காரர் மல்லுக்கட்டி அவனைத் துரத்திறதும் சில நாளையிலை பாத்தும் பாக்காமல் அவன் கொண்டந்த உரப்பையில காயை அவனை நிரப்பிக் கொண்டு போக விடுறதும் தான் எங்கடை வீட்டுக்காரி.*

*அதாலை அவவுக்கு மாங்காயைப் பிடுங்கி விக்கிறதிலை உடன்பாடில்லை. அணிலுகள், குருவியள், கிளியள், காகங்கள், மைனாக்கள், வௌவால்கள் எண்டு பல இனமும் பழச் சீசனிலை மரத்துக்கு வந்து போகும்.*

'மாங்காய் பிடுங்கட்டோமோ' என ஆரும் மருட்டிக் கேட்டால் மரத்தின்ரை அரைவாசிக் காயையுமே மருண்டு போய்க் குடுத்திடும் என்ரை மனிசி. ஆனால் ஆரும் களவெடுத்தால் சும்மா கத்திக் கொண்டே நிக்கும்.

இவ தன்னை ஆரும் ஒரு தூசி தன்னும் ஏமாத்தினால் அதைப் பற்றி அதிகம் அலட்டிக் கொள்ளும் பேர்வழி. அது ஆராயிருந்தாலுஞ் சரி. தனக்கு கீழ்ப் பட்டவராயிருக்கட்டும், எந்தப் பெரிய கொம்பராயிருக்கட்டும் விட்டுக் கொடுக்கவே மாட்டா. உலக்கை போற இடம் பார்க்காதவா. ஊசி போற இடம் நல்லாய்ப் பாப்பா. மாங்காய் களவு போற நாளேலை என்ரை மனிசி நான் வேலையாலை வீட்டை வந்த உடனை இந்த களவு முறைப்பாட்டை எனக்குக் குளறினபடி ஒப்படைக்கும் ஏதோ உலகம் பிரண்டதாய்.

அப்ப நான் சொல்லுறது, "இது அந்நிய ஊர். இங்கை நாங்கள் உதுக்கெல்லாம் பொல்லுத் தூக்கிக் கொண்டு நிக்கப்படாது. எல்லாத்தையும் அனுசரிச்சுப் போகவேணும்." எண்டு. ஆனால் மனிசிக்கு மாம்பழ சீசனுக்குச் சீசன் இந்தப் பிரச்சினை திரும்பவும் திரும்பவும் வந்திடும்.

சொல்லித் திருத்தேலாது. கள்ளனையும்தான் என்ர மனிசியையும் தான். ஆனால் கள்ளன்கள் பாவங்கள் அதுகள். ஏழையள். வயித்துப் பாட்டுக்கு தானே இதைப் பிடிங்கிக் கொண்டேய்ச் சாப்பிடுதுகளோ விக்குதுகளோ எண்டது என்ர ஞாயம். ஏனெண்டால் நான் பள்ளிக் கூடத்திலை படிக்கேக்கை சின்னனிலை பசியிலை அடுத்தவேன்ரை சாப்பாட்டுப் பெட்டிக்கை கையை விட்டு களவாய் சாப்பிடுறனான்தானே.

இதிலை மனிசியைப் பிழை சொல்லக் கூடாது. ஏனெண் டால் அவை பெரிய வசதியான ஆக்கள். பசி எண்டால் என்ன எண்ட அனுபவமே இல்லாத ஆக்கள். எங்கடை ஊரிலையே பெரிய கல்வீட்டிலை கதிரை மேசையிலை இருந்த ஆக்கள். கட்டில்லை படுக்கிற ஆக்கள். படிச்ச ஆக்கள். பெரிய பெரிய புத்தகங்கள் எல்லாம் வீட்டிலையே அலுமாரிக்கை வைச்சி ருக்கிற ஆக்கள். அவையிட்டை எப்பவும் வேலைக்காரரர் வீட் டிலை இருப்பினம். பொதுவா வேலைக்காரரர் எல்லாம் எட்டு மணித்தியாலம் வீடுகளிலை வேலை செய்தால் இதுகள் வீட்டு வேலைக்காரரோ பொழுதுகாலிக்க முதலிருந்து காலிச்ச பிறகும்

நிண்டு வேலை செய்யுங்கள். இவையிட்டை வேலை செய்யிற வேலைக்காரரை நாங்கள் கண்டால் "ஏன் உந்த வீட்டிலை உவ்வளவு நேரம் வேலை செய்யிறனீங்கள்? உவையை விட்டு போட்டு வேறை எங்கையும் போய் வேலை செய்யலாமே" எண்டு கேட்டால் "அது பறுவாயில்லை" எண்டு அந்த வேலைக்காரர் அவையோடையே இருக்கினம் எண்டது எனக்கு கன நாள் சந்தேகம். ஆனால் கூலியைக் குடுக்கிறேல்லை. என்ரை மனிசியின்ரை வீட்டாக்கள் மனசார வஞ்சகம் காட்டாததுகள் எண்டு ஆக்கள் சொல்லக் கேள்வி.

ஊரிலை அவையின்ரை றோட்டாலை எங்கடை ஊராக்கள் ஆரும் போகேக்கை பயப்பிட்டுக் கொண்டு தான் போவினம். இது உண்மையோ எண்டு எங்கடை ஊரிலை ஆரையும் கேட்டால் "ஓமோம் அது உண்மை தான்" எண்டு சொல்லுவினம். சரியான சாதித்தடிப்பு பிடிச்சவை. ஊராக்கள் தங்கடை பாட்டிலை ஒதுங்கிப் போனாலும் வலியக் கூப்பிட்டு கதை கேட்டு அதுகளின்ரை மனத்தை நோக்காட்டாமல் அனுப்பாதுகளாம். அதுகளின்ரை சின்னக் குழந்தையள் போற சின்னப் பிள்ளையளை கூப்பிட்டு நுள்ளாமல் அடி போடாமல் விடாதுகளாம்.

எங்கடை வீடு அவையின்ரை றோட்டுக்கு முன்னுக்கு இருந்த படியால அவையின்ரை றோட்டாலை போற தேவை எங்கடை வீட்டாருக்கில்லை. இதாலை அவையைப் பற்றி ஊராக்கள் சொல்லுற கதையள்தான் எனக்குத் தெரியும். ஆனால் என்ரை மனிசி பெட்டையாய் இருக்கேக்கை எங்கடை ஒழுங்கைக்குள்ள ஒரு கோயிலுக்கு நல்ல தண்ணி அள்ள வாறது. அப்ப அந்தப் பெட்டையோடை அவையின்ரை குடும்ப வன்மத்தை வைச்சு என்ரை வயதுப் பொடியள் எல்லாரும் வலியக் கொழுவுவாங்கள். அதை என்னவோ பட்டப் பேரும் சொல்லி நெளிப்பாங்கள். அதுகுமோ விடாது. தனிய நிண்டும் வாய்காட்டி கொண்டே இருக்கும். ஆக மிஞ்சினால் அவங்களுக்குத் துப்பியும் போடும். ஆனால் நான் ஒண்டுமே செய்யிறேல்லை. எல்லாப் புதினத்தையும் பார்த்துக் கொண்டிருப்பன். பேந்து பொடியள் கூடியிருந்து அந்தப் பெட்டையின்ரை சரியையும் பிழையையும் கதைக்கேக்கை நான் அந்தப் பெட்டைக்காக அநேகமாக சரி எண்டு கதைக்கிறது அவங்களுக்குப்

பிடிக்கிறேல்லை. இப்பிடி நான் அந்தப் பெட்டைக்காக சப் போட் பண்ணுறது தொடரவே என்னை அவங்கள் அந்தப் பெட்டையோடை சேர்த்து “பிறகு.... ஆ... ஆ... ஆ...” என்று பகிடி பண்ணத் தொடங்கியிட்டாங்கள்.

நான் இதை முதலிலை விளையாட்டாய் எடுத்தாலும் நாட் போக்கிலை எனக்குள்ளை ஒரு மாதிரியாய் மாற்றம் வரத் தொடங்கியிட்டுது. அப்ப என்ரை நெஞ்சு டிக்...டிக்...டிக்... எண்டு அடிக்கிறது எனக்குக் கேட்கும். என்ரை செயல்களிலையும் ஒரு படபடப்பு. வலிஞ்சு அவவைப் பார்த்துச் சிரிக்கிறன். முதல் ரண்டு முறை அவா என்னைக் கவனிக்காட்டாலும் பிறகு அவவும் என்ரை சிரிப்புக்குப் பதில் தாறா. நானும் அவவின்ரை வீட்டடியாலை அடிக்கடி போகத் தலைப்படுறன். அவவைப் பாக்கத் துடிச்சபடி. மற்றவங்களுக்கு அவவைக் கண்டால் புண்ணில புளி பத்துறது போல இருக்கும். எனக்கு இன்ப மயக்கத்தை ஏற்படுத்துது.

அவவைப் பாக்க வேணும் போலை உள்ள குறுகுறுப்புக் கூடவே. ஒரு நாள் என்ரை விருப்பத்தை அவவிட்டை ஒரு மாதிரியாய் வெளிப்படுத்தியிட்டன். ஆனால் அவ மறுக்கிறா. அதன் பின் அவவின் சிரிப்பு நிண்டிடுது.

என்ரை ஒரு நல்ல கூட்டாளி சொன்னான். “அவள் எங்க நீ எங்க. வர்க்க உறவு தான் உறவு. அவளோ மேட்டுக்குடிக்காறி. நீ? கொட்டிலுக்கை இருந்து கொண்டு அவளுக்கு ஆசைப்படலாமோ. பேசாமப் படி. உன்ரை வாழ்க்கையைப் பார்” எண்ணுறான். ஆனால் என்னாலை அவவை மறக்க முடியேல்லை. புத்தகத்தைத் திறந் தால் அவா கண் மூடினால் அவா! கண் திறந்தால் அவா! எண்டு ஒரே அவவின்ரை நினைப்புத் தொல்லை வர வரக் கூடிக்கொண்டே போச்சுது.

எப்பிடியும் அவவை நான் கலி யாணம் கட்டிப் போட வேணும் எண்ட என்ரை ஆசையிலை நான் மனதை ஒரு நிலைப்படுத்திப் படிப்பாலை முன்னேறி வெல்ல நினைக்கிறன். படிப்பு, படிப்பு, படிப்பிலை வெற்றி, கம்பஸ், மேலான பதவி, எண்ட தொடரான அணுகு முறை யாலை அவவின்ர மனம் என்னிலை லயிச்சிட்டுது. என்ரை படிப்பாலை என்ர சாதிக்தட்டு, வர்க்கத்தட்டு எல்லாம் உடைஞ்சு ரண்டு பேர்

மனமும் ஒண்டானம். ஆனால் அவ என்னை விரும்பினது ஊரிலை உள்ள பொடியள் எல்லாம் தன்னோடை சண்டை பிடிக்க நான் மட்டும் தன்னோடை சண்டை பிடியாத ஒரே ஒரு ஆள் எண்டதாலை எண்டா.

ஆனால் என்ர கலியாணத்திலை என்ரை பெற்றார் உற்றார் ஊரவர் சினேகிதர் ஆருக்குமே விருப்பம் துளியளவும் இல்லை. தடிப்புப் பிடிச்ச கூட்டத்துக்கை போய் தலைகீழாய் கொட்டுண்ணப் போறான் எண்டு. அதாலைதான் அவவில அளவு கடந்த விருப்பம் வைச்சிருந்தாலும் கலியாணத்துக்குப் பிறகு என்ரை வர்க்க நிலைப்பாட்டைப் பேணுறதிலை சிக்கல்கள் வரேக்கை அவவோடை வாய்த்தர்க்கம் செய்யிறது எண்டது என்ரை உணர்விலை பிரதானமாய் ஒன்றிச்சுப் போய் இருந்திது.

ஒரு சம்பவத்தை நான் சொல்லுறதெண்டால் உதாரணத் துக்கு என்ரை மனுசிக்கு பூக்களில கொள்ளை ஆசை. அவ ஆசை ஆசையாய் இரவில மல்லிகைப் பூக்களை ஆய்ஞ்சு கொண்டு வந்து மோந்து ரசிப்பா. தான் ரசிக்கிறதோடை என்ரை மூக்குக்குக் கிட்டவும் பூக்களை வைச்சு மணக்க சொல்லுவா. ஆனால் பூப் பற்றி நான் கம்பசிலை படிக்கேக்கை என்ர சினேகிதன் ஒருத்தன் தனக்கேற்பட்ட அனுபவத்தை சொன்னதிலை இருந்து எனக்குப் பூக்களைப் பிடிக்காது.

அவன் மலையகத்தைச் சேர்ந்தவன். தோட்டத் துரையின்ரை பங்களா விலை கனக்கப் பூக்கண்டுகள் வளந்து விதம் விதமாய்க் கலர் கலராய் பூக்கள் பூத்திருக்குமாம். அதுகளை வேற ஒருத்தருமே பிடுங்கக் கூடாதாம். அதுகள் துரைமாற்றை தேவைக்கு மட்டுந் தான் பயன்பட வேணுமாம்.

ஒரு முறை அந்த வீட்டு வேலைக் காரர் ஆரோ ஒருத்தர் தன்ரை தேவைக்கு கொஞ்சப் பூக்களைப் பிடுங்கிப் போட்டாராம். அண்டைக்குத் தோட்டத்தைப் பாக்க வந்த துரை, பூக்கள் குறையவே, அதை ஆராய்ஞ்சு கண்டுபிடிச்சு அதுக்குப் பொறுப்பான வேலையாளைப் பிடிச்சு அவற்றை கவனக் குறைவாலைதானே பூக்கள் களவு போனதெண்டு அவற்றை முதுகுத் தோல் பிளக்க அடி அடியெண்டு அடிச் சாராம். அவன் "தொரை தொரை மன்னிச்சிடுங்க, தொரை எனிமேல பிடுங்க விடவே மாட்டனுங்க. தொரை என்னை

விட்டிடுங்க தொரை" எண்டு அவர் குழறக் குழற அவருக்கு அடிச்சதை அவன் தன்ரை கண்ணாலை கண்ட நாளே லையிருந்து அவனுக்குப் பூக்களைக் கண்டாலே பிடிக்காதாம். அது மேல்தட்டு வர்க்கத்தினற்றை ரசனைக்காகவே வளக்கப் படுவது எண்டு அவன்ர எண்ணம். அதாலை அதைக் கேட்ட பிறகு அது என்ரை எண்ணமாகவும் மாறிப் போச்சுது.

அதாலை நான் அவா ரசிப்பதைத் தடை சொல்லாட்டிலும் "எனக்குப் பூக்களில நாட்டமில்லை. அதை மணக்கச் சொல்லி என்னைத் திணிக்க வேண்டாம்" எண்டு மனிசியிட்டை சொல்லியிருக்கிறன். ஆனால் அவ தான் ரசிக்கிற சந்தோசத்தை நானும் பெறவேணும் எண்ட நோக்கில நான் வேண்டாம் வேண்டாம் எண்ண அவ திரும்பத் திரும்ப என்ரை மூக்கடியில் தன்ரை மல்லிகைப் பூக் கையைக் கொண்டு கொண்டு வருவ. அப்பிடியான ஒரு நாள் நான் அந்த அரிகண்டம் தாங்க முடியாமல் பிடிச்சுத் தள்ளிவிட்டன் அவவின்ரை கையை. பூக்கள் எல்லாம் அப்பிடியே எல்லா இடமும் சிதறிப் போச்சுது. அவாக்கு முகம் சிவந்து போச்சுது. ஆனால் அதுக்குப் பிறகு ஒரு நாளும் அவா தான் பூவை மணந்தாலும் என்னை மணக்கும்படி கேக்கிறேல்லை.

எங்கடை வீட்டுக்கு வேலைக்காரரோ ஊராரோ ஆரும் வந்தால் அவவின்ரை நடத்தையிலை எனக்கு எப்பவுமே பிழை தெரியும். ஆனால் அவா தான் சரியாத்தான் நடப்பதாகச் சொல்லுவா. ஆள் ஆரையும் கண்கொண்டு பார்க்க மாட்டுது. அவ்வளவு திமிர். ஆரையும் எதிரும் புதிருமாகப் பார்க்க நேர்ந் தாலும் உடனை அதுகளின் காலையே பாக்கும். முகத்திற்கு முகம் பார்க்க நேர்ந்தால் அதுவும் வேலைக்காரரைக் கண்டால் தான் அவையைக் கண்டு கொண்டதாகவே காட்டிக் கொள் ளாது. ஆரோடையும் அளந்து தான் பழகும். ஆள் ஒரு ரைப்.

இப்ப எங்கடை பக்கத்து வீட்டுக்காரரும் புதிசாய் வீடு கட்டிக் கொண்டிருக்கினம். இந்தாள் ஆறேழு மாதமாய் அதிலை ஒரு மனிசர் நிண்டு வேலை செய்யினமெல்லோ எண்டு ஒரு நாள் தன்னும் அவையைப் பார்த்து ஒரு முகமனுக்கு தன்னும் சிரிச்சிராது.

ஒரு நாள் அந்த வீட்டு மேசன்மார் ஏதோ காரணத் துக்காக எங்கடை வளவுக்கை வந்து போனவை. இவ எந்த

வேலக்காரரின்ரை முகத்தையும் பாக்கேல்லை. அவையளை நேரிலை கண்டாலும் இவவின்ரை கண்ணிலை இருந்து அவையள் மறைஞ்சு விடுவினந்தானே. அவ்வளவு வர்க்கத் தடிப்பு.

சில நாளைக்குப் பிறகு இவ வெளியாலை போவிட்டு வரேக்கை அந்த வீட்டு வேலைக்காரனை நேரை காணேக்கை அவன்ரை காலைப் பார்த்தவ. அவன்ரை காலிலை தன்ரை புது பாட்டா சிலிப்பர் இருக்கிறதாய் உணருறா. உடனை வீட்டை வந்து தன்ரை சிலிப்பர் இருக்கிற இடத்தைச் செக் பண்ணுறா. செருப்பு இல்லை. அங்கை இங்கை தேடுறா. செருப்பில்லை.

உடனயே அவா அந்த வீட்டு வேலையாளின்ரை காலை காட்டி, ‘உது என்ரை சிலிப்பர். நீங்கள் எங்கடை வீட்டை வந்த இடத்திலை மாத்தி எடுத்திருக்கிறயள் போலை. களட்டுங்கோ பாக்க” எண்டா. அவன் கழட்டிக் காட்டியபடி அது தன்ர செருப்பே எண்டான் சிரிச்சபடி.

ஆனால் இவ மறுக்கிறா. அவைக்கு எங்கடை வீட்டுக்கு அடிச்ச பெயின்ற் நிறத்துளிகள் அந்த சிலிப்பரில் ஒட்டி இருப்பதை ஆதாரம் காட்டுறா. இருந்தும் இவவின்ரை கதை அங்கு எடுபடேல்லை.

கடைசியா “சரி சரி. இது என்ரை செருப்புத்தான். ஆனால் நீயே வைச்சுக் கொள்” எண்டு அவனிட்டைச் சொல்லிப் போட்டு அங்காலை போயிட்டா.

பிறகு பக்கத்து வீட்டுச் சொந்தக்காரனிட்டை நடந்ததைச் சொல்லி “அந்த வேலைக்காரனிட்டைக் கொஞ்சம் கவனமாய் இருங்கோ” எண்டு சொன்னா. பக்கத்து வீட்டுக்காரன் இவ வின்ரை கதையைச் செவிக்கெடுக்கேல்லை.

இரண்டு கிழமையால மீண்டும் அந்த வேலையாளைப் பற்றி அவா என்னட்டை “அவன் ஒரு கள்ளன். பின்னேரங்களில வேலை முடிஞ்ச பிறகு கட்டிடத் தொகுதிக்கு வேறை ஆக்களைக் கூட்டிக் கொண்டு வாறான்” எண்டா.

நான் அந்தக் கதையை நம்பி அடுத்த வீட்டுக்காரனுக்குத் தெரிவிப்பம் எண்டு அதைச் சொல்லுறன். என்ர மனுசியின்ரை குடும்ப ஆக்கள், வேலையாக்களை மதிக்காத குடும்பம் எண்டதாலை இந்த விசயமும் பக்கத்து வீட்டுக்காரனின்ரை செவிக்குள்ளை ஏறாமல் போச்சுது.

இன்னொருநாள் றோட்டிலை நிண்ட இன்னொரு பக்கத்து வீட்டுக்காரனின்ரை காரின்ரை கதவைத் திறக்க அந்த வேலையாள் றை பண்ணுறதைத் தான் பார்த்ததாய் என் னட்டை என்ரை மனுசி சொல்லுறா.

இதையும் நான் பக்கத்து வீட்டுக்காரனிடம் சொல்லவே அவன் "உங்கடை மனிசி நெடுகலும் அந்த வேலைக்காரனைப் பற்றி ஒரே முறைப்பாடு குடுக்கிறா. அவவிட்டைச் சொல் லுங்கோ, சும்மா எங்கடை அலுவல்களை அவ கவனிக்கத் தேவையில்லை எண்டு. அவங்களோடை மிண்டினால் பேந்து எங்களுக்கும் சரியான கரைச்சல்" எண்டு சொன்னான்.

அதாலை நான் என்ரை மனுசியைக் கடுமையாப் பேசிப் போட்டன். ஆனால் அவவுமோ விடாப்பிடியாய் தான் சொன்னது சரிதான் எண்டு வாதாடவே விவாதம் முத்தி ஆத்திரம் கூடி அவவின்ரை கன்னத்தைப் பொத்தி ஓங்கி அறைஞ்சு விட்டிட்டன் நான். அயலட்டேக்கை எங்களுக்கு பிரச்சினையை ஏற்படுத்துறா எண்டு. அவ அழுது கொண்டு தாய் வீட்டை போயிட்டா.

அவையின்ரை பரம்பரைத் திமிர். ஏழையளைக் கண்ணிலை காட்டப்படாது. கொஞ்சம் படிக்கட்டும் பாடம் எண்டிட்டு இருந்திட்டன்.

ஒரு நாள்.. இரண்டு நாள்.. ஒரு கிழமையாச்சு. அவவும் வரேல்லை. நானும் பேசாமல் இருந்திட்டன். எனக்கும் ஆத்திரம்.

ஆனால் ஒரு கிழமையாலை பக்கத்து வீட்டுச் சொந்தக்காரப் பொடியன் விடிய வீடு பாக்க வந்தவன் அரக்கப் பறக்க ஓடியாறன் என்னட்டை. "அண்ணை அண்ணை வளவுக்கை அடுக்கி வைச்ச சீமெந்துப் பைக்கற்றுக்கள் கம்பிகள் ஒண்டையும் காணேல்லை. கண்டனீங்களோ என்னத்தையும்" எண்டு. எனக்குப் பொறி தட்டுது. நெஞ்சிலை ஒரு உதைப்பு.

"ஓம் ஒரு லொறி இரவு நிண்டது தான். நான் நீங்கள் சாமான் இறக்கிறியளாக்கும் எண்டு இருந்திட்டன்" எண்டு சொல்லுறன்.

குற்ற உணர்வோடை என்ரை மனிசி சொல்லச் சொல்ல அவேன்ரை திமிர்ப் புத்தி எண்டு அவவின்ரை கதையளை உதாசீனம் செய்தது நெஞ்சுக்கை குத்திக் குத்தி உறைக்குது.

இந்த நேரம் முந்தி ஒருக்கால் என்ரை மனிசி எங்கடை வீட்டை வேலை செய்த மேசன்காரன் ஒருத்தனோடை அந்நி யோன்யமாய் பழக நான் ஏசினதும் எனக்கு ஞாபகம் வருகுது.

ஒரு நாள் அந்த வேலைக்காரனை நம்பி வீட்டுத் திறப்பையும் அவனிட்டைக் குடுத்திட்டு வெளியிலை ஏதோ அலுவலாய் என்ரை மனிசி போட்டுது. நான் வீட்டை வாறன். வேலைக்காரன் வேலை முடிச்சு வெளியாலை இருக்கிறான்.

"அக்கா வெளியாலை போட்டா" எண்டான். "நான் வேலை முடிஞ்சு இவ்வளவு நேரமும் திறப்புத்தாறதுக்கு நிண்டனீங் களோ" எண்டன். "இல்லை ஐயா. இப்ப தான் வேலை முடிஞ் சது. இந்தாங்கோ ஐயா. திறப்பைப் பிடியுங்கோ. நான் போட்டு வாறன்" எண்டு திறப்பைத் தந்திட்டும் போயிட்டான்.

எங்கையோ உடுத்துப்படுத்திக்கொண்டு வெளியிலை போட்டு வீட்டுக்கு வந்த மனிசிக்கு வேலையாளை இவ்வளவு நேரமுமாய் வேலையளை முடிச்சு அனுப்பாததுக்காக வீட்டில களவு போயி ருக்கும் எண்டு அவவுக்குப் புரியிற வேலைக்காரப் பாஷையில நான் பேசு பேசெண்டு பேசுறன்.

அவ தான் மகனின் பரிசளிப்பு விழாவுக்கு போக வேண்டி இருந்ததால அவன்ரை வேலை முடியாததால முக்கியமான நகை, காசு, பாங் புத்தகங்ளை எடுத்துக் கொண்டு தான் போன தெண்டா.

"வேறை ஏதும் களவு போச்சுதோ பாருங்கோ" எண்டன். அவ "இல்லை அவன் ஒண்டும் எடுத்திரான்" எண்டு சொல்லுறா.

"என்ன நம்பிக்கையில?" எண்டு நான் கேட்க "ஒரு நம்பிக் கையிலதான்" எண்டா.

ஆனால் அவன் வேலை செய்யிற நாளுகள் பேசின ஒப்பந்தத்திலும் விட தொடர்ந்தும் அதிகரிச்சதாலை, இவ ஆரும் வேலைக்காரருடன் அதிகம் பழகாதவ, இந்த வேலையாளுடன் கூடப் பழகுவது அவவின் மேல் ஒரு சமுசயத்தை எனக்கு ஏற்படுத்தவே;

ஒரு நாள் "எடியே என்னடி அவனிலை மயங்கிப் போய் நிக்கிறாய். அவன் வீட்டுச் சாமானுகளைத் தூக்கி கொண்டு ஆக்களையும் சாக்கொண்டு போட்டுப் போகப் போறானடி.

இல்லாட்டில் வீட்டின்ரை இருப்புத் திட்டங்களைப் பார்த்து ஒரு நாளைக்குப் பிள்ளையளையே கடத்திக் கொண்டு போய் காசு கேக்கப் போறானடி" எண்டு அவவைக் கொஞ்சம் கூடப் பேசி வெருட்டிறன்.

அவ பயந்திட்டா. ரண்டு நாள்ள வேலையளை படபடவென முடிச்சு "முடியாததை இப்ப செய்யத் தேவையில்லை. பேந்து பாக்கலாம்" எண்டு சொல்லி அவனை வேலையால அனுப்புறா.

அவ அந்த வேலையாளிடம் போட்ட கணக்கும் பக்கத்து வீட்டு செருப்புக் கள்ளனின் நடத்தையில போட்ட கணக்கும் பிழைக்கேல்லை எண்டது என்ரை உள்ளுணர்வை நெருடுது.

அவ பரம்பரைப் பணக்காரி எண்டாலும் இதய ஈரம் உள்ளவதான். என்னைவிட ஆக்களை அளக்கிறதிலை அவ சரியாத்தான் செயற்படுறா எண்டதை நான் செருப்புக் கள்ளனின் பெருங்கொள்ளை முயற்சியிலிருந்து தெரிஞ்சு கொள்ளுறன்.

இருவத்தைஞ்சு வருசம் அவவோடை தொடர்ந்து வாழ்ந்தும் இவவை வேலையாக்களிட்டை இரக்கமில்லாதவ எண்டு தப்புக் கணக்குப் போட்டனே. ஊராக்களை உறவுகளை அறிஞ்சு வைச்சிருக்கிற நான் கலியாணம் கட்டேக்கை நண்பர்கள் அவவைத் திமிர்க்காரி எண்டதைப் பற்றிய கேள்வியையும் நான் எனக்குள்ளை எழுப்புறன்.

அடுத்த நிமிசம் என்ரை வெக்கத்தை விட்டு நான் அவ வீட்டுக் கேற்றடியிலை.

போக முன்னம் எங்கட வீட்டு முத்தத்தில அவவில்லாமல் தேடுவாரில்லாமல் பூத்துக்கிடந்த அவ மனம் மயங்கி மகிழுகிற மணம் சுகமாக்கும் அவவின்ரை மல்லிகையிலை கை நிறைய மொட்டுக்களைப் பிடுங்கிக் கொண்டு அவவின்ரை குணத்தில மயங்கி அவவுக்குக் குடுக்கப் பறந்தன் அவவின்ர காலடி தேடி.

*தாயகம் 72 ஒக்ரோபர்-டிசம்பர் 2008*

o

# பக்கத்து சீற்றிலை பாட்டி உக்காந்தா அல்லது மாற்றங்களை வேண்டி

தீபாவளிக்கு இரண்டு மூண்டு நாள்தான் இருக்கு. மனிசனோடை தீபாவளி உடுப்பு வேண்ட காசு கேட்டு நாலைஞ்சு நாளாய் ஒரே சண்டை. அந்தாள் வாற வருமானத்தை அதுக்கிதுக்கெண்டு ஒதுக்கிக்கொண்டு போகுது. தீபாவளி மலிவு விற்பனையிலை உடுப்பு வாங்கினால் அரைவாசிக்காசு லாபம் எண்டது விளங்காமல் இருக்குது. என்ன செய்யிறது. இண்டைக்கு ஆறாம் திகதி. நாளையோடை சேல் மலிவு விற்பனை முடிஞ்சிடும். அந்தாள் ஒண்டுக்கும் அசங்கிறதாய் காணம்.

ஏழாம் திகதி காலைமை நாற்பதாயிரம் காசை தன்ர கொமர்ஷல் வங்கியில் கவுசிங் லோனுக்கு கெய்சர் பிறாஞ்சுக்கு போடச் சொல்லியும் என்ரையும் அவற்றையும் பேரிலை இருக்கிற எக்கவுண்டுக்கு இரண்டாயிரத்தையும் தந்து எல்லாத்தையும் போட்டிட்டு தனக்கு எக்கவுண்ட் புக்கை காட்டவேணும் எண்ட ஒப்பந்தத்திலை என்னட்டை நாற்பத்திரண்டாயிரத்தை தந்திட்டு ஒவ்வீசுக்கு ஓடுறார் அந்தாள். என்ர கையிலை காசு கிடைச்சுதோ நான் உடனயே அவற்றை பிளானை மாத்திட்போட்டன். அந்தப் பிளானை நான் உங்களுக்கு சொல்ல மாட்டன். அந்த வேலையை முடிசுப்போட்டுத்தான் அடுத்த வேலை பாப்பன். ஆனால் இண்டைக்கு வெளியிலை பாங் வேலையோடை வேறையொரு வேலையும் அவசரமாயிருக்கு.

எனக்கு வேறை வழி தெரியேல்லை. இன்னும் பன்ரண்டு மணித்தியாலத்துக்குள்ளை இந்த வேலையை நான் செய்யாட்டில் வீணாய் பேந்து அரைவாசி நட்டம் அடைய வேண்டி வரும். அவசர அவசரமாய் வீட்டு வேலையை முடிச்சு நேரம் போனதாலை குளிக்காமல் போகத்தான் மனம் சொல்லுது. எண்டாலும் வீட்டாலை வெளியிலை வெளிக்கிடேக்கை

*ஆக்களுக்கு அருவருக்காமல் இருக்கிறதுக்கு குளிச்சு டியோற்றன் தடவி பவுடர் போட்டு அயன் பண்ணின உடுப்புப் போட்டு சங்கிலி காப்புப் போட்டு சென்ற் அடிச்சு தடல் புடலாய் சொந்தக்காரர் லண்டனாலை கொண்டந்த நல்ல கான்பாக் கையும் கொழுவிக் கொண்டு வெளிக்கிடுறன்.*

*எனர புருஷன் செக் குடுத்த ஆக்கள் செக்கை பாங்கில போடுறத்துக்கிடையிலை எங்கடை பாங்கில நான் காசைக் கட்டியிட்டு என்ரையும் அவற்ரையும் பேரிலை போடத் தந்த இரண்டாயிரத்தையும் பாங்கில போடாமல் அடிச்சுக் கொண்டு பஸ்சில என்ர அடுத்த திட்டத்திற்கு ஓடிக் கொண்டிருக்கிற பஸ்சிலை தொத்தியிட்டன். கெட்டிக்காரி. அடிக்கு மேலை அடிவைச்சு நிதானமாய் நடக்கிற நான் செய்யப்போற கள்ள வேலையின்ர அவசரத்திலை பாங்கிற்கு போடத்தந்த இரண்டா யிரத்தையும் மலிவு விற்பனை உடுப்பு வாங்கும் நோக்கில் பஸ்சிற்குள் பாய்ந்து ஏறுகிறன். களவு எதையும் செய்யவைக்கும். எந்தச் சுவரையும் தாண்ட வைக்கும் எண்றது உண்மைதான்.*

***

*பஸ்சிலை சீற்றுகள் அங்கையங்கை ஃபிறியாய் இருக்குது. அதிலை எங்கை குந்த வேணுமெண்டதை ஆராய்ஞ்சு ஒரு இடத்தை தெரிவு செய்யுறன். அது ஒரு இளம் பிள்ளை. ஓரளவு தற்போதைய நாகரிகத்திற்கு இலக்காகிய பிள்ளை. கறுவல் கடும் கறுப்பல்ல. சாடையான கறுவல். முகவெட்டாய் இல்லாவிடி னும் செயற்கை அழகில் ஓரளவு தன்னை அழகாக்கியவளாய்.*

*மற்றச் சீற்றுக்கள்ள இருந்தவை வயதுபோனவை, குண்டாக் கள். நானும் குண்டு. எனக்கும் வயது ஐம்பதிற்கும் மேலை. நான் போய் அவைக்கு பக்கத்தில இருந்தாலும் அவை அரக்கி சீற்றின்ர கரையிலை இருக்க விடாயினம். அவையை இடிச்சுக் கொண்டு சீற்றின் ஜன்னல் பக்கத்தில் போயிருப்பது எனக்கும் கஷ்டம். அதாலை அவையோடை இருந்து அவைக்கும் நெரிசல் குடுத்து நானும் வசதியில்லாமல் இருக்கிறதை விட இந்த சின்ன குமர் பிள்ளையோடை இருக்கிறது எனக்கு வசதியெண்டு கருதி அவள் பக்கத்தில் இருந்தன். இருந்த உடனை அவளுக்கு வணக்கம் தெரிவிக்கிற மரியாதைக்காக அவாவைப் பார்த்தன். அவ்வின்ரை முகம் சிக்கென சிவக்கக் கண்டன். உடனை நான் என்னை சற்று ஒதுக்கிக்கொண்டு கொஞ்சம் விலகி உட்கார முனைஞ்சன்..*

*என்ன புதுமை. ஒரு டபிள் சீற்றில் உட்காந்திருக்கும் ஒருவர் மற்றப் பக்கத்தில் மற்றவர் உட்கார நினைக்கும்போது ஒதுங்கி இடம் கொடுக்கிறதை விடுத்து முகம் சினப்பது. காரணம் என்ன. அவருக்கு நான் ஏதேனும் இடைஞ்சல் செய்தனா என பல மாதிரியும் பலமுறையும் யோசிச்சுப் பார்த்தன், புரியேல்லை. கணவன் பாங்கில் தந்த காசை சொன்ன கணக்கிற்கு போடாமல் என்ர விருப்பப்பட்ட உடைகளை மலிவில் தெரிவு செய்யச் சென்ற எந்தன் ஆர்வம் எங்கோ பறந்து விட்டது.*

*உடுப்புக் கடைக்குப் போனன்தான். உடுப்புகள் இருந்தது தான். ஆனால் மனம் வரேல்லை. உடுப்பெதையும் தெரிவு செய்ய. அந்த இளம்பெண் என்னைச் செய்த இளக்காரம் என் மனதை சதா அலைக்களிச்சுக்கொண்டு கிடந்திது.*

*மாலை கணவன் வீடு வந்தார். பாங் புத்தகத்தை கொண்டு வந்து காட்டும்படி கூறினார்.*

*நான் நடந்ததைக் கூறினன். “என்ர முதுமையை காரணம் காட்டித்தான் நான் தன்ர பக்கத்திலிருந்ததாலை ஒதுங்கியிருக்கிறாள். அவளிடம் நான் ஏதேனும் உதவி கேட்டனா. இல்லையே அவள் பக்கத்தில சீற் ஃபிறியாய் இருக்கு. 2/3 பங்குக்கு விறியாய் இருந்த சீற்றில் நான் இருந்தது பிழையோ என அங்கலாய்த்தபோது, “நீங்கள் வடிவில்லாமல் போயிருக்கலாம், முகத்தில் எண்ணெய் வடிய, உடுப்பு அயனில்லாமல் இருந்திருக்கலாம். அல்லாட்டில் உங்கடை உடுப்பு நாகரிகமில்லாமல் இருந்திருக்கலாம். அவளுக்கு அருவருத்திருக்கலாம். அதில் பிழையிருந்திருக்காது. உங்கடை உடுப்புகள் அப்படிப் பட்டவைதானே” எண்டார்.*

*உடன நான், “அப்ப நான் அவளைப் போல நல்ல ஸ்ரைலாய் உடுப்புப்போட்டு உடம்பெல்லாம் இறுக்க இறுக்க உடுப்புப்போட்டு கண் மயிர் பிடுங்கி தலைமயிர் ஸ்ரெயிற் பண்ணிப் போகேல்லை எண்டே உப்பிடிக் கதைக்கிறீங்கள். அப்ப எங்களை என்ன செய்யச் சொல்லுறீங்கள். நாங்களும் உலக இயற்கையை மறந்து செயற்கையாய் மாற ஏலுமோ. என்ன செய்யிறது சொல்லுங்கோ, சொல்லுங்கோ” எண்டு அவரைப் பிய்த்து எடுத்துவிடுறன்.*

*அப்ப அவர் சொன்னார். “பெண்களில சிலருக்கு ஆண் பக்கத்திலிருந்தால் கவர்ச்சி. அதுபோல் ஆண்களில சிலருக்கு*

ஒரு பெண்ணிருந்தால் கவர்ச்சி. இதுவும் ஒரு உலகம். அதனால்தான் அவள் உங்களை வெறுத்திருக்கலாம். ஏ.ஜே. கனகரட்ணா சொன்னது போல் 'ஒருவனின் நடத்தைக்கு அவனது சமூக வரலாற்று அரசியல் உளவியல் பின்னணிகள் தான் காரணமாய் அமைகின்றதே தவிர தனிநபர் நடத்தை காரண மல்ல. அதாலை அதுக்கு நீங்கள் அந்த தனிநபரின் நடத்தையை தவறானதெனக் கருதுவதை விடுத்து அதுக்கு அடிப்படைக் காரணம் என்னவெண்டு உணர வேணும்' எண்டார்.

"அந்த நபர் நீங்கள் இருந்ததற்குப் பதிலாக வேறொரு நபரின் அருகாமை இருக்கையை நேசிச்சிருக்கக் கூடும். அவ்வளவு அலங்காரம் பண்ணி கற்பனையோடை நவ நாகரிகமாக வந்த அந்த நங்கைக்கு உங்களின்ரை அமர்வு பெருத்த ஏமாற்றத்தைக் குடுத்திருக்கலாம். அதாலை இந்த நிலை மாற சமூக மாற்றத்திற்கு ஏதாவது பண்ண ஏலுமானால் செய்யுங்கோ" எனக் கூறி தன்ர அலுவல்களில கவனத்தைச் செலுத்துறார்.

ஓ என்ன உலகு! எங்கடை காலத்தில முதியவர்களுக்கு குடுத்த மரியாதை எங்கை. பெரியவர்கள் வந்தால் எழுந்து நிற்றல், இருக்கை கொடுத்தல், வழியில் கையைப் பிடித்து கூட்டிச் செல்லல், றோட்டைக் கடக்க உதவி செய்தல்... எனப் பல்வேறு கடமைகள். ஏன் மூத்தோர் தவறாகப் பேசினாலும் எதிர்ப்பேச்சுப் பேசாதிருத்தல் கூட வழக்கிலிருந்தது. ஆனால் தற்காலத்தில எல்லாரும் ஓரளவிற்குப் படித்தவர்களாயிருப்ப தால கருத்துச் சுதந்திரம் ஓரளவுக்கு நடைமுறையிலுள்ள காலத்தில வயோதிபத்தைக் கண்டு அசிங்கம் கொள்ளுற அள வுக்கு நடப்புகள் மாறினதேன். இயற்கையைச் செயற்கையாய் மாத்தும் நடைமுறையாய் உலகாகிவிட்டதே...."

***

நான் இந்தக் கதையை எழுதியிருக்கிறன். இதை வாசிச்ச உடனை உங்களிலை சிலர் இந்த காதாநாயகி கணவனுக்கு தெரியாமல் பாங்கிலை போடக்குடுத்த இரண்டாயிரம் ரூபா வையும் களவாய் எடுத்துக்கொண்டு களவாய் சீலை வாங்கப் போனதாலைதான் இந்தத் துன்பம் இவாக்கு வந்ததென்று நீங்கள் பிரச்சினையின்ரை வடிவத்தை வேறுவிதமாய்த் திருப்பி யோசிக்கப் பாப்பீங்கள்.

***

நான் ஒருநாள் வீட்டிலை ஒரேயடியாய் இருக்க விசராய் இருக்குதெண்டு ஒரு கூட்டத்துக்குப் போனன். அங்கை ஒரு பிரபலமான பிரசங்கியார் வந்திருந்தார். அவர் போகேக்கை இரண்டு மூன்று கதையள் சொல்லி சபையிலை எல்லாரையும் தன்ர பேச்சுக்கை கட்டி வைச்சிருந்திட்டுப் போயிடுவார். நல்ல நல்ல நகைச்சுவையாய் நாசூக்காய் தன்ர கருத்தை முன்வைப்பார்.

நான் கூட்டத்துக்குப் போன அண்டு அவர் பேசினவர். வழமை போலவே இரண்டு மூண்டு கதை உதாரணங்களோடு, அதில ஒரு கதையை நான் உங்களுக்கு உதாரணத்துக்கு சொல் லுறன். அதுவும் ஒரு பாட்டியின்ர முதுமையின் கொடுமை பற்றிய கதைதான். ஒரு ஊரிலை யாழ்ப்பாணத்திலை ஒரு அண்ணன் தம்பி குடும்பம் இருந்திச்சாம். அண்ணன் குடும்பம் யுத்த காலங்களிலை கொழும்பிலை வந்து வசிச்சு வந்தாங்களாம். வரும்போது தங்களுடன் தாயை கூட்டி வரப் பார்த்தார்களாம். ஆனால் தம்பி குடும்பத்திலை தம்பியின்ர மனைவியும் வேலை செய்யிறதாலை தாயை தம்பியார் தன்னோடை வச்சிருந்தாராம். தாயும் வேலைக்குப் போற தன்ர இளைய மகன்ர குடும்பத்தை கண்ணியமாய்ப் பார்த்து வந்தாவாம்.

இடையில் தம்பி குடும்பத்தின் ஒரு மகன் கனடா போய்ச் சேர்ந்து விடவே தம்பி குடும்பமும், கனடாவில் போய்ச் சீவிக்க முடிவெடுத்தார்களாம். அப்போது தாயைக் கொண்டு வந்து அண்ணன் குடும்பத்துடன் விட்டுவிட்டு தாங்கள் கனடா போக அடுக்குப் பண்ணினார்களாம். இது கதையில்லை. உண்மையாய் நடந்த சம்பவம் எண்டதை பிரசங்கியார் இடையில் அறிவித்தார். எல்லோரும் அதனுடன் இன்னும் ஆவலாக மிகுதியைக் கேட்கும் நோக்கில் சனம் அமைதியே ஆகிறது.

ஏனோ தமையன் தாயை தன்னோடை வைச்சிருக்க விரும் பாமல் திரும்ப தம்பியாரிடம் விட்டு விடுகிறான். இப்படி யாக தமையனும், தம்பியும் மாறி மாறி தாயின் இருப்பிடத்தை மாற்றிப் பந்தாடிக்கொண்டிருக்கும்போது தம்பியார் குடும்பத் திற்கு கனடா செல்ல விசா கிடைத்து பயணம் போகும் நாள் வந்துவிட்டது.

*வெள்ளவத்தை தொடர்மாடி வீட்டில் குடியிருந்த தம்பி யார் குடும்பம் பயணம் போகும் அதிகாலை (கனடாப் பிளேன்களெல்லாம் அதிகாலையில்தான் புறப்படுவது வழக்கம்) தாயை அழைத்துவந்து வீட்டின் வெளியே தொடர்மாடியில் உட்கார வைத்துவிட்டு காயாகப் பயணம் போய் விட்டார்கள் கனடாவிற்கு. கதை முடிந்து விட்டது. எல்லார் கண்களிலும் கண்ணீர் ஊற்றெடுத்து திவலைகளாகிக் கொட்டுகிற சமயம். பிரசங்கியார் இன்னொரு உண்மையை (அவர் இந்த இடத்தில் தனது கொள்கையை முன்வைக்கப் போகிறார்) தத்துவத்தை அவிட்டு விட்டார்.*

*"அது என்னவெண்டால் பேந்து பாருங்கோ... அந்தக் குடும்பத்துக்கு ஒரு இன்சிடென்ற் நடந்தது பாருங்கோ. அது என்னவெண்டால் அந்த தம்பியார் குடும்பத்தை கனடாவுக்கு கூப்பிட்ட அந்த ஸ்பொன்சர் பண்ணின அவேன்ரை மகன் இவை போய் ஒரு கொஞ்சக் காலத்தாலை மூண்டு ஆறு மாசமிருக்கும் அவர் ஒரு அக்சிடெண்டிலை செத்துப் போயிட்டார்." இது ஒரு பொய்யாகவும் இருக்கலாம். சரியான காலம் மூண்டு மாதம் அல்லது ஆறு மாதம் எனச் சொல்லாததால் எண்டு சொல்லி கதை முடியுது.*

***

*தாயைத் தொடர்மாடிக்கு வெளியிலை இருத்திப்போட்டு பயணம் போனார்கள். தம்பியார் குடும்பம் எனக் கூறியதும் சபையில் இருந்தவர்களின் கண்களில் திரண்ட கண்ணீர்த் துளிகள் வந்த இடம் தெரியாது அப்படியே வற்றி விட்டன. இந்த இடத்தில் இந்தப் பிரசங்கியார் சமூக மாற்றத்தை விரும்பி சமூகத்தின் கொடுமைகளை எடுத்துக்காட்டி செய்ததென்ன. தாயைத் தனிக்க, தவிக்க விட்டுப் போனது தவறு. இந்தப் பிழை இந்தச் சமூகத்தின் இடர்ப்பாடு. இதற்கு யுத்தத்தின் இடர்பாட்டிற்குள்ளேயே தங்களுக்கு உதவிய தாயை உலகத்தின் சொர்க்கம் எண்டு கனடா வாழ் பிரசைகளால் கூறப்படும் கனடாவிற்கு பண வசதியைப் பெரிதென நினைக்கும் சமூகம் உருவாகி வருவது பற்றி அழுத்திக் கூறாமல்; சீரழிந்த திறந்த பொருளாதாரம் அடிப்படைக் காரணம் யாதெனக் கூறாது பொங்கிவந்த கண்ணீர் அடங்குமளவிற்கு தாயைப் பரிதவிக்க விட்ட பாவத்தால் பிள்ளையை இழந்து கொண்டார்கள் எனக் கூறி மக்கள் மனதில் கட்டி எழுப்பப்பட்டு வந்த மனிதநேயம்*

*தடம்மாறி, மாற்றப்பட வேண்டியது எதுவெனக் காட்டாது போனமை மனவருத்தத்திற்குரியது.*

*இவர் நினைச்சால் இந்த நாட்டை சிந்தனையால நெறிப் படுத்த முடியும். ஏனெண்டால் அவருக்குப் பின்னால ஒரு பெரிய அணி திரண்டிருப்பது நாமறிந்த உண்மை. இதில் நான் சொன்னதும் உண்மைக்கதை. பிரசங்கியார் சொன்னதும் உண்மைக்கதை என நம்புவோமாகில் நான் சொன்ன உண் மைக் கதைக்கும், பிரசங்கியாரின் உண்மைக் கதைக்கும் தீர்வை பிரசங்கியார் போன்று பாவத்தின் கணக்கில் போட்டு விடாது சற்று சீர்தூக்கிப் பார்க்குமாறு வாசகர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.*

*விமர்சனங்கள் வேண்டப்படுகின்றன. ஏனெனில் மாற்றங் களை வேண்டி.*

# ஒரு டாக்குத்தரின் டயறியிலிருந்து ஒரு பக்கம்

*சுமார் மாலை 5.10 இருக்கும். மனம் பதைப்புடன் என் உத்தியோக அறையில் இருக்கையில் இருந்தேன். என் மனமோ அங்கே. மாலை 04 மணியிலிருந்து உடல் அறையில் ஆசுவாசமாக.*

*முதல் ஒரு நோயாளி வந்து செல்கிறார். அடுத்தொருவர் வருகிறார். அவவைக் கண்டதும் என் மனம் சற்று ஆறுதலடைகிறது.*

*காரணம் அவா என் மனம் சற்றுமுன் எங்கு இருந்ததோ அந்த இடத்திலிருந்து நேராக இங்கு வந்திருக்கிறா என்பதே.*

*நான் அவா வந்த அந்த இடத்திலிருந்து கூட்டம் முடியாத தறுவாயில் கேட்டுக்கொண்டிருந்த முற்போக்குக் கருத்துக் களினை முழுமையாகக் கேட்க முடியாத ஆதங்கத்தில் அந்தக் கூட்டத்திலிருந்து நான் வந்த சற்று நேரத்திலே வந்த அந்த சகோதரியைக் கண்டதில் மனதில் ஒரு திருப்தி. (கூட்டத்தின் ஓரளவு விடயங்களை என்னாலும் கேட்க முடிந்ததையிட்டு)*

*அவவிடம் அவ வந்த விடயத்தை கொம்பியூட்டரில் பதியும் முகமாக கொம்பியூட்டர் பட்டன்களை அமத்திக் கொண்டு அவவிடம் சுகம் விசாரிக்கின்றேன். அவா ஆசுவாசமாக என்னிடம் தான் வந்த பிரச்சினையை முன் வைக்கிறா. இது ஒரு விசித்திரம்.*

*அவா இருந்து வந்த கூட்டத்திற்கும் அவா கூறும் பிரச்சி னைக்கும் பேசும் களம் அந்த இடமாக இருந்திருக்க முடியுமா. அங்கு அது பரவலாக பலபேராலும் பேசப் பட்டிருக்கவும் கூடும். அங்கு பரிமாறப்படும் கருத்துக்களுடன் ஒத்துப் போகக் கூடியவா.*

*அத்தகைய கூட்டங்களில் அவாவின் கருத்துக்களை நான் கேட்டதிலிருந்து அப்படி இருக்கு. அது பற்றி அவா அங்கு*

*கூறாது என்னிடம் வந்து கலந்துரையாடுவதேன் என்ற கேள்வி என்னுள் விரிகிறது.*

*முகத்தில் சலனமின்றி என்னைத் தேடி என்னிடம் ஆறுதல் பெற வந்த பெண்மணியிடம் மனம் விட்டுப் பேசத் தொடங்குகிறேன். ஏனைய நோயாளிகளின் காத்திருப்பையும் பொருட்படுத்தாது. இவ ஒரு விசித்திரமான நோயாளி.*

*சிந்தனைத் தெளிவுடன் குழம்பிப் போயிருக்கிற புத்தி ஜீவியாக. பல வேறு சமூக அரசியல் பொருளாதார இலக் கியம் சம்பந்தமான விடயங்களையும் என்னுடன் சிலாகித்து அதில தான் கருத்து ரீதியில் தெளிவடைந்திருப்பதால் அதை நடைமுறைப்படுத்தும் போது ஏற்படும் பல்வேறு சிக்கல் களுகுக்கு முகம் கொடுப்பதில் சிக்கல் இருப்பதாகத் தன்னைச் சித்திரவதைப்படுத்துவதாக பேசிக் கொள்கிறா.*

*நாட்டின் கொடுமைகண்டு பொங்கும் பாரதியாரின் உள்ளத்தையிட்டு அவரின் கொதி மனநிலையைப் பற்றி அங்க லாய்க்கிறா. தன்னுடைய உளக் கொதிப்பை தான் சார்ந்த சமூகத்திடம் தான் கொட்டும் போது கலந்துரையாடும்போது தான் கேள்விக்கண்களால் அவர்களால் நோக்கப்படுவதைத் தான் உணர்வதாகவும் தெரிவிக்கிறா.*

*“எல்லோரும் இதுதான் உலகம், இப்பிடித்தான் உலகம். அதற்கேற்ப நீ பணிந்து போனால்தான் வாழ்க்கையில் வெற்றி யடைவாய். இல்லாது விடின் தோல்விதான். நீ முதலில் மருந் தெடு. உன் மனக் குழப்பம் எல்லாம் தீரும் என்கின்றனர். நான் என்ன செய்ய. என் மனதின் சமநிலையில் குழப்பமா? எனக்கே என்மேல் கேள்வியாக இருக்கிறது. அதாவது என் மன நிலையில் உள்ள போராட்டம். சமூகம் பற்றிய தேடலில் தெளிவா? குழப்பமா? என்பது.”*

*“என்னை எல்லோரும் மருந்தெடு.” என்று சொல்லும் போது அவர்கள் நான் பேசும் வர்க்க விடுதலை, இனவிடுதலை, சாதி விடுதலை, பால் விடுதலை, சிறுவர் பாதுகாப்பு என மனித சமுதாயத்தின் மனித உரிமை மீட்புப் பற்றி நான் பேசுவது, அவர்களுக்கு எனக்கு பைத்தியக்காரத்தனம் என்று படவே தெய்வத்திடம் என் மனத்தை ஒப்புவிக்க என் மனம் ஒருமைப்படுகுதில்லை.”*

“அதாலை என் உள்ளக் கொதிப்புகளை அங்கலாய்ப்புகளை சமூகப் பிரச்சினைகளை எழுத்தில் வடிக்க ஆரம்பிச்சன். சரியோ பிழையோ வாசிச்சவை பெரும்பாலும் நல்லாய் இருக்கு தெண்டு பாராட்டிச்சினம். பிரசுரிச்சினம். விமர்சிச்சினம். என் இயற்பெயர் போடப்படாத காரணம் என் இயற்பேருக்கு அவர்கள் என்ன முத்திரை குத்தியுள்ளனரோ என்பதை அறியாமையே!

இந்த விமர்சனங்களால மனசில ஒரு மகிழ்ச்சி. என் ஆக்கங்களை வாசிக்கிறவை தம் சரியான கணிப்பை வெளியிடத் தவறி விடுவார்களோ என்ற பயம். அதுவும் நான் ஒரு பெண்ணா கவும் மத்தியதர வர்க்கத்திலும் இருப்பதால் கருத்துக்களை தெரிவிக்கும் போது மிகக் கவனமாகத் தெரிவிக்க வேண்டிய தேவை உள்ளது.

போய்ச் சேரும், சேர்கின்றது, சரியெனப்படுகிறது, மாற் றத்தை ஏற்படுத்தும் என்ற ஒரு திருப்தி. இவற்றை எழுதியதன் பிற்பாடு அந்தப் பிரச்சினைகளிலிருந்து விலகி நான் ஆசுவாசமாக நன்றாக நித்திரை கொள்கிறேன்.

முந்தி நித்திரைக் குறைவு. ஏன் நித்திரையே இல்லை. இப்போது நித்திரைக்குப் பஞ்சமில்லை. என் எழுத்தின் பின் என் சமூக மனநலப் பிரச்சினையிலிருந்து விடுபட நான் எடுக்கும் தூக்க மாத்திரை எழுத்து, நல்ல நூல் வாசிப்பு, நல்ல கூட்டங்களைத் தெரிவு செய்து அங்கு போதல் என்பவைகளே.

ஆன்மீக விடுதலையில் எனக்கு நாட்டமில்லை. நம்பிக் கையுமில்லை. ஆனால் மன அமைதி வேண்டி அமைதியான சூழலில் அமைந்திருக்கும் அரச மரத்தின் கீழிருக்கும் புத்தர் கோயிலுக்கு அருகில் போய் வருவேன் சுகந்தமான காற்று வேண்டி.

அவ்வப்போது அரசனாயிருந்து ஆண்டியான புத்தரின் மனநிலையைப் பற்றி பலகோணங்களிலும் இவர் ஏன் இப்பிடி ஆனார் என சிந்திப்பேன். ஒரு அரசனாய் இருந்து ஏழை எளிய மக்களின் வாழ்க்கையில் மாற்றம் கொண்டுவர முடியாமை யினாலா என பல கேள்விகள் என்னுள் எழும்.

இப்போது நான் என்ன செய்ய. விசருக்கு, மனப் பதட்டத்திற்கு பதகளிப்புக்கு என் வருத்தம் மாற மாத்திரை எடுக்க வேண்டுமா? நான் யார்? என் நிலை என்ன? இந்த சமூகம் என்ன பாடுபடப்போகிறது? எனக்கு விசரெனில் குளிசை

*தாருங்கள். முடிவு உங்கள் கைகளில் என தன் கேள்வியை என் கையில் விட்டு விடுகிறார். விஞ்ஞானத்தை நம்பி மெஞ்ஞானம் வேண்டி.*

*அப்போது நான் தடுமாறியபடி என்னை சமாளித்து 'எதற்கும் இந்தக் குளிசையை நாங்கள் கொஞ்சக் காலத்திற்கு எடுப்பம்.' நீ என ஒருமை முன்னிலையில் கூறி விடாமல் சமாதானப்படுத்துவதற்காக அவாவின் பிரச்சினையும் என்ர பிரச்சினைதான். உங்கடை துக்கத்தைப் பகிர்கின்றேன் நானும் எனப் பொருள்பட.*

*இறுதியில் நீங்கள் எழுதுறதை எழுதுங்கோ, காத்திரமான மாற்றத்தை வேண்டி. சமூகம் மாற வேண்டும் எனக்கூறி அவவிடம் எல்லோரிடமும் வாங்கும் வழமையான பீசை வாங்கி வழி அனுப்பி வைக்கிறன் மனச்சோர்வுடன்.*

*ஒரு டாக்குத்தரின் டயறியிலிருந்து ஒரு பக்கம்.*

# அங்கிடுதத்திகள்

*காலை எழும்பி மருந்து குடிச்சு சத்தி எடுத்து கால்முகம் கழுவி உட்காருகிறார் மாவை ஆசுவாசமாக.*

*அப்போது அவருக்கு இலங்கை உணவுத் தயாரிப்புக்காக இலங்கையிலயிருந்து இந்தியா சென்ற அவரால் 'அக்கா' என அழைக்கப்படும் சகோதரித் தோழி;*

*"மாவை நான் உங்கிளிட்டை இப்ப இந்த நிலையிலை ஒரு கேள்வி கேட்கிறன். ஒளிக்காமல் சொல்லுவீங்களோ. உண்மையைச் சொல்ல வேணும். கேட்கட்டோ. இப்ப நீங்கள் மறு மொழி சொல்லக்கூடிய மனநிலையிலை இருக்கிறீங்களோ" என்று கேட்க அவர் 'ஓம் கேளுங்கோ' எண்டார்.*

*"உண்மையிலை நீங்கள் இப்ப இவ்வளவு துன்பத்தையும் வருத்தத்திலை அனுபவிச்ச நிலையிலையும் கடவுள் இருக்கிறாரோ இல்லையோ எண்டு நினைச்சனிங்களோ" எண்டார்.*

*'இல்லை ஒருக்காவும் நினைக்கேல்லை. இப்பவரை நினைக்கேல்லை' எண்டார்.*

*"அப்ப இந்த விஷயத்திலை நீங்கள் நல்ல தெளிவாய் இருக்கிறீங்கள். கடவுள் இல்லை என்ன" என்று கேட்கிறன்.*

*"ஓம்... நான் இந்த விஷயத்திலை நல்ல தெளிவாய் தான் இருக்கிறன். இல்லாத ஒரு பொருள் பற்றிய ஒரு பிழையான எண்ணக்கருதான் கடவுள்" எண்டார்.*

*அப்போது அந்த அக்கா தோழி "ஓ அப்பிடியா மாவை, நான் இந்த விஷயத்திலை அங்காச்சோ இங்காச்சோ நிலைதான். மாவை நான் என்ரை புருஷனுக்குத் தெரியாமல் விபூதி பூசேக்கையும் ஏதேனும் கஷ்டம் வரேக்கையும் கடவுளே இருந்தால் பார்த்துக்கொள்ளும் எண்டு கும்பிடுறனான்".*

*“அதுதான் நான் இதுகும் இல்லை. அதுகும் இல்லை. எங்களுக்கு ஒரு சரியான முடிவு, கருத்துத் தெளிவில்லை. அதாலை எங்கடை வாழ்விலை குழப்பந்தான்! நம்புறதா விடுறதா எண்ட நிலை”.*

*“நாங்கள் ஒரு தங்கிடுதத்தியள் என்ன மாவை” என்று அந்தத் தோழி அவருடன் கருத்துப் பரிமாறிய வேளை;*

*‘அங்கிடுதத்திகள்’ என அந்தச் சொற்றொடரை திருத்து கிறார். அவ்வேளை அத்தோழி “இப்பிடி அங்கிடுதத்தியள் பற்றி சில நிலைப்பாடுளை சந்தர்ப்பங்களைச் சொல்லுங்கோ மாவை” எண்டா.*

*அடுத்த கணமே;*

*“நான் ஒரு ஊராள், எனக்கு என்ரை கண்ணிலை ஏதோ வருத்தம் தலையிடி. அந்த நேரம் எங்கடை ஊர்க் கண் பரியாரி மாமி எனக்குச் சரியான மருந்து தருவா. எனக்கு மாறும் எண்ட நம்பிக்கையிலை நான் எங்கடை ஊர் கண்பரியாரி மாமி வீட்டை போறன்”.*

*அங்கை மாமி வெளியிலை எங்கையோ போயிட்டா. அந்த நேரம் அந்த கண்பரியாரி மாமி வீட்டிலை இருக்கிற வேறை ஆரோ வந்து, ‘ஏன் வந்தனீங்கள்? என்ன விசயம்” எண்டார்.*

*நான் விஷயத்தைச் சொல்லுறன். ‘அவ இருங்கோ மாமி வந்திடுவா’ எண்டு கூறிச் செல்கிறா.*

*அந்த வேளை வேறையும் ஆரோ கண்பரியாரி மாமியிட்டை தங்களைக் காட்ட வருகினம்.*

*அந்த நேரம் பேச்சு வாக்கிலை வேறையும் எங்கையோ வேறை ஒரு பரியாரி இருக்கிறதாயும் அவரிட்டைக் காட்டினாலும் சுகம் வரும் எண்டு அவர் சொல்ல, நான் எங்கடை கண் பரியாரி மாமியிட்டை என்னை காட்டிறதை விட்டிட்டு, அந்த மற்றவர் சொன்ன பரியாரியைப் பாக்கப் போறன்... சரியோ. இந்த இடத்திலை நான் ஒரு அங்கிடுதத்தி.*

*அங்காச்சோ இங்காச்சோ எண்டு தடுமாறுற அலைபாயுற மனம்; ஒரு கொள்கையிலை ஒரு இடத்திலை ஒரு கருத்திலை ஒரு முடிவிலை நம்பிக்கை வையாமல் எங்களை நாங்களே ஏமாத்துறது ஏமாறிறது தான் அங்கிடுதத்தி.*

# கந்தசஷ்டியும் கணவனும்

“இஞ்சேருங்கோப்பா... பக்கத்து வீட்டைப் பாருங்கோப்பா. நான் சொல்லுறது கேக்குதே. ஒருக்காக் கேளுங்கோவன். உங்களுக்கென்ன விசரேப்பா. நான் ஒரு விசரி. இதிலை இருந்து கொண்டு கத்துறன். கண்ணை மூடிக்கொண்டு பேசாமல் படுத்துக் கிடக்கிறியள்.”

இரவு தான் வந்தன். உங்களோடை கதைக்க முடியேல்லை. நீங்கள் என்னவோ எழுதிக்கொண்டிருந்தீங்கள். உங்களை டிஸ்ரேப் பண்ணக்கூடாதெண்டிட்டு திரும்பிப் போயிட்டன்.

“இப்ப விடியப்பறம் உங்களைப் படுக்கையிலை பிடிச்சுக் கதைக்கலாமெண்டு விடிய நாலு மணிக்கு வந்தால் இப்பவும் கதைக்கிறியள் இல்லையப்பா. என்னோடை கதையுங்கோ பிளீஸ்... பிளீஸ்... என்னோட கதையுங்கோ. நான் சொல்லுறதை யொருக்காக் கேளுங்கோ.”

“ஓம் சொல்லும். நான் இப்பத்தான் ஒரு கொஞ்ச நேரத்திற்கு முந்திப் படுத்தனான். இப்ப எத்தினை மணி. நாலு மணியோ ஆ... சொல்லும் கேக்கிறன் ம் ம்...”

“என்னெண்டாப்பா... பக்கத்து வீட்டுக்காரர் கந்தசஷ்டி விரதம் பிடிக்கினம். நாங்களும் பிடிப்பமே அவையளைப் போலை. அங்கை பாருங்கோ அவையை. விடியப்புறம் நாலு மணிக்கு எழும்பி வீடுவாசல் கூட்டி முத்தம் கூட்டி தண்ணி தெளிச்சு வீடு வாசல் கழுவி எல்லாம் துப்பரவாக்கி தாங்களும் தோஞ்சு குளிச்சு சாம்பிராணி போட்டு எவ்வளவு துப்பரவாய் இருக்கினம். அவை சாம்பிராணி போட்டு அப்பிடி ஒழுங்காய் இருக்கிறதே எங்களுக்கு இவ்வளவு சந்தோஷத்தைத் தருகு தெண்டால் நாங்களும் அப்படிச் செய்தால் எங்களுக்கு எவ்வளவு சந்தோஷம் வரும். நாங்களும் பிடிப்போமேப்பா கந்தசஷ்டி.”

*"ஓமப்பா... ஓம். பிடியுமன் ஆர் வேண்டாமெண்டது! நீர் பிடிக்கிறதெண்டா பிடியும்; எங்களுக்கும் வீடு சுத்தமாயிருக்கும். ஆனால் பட்டினி மாத்திரம் காலைமை இருந்து பொழுதுபடும் வரையும் இருந்து போடாதையும், பேந்து அல்சராக்கிப் போடும்.*

*நீர் நம்பமாட்டீர்! அல்சர் எண்ட நோயின்ர தாக்கத்தாலை ஆட்களின்ர வருகையள் எப்ப ஆஸ்பத்திரிக்குக் கூடுதலாய் வருகுதெண்டு பார்த்தால் ஆஸ்பத்திரித் தரவுகளின்படி கந்த சஷ்டி முடிய கொஞ்ச நாளாலை, 'நெஞ்சுக்கை எரியுது, வயித்துக்கை ஏதோ செய்யுது, சாப்பாடு சமிக்கிதில்லை, வயிற் றெரிவு, நெஞ்சுக்கை ஏதோ கட்டைபோலை அடைக்குது, மேலை வாற மாதிரி நெஞ்சு முட்டு முட்டாய்க் கிடக்குது, நான் செத்துக் போடுவன்' எண்டு சொல்லிக் கொண்டு வாறவை யின்ர தொகைதான் கூடவாம். இது டொக்ரேர்ஸ் சொல்லி நான் அறிஞ்ச விசயம்.*

*ஆனால் நீர் மாத்திரம் எனக்குப் பட்டினி கிடந்து வருத் தத்தை உழைச்சுப் போடாதையும். பேந்து வருத்தம் வந்துதோ நான் ஆஸ்பத்திரிக்கு மற்றவையை எனக்குத் தெரிஞ்சவையை அறிஞ்சவையைக் கூட்டிக்கொண்டு போறது மாதிரி கூட்டிக் கொண்டு போகமாட்டன். ஏற்கனவே உமக்கு டயபற்றிக், பிரஷர் எல்லாம் இருக்குது. சும்மா விசர்க் கதையை விட்டிட்டு உமக்கு விருப்பமெண்டா நீரும் அவையைப் போலை விடியப் புறம் எழும்பி வீடு வாசலைக் கூட்டி செய்யிற துப்பரவுகளைச் செய்து சுத்தபத்தமாய்ச் சாம்பிராணி போடுமன். ஆர் வேண்டாம் எண்டது.*

*ஏன் கந்தசஷ்டி ஆறு நாளும்தான் போக வேணுமே. வருசம் முந்நூற்றறுபத்தஞ்சு நாளும் போடும். அதைப்பற்றி உம்மை விட நான்தான் கூடச் சந்தோசப்படுவன். நீர் சொன்ன மாதிரி எங்களைவிட அவையள் நல்ல தூய்மையாய்த்தான் இருக்கினம். அதை நான் இல்லையெண்ணேல்லை.*

*அவையள் உந்த விரதங்கள் எல்லாம் பிடிக்கிறதாலை அதுக்காக கட்டாயமாய் வீடு வாசல்களைக் கழுவுறதால அவை துப்பரவாய் இருக்கிறதுக்கு எங்களையும் விட அவையளுக்கு சந்தர்ப்பம் அதிகந்தான். எனவே நாங்களும் அவையளைப் போல எல்லா நாளும் சுத்தத்தைப் பேணுறதிலை விரதமாய் இருந்து சுத்தத்தைப் பேணுவம். வாறீரோ நீர். அந்த விரதத்துக்கு! வாறன் சுத்தம் பேண."*

*“போங்கப்பா உங்களுக்கு உண்மையிலேயே விசர்தான். உங்களோடை கதைச்சு வேலையில்லை. நான் விரதம் பிடிப்பன் தான். நீங்கள் விருப்பமெண்டா கோயிலுக்குக் கூட்டிக்கொண்டு போங்கோ அல்லது விடுங்கோ. அந்தப் பாவம் உங்களைத்தான் சேரும்.*

*நாங்கள் இப்பிடி இருக்கிறதாலைதான் எங்களுக்கு இவ்வளவு கஷ்டமும் எண்டு ஆக்கள் சொல்லுகினம். எனிமேல் நான் இந்த விரதம் பிடிப்பன். ஆர் தடுத்தாலும் விடன். நீங்கள் எனக்கென்ன பெரியாளோ. புருசன் எண்ட இதுக்கு ஒரு சொல்லு கேட்டால் பெரிய நடப்படிக்கிறியள், லெக்ஷர்... லெக்ஷர் எல்லாத்துக்கும் லெக்ஷர். உதைப்போய் உங்கடை அமைப்பாக்களிட்டை அடியுங்கோ. அதுகள் தான் உதுக்கு ஆமாப்போடச் சரியான ஆக்கள். அதுதானே நீங்கள் அதுகளிட்டை அதுகளிட்டை ஓடி ஓடிப் போறியள்.*

*நான் உங்கடை ஆக்களிட்டையே வரன். வந்தால் அந்தச் சனியங்கள் என்னையும் மாத்திப் போடுங்கள். நான் வரன். தீபாவளிக்கு வரச் சொன்னனீங்களல்லோ! வருவன்... வருவன்... பார்த்துக் கொண்டிருங்கோ. உங்கடை ஆக்களும் வேண்டாம். உங்கடை அட்வைசும் வேண்டாம். ஆளைவிட்டால் காணு மப்பா. லூசு லூசு. அரை லூசு அரை லூசு இல்லை முழு லூசு.*

*உன்ரை அமைப்பிலை இருந்து நீ என்னத்தைக் கண்டாய். உன்ரை ஆக்களிலை எல்லோரும் அப்பிடி இப்பிடித்தானே இருக்கினம். பார் நான் பழகிற ஆக்கள் எல்லாரும் என்ன மாதிரி சாமி பூசை புனஸ்காரங்கள். அதுகள் நல்லாய்த்தானே இருக்குதுகள். வெளிநாடு போகுதுகள், உழைக்குதுகள், செல வழிக்குதுகள், சந்தோசமாய் இருக்குதுகள். அதுகள் தங்கடை ஒவ்வொரு தேவைக்கும் கடவுளுக்கு வணக்கம், விரதம், நேர்த்திக்கடன் எண்டு செய்து நல்லாய்த்தானே இருக்குதுகள்.*

*“உதுகளை நாங்கள் கடைப்பிடிக்காததாலைதான் நாங்கள் இப்பிடி இருக்கிறம் எண்டு என்ரை கண்ணுக்கு முன்னாலையும் காதுபடாமல் வெளியிலையும் எங்களைப் பற்றி விமர்சிக்குதுகள். உன்ரை ஆக்கள் கூட்டம் கூடி நாட்டிலை சனத்துக்கு இப்பிடி இப்பிடிப் பிரச்சினை இருக்குதே இதை எப்பிடி நீக்கலாம், எப்பிடி எப்பிடி எல்லாம் வாழலாம் எண்டு சொல்லிக் கொண்டு கூடிக் கூடிக் கதைக்கிறதும்; கூட்டம் வைச்சு ஆக்களைக் கூட்டி*

மாங்கு மாங்கெண்டு கத்துறதும் தானே வேலை. போங்கோ... போங்கோ... லூசுகள்...” எண்டு வெளியேறினன் அறையை விட்டு.

பிறகு மூண்டு வருசமாய் மனிசன் கத்தக் கத்த நான் உள்ள கோயிலுகள் விரதங்களெல்லாம் பிடிச்சு எனக்கு அவர் பாடிப் பாடிச் சொன்ன மாதிரியே அல்சர் வந்திட்டுது. நான் எனக்கு வயிறெரிச்சல், நெஞ்சடைப்பு வர இவருக்கு முறைப்பாடு வைச்சன். எனக்கு இப்பிடி இப்பிடியெல்லாம் செய்யிதெண்டு. ஆனால் என்ரை மனிசன் என்ர கதையை காதிலையும் வாங்கேல்லை. எனக்கு கோவம், விரக்தி, சண்டை, சச்சரவு, விரிசல், மௌனம். எல்லாம் போச்சு! என்ரை வாழ்க்கையிலை இடைச்சுவர் விழுந்திட்டுது.

இவர் ஊரிலை இருக்கிற தெரிஞ்ச ஆக்கள் தெரியாத ஆக்கள் சொந்தக்காரரர் எண்டு ஆர் இவர் பீ.எச்.ஐ (பப்ளிக் கெல்த் ஓவீசர்) எண்டு தெரிஞ்சு உதவி கேட்ட ஆக்களுக் கெல்லாம் ஆஸ்பத்திரியிலை எந்த வருத்தம் எங்கை எப்ப வந்தாலும் உதவி தேவையானவையை ஆஸ்பத்திரிக்கு கூட்டிக்கொண்டு போய் அவைக்காக தான் விடியவும்; போய் நம்பர் எடுத்து அவையை டொக்டரிட்டை காட்டி ஆவன செய்யிற ஆள்.

எனக்கு ஆஸ்பத்திரியிலை எந்த உதவியும் செய்யாமல் விட்டிட்டுது. நான் ஆஸ்பத்திரிக்குப் போய் நூற்றி அறுபதாம் நம்பர் மட்டிலை எடுத்து டொக்ரரிட்டை காட்டி வீட்ட வர களைப்போட வருத்தமும் கூட. இவரிலை இருக்கிற கோவமும் கூடி அல்சரோடை டயபற்றிக் பிரஷரும் ஏறிப்போக எனக்கும் அவருக்குமிடையிலையிருந்த இடைவெளி கூடிக்கூடி ஒருத்தர் சொல்லுறதை ஒருத்தர் கேட்காத ஒரு ஈகோ எங்களுக் கிடையிலை வளர்ந்திட்டுது.

கதை குறைஞ்சு இவர் வீட்டிலை சாப்பிடுகிறதையும் குறைச்சிட்டார். வெடுவெடெனக் கதைக்கிற ஒரு இயல்பும் வர வர வந்திட்டுது. சிரிப்பு ஆளைவிட்டுத் துலைஞ்சிட்டுது. நான் இறங்கிப் போனன்.

“ஏனப்பா இப்பிடி இருக்கிறீங்கள். என்ன செய்யிது? உங்களுக் கென்னாலும் வருத்தமா. எங்களுக்கெண்டு ஆர் இருக்கினம். உங்களை டொக்டரிட்டை ஒருக்காக் காட்டுங்கோ. உடம்பை ஒருக்கா காட்டினால் பயமில்லை. என்னோடை கோவமா.

இப்பவும் கோவம். சரி எனி இரண்டு பேரும் கோவத்தை விடுவம். நான் நீங்கள் சொல்லச் சொல்ல விரதங்கள் பிடிச்சது பிழைதான். அதாலை இல்லாத வருத்தம் வந்ததும் சரிதான். உங்கடை சொல்லைக் கேட்காதது பிழைதான். ஆனால் நான் உங்கடை சொல்லைக் கேட்காமல் எனக்கு வருத்தம் வந்து கஷ்டப்படேக்கை நீங்கள் உங்கடை பிடிவாதத்தை கொஞ்சம் கூட விடாமல் என்னைப் பாரா முகமாயிருந்தது என்னையும் உங்களிட்டையிருந்து சுமார் ஒரு வருசம் என்ர மனசிலையும் வைரம் பாஞ்சு பிரிச்சிட்டுது.

இனி இரண்டு பேரும் ஒருத்தரை ஒருத்தர் மன்னிப்பம், சேர்ந்து வாழுவம், பழையபடி சந்தோசமாயிருப்பம். எங்கடை பிரச்சினையாலை எங்கடை பிள்ளையளுக்கும் எங்கட சந் தோசத்தாலை கிடைக்கிற சந்தோசமும் எல்லோ இல்லாமல் போகுது.

"மன்னிச்சுக் கொள்ளுங்கோ... மன்னிச்சுக் கொள்ளுங்கோ..." எண்டு எனக்கு வெக்கமில்லாமலே என்ரை புரிசனை உரிமையோடை கட்டிப் பிடிச்சுக் கொஞ்சினன். மரம் போலை இருந்தார். நான் எட்டு வருசமாய்க் காதலிச்சு கலியாணமும் கட்டின என்ர சொந்த மச்சான் என்னோடை சின்னனிலை யிருந்து ஒண்டாய் விளையாடி ஓடி ஆடி வளர்ந்து என்னை விரும்பி எத்தனையோ தடையளுக்கை என்னை மணம் முடிச்ச என்ர நாயகன்.

எனக்கு என்னவோ விளங்கிடிச்சு. என்னை மணம் முடிச்ச நாயகன் இதுவரை எங்களுக்குள்ளை என்ன குழப்பம் இருந் தாலும் சமநிலை இழக்காதவர். இப்பிடித் தொடர்ந்து எங்களுக் குள் ஊடல் நிகழ என்ன காரணம் ஏதோ ஒன்று. உள அல்லது உடற் கோளாறாயிருக்கலாம் எண்டு யோசிச்ச நான் அவரை டொக்ரரிட்டைப் போகச் சொன்னன். அவர் போகேல்லை.

அவற்ரை மெடிக்கல் அட்வைஸ் தொடர்புடைய ஒரு நண்பருக்கு போன் எடுத்து அறிவிச்சன். அவருக்கு அறிவிச்சும் அவர் இண்டைக்கு வருவார் நாளை வருவாரெண்டு அவர் இதுவரையும் வரேல்லை. அவரும் அவற்ரை மனிசி செத்த தாலை கொஞ்சம் உள நெருக்கீட்டுக்கு உட்பட்டிருக்கிறதா யறிஞ்சன்.

*ஆனால் ஒரு நாள் அவர் திடீரெண்டு மயங்கி வலி வந்தது மாதிரி வெட்டி வெட்டி இழுத்தார். உடனை அவற்றை வயது இன்னொரு நண்பருக்கும் எங்கடை சொந்தக்காரர் ஒருத்தருக்கும் அறிவிச்சன்.*

*உடனை அவரை வைத்தியத்துக்கு உட்படுத்திச்சினம். அநேகமானவை அவருக்கு டிப்பிறஷன் எண்டுதான் புத்தி மதியும் சொல்லிச்சினம். ஒரு டொக்ரர் மருந்தும் இதுக்கு முதல் குடுத்தது. ஆனால் மயக்கத்துக்குப் பிறகு சரியாய் ஒரு வருஷத்துக்குப் பிறகு எம்.ஆர்.ஐ ஸ்கான் பண்ணிப் பார்த்தால் மண்டேக்கை கட்டியாம்.*

*அவற்றை நெருங்கிய நண்பருக்கு அறிவிச்சன். அவர் அவற்றை அமைப்போடை கலந்து பேசி என்ர அவற்றை வைத்திய பொறுப்பை எடுத்தினம். என்னாலை அரசாங்க ஆஸ்பத்திரியிலைதான் கஷ்டப்பட்டு வைத்தியம் செய்யக் கூடிய நிலை. ஆனால் அவை பலரோடையும் கலந்து பேசி தங்கடை நண்பனை எங்கடை அண்டை நாட்டுக்கு வைத்தியம் செய்யிறதுக்கு ஒழுங்குபடுத்திச்சினம்.*

*நானும் அவர்களில் ஒரு நண்பரும் எனது கணவரும் இந்தியா பயணமானம். அங்குள்ள நண்பரின் உதவியுடன் எயாப் போட்டாலை நேரை ஆஸ்பத்திரிக்கெடுத்து ஆவன செய்து வெகுவிரைவில் வைத்தியத்திற்கு உட்படுத்திச்சினம்.*

*வைத்தியத்திற்கு முதலே நினைவில் மாறாட்டமாகக் கதைக்க வெளிக்கிட்ட என் கணவர் அவர் சார்ந்த அமைப்பு, இலக்கியம், விடுதலை, கவிதை, கவிதா நிகழ்வு, விவாத அரங்கு, கூட்டு வாழ்வு என்று தன் கற்பனைகளையே பேசிக் கொண்டிருந்தார்.*

*எனக்கு "ஐயோ இப்பவும் அதே கலைவெறியுடன்தானே இப்பிடியிருக்கிறார். இதை விடாரோ! எனித்தன்னும் இதை மறந்து என்னோடை என்ரை குடும்பத்தோடை இணையாரோ, நினையாரோ"*

*என்னையும் என்ரை பிள்ளையளையும் கூட தன்ரை அமைப்பினர்தான் தன்ரை இலக்கிய நோக்கை அடைய பின்னடிக்கு தங்களோடை கூட்டிக்கொண்டு போகவேணும் எண்டு சொல்லிக்கொண்டு இருக்கிறார்.*

*என்ன செய்யிறது, ஏதோ அலட்டட்டும் எண்டு இருந் திட்டன். எனக்கு அவரையும், அவற்ரை சாப்பாட்டலுவல்,*

உடுப்புக்கழுவல், ஆஸ்பத்திரிக்குக் கூட்டிப் போறதெல்லாம் தனியச் செய்யிறது கஷ்டமாயிருந்திது. நான் அழுதன், சொல்லி அழுதன் என்ரை கஷ்டத்தை என்ரை சொந்தக்காரரிட்டையும் அந்த அமைப்பினரிடமும்.

என்னோடை உதவியாய் ஆரும் வரவேணும் எண்டது ஒருத்தருக்கும் படமாட்டேன் என்குது.

நான் இந்தியாவிலையிருந்து இடையிலை ஊருக்கு வர உதவிக்குப் போன என்ர புருஷன்ர அம்மா (என் அப்பாவின் இளைய சகோதரி- மாமி) தன்னாலை தன்ரை நோயாளி மகனைப் பார்க்கேலாது. கெதியிலை வந்து என்ர புருஷன்ர பொறுப்பை எடுக்கும்படியும் தனக்குத் தன்ர புருசன் வயது போன நேரத்தில கொழும்பிலை ஆரிட்டையோ பொறுப்புக் கொடுத்திட்டு வந்தது. நான் போய் அவரைக் கவனிக்க வேணும், உடனை வரவும் உடனை வரவும் எண்டு போய் இரண்டாம் நாளே என்ரை மாமி இந்தியாவிலை இருந்து அழுகிறாவாம்.

நான் என்ன செய்யிறது. இங்கை என்ர ஆறு வயது, ஒரு வயதுக்குட்பட உள்ள மூன்று குழந்தையளையும் நான் என்ன செய்யிறது எண்டு அழுகிறன். இவரின்ரை அமைப்பினர் என்ன நினைச்சினமோ என்னவோ இதுவரையும் இவற்றை வருத் தத்தைப் பற்றி ஒண்டும் பயப்பட வேண்டாம். காசிருந்தால் எல்லாத்தையும் மாத்தலாம், காசைப்பற்றியும் நீங்கள் ஒண் டையும் யோசிக்க வேண்டாம். அது நாங்கள் ஒழுங்கு பண்ணுறம் எண்டு எல்லாக் கருமத்தையும் தாங்களே முடிவெடுத்துச் செய்தவை.

இண்டைக்கு என்ரை கணவன்ர கையறு நிலையை எனக்கு சொல்லிச்சினம். நீங்கள் தான் இனி அவரை வடிவாய்ப் பார்க்க வேணும். இது உங்கடை கடைசிச் சேவை. இனி அவர் உங்களுக்கு உங்கட மூன்று பிள்ளையளோட நாலாவது பிள்ளையாய்த்தான் இருப்பார் எண்டு சொல்லிக் கண் கலங்கிச்சினம்.

இவ்வளவு துன்பத்தையும் தாங்கின எனக்கு கடவுள் ஏன் இந்தப் பேரிடியையும் தந்தார் எண்டு மனம் விசும்பினன். இரண்டு நிமிஷம் கண்ணீர் விட்டு அழுதன். ஆரும் உணராமலே அப்ப இவ்வளவு பொறுப்பையும் நான் தனியச் சுமந்தால் என்னையும் நாலோடை சேர்த்து ஐஞ்சாவதாய்த் தான் ஆரும் வைச்சிருக்க வேணும்.

*அப்ப ஒரு குரல், அங்க அப்ப சமைக்க ஒரு உதவியாளைப் போடலாம், பயப்படாதேங்கோ பயப்படாதேங்கோ. அங்கை அந்த நாடு மனிதக் கூலி உழைப்பு மிகுந்த நாடு. இங்கத் தையைப் போல உதவியாளுக்கு அலையத் தேவையில்லை. வேலையாக்களை கையுக்கையும் காலுக்கையும் பிடிக்கலாம் எண்டிச்சினம்.*

*எனக்கோ அவருக்கு இலங்கைச் சாப்பாடு குடுக்க வேணும். அவர் அந்த நாட்டுச் சாப்பாட்டைச் சாப்பிடு கிறாரில்லை. மாமியுமோ (என்ர புருஷன்ர அம்மா) தன்னாலை பார்க்க முடியாது. கெதியிலை அவரைப் பொறுப்பெடு எண்டு நெருக்கிறா என்ன செய்யுறது? ஒருத்தரும் ஒண்டும் சொல்லேல்லை. சொந்தக்காரர் ஒருத்தரும் எனக்குச் சரியான பதில் தரேல்லை. ஆரும் யோசிச்சுப் பாருங்கோ! நானென்ன செய்யிறது, நானென்ன செய்யிறதெண்டு விசும்பி விசும்பி அழுதன்.*

*ஒரு பெண் குரல்: "அப்ப நான் உங்களோடை வந்தால் உங்களுக்கு... உங்களுக்கு நான் வந்தால் உங்களுக்கு உதவி யாயிருக்குமா? நான் வாறது உங்களுக்கொண்டும் பிரச்சினை யில்லையே."*

*'நான் இவவோடை போகட்டா' எண்டு என்ர உறவின ரிட்டையும் தன்ர கணவரிட்டையும் கேக்குது. அந்த மனிசி யோடை எனக்கு அவ்வளவு பழக்கமில்லை. அதின்ர பேரும் எனக்கு அவ்வளவாய்த் தெரியாது. அவையள்பற்றி என்ர புருஷனும் எனக்கொண்டும் சொல்லுறதுமில்லை. எனக்கும் அவையைப்பற்றி ஒண்டும் அறிய வேண்டிய அவசியமுமில்லை. இரண்டோ மூன்று தரம் அவவைக் கண்டிருக்கிறன். கண்ட துக்கு முகமனுக்கு ஒரு சிரிப்பு. வேறையென்ன அவையோடை எனக்கு வேண்டியிருக்குது. அதுகும் அவையின்ர அமைப்பைச் சேர்ந்த ஒரு அலட்டல் சன்னிதான்.*

*ஆனால் அவ கேட்டதும் எனக்கு அந்தக் குரலை எங்கையோ கனவிலை அடிக்கிணத்துக்கை இருந்து கேட்டது மாதிரி இருந்தது. அந்த மனிசியின்ர புருஷன் அவவிட்டை "நீங்கள் இப்ப அவவோடை போறதுக்கு ஓமெண்டிட்டு, பேந்து கஷ்டப்படுறன் ஏலாது எண்டு அங்க போயிருந்து எங்களுக்குக் கரைச்சல் தர மாட்டியளே" எண்டு கேக்கிறார்.*

"இல்லை நான் நல்லாய் யோசிச்சுத்தான் உங்களோடை கதைச்சனான். பரவாயில்லை. எதுவந்தாலும் வரட்டும். நான் எல்லாத்தையும் பொறுப்பன்" எண்டு அவர் தன் கணவனிடம் சொல்லுறார்.

ஓ... இந்த இடம்தான். இந்தியன் ஆமிக்காலத்திலை 'இந்தியன் ஆமியே வெளியே போ' என்ற கோரிக்கைக்காக உண்ணாவிரதம் இருந்து செத்துப் போய்விட்ட திலீபனின் நிலையுமாய் இருந்திருக்குமோ எண்டு என்ர மனம் படபடத்தது. பாவம் திலீபனும் தனக்கேலாத நிலையிலை இடையிலை உண்ணாவிரதத்தை முறிச்சு எழுந்திருக்கேலாத நிலைக்கு முற்கூட்டிய சத்தியத்தை (இடையில் எடுத்த பொறுப்பை விடக் கூடாதென்பதற்காக) வாங்கியிருப்பார்கள் போலும்.

பாவம் அந்த மனிசி. ஐம்பது வயதுக்கு மேல். குடும்ப பாசம் கூடிய மனிசி. தன்ர வீட்டுக் கடமையளை தனக்குரிய முதலாவது கடமையாய் நினைச்சுச் செய்து அதுக்குப் பிறகுதான் தன்ர அமைப்பிற்குரிய சேவை நோக்குகளைப் பெரிதென மதிக்கும் அந்தத் தாய் தன்னை மறந்து தன் ஏனைய குடும்ப சேவைகளை மறந்து என்னுடன் வர ஓமெண்டிட்டுது.

எனக்கென்ன ஆர் குற்றியும் அரிசியானால் சரிதானே. மனிசி ஒரு வருத்தக்காரி. முந்தி மூன்று வரியம் வருத்தத்திலை படுத்த படுக்கையாய்க் கிடந்து எழும்பினதாம். ஆனால் இப்ப பாக்க அப்பிடியாய்க் கிடந்ததாய் ஒண்டும் வெளிப்படையாய்த் தெரியேல்லை.

நான் வாச்ச தருணத்தைப் பயன்படுத்திக்கொண்டு நாட்டை விட்டு நாடு என்ர மனிசனிட்டை வந்திட்டன். மனிசியும் வந்துது. அடுத்த நாள் குசினியை என்ர மாமியிட்டையிருந்து பொறுப்பை எடுத்திது. ஆனால் மாமியை நாங்கள் அங்கை போன உடனை பார்த்தால் நெருப்புச் சுட்ட கையை உதறுமாப் போல துடிச்சுத் துடிச்சுக் கொண்டு எவ்வளவு கெதியிலை நாங்கள் இருக்கிற இடத்திலையிருந்து அப்புறப்பட முடியுமோ அவ்வளவு கெதிக்கு அந்த வீட்டிலையிருந்து எங்கடை வேறயொரு சொந்தக்கார வீட்டுக்கு ஓடியிடுவா.

"எங்கை போறீங்கள். ஏன் இங்கை நில்லுங்கோவன்" எண்டு அந்த மாமியைக் கேட்டால் "என்னாலை ஏலாது. கை விறுவிறுக்குது, கால் சுண்டிச் சுண்டியிழுக்குது. என்னை

நோய் விழுத்திப்போடும். பேந்து நான் என்னெண்டு ஊருக்குப் போறது. நான் அங்கை ஊரிலை என்ர அவரை ஆற்றையோ வீட்டிலை பொறுப்பு விட்டிட்டு வந்தனான். நான் போக வேணும்" எண்ணுறா.

அப்பிடியெண்டால் என்ர பிள்ளையளை ஆர் கொழும்பிலை பாக்கிறது. நான் வேலைக்குப் போகவேணும்.

"அவான்ர பிள்ளையை ஆர் பாக்கிறது எண்டு மேனைக் கட்டினவா. பாக்கிறதுதான்" என்கிறா.

நான் என்ன செய்யிறது. பதினொரு வருசமாய் என்ரை ஒரு பிள்ளை பிறந்த நாளிலையிருந்து படுக்கையிலை. மற்றது ஆறு வயது. மற்றது இப்பதான் எட்டி அடி வைக்குது.

அவருக்கும் வருத்தம். அவரையும் குழந்தையைப் பராம ரிக்கிற மாதிரிப் பாக்கவேணும். அவரும் வேலைக்குப் போகேலாது. நானும் நோப்பேயிலை நிண்டால்... நாங்கள் என்ன நாங்களிருக்கிற பிளற்ஸ் சுவரைக் கடிச்சுச் சாப்பிடுகிறதே!

எனக்கு சகோதரங்கள் என்னைவிட ஒரு பெண் சகோத ரியும் அஞ்சு ஆம்பிளைச் சகோதரங்களும் இருக்கினந்தான். ஆனால் அதுகள் ஒவ்வொண்டும் தங்கடை தங்கடை பாட்டைப் பாக்கவே எவ்வளவு கஷ்டப்படுகுதுகள்.

மாமி நினைக்கிறா ஆம்பிளைச் சகோதரங்கள் ஒரு பெண் ணுக்கு இருந்தால் அவையின்ர பொம்பிளைச் சகோதரங்களுக்கு அப்பப்ப கஷ்டம் வரேக்கை அவை உதவி செய்யத்தானே வேணும் எண்டு, ஆனால் அதுகளும் என்ன செய்யிறது காத்திலை காசையள்ளித் தாறதே.

நாட்டிலை இப்ப நடக்கிற சண்டை நெருக்கடிக்கை அது களின்ர பாடோ எப்பிடி எப்பிடியோ இருக்க இப்பிடி ஒரு பிழையான சிந்தனை மாப்பிளை வீட்டாருக்கு. என்ர மாமி என்னை இவர் கலியாணம் கட்டின கால கட்டத்திலையும் சீதனம் கேட்டவா. பேந்து கொஞ்சக்காலம் போக திரும்ப மாமிக்கு பெரிய கஷ்டம் வர அதைத் தாங்கள் தீர்க்க அதுக்கும் என்ர சீதனப் பணத்தைக் கேட்டரிச்சவா. அதிலை தன்ர பிரச்சினையைத் தீர்த்து போடுவம் எண்டு நினைச்சாவோ!

அதில வந்த முரண்பாடுகளிலை அவா எங்களோடை இடம் பெயர்ந்து வந்து சேர்ந்திருந்ததை விட்டிட்டு வேறை இடத் துக்குப் போனதோடை எங்களுக்கும் அவைக்கும் இடையிலை

ஏன் அவருக்குமிடையிலை கூட ஒரு பெரிய தடுப்புச் சுவர் வந்திட்டுது.

அதுக்குப்பிறகு எங்கடை குடும்பத்துக்கு வந்த கஷ்டங்கள் ஒண்டையும் அவை ஆருக்கும் நாங்கள் தெரிவிக்காமலே தாங்காமல் தாங்கி நொந்து நூலானது பழைய கதை.

ஆனால் இப்ப அவையின்ர மகன்ர அதுதான் என்ர அவற்றை காலம் முடியுற கதை. அவர் மிச்சமாயிருக்கிற இந்த கொஞ்சக் காலத்தைத் தன்னும் பிள்ளைத் தொல்லை, வேளைக் குச் சாப்பாடு, ருசியான சாப்பாடு, கூட்டு வாழ்வு, குடும்பக் கதை, அன்புப் பிணைப்போடை வாழ்ந்து கொள்ளட்டும் எண்டு தான் நான் அவரோடை கதைக்கிறது.

இப்பவே, அவ என்னோடை கோவம் பாராட்டுற நேரம்! நானும் பலமாதிரிக் கேக்கிறன். அவ எனக்குப் பயந்து பயந்து வெளியேறுறா. ஆனால் நெஞ்சு முட்டத் தன்ர பிள்ளையைப் பாத்துப் பெரிய பெரிய பெருமூச்சை நெஞ்சுக்குள்ளாலை முட்டித் தள்ளுறா. அவவையும் பாக்க எனக்கு என்ன செய்யிற தெண்டு தெரியேல்லை. அதுகும் கவலையிலை துடிக்குது.

அடிக்கடி மேனுக்கு சாப்பாடுகள், தண்ணியள் வென்னி யள், மருந்துகள் குடுக்குது. நல்ல தைரியம். நியாயமான அன் பான கதையள் சொல்லுறா. அவற்றை மனதிலை பாசத்தை, வாழவேணும் எண்ட விருப்பை வெளிக் கொண்டாற முக மாய்க் கதைக்கிறா. தன்ரை பிள்ளையின்ர தலையை கழுத்தை உடம்பை கைகாலைத் தடவுறா. ஓடிக்கலோன் போடுறா. எவ்வளவு கவனமான அன்பான கவனிப்பு. என்ன இருந்தாலும் அவா பெத்த மகன்தானே! இது தொடர்ந்து கிடைச்சால் அவர் ஓரளவுக்கு எழும்பி விடுவார். இதை அவா உணராவோ!

எங்களுக்குள்ளை உள்ள சிக்கல்களை நாங்கள் இப்ப பொருட்படுத்தப்படாது.

இப்ப எங்களுக்குள்ள பொது எதிரி ஆர்? நோய். நாங்கள் அதை விட்டிட்டு எங்கள் இரண்டு பேருக்கும் உள்ள மாமியார் மருமகள் முரண்பாட்டையா பெரிசாய் பாக்கிறது.

நானும் பிழை விட்டிருப்பன். இல்லையெண்டு சொல் லேல்லை. ஆனால் ஏழையான என்னட்டை தாய் தகப்பன் இல்லாத என்னட்டை சீதனத்தை எதிர்பார்த்தால் இல்லாத தைத் தர நானெங்கை போறது!

*முரண்பாடுதான் கடைசியிலை மிஞ்சினது. சகோதரங் களோடை கூடப் பிறந்தாலும் நாங்கள் நினைக்கிறதெல்லாம் நடக்குதோ!*

*நான் என்ர காலிலை நிக்கவேணும் எண்டு கம்பஸ் வரையும் போய்ப் படிச்சு நல்ல பெரிய உத்தியோகத்திலையும் இருக்கிறன் தானே. இது போதாதா நான் வாழ.*

*ஏன் இல்லாததை நினைச்சுக் கிடைக்கிற வாழக்கூடிய வாழ்க்கையையும் வாழாமல் விடுவான். எனி அதை விடுவம்.*

*மாமி இந்தியாவிலை நிக்கேக்கை வேலைகாரப் பிள்ளை யோடை இன்னொரு சொந்தக்கார ஒரு அக்காதான் இப்ப அஞ்சு நாளாய் என்னோடை நிண்டவா.*

*அவ இப்ப கந்த சஷ்டி துவங்கினதாலை தன்ர வீட்டை போயிட்டாவாம். ஏனெண்டால் அந்த விரதம் சரியான சுத்தபத்தியமாய்ப் பிடிக்க வேணுமாம்.*

*சரி அவ தன்ர வீட்டை போகட்டும். ஆனால் போகேக்கை அவவின்ர மகன்ர வயசிலை இருக்கிற என்ர ஆறு வயது மகனையும் தன்னோடை கூட்டிக் கொண்டு தன்ர வீட்டை போனாவெண்டால் என்ர பிள்ளை அவையின்ர பிள்ளை யோட விளையாடிக் கொண்டு சந்தோசமாய் நாங்கள் வரும் வரையும் பிராக்காய் இருந்திடும்.*

*ஒரு இரண்டு நாளைக்கெண்டாலும் வைச்சிருக்க முடி யுமோ எண்டு அவவிட்டைக் கேட்டதுக்கு, “இல்லை. குறை நினையாதேங்கோ. கந்தசஷ்டிக்குக் கோயிலுக்குப் போறது கோயில் கடமை. ஆனால் உங்கடை பிள்ளையோடை சேர்ந்து கோயிலுக்குப் போய் வாறது கஷ்டம்” எண்டிட்டா.*

*கேட்டதையெல்லாம் குடுக்கும் கந்தன்ர அருள் வேண்டி பிடிக்கிற கந்தசஷ்டி விரதத்தின்ர பெருமை எனக்கு அப்பதான் நல்லாய்ப் பிடிபட்டுது.*

*எல்லாரும் தங்கடை தங்கடை நன்மை வேண்டி பகல் முழுக்கப் பட்டினியிலிருந்து இரவு ஒரு நேரம் ஒரு கப் பாலும் ஒரு வாழைப்பழம், ஒரு விளாம்பழம் வேறையும் ஏதாவதொரு பழமும் எண்டு கடுமையாய்ப் பட்டினி இருந்து கடவுளோடை வேண்டினதைச் சாதிக்கிற விரதந்தான்.*

*ம்ம்ம்... கந்த சஷ்டி சகலதும் தரும் விரதம் தான்...!*

# விக்ரோறியா

*ஓ விக்ரோறியா! நீ எங்கை உயர்ந்து விட்டாய்.*

*ஒரு உத்தமமான மனிதனின் வாயிலிருந்து கடைசி வேளை புறப்பட்ட புனிதமான ஒரு சொல் நீ.*

*நீதானடி அவருக்கு விடுதலை வாங்கித் தந்த நீ.*

*என்னே உந்தன் புகழ் மகிமை. இதுவரை பலர் உந்தன் புகழ் பாடினர்.*

*எனினும் நான் நான் அவையெல்லாம்,...*

*அவர்களின் தற்பெருமையின் புகழ் ஆரம்கள் என்றே இறுமாப்புடன் (அவர்கள் தாம் விக்ரோறியாக் கொலிஜ்ஜில் படிச்சனாங்கள் என்று சொல்வதை எல்லாம்) என் காதில் பொருட்படுத்தாது அவற்றைத் தட்டிக் கழித்து வந்தேன்.*

*ஆனால் இன்றோ என் நிலமை வேறு.*

*நீயும் கூறினாயாமே உன் உயிர் பிரியும் வேளை. நானும் விக்ரோறியாக் கொலிஜ்ஜிலை தான் படிச்சனான் என்று!*

*எனக்கு எல்லாம் தெரியும். என்ன மட சாம்பிறாணி வேலை பாக்கிறீங்கள்.*

*நான் எவ்வளவு கேவலத்திலை இருக்கிறன்.*

*உங்களுக்கெல்லாம் இவ்வளவு சேட்டை? என்னோடை.*

*உங்கள் ஒருத்தருக்கும் ஒரு பேஷன்ரோடை எந்த நேரம் எப்பிடிக் கதைக்கிறதெண்டதொண்டும் தெரியாதா?*

*பைத்தியக்காரக் கூட்டம். பைத்தியக்காரக் கூட்டம்.*

*எனக்கு முன்னாலையே வைச்சு என்ரை உயிர் பயப்பிடும் படி எவ்வளவெல்லாம் கதைக்கிறீங்கள்.*

*நீங்களெல்லாம் படிச்சனீங்களா? படிச்ச முட்டாள்களா?*

அவர் ஒருத்தர் "நீ எந்த ஸ்கூல்.

நான் "விக்ரோறியா, நீ"

"நான் மகாஜனா"

"நீ" "நீ" "நீ"

நான்

"மயிர்"

"மண்ணாங்கட்டி" "சுண்ணாம்பு"

மரமண்டைகளா?

உங்கள் ஒருத்தருக்கும் நோயோடை அல்லாடிக் கொண்டிருக்கிற ஒரு ஒரு கையறுநிலை ஆவியோடை பேசிறதெப்படி எண்டது தெரியேல்லையே.

எத்தனை மாதம் எத்தனை மாதம் நான் இப்பிடத் துன்பபப்பட்டுகொண்டிருக்கிறன்.

ஒரு நாய்க்கும் ஒரு மனிசனோட எப்பிடிக் கதைக்கிற தெண்டது தெரியாமல் கிடக்குதே.

இதுக்குள்ளை நான் எனி எப்பிடிப் பொறுப்பன். இந்த வாய்த்துன்புறுத்தலை.

படிப்பறிவுள்ளர்களா நீங்கள்!

இல்லை பகுத்தறிவற்றவர்களா நீங்கள்!

ஐயோ பெண்டுகளையும் பற்றி ஏன் கேட்பான்.

ஒய்யாரக் கொண்டையிலே

தாழம்பூவாம்– அதன் உள்ளே இருப்பதுவோ

ஈரும் பேனுமாம்,

ஓம்!

பெண்களே இரக்கத்தின் சின்னம், அன்பின் அடையாளம்.

தாய்மையின் கருவூலங்கள், பெண்ணென்றால் பிணமும் இல்லை பேயும் இரங்குமாம் எண்டு பல இடங்களிலும் இலக்கியங்களிலையும் பெண்களுக்கு முதலிடம்.

பிசாசுகள்... பிசாசுகள்!

ஆஸ்பத்திரிக்கு வருகுதுகள். பெரிய எடுப்பும் நடப்புமாய் வந்து தாங்கள் என்னோடை நல்ல ஈடுபாடாம்.

*நான் பல தடவைகளிலை தங்கடை கலியாணம் முதற்கொண்டு சகல காரியங்களிலும் ஏன் ஒப்பிணாயே சொல்லுறனே தங்கடை கருமாதியள் வரை எல்லாத்துக்கும் எங்களுக்கு பல தடவையும் பண உதவியோ சரீர உதவியோ இட வசதியோ ஒழுங்குகளோ சாப்பாடோ எல்லாமே அவர்தானே பொறுப்பெடுத்து நடத்தினார்.*

*காசு குடுத்தாலும் வாங்கமாட்டார்.*

*நாங்கள் என்ன செய்யிறது. அவர் காசு குடுகுடு எண்டு திரும்பத் திரும்பக் குடுத்தாலும் வாங்க மாட்டார். நாங்கள் பேந்து காசைக் கொண்டு போறதுதான்.*

*நான் இப்ப ஒண்டைக் கேக்கிறன். சரி நான் உங்களுக்கு அப்பப்ப உதவி செய்தனான்தானெண்டால் நான் இப்ப சரீர ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் பலவித உள நெருக்கடிக்குட்பட்டிருக்கேக்கை நீங்கள் ஒண்டில் சரீர உதவி செய்யலாம். அல்லது பொருள் உதவி செய்யலாம் அல்லது அன்பான வார்த்தைகளைப் பேசலாம். அல்லது அதையும் விட்டு மௌனமாக வந்து மௌனமாகப் பார்த்துவிட்டு மௌனமாகப் போகலாம்.*

*அதைவிட்டுவிட்டு அநியாயப் படுவார் ஆளாளுக்கு அரை மணித்தியாலத்துக்கொரு தடவையாய் வந்து... இது பிறைவேற் கொஸ்பிற்றல், அதாலை எந்த நேரமும் பார்வையாளர் வந்து நோயாளரை அவர்களின் வசதிப்படி வந்து குத்திக் கிளறிப் போட்டுப் போற வாய்ப்புக்கள் நிறையவே உண்டு. அதனாலை.*

*வெந்த புண்ணிலை வேலினைப் பாச்சுறீங்களடி!*

*உங்களுக்கு நான் என்னடீ கொடுமை செய்தனான்!*

*பெண்களெண்டால் பாவம் உதவி அற்றதுகள். அதுகளுக்கு எப்பவும் மனிசர் உதவி செய்யவேணும். மதிப்பு இல்லை. மதிப்பிலும் விட மேலாலை சொல்லுறதெண்டால் இந்த சமூகம் சொல்லுற கௌரவம் குடுத்தனான்.*

*என் மனைவியைத் தவிர மற்ற எல்லாப் பெண்களையும் என்தாயாய், சகோதரியாய், பிள்ளையாய், எல்லா ஆண் களையும் சகோதரனாய் மாமாவாய் சிற்றப்பனாய் பெரியப்பா வாய், பிள்ளைகளாய் நினைச்சு வாழ்ந்தனே.*

*இப்பிடி வாழ்ந்த எனக்கு வருத்தம் பாக்க வந்த பெரும்பாலும் மனிசர் எல்லாரும் என்ன சொல்லுறீங்கள்.*

*ஐயோ, இந்தச் சீவன் ஏன் இப்பிடிக் கிடந்து இழுவுண்ணுது. இது போகுதும் இல்லை. கிடக்குதுமில்லை.*

*மெய்யாய் எத்தினை நாள் வந்து இப்பிடிப் பாத்துப் பாத்து அலைஞ்சுபோனம்.*

*மெய்யாய் இந்த மனிசன் உண்மையிலை இப்பிடிச் செய்யக் கூடாது. எத்தினை பேர் இப்பிடி எத்தினை நாளுக்குக் கஷ்டப் படுறது.*

*விசர் மனிசன். இன்னும் என்ன ஆசையை வைச்சுக்கொண்டு இந்த உயிரிலை பற்றுவைச்சு அதைப் போக விடாமல் பிடிச்சுக் கொண்டு இருக்குது. சும்மா தானும் உத்தரிச்சுக் கொண்டு மற்றைவைக்குமெல்லே உபத்திரவம் குடுத்துக் கொண்டு இருக்குது.*

*சொல்லப்போனால் இவர் ஒவ்வொருத்தருக்கும் உதவி செய்துபோட்டு இப்ப ஒட்டு மொத்தமாய் எல்லாத்தையும் திருப் பிக்கேட்டு வில்லங்கத்துக்கு வாங்குமாப் போலை நாண்டிக் கொண்டு கிடக்குதப்பா இவ்வளவு காலமுமாய்.*

*என்னடி சொல்லுறியள். உங்களை எல்லாரையும் என்னைப் பாக்க வரச் சொல்லித் தந்தி அடிச்சனானோடி.*

*வாருங்கோ வந்து என்னைப் பாருங்கோ. நான் சாகக் கிடக்கிறன் எண்டு.*

*ஆனால் என்ரை உள்மனம் எனக்குச் சொன்னதுதானடி. ஓ நீ அவரைப் பார். இவரைப் பார். இன்னாரைப் பார். இன்னாரைப் பார். உன் மனதிற்கு ஆறுதல் கிடைக்கும் எண்டு.*

*ஆனால் எனக்கு நல்ல பரிசு நீங்களெல்லாம் வார்த்தையாலை தந்த புகஃழாரம்!*

*நானென்ன விருப்பப்பட்டே இப்ப 3 மாதமாய் சிலவேளை அதுக்கு மேலையாயும் இருக்கலாம். இப்பிடி உக்கிக் கொண்டு கிடக்கிறன்.*

*எத்தினை கொம்பிளிக்கேற்றட், கொம்பிளிக்கேற்றட்....*

*என்ரை ஒரே ஒரு வளப்புப் பிள்ளையும் உதவியாளும் என்ரை மனிசியும் என்னோடை எத்தினை நாளாய் நாயாய் அலையுதுகள்*

*அதுகளும் பாவங்கள் தானே.*

நான் என்ரை சொத்துப்பத்துக்களை என்ரை வளப்புப் பிள்ளையளுக்கு எழுதிப் போட்டன் எண்டதும் உங்களுக்குக் கவலையாம்.

இதுவும் உங்கடை பிரச்சினையோ. நீங்கள் கவலைப்பட!

எதுக்கும் பணம் எண்டது எதையும் பேசப் பண்ணும் செய்யும்.

அந்தப் பணம் இருந்தபடியாலதானே என்ரை பிள்ளை அதை வித்து எனி என்ரை வைத்தியச் செலவுக் கடனை அடைக்கும்.

அதை விட்டிட்டு நான் அவனுக்குக் எழுதிக் குடுத்த காணி, ஆஸ்பத்திரிக் காசுச் செலவு, உங்கடை பிரயாண அலைச்சல் பற்றி ஏன் கூட அலட்டிக் கொள்ளுறியள்..

இப்ப எனக்கு முன்னாலயே, “இதென்னடாப்பா நேற்றுப் போகப் போதெண்டு அறிவிச்சதாலையெல்லே இண்டைக்கு இப்ப நான் ஓடி வந்தனான்” எண்டு கதைக்கிறியள்.

ஏன் என்ரை போற உயிரை இழுத்துப் பிடிக்கவோ...!

இப்பிடி எத்தினை தரம். எனி இதுக்கொரு முடிவு கட்ட வேணும்.

இவங்கள் டாக்குத்தரும் ஒரு முடிவைச் சொல்லுறாங் களில்லையே.

அவனிட்டை எத்தினை தரம் என்ன மாதிரி என்ன மாதிரி எண்டு பல தடவையும் நாசூக்காய் கேட்டாச்சு.

எனி என்னடாப்பா செய்யுறது.

திடீரென ஒரு படான் சத்தம்.

ஏறிக்கொண்டிருந்த மருந்துப் போத்திலும் ஸ்ராண்டும் படோம் எண்டு நிலத்தில சரிந்தது.

அதில வந்து நிண்ட உறவினர் அனைவருக்கும் சடார் பிடார் சடார் பிடார் என்று அடி..

மனைவிக்குந்தான். நான் சாகக் கிடக்கிறன். உனக்கு மற்றவையோடை என்ன வீண் அலட்டல்.

கட்டிலில் கிடந்த சாமானுகள் தலையணை பெற்சீற் றெல்லாம் நிலத்திலை.

ஸ்றெச்சரை யெல்லாம் தள்ளிக் கொண்டு போய் டொக்ரேசின்ரை றூமுக்கை ஆள் பூந்திட்டுது.

நேஸ்மாரும் வேண்டிக் கட்டினதுதான்.

டொக்டரைக் கேட்டதுதான். நானும் விக்ரோறியாக் கொலிஜ்ஜிலைதான் படிச்சனான்.

ஏன் எங்களுக்கு என்னும் என்ரை உண்மை நிலையை விளக்காமல் இப்பிடி என்ரை உயிரையும் உங்கடை காலங் களையும் வீண்டிச்சுக் கொண்டிருக்கிறீங்கள்.

இதுக்கு மேலையும் என்ரை வாழ்நாள் பொறுமை காணும். நான் இதுவரை மனிசரோடை பொறுமையாய் அன்பாய் வாழ்ந்ததன் பலனை அனுபவிச்சிட்டன்.

இது போதும் என்ர வாழ்வு. போய்வாறன். வணக்கம்.

கூப்பிய இரு கைகளுடனும் சோமரின் உடல் நிலம்மேலை சாயுது...

நன்றி விக்ரோறியாக் கொலிஜ், இந்தப் பாடசாலையில் படித்த கல்வியும் உறுதியும் பண்பாடும்...

ஓ சோமண்ணை அவர் தம் வாழ்விலும் சாவிலும் கைகொடுத்துதவியதென்பதை ஆராலெ மறக்கமுடியும்.

இன்று அவரது உடல் திருகோணமலையில் அக்கினியுடன் சங்கமம்.

சோமண்ணா! எனக்கு உங்கள் உடலிற்கு வந்து அஞ்சலி செலுத்த முடியவில்லை. என் உடலின் இயலாமை....

ஒரு திருமண வைபவத்திற்கு செல்லும்போது உங்களை வந்து பார்த்தன். மிகவும் மன மகிழ்ச்சியாய் இருந்தியள்.

இந்த உலகம் இப்பிடித்தான் அண்ணை...!

# இறுதி விருப்பம்

*அம்மா அம்மா ஏனம்மா இன்னும் நீங்கள் இப்பிடி! என்ர நெஞ்சு நோகுதம்மா! தலேக்கை என்னவோவெல்லாம் செய்யுதம்மா. என்னை எனக்கு நினைக்கவே பயமாய் இருக்குதம்மா. தலை வெடிக்குது.*

*என்னெண்டு சொல்ல முடியாத வலியள் விதம் விதமா என்ர மண்டேக்கை குடையுது. நானென்ன செய்ய! என்னாலை என்ர குடும்ப பாரத்தை இழுக்க முடியாமல் கிடக்குது.*

*அன்னையைப் போல் ஒரு தெய்வம் இல்லை.*

*அவர் அடி தொழ மறுப்பவர் மனிதரில்லை மண்ணில் மனிதரில்லை...*

*பத்து மாதம் சுமந்திருந்து பெத்தாள். பகலிரவாய் விழித்திருந்து வளர்த்தாள். வித்தகனாய்க் கல்வி பெற வைத்தே இந்த மேதினியில் நாம் வாழ வைத்தாள்...*

*அம்மாவென்றழைக்காத உயிரில்லையே...*

*ஆசைப்பட்ட எல்லாத்தையும் காசிருந்தால் வாங்கலாம்*

*அம்மாவை வாங்க முடியுமா. நீயும் அம்மாவை வாங்க முடியுமா?*

*ஆயிரம் உறவு உன்னைத் தேடி இங்கே வந்தாலும்*

*தாயாகித் தாங்க முடியுமா? நீயும் தாயாகித் தாங்க முடியுமா...*

*இவை தாய் பற்றி சினிமாவிலே வந்த சில பாடல் முதல் வரிகள்.. அருமையானவை. இப்பாடல்கள் நான் விரும்பி ரசிப்பவை.*

*படுக்கேலை கிடக்கிற பாலனைப் பார்க்க ஒண்டும் செய் யேலாமல் கிடக்குது. அதை நான் உப்பிடியே எவ்வளவு காலத்துக்குத் தாங்கிறது. அது ஒண்டும் தெரியாம, பாலும்*

தெரியா, கோப்பியும் தெரியா, விஷமும் தெரியாமல் அம்மா ஆர், அப்பா ஆர் எண்டும் ஏன் புலக்காட்சிகள் எதுவுமே இல்லாமல் தலை பெருத்த முண்டமா சலம் போனாலும் அழத் தெரியாத, மலம் போனாலும் தெரியாத, எறும்பு கடிச்சால் ஏன் என அறியாத, கத்தி வெட்டினாலும் தெரியாத உணர்வற்ற தசைப் பிண்டமா படுக்கேலை ஒரு அறேக்கை கிடக்குது. அதுக்கு இம்மை மறுமை இல்லை. அதுக்குப் படுக்கைப் புண்ணுகளும் இப்ப வருகுதாம். என்னாலை எனி என்ர குடும்பத்தைப் பாக்க ஏலாது.

முந்தி நான் தான் இந்த பிள்ளையைப் பராமரிக்கிறது, வீடு வாசல் துப்பரவு, உடுப்புக் கழுவல், தேங்காய் திருவிக் குடுக்கிறது, மரக்கறி வெட்டுறது எண்டு எல்லாத்தோடையும் ஷொப்பிங், அது இது எல்லா வெளி வேலையளும், சொந்தக்காரருக்கு உதவியும் செய்யிறதுதான். இதோடை நான் என்ர இலக்கியப் பணியையும் விடாது தொடர்ந்து கொண்டிருக்கிறன். இந்தப் பணிதான் என்ர சமூகத்தை நான் மாற்றியமைச்சு அறிவுப் பாதையிலை என்ர பிள்ளையள் உட்பட மக்களை இட்டுச் சென்று நல்வாழ்வை நோக்கி எல்லாரும் இன்புற்றிருக்கிற வாழ்வை ஏற்படுத்தித் தரும் எண்டு நம்புறன்.

அதாலை நான் வீட்டிலை எவ்வளவு கஷ்டம் இருந்தாலும் எனக்கு நான் சார்ந்த அமைப்பிட்டை ஒரு நாளைக்கு ஒரு தடவையெண்டாலும் ஒரு மணி நேரம் எண்டாலும் ஒதுக்கி என்ர மனைவிக்கும் தெரியாமல் ஓடியிடுவன். அவையோடை சமூகப் பிரச்சினையளைக் கூடிக் கதைச்சு ஒரு சமரசம் காணும் சமூகத்தை ஏற்படுத்த வேணும் எண்டதிலை தீராத ஆவலாய் இருக்கிறனம்மா.

இப்பிடி நான் இந்த அமைப்பிட்டை போய் வந்து, எங்கடை ஊரை விட்டு இங்கை கொழும்பிலை உதவியற்று வந்திருக்கிற அந்தரிச்ச சனங்களுக்கும் நான் என்ர வீட்டு வேலையளையும் செய்து கொண்டு ஓடி ஓடி வேலை செய்து களைக்கிறதைப் பார்த்தால் என்ர மனிசிக்குப் பத்திக் கொண்டு வரும்.

அதுகும் டயபிற்றிக், பிரஷர்க்காறி. வேலைக்கும் போறது. அப்ப இந்த நெருக்கத்துக்கை நான் 'வீட்டுக் கடமையளை தன்னோடை பங்கிட்டுச் செய்யுறதோடை மட்டும் இருந்தால் இந்த மனுசனுக்கேன் இப்பிடி மூச்சிளைக்கிற களைப்பு வரும்

வரையும் கிடந்து அல்லல்படுகுது' எண்டு பொது வேலை யளிலையிருந்து என்னை நிப்பாட்டப் பாடுபடுகுது என்ரை மனிசி. நான் தன்னோடைதான் முழுநேரமும் நிக்க வேணுமாம் எண்ட அன்பு அஸ்திரத்தையும் எனக்கு எறியுது.

ஆனால் நான் அவவோடை கன நேரம் நிக்கிறன்தானே. அவவுக்கான சகல உதவியளையும் செய்து குடுக்கிறன்தானே. உதவிக்கும் வாய்ப்பிராக்குக்கும் ஒரு கெல்ப்பரையும் ஒழுங்கு பண்ணி குடுத்திருக்கிறன்தானே. அதை விட்டிட்டு என்னை அவ எந்த நேரமும் சுயநலமாய் அனுபவிக்க நினைச்சா நான் அதை ஒத்துக்கொள்ள ஏலுமோ.

நான் ஒரு சமூகத்தின்ரை உற்பவிப்பு. நான் இந்த சமூகத்தின்ர ஒரு பிராணி. என்னாலையும் இந்த சமூகத்திற்குச் சில கடமையள் செய்யவேண்டி இருக்குது. இதைச் செய்ய விடாமல் என்னை எந்த தேவன் தடுத்தாலும் அனுமதிக்க மாட்டன். அதுக்கெதிரா நான் வெண்டுதான் தீருவன்.

என்னை அறியாமல் என்னட்டை இந்த சிந்தனையள் என்ர சின்ன வயசிலயிருந்தே குடியிருக்குது. அதை வளர்க்கிறதுக்கு நாங்கள் எங்கட யாழ்ப்பாணத்திலையிருந்து இடம் பெயர்ந்து கொழும்புக்கு வந்த நாளிலையிருந்து தேடித்தேடி அலைஞ்ச இடத்திலை என்ர இலட்சியப் பயணத்தை அடையிறதுக்கு நான் இப்ப சார்ந்திருக்கிற இந்தப் பேரவையினர் எனக்குப் பெரிய தோணி போலை என்ர தேடல் என்ற கடலிலை ஒத்துப்போய் பயணப்பட என்ர கண்ணிலை பட்டிச்சினம்.

நான் தான் இவையிட்டை வலியப்போய்ப் பேசிச் சேர்ந்த னான். இந்த அமைப்பினரோடைதான் என்ர வாழ்வும் தாழ்வும். என்ர அமைப்பினர் ஒருநாளும் பிழையான வழியில் போகா யினம். என்னை என்ர அமைப்பினர் ஒரு நாளும் நான் துன்பப் படேக்கை கைவிட மாட்டினம்.

எங்கட அமைப்புக்குள்ளை புகழ் நாட்டமில்லை, பதவி மோகமில்லை, பணம் இருக்கேல்லை எண்ட பேதமில்லை, சாதியில்லை, பால் வேறுபாடில்லை, தற்பெருமையில்லை, தற் புகழ்ச்சியும் இல்லை. எல்லாம் கூட்டுச் செயற்பாடுதான்.

எல்லாரும் கூட்டாய்க் கருத்துக்களைச் கதைப்பம், கூட் டாய்க் கலந்து பேசுவம், கூடி முடிவெடுப்பம், செயற்படுவம். இதுதான் எங்கள் அமைப்பு. வாழ்வின் தத்துவம்.

‘இதில் ஏதும் பிழையிருக்குதா அம்மா!’ இதுதான் எங்கள் இரண்டு பேருக்கும் இடையிலை அதாவது எனக்கும் என் அன்பான மனைவிக்கும் இடையிலை இருக்கிற பெரிய முரண்பாடு.

எனக்கும் என்ர வீட்டிலையிருக்கிற என்ர வலது குறைஞ்ச குழந்தையை நான் தனிச்சுப் பொறுப்பெடுக்காமல் என்ர சமூகமும் என்னோடை சேர்ந்து பொறுப்பெடுத்து அதுபோல இன்னும் பல குழந்தையளை காக்கவேணும். இப்படியாய் அமைச்சு வேல்ட் சைல்ட்களுக்கு ஒரு காப்பகம் நடத்த வேணும் எண்டும் வேறும் பல பல சமூகநலத் திட்டங்கள் போடுவன்.

இதுக்கை இப்பிடியான ஒரு மதம் சார்ந்த நிறுவனம் நடத்தும் வலது குறைஞ்ச பிள்ளையள் காப்பகம் ஒண்டோடை அறிஞ்சு போய் கதைச்ச இடத்தில இந்தப் பிள்ளையை அவையும் பொறுப்பெடுக்க மாட்டன் எண்டிட்டினம். அவ்வளவுக்கு அண் மச்சுவேட் சைல்ட் என்ர பிள்ளை.

‘உங்களிட்டை தருவம் வளர்க்க. நீங்கள் இப்ப பிள்ளையள் எல்லாரையும் கட்டிக் குடுத்திட்டு அப்பாவோடை ஊரிலை நல்ல வசதியான வீட்டிலைதானே இருக்கிறியள் எண்டிட்டு உங்களைக் கேட்காமலே நீங்கள் செய்வீங்கள்’ எண்ட அசையாத நம்பிக்கையிலை என்ர மனைவியிட்டைக் கேட்டால் அவ பிள்ளையைத் தான் பிரியமாட்டன். ‘எவ்வளவு கஷ்டம் வந்தாலும் நான் தான் வளர்ப்பன்’ எண்டிட்டா.

நாளடைவில டொக்ரேர்ஸ் வேறை ஒரு பிள்ளையைப் பெறுங்கோ எண்டிச்சினம். எங்களுக்குப் பிறகாலம் என்ர மூத்ததைப் பார்க்க சகோதரங்கள் வேணும் எண்டதாலை நாங்கள் பேந்து பெத்த இரண்டு பிள்ளையளோடையும் சேர்த்து மூன்று பிள்ளையளோடையும் கஷ்டப்படுறம். இந்த சடமாய்க் கிடக்கிற பிள்ளையை எப்பிடியாவது ஆரும் டொக்ரரிட்டைக் கதைச்சு கருணைக்... க்கும் கேட்டுப் பார்த்தன். மனிசியா விடும்!

இந்த அழுத்தங்களாலையும் எனக்கு மூளைக்குள்ள ஒரே துன்பம் தானே. பிறகு சாப்பிட்டால் சத்தி. சாப்பிட விருப்பமில்லை. ஒரே நித்திரைத் தூக்கம் தூக்கமா வந்திது. கோவம், வெறுப்பு, இடையிடை மனிசிக்குக் கையும் வைக்கத் தொடங்கியிட்டன்.

பெண்ணை மதிச்சு நடக்க வேணும் எண்டு பெண்ணுரிமை பேசுற நான் இதுகளாலை ஏன் என்ர இயல்பான நடத்தையிலை மாற்றம் வந்திட்டுதே எண்டு யோசிச்சு, ஒரு நாள் ஒரு உளநல ஆலோசகரோடை போய்ப் பேசிப் பார்த்தன்.

அவவும் எனக்கு தெரிஞ்ச விசயங்களைத்தான் குடும் பத்திலை அமுல்படுத்தச் சொல்லுறா. இதெல்லாம் நான் வீட்டிலை கடைப்பிடிக்காத விஷயங்களோ!

அவ என்ர மனிசி. என்ர பொது வாழ்வை முடக்கி தன்ர வீட்டுக்குள்ள என்னைக் கோழிக்கரப்புக்கதான் அடைச்சு வாழுவன் எண்டால் அதை எந்தக் கொம்பனாலையும் நிப்பாட் டேலாது. என் உடல் வீட்டுப் பணியை விடாது செய்தது. உளமோ சமூகக் கடமையளுள்ளை விழுந்து கிடந்தது.

எழுத்து... எழுத்து... எழுத்து... மக்களை எங்கள் எழுத்துக் களால் தூண்டி, பாரதிபோல் பள்ளத்தில் வீழ்ந்து கிடக்கும் மூடரெல்லாம் விழி பெற்றுப் பதவி கொள்ள துடியாய்த் துடிச்சன். தவியாய்த் தவிச்சன்.

என்னாலை ஒரு எழுத்தைத் தன்னும் எழுத முடியாமல் ஏதோ ஒரு அழுத்த உணர்வு. என்ர பொதுப்பணியைத் தொடர என்ர மனைவியின்ர ஓயாத நச்சரிப்புத்தான் என்னை இப்ப எந்தப் பொதுவேலையிலையும் ஈடு படமுடியாமல் மனதை அழுத்துதோ என்று அவருடன் மானசீகமாக ஒரு வீட்டிலை இருந்தாலும் மனதாலை பிரிஞ்சு. என்ர வீட்டையே வெறுத்தன்.

எதுக்கும் இரவிலை நான் அந்த வீட்டைதான் போக வேணும். படுக்க வேணும். அங்கை என்ர மனிசி பிள்ளையள் தனிய.

ஆனால் எந்த நேரமும் நான் என்ர உணர்வுகளை என்ர உற்றாரிட்டை, நண்பர்களிட்டை சொன்ன நேரம் 'நீ நல்லாய்ப் பொம்பிளைக்கு இடம் குடுத்திட்டாய். அவவை கவனியாதை. இரண்டு சாத்துச் சாத்து. கொஞ்சம் விட்டுக்குடாமல் இரு. வீட்டிலை ஒரு உதவியும் செய்யாமல் விட்டுப் பார்' எண்டு சொல்லிச்சினம்.

ஆனால் நான் எப்பிடி அவயக் கைவிடுகிறது. பிள்ளை யளுக்கும் அப்பான்ர அருகாமை வேணும்தானே. நான் தானே என்ர பிள்ளையளுக்கு நல்ல கருத்துகளை அறிவூட்டி வளர்க்க

வேணும். சின்னனிலையே சிந்தனையை நல்ல கருத்துகளை நோக்கிச் செல்லத் தூண்ட வேணும்.

வீட்டிலை உதவிக்கிருக்கிற பிள்ளையும் மனுசியும் பிள்ளைக்கு நல்ல உணவை ஊட்டி வளர்க்கலாம். என்ர பிள்ளை மூத்தது வலதில்லாதது.

அடுத்தது என்னைப்போல சமூக அக்கறையுடைய ஒரு பிரசையாக வரவேணும். நாங்கள் ஒத்த கருத்தில்லாட்டில் தாய்க்கும் பிள்ளைக்கும் தகப்பனுக்கும் பிள்ளைக்கும்கூடி இடையிலை விரிசல் விழுந்திடுமே.

எனக்குப் பிடிச்ச பாட்டுகளிலை ஒண்டம்மா "எனக் கொரு மகன் பிறப்பான், அவன் என்னைப் போலவே இருப்பான். தனக்கொரு பாதை வகுக்காமல் என் தலைவன் வழியிலே நடப்பான்.." எண்டது.

நான் என்ர பெற்றாரை என்ர கலியாணத்துக்குப் பிறகு ஏனோ பிரிஞ்சு ஏற்பட்ட மனத்துயர் எனக்கும் என் பிள்ளைக்குமிடையிலும் ஏற்பட்டுவிடக் கூடாதென்பதில மிக மிக அக்கறையா வாழ்ந்தன். மற்றக் குழந்தை சின்னன். இப்ப தானே பிறந்தது. அதோடை இப்ப மினக்கெடத் தேவையில்லை.

ஆனால் அம்மா எனக்கிப்ப ஒரு வருசமாய் எப்பிடி இருந்திருக்கிறன் எண்ட நினைவில்லாமல்தானம்மா வாழ்ந் திருக்கிறன். நாங்கள் இதுவரை எவ்வளவு துன்பத்தை அனுப விச்சு வாழ்ந்தம் எண்டதை நாங்கள் உங்களுக்கு அறிவிக்கேல்ல. உங்களை எங்கட துயரிலை பங்கேற்க விடேல்லை. ஆனால் எனக்குத் திடீரெண்டு ஒருநாள் மயக்கம் வந்து வலிப்பு வந்து எம். ஆர். ஐ. ஸ்கான் பண்ணிப் பார்த்த பிறகு 'தலைக்குள்ளை கட்டி' எண்டு அறிஞ்ச பிறகு என்ர மனம் பல பாடாய்ச் சிந்திக்குது. குழம்பிப் போனன். பேச்சுகள் மாறுபாடாய்... இருக்கிற இடம் எல்லாம் மறந்து போனன்.

பிறகு நான் சேர்ந்த அமைப்பினரின்ர ஏற்பாட்டின்படி என்னை இந்தியாவுக்குக் கொண்டந்து உடனையே எவ்வ ளவோ காசு செலவழிச்சு ஒப்பிரேசன் செய்த பிறகும் எனக்கு என்ர பிள்ளையளின்ர எதிர்காலமும் அவை வாழுறதுக்கான நல்லதொரு எதிர்கால சமுதாயம் உருவாக எங்கடை அமைப் பினர் என்னென்ன வேலையள் செய்யவேணும், அதிலை சிறுவர் நல உரிமைகள், மனித நேயம் பேணப்பட வேணும், அதுக்கு

*நான் என்னவெல்லாம் செய்யவேணும் எண்ட சிந்தனைதான் இரவு பகலாய் ஓடிச்சுதம்மா... ஓடுதம்மா.*

*எனக்கு வந்த கட்டி கான்சர்க் கட்டியாம். இன்னும் ஒன்றரை மாதத் தொடர் சிகிச்சைக்குப் பிறகு எனக்கு சுகம் வரும் எண்டு தேவாண்ணா எல்லாரும் சொல்லிச்சினம். எனக்கு ஒப்பிரேசன் முடிஞ்சு ஒரு இருபது நாள் வரையும் என்னிலை நம்பிக்கையில்லை. கடைசி இரண்டு வருசம் இல்லை. ஒரு வருசமாய் நடந்த நிகழ்வுகள் ஏன் எனக்கு என்ர கடைசிக் குழந்தை கற்கண்டு ஒரு குறைபாடும் இல்லாமல் பிறந்த பெண் பிள்ளையின்ர நினைப்புத் துண்டற இல்லாமல் போயிட்டுதம்மா. இப்பையும் சரிவர நினைவுவர மறுத்தாலும் மனிசி தொடர்ந்து ஞாபகப்படுத்தியும் என்ர மூளை இப்பதான் கொஞ்சம் கொஞ்சம் பழைய கடந்த ஒரு வருட நினைவுகளுக் குள்ளை வரப்பாக்குது.*

*எனக்கு இவ்வளவுநாளும் எங்கை இருந்தனான், எங்கை இருக்கிறன் எண்டதே அவ்வளவாய்த் தெரியேல்லையம்மா, ஒரே குழப்பம். கூடுதலா என்ர தேவாண்ணான்ர வைத்தியா றோட் வீட்டிலை இருக்கிறதாத்தான் நினைப்பு. ஒருநாள் என்ர மகன் சொன்னானாம் என்கொரு வைவ் வேணும் எனக்கும் ஒரு வைவ் இருந்தால் எனக்குத் தேவையானதெல்லாம் செய்வா தானே. நானும் விருப்பமான இடங்களுக்கு அவவைக் கூட்டிக் கொண்டு போவன். அப்ப இவர் கிழவனாய் வீட்டில இருப்பர் எண்டு. ஓம் நான் குடும்பத்தோடை தனி உலாத்துகளுக்குப் போனது குறைவு தான். அப்படி உலாத்த இருந்த மனிசியையும் பிள்ளையையும் விட்டிட்டு நான் திடீர் அழைப்பு வர என்ர இலக்கியப் பணிக்குப் போகவே மகன் அப்பிடிச் சொன்னாராம்.*

*இப்பையும் சரியாய்த் தலையிடிக்குதம்மா. தலையின்ர ஒவ்வொரு பாகமும் வித்தியாசம் வித்தியாசமாய் நோகுதம்மா. என்ர வாழ்க்கையை நினைக்க எனக்கு ஒரே பயம் பயமா யிருக்குது. என்ர றீற்மென்ற் முடிய நான் கொழும்பிலை என்ர மனிசி வந்த பிறகு வேலைக்குப் போய்க் கொண்டு நோயாளி யான என்னையும் பார்த்துக் கொண்டு, குழந்தையளையும் பாக்கிறது என்ன கஷ்டம் எண்டு நான் கவலைப்பட என்ர ஒரு பிள்ளையை கடைசியை என்ர அண்ணன் குடும்பத் துக்கும், அவன் வடிவாய்ப் பாப்பான் எண்டு நீங்கள் சொல்லிக்*

கொண்ட மற்றப் பிள்ளையை வேறை எங்கையும் மற்றதையும் ஏதோ இடத்துக்கும் அனுப்பிறதா நீங்கள் இந்தியாவில நிண்ட ஐந்து நாளிலை கடைசி ஐந்தாம் நாள் கதைச்சியள். நானதிலை ஒரு தகப்பனா இப்பிடிக் கெட்டு நொந்து நோயாலை வாழ்வா சாவா எண்டு போயிருக்கிற இந்த நேரத்திலை என்ர பிள்ளைய ளையும் என்னட்டை இருந்து பிரிக்கிறதாக் கதைக்கிறது சரியா அம்மா.

புற்றுநோய் வளர்ந்து அரிச்சுப் போயிருக்கிற என்னை பிள்ளைப் பிரிவுத் துயரும் சேர்ந்து அரிக்கவா. உடல் என்ர மூளையை இந்தத் துன்பத்தையும் இந்த நொந்துகெட்ட மூளை மேலதிகமாகத் தாங்க வேணுமா...

அம்மா உங்களையும் என்னையும் என்ர மனைவி தன்ர திருமணத்தோடை உங்களை விட்டுப் பிரிச்சிட்டா. அது உங்களுக்கு நீங்கள் சாகும் வரையும் தீராது எண்டு அடிக்கடி எல்லாரோடையும் புலம்புவீங்களே. அப்பிடியெண்டால் நான் என்ர பிள்ளையளை பால்யப் பருவத்திலேயே பிரியிறது எந்தளவுக்கு ஞாயமாகுமா அம்மா?.

அம்மா என்ர மனைவிக்கு வடிவா சமைக்கத் தெரியாது தான். ஆனால் அவ படிச்சவா. என்னிலும் விடப் படிச்சவா. பி.எஸ்.சி பிறகு எம்.எஸ்.சி இதைவிடப் பல படிப்புகள். என் னிலும் விட உயர்ந்த உத்தியோகத்திலை இருக்கிறா. என்னை விடக் கூடச் சம்பளமும் எடுக்கிறா. அது எல்லாம் என்ர வாழ்க்கைக்குக் கிடைத்த பெருநிதிகள். இல்லாட்டில் என்ர இந்த குறைந்தளவு சம்பளத்தில நான் என்னெண்டு எங்கடை நாடு கிடக்கிற அவலமான யுத்த நிலையிலை விலைவாசியைச் சமாளிக்கிறது.

என்ர மனிசிக்குப் பெரிய நினைப்பு, படிச்சவ எண்ட திமிர், கூடச் சம்பளம் எடுக்கிற மமதை, வீட்டு வேலை சரியாய்ச் செய்யத் தெரியாது, புருஷனைக் கொண்டு வேலை வாங்கு றவள், புருஷனென்ட ஒரு இது இல்லாமல் சரிக்குச் சரி கேள்வி நியாயம் கேக்கிறாள் எண்டெல்லாம் நீங்கள் சகலரும் கர்ண கடூரமாய் விமர்சனம் வைக்கிறதெல்லாம் எனக்குத் தெரியும். படிப்புகள் வேலையள்ளை மினக்கெட்டதாலை அவ உங்களைப் போலை வீட்டு வேலையோடை மட்டும் இருக்கிற பொம்பிளையளைப் போல சமையல் துறையில எக்ஸ்பேட் ஆக

முடியேல்லை. கொஞ்சம் மினக்கெட்டால் சமையலை அவ வடிவாய்ப் படிக்கிறதும் பிடிக்கிறதும் பெரிய அலுவலே!

ஆனா அவ என்னோடை எவ்வளவு பாசம். நீ ஏன் என்னைப் போல கூடச் சம்பளம் எடுக்கிறேல்லை எண்டு அவா என்னட்டைக் கேக்கேலாது. ஏனெண்டால் அவ தன்னிலும் விட என்ர படிப்பு, வேலை, சம்பளம் குறைவு எண்டதெல்லாம் தெரிஞ்சுதானே கட்டினவா. ஆனால் என்ர மனிசி என்னட்டை கூடுதலா வேலையளை எதிர்பார்க்கிறா, என்னை வெளியிலை ஒரு இடமும் போக மனசோட விடுகிறேல எண்டு நான் உங்களுக்குச் சொன்னதுகளை வைச்சுத்தான் நீங்கள் எல்லாரும் கதைக்கிறீங்கள்.

ஆனால் அவவுக்கு தன்னோடை நான் முழுநேரமும் நில்லாமல் பொதுவேலைக்கு தன்னை விட்டிட்டு ஓடுறதுதான் பிடிக்காதே ஒழிய மற்றும்படி என்னை வடிவாய் புரிஞ்சவா. பொது வேலைக்குப் போறதாலைதான் தன்னோடை நிக்கிற நேரம் இல்லாமல் போகுது எண்டு தான் அவ என்னோடை சண்டை பிடிக்க வேண்டி வாறா. தான் வேலையாலை வர நான் வீட்டை அவவிட்டைப் பாரம் குடுத்திட்டுப் போறது. பேந்து இரவிலை வந்து கட்டுரை அது இதெண்டு எழுதுறது. தன்னோடை கதைச்சு செல்லம் கொஞ்சுறேல்லையெண்ட எரிச்சல்.

நானும் என்ன செய்யிறது. என்ர பிள்ளையின்ர காலத்திலை தன்னும் ஒரு நல்ல சமுதாயச் சூழலை ஏற்படுத்திப் போடவேணும் எண்டு தானே நானும் நான் சார்ந்த மாற்றங்களை வேண்டிய அமைப்பினரும் சேர்ந்து போராடி வாறம்.

இதுகள் பற்றி நான் வாயாலை அடிக்கடி பேசாட்டாலும் என் மனதோடை காத்தோடை கண்ணை மூடினால் திறந்தால் எண்டு பேசிக்கொண்டிருக்கிறதை ஆரும் கேட்க மாட்டினமோ, கேட்கக் கூடியதாயிராதா எண்டு அல்லல்படுறன், அங்கலாய்க்கிறன்.

இதுக்கை எனக்கு நோய் வந்த பிறகு இங்கை வந்து என்னைப் பாத்த என்ர மனிசி எங்கட இரண்டாவது பிள்ளையின்ர ஸ்கூல் அட்மிசன் அலுவலுக்கு கொழும்புக்குப் போக வேண்டி வந்திட்டுது. பிள்ளைக்கு இயர் வண் அட்மிசன் எண்டது உலகத்திலை இப்ப அதுகும் ஒரு மிகப்பெரும் பிரச்சினை. அப்ப அந்த நேரம் நீங்கள் என்னைப் பார்க்க வந்து நிண்ட ஐஞ்சு

*நாளும் சமைச்சுத் தந்த சாப்பாட்டைச் சாப்பிட ஆசையாய் இருந்துதம்மா.*

*அப்பிடியே பழையபடி நான் இடப்பெயர்வுக்கு முன் மாவிட்டபுரத்திலை என்ர அப்பா, அண்ணா, தங்கச்சி, நீங்கள் எண்டு நாங்கள் எல்லாச் சகோதரங்களும் தாய் தகப்பனுமாய் வாழ்ந்த வாழ்வுக்குப் போனனம்மா. என்ர மிச்சக் காலமும் நீங்கள் சமைச்சுத் தருவீங்களா தராயீங்களா எண்டு ஆசைப் படுகிறன் அம்மா.*

*வந்த அடுத்த நாள் நான் படுகிறபாட்டைப் பாத்தாக்கும் 'என்னாலை இந்தப் பிள்ளையைப் பார்க்கேலாது' என்ர பிள்ளை படும்பாட்டை உங்களாலை தாங்கேலாதெண்டு நீங்கள் துடிச்சீங்களா,*

*'ஓம். பிள்ளை படுந்துயர் பார்க்க பெற்ற எந்தத் தாயா லையும் தாங்க ஏலாதுதான். நீங்கள் என்ர மனிசியும் என்ர தேவாண்ணான்ர கலாக்காவும் இங்கை காலமை 10.10 க்கு வந்த உடன 'என்னாலை ஏலாது நான் போகப்போறன்' எண்டு அண்டு மத்தியானச் சாப்பாட்டோடை என்னை விட்டிட்டுப் போகத் தீர்மானிச்சதோடை என்ர நா தன்ர பழைய சுவையை இழந்திட்டுது.*

*கலாக்கா பாவம். சமைக்கிறாதான். எதுக்கும் எல்லோருக் கும் நான் சின்னனிலையிருந்து சாப்பிட்டுப் பழகின சமையல் பக்குவம் தானே கூடப்பிடிக்கும். அந்த வகையிலை என்ர மனைவி, கலாக்கா எல்லாரும் தான் சமையலில் உங்களைவிட இரண்டாம் பட்சமே.*

*என் தன்னுணர்வு சரியாக இயங்காத நேரத்திலும் என்ர மனைவி வந்த உடனை (வந்தது காலை 10.10) புறப்பட்டது (புறப்பட்டது மதியம் 1 மணி) நீங்கள் எங்கட சொந்தக்காரரர் ஒருத்தற்ர வீட்டிலை நிண்டு கொண்டு இந்தியாவில நிண்ட அந்த ஐந்து நாளும் ஆரோ விசிற்ரேர்ஸ் மாதிரி வந்து அரை மணித்தியாலமோ, என்னமோ பின்னேரத்திலை வந்து என் னோடை மினக்கெட்டிட்டு நெருப்பில விழுந்த புழுப்போல துடிச்சுக்கொண்டு ஓடுவீங்கள்.*

*நீங்கள் வந்திருக்கிற அந்த அரை மணித்தியாலத்திலை என்ர தலையைத் தடவி, கழுத்தைத் தடவி, முதுகைத் தடவி எனக்குத் தன்னம்பிக்கை தாற கதை கதைச்சு எங்கடை உற்றார்*

உறவினரைப் பற்றி நீங்கள் கதைச்சுக் கொண்டிருக் கேக்கை என்ர தொடரான தலைவலியை கொஞ்ச நேரம் மறக்க முடிஞ்சுதம்மா.

நான் உங்களோடை பதினைஞ்சு வருசத்துக்குப் பிற கெல்லோ இப்பிடி உங்கடை கை கால் தழுவலோட எங்கட ஊராக்கள் உறவினரின்ர கதையள் எல்லாம் கதைச்சு, ‘தாயின் மடியில் தலை வைத்தால் துயரம் தெரிவதில்லை’ பாடல் ஞாபகம் இருக்காம்மா.

எதையும் நான் பொருட்படுத்தேல்லை. ஏனெண்டால் உனக்கும் என்ர மனைவிக்கும் எட்டாப் பொருத்தம். பல பல காரணங்களாலும் எனியும் ஏதேனும் மனக்கசப்புகள் வந்திடக் கூடாதே எண்டு நான் நீ என்ர மனைவி மூண்டு பேரும் புரிந்து கொண்டு அவரவர் பாட்டிலை ஒண்டும் பேசாமல் நடந்து கொண்டதும் சரிதான் எண்டு நினைச்சன்.

எனக்குக் கிடைச்சது அவ்வளவுதான் எண்டு மனதை ஆத்தினன். ஆரையும் ஆராலும் திருத்தேலாது. தாங்களா உணர்ந்து திருந்தினால் சரியெண்டு. சரி போனதுகள் போகட்டும்.

நாங்கள் பிள்ளையளுக்கெண்டு வாங்கித்தந்த மாதுளம் பழத்தையும், தோடம்பழத்தையும், முந்திரியப் பழத்தையும் உன்ர கைவலிக்கும் எண்டு நீ மறுக்க மறுக்க வாங்கித் தந்தம். தூக்கிச் சென்ற உன் கைகள் இரண்டும் சோர்ந்து போயி ருக்கும். மன்னிச்சுவிடு அம்மா! உன்னை மேலும் பாரம் தூக்க வைச்சு வருத்தியதற்கு.

நாய்த் தோலெண்டாலும் தாய்த் தோல் என்பார்களம்மா. அம்மா ‘மாணிக்கத் தொட்டில் அங்கிருக்க உன் மன்னவன் மட்டும் இங்கிருக்க’ எண்ட எம்.ஜி.ஆர் பாடுற பாட்டு ரீ.வியிலை போகுதம்மா. அதிலை ‘மடியில் கிடந்த மகனை தாய் மறக்கச் சம்மதப்படுமோ’ எண்டும், ‘இடையில் சுமந்த மகனை மனம் இழக்கச் சம்மதப்படுமோ’ எண்டும் வரி போகுது.

ஆரோடு நோவோம். ஆர்க்கெடுத்துரைப்போம் தாயே. ஆனால் அம்மா நீ என்ர- நான் பெத்த பலன்களை இந்த அவல நிலையிலையும் விட்டிட்டு; எழுபத்தைஞ்சு வயசிலை அழுகிற, கோவப்பட்டழுகிற அப்பாட்டை (பாப்பா) போக வேணும் எண்டதிலை குறியாய் நிக்கிறியெண்டால் அதுக்கும் காரணம் உன்ர அருவருப்பும்தான் எண்டதையும் நான்

நல்லாய் அறியிறனம்மா. மற்றும்படி உனக்கு என்ர பேரப் பிள்ளையள்ளை பாசமில்லாமல் இருக்கலாம். ஆனால் சில வேளை இது லண்டனிலையோ, கனடாவிலையோ அல்லது இலங்கையிலையோ எண்டாலும் ஒரு வசதியான மாபிள் போட்ட திறம் வீடாயிருந்திருந்தால் நீ என்ர பிள்ளையளுடன் இருந்து உதவி செய்திருப்பாய் என்ன? என்ர வீடென்ன உன்ர வீட்டு ஹோலின்ர இடத்தையும் விடச் சின்ன இடந்தானே.

நான் என்ர மனசுக்கை எல்லாத்தையும் பற்றி எந்த நேரமும் இரவு பகலா கண்ணை மூடிக்கொண்டும் கண்ணைத் திறந்து கொண்டும் பேசுறது உங்கள் ஆருக்கும் கேக்கக் கூடாதா! ‘ஆள் நல்ல நித்திரை ஆள் உளட்டிக்கொண்டு என்னவோ அனுங்கு கிறார். என்னவோ அலம்புகிறார்…’ எண்டு நீங்கள் எல்லாம் சொல்லுவீங்கள். ஆனால் நான் என்ர மனக்கணக்கிலை எத்தினையெல்லாம் கதைக்கிறன் எண்டு உங்களுக்குத் தெரியுமாம்மா!

நாட்டுப் பிரச்சினை என்ன, எங்கட நாட்டின்ர விடிவு என்ன, என்ர பிள்ளையள் போன்ற பிள்ளையின்ர தேவை யென்ன, அவைக்கு என்னவெல்லாத்தையும் நாங்கள் கொண்டு வரவேணும், எங்கடை நாட்டு முதியவர்களுக்கு எங்களாலான ஆறுதலை எப்பிடியெல்லாம் வழங்கலாம், எங்கட நாட்டுக்கு இப்ப நாங்கள் சொல்லவேண்டிய கவிப் பொருள் என்ன, ஆர் ஆர் எப்பிடி எப்பிடி அடுத்தவையின்ர மனம் நோகாமல் கதைக்கலாம், வாழலாம் எண்டதைப் பற்றியெல்லாந்தான் நான் கதைக்கிறனம்மா என்னுக்குள்ளை!

என்னாலை இப்ப கதைக்கேலாது. உடற்பலயீனம், உளப் பலயீனம் எல்லாம்… அதாலை உள்ளத்துக்குள்ள பேசிக் கொண்டிருக்கிறன். நான் இப்பிடி தனிமையிலை நிண்டு காத்தோடை மனசுக்கை பேசுறது ஆருக்கும் கேட்கவேணும் எண்டுதான் பேசிக்கொண்டிருக்கிறன். இரவு பகலாய் இடை யிடை ஈனஸ்வரத்திலை நான் அனுங்குறதுகள் தான் இந்தப் பதிவுகள்.

உண்மையிலையே நான் இப்பிடி இளைச்சிளைச்சு என்ர சீவன் போற நிலையிலையும் நான் ஊட்டுறது ஏனெண்டால், எனித்தன்னும் என்ர எதிர்காலத்திலை தன்னும் இப்பிடியான ஒரு நல்லதொரு சூழல்ல நான் வாழ்ந்திட்டுப் போயிட

ஏலாதோ. மீதம் பேர் தன்னும் நல்லாய் வாழ ஏலாதோ எண்ட அடங்காத ஆசையிலைதான். ஆருக்கும் என் அடங்காத ஆசை புரிந்து கொண்டாலே போதும் எண்டு நான் நினைக்கிறன். என்ர அமைப்பு இருக்கும் மட்டும் அந்த விருப்பத்திலை அசையாத நம்பிக்கை இருக்கு. எனினும் எனக்கும் தனிப் பொறுப்புண்டல்லவா!

நான் அப்பப்ப கதைக்கிறதுகளை எனக்குச் சமைச்சுத் தாறதுக்காக இலங்கையிலையிருந்து இந்தியாவுக்கு வந்து என்ர மனைவிக்குதவி செய்து எனக்குச் சாப்பாடு செய்து தந்து கொண்டிருக்கிற கலாக்கா அப்பப்ப நான் கதைக்கிறது களை பேப்பரிலை எழுத்திலை பதிஞ்சு கொண்டிருக்கிறதாச் சொல்லுறா.

அதாலை இந்தக் கருத்துக்கள் வெளியிலை வரும் எண்ட நம்பிக்கையிருக்கு. கலாக்கா ஒரு நல்ல கலைஞர் எண்ட நம்பிக்கை இருக்குமாப்போலை நல்ல எழுத்தாளர் எண்டு தீர்மானிக்கிற வலு இப்பை என்னட்டை இல்லாமல் இருக்க லாம். ஆனால் கலாக்கா என்னைப்பற்றி எழுதுபவை காலத் தால் அழியாதவை. நான் இவ்வுலகுக்கு விட்டுச் செல்லும் கருத்துக்கள் என்பது மட்டும் உண்மை.

கலாக்கா இலங்கையிலையிருந்து இந்தியாக்கு வந்தது, நான் இந்தியாவிலை சாப்பிடாத இந்தியாச் சாப்பாட்டை எனக்குத் தாறா எண்டதைவிட என்ர எண்ணக்கருக்களை மனதிலை வாங்கி எழுத்திலை உங்களுக்குத் தரப்போறாவே எண்டதுதான் எனக்கு மிகப் பெரிய சந்தோசம்.

நான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம். என்னைப் போல் ஒவ்வொருவனும் சிந்தித்து இந்த நாட்டிற்கு உலகத்திற்கு நல்லதேதும் செய்ய வேண்டும் என்பதே என் விருப்பம்.

# பூமராங்

அவள் கூட்டங்களில் தன் கருத்தை ஆக்ரோஷமாக வெளிப்படுத்துவாள் தங்கு தடையின்றி.

தன் வீட்டில் தன் கருத்து எடுபடாத விஷயங்களிலிருந்து சமூகத்திலுள்ள அநியாய அக்கிரமங்களையும் அறியாமையையும் எடுத்து அலசி ஆராய்வாள். பலரிடமிருந்தும் அது பற்றிய கருத்துக்களை எடுத்து அலசி அக்கருத்துக்களில் ஓர் தெளிவான அபிப்பிராயத்தினை அதில் கூடியுள்ள பலரும் தெளிவு பெற வழிசமைப்பாள்.

கூட்டங்கள் முடியப் பலரும் நாரதர் கலகம் நன்மையில் முடிகிறதுதான் என்று ஆரம்பத்தில் சொன்னவர்கள் இப்போது இவளென்ன கூட்டத்தின் போக்கை திசை மாற்றுகிறாள்.

இவளே நெடுக விடாப்பிடியாய் தன் கருத்தை மற்றவர்களுக்கு திணிப்பதிலேயே கண்ணும் கருத்துமாய் இருக்கிறாளே என்று நினைப்பவர்கள் கூட இவ்வாறு நினைப்பார்கள்.

இது சம்பந்தமாக தான் கூட்டங்களில் பேசிய விடயங்கள் சரியா பிழையா என்பதை அவளது ஒத்த கருத்துடையவர்களின் அபிப்பிராயத்தோடு தன் கணவனின் கருத்து எவ்வாறு என் பதில் எப்போதும் கேட்கத் தயங்காள்.

அவருடன் முரண்படும் விடயங்களைக்கூட கூட்டங்களில் வெளிப்படுத்தி சரியான ஒரு தீர்வை கணவன் பின்பற்ற வழிசெய்து வாழ்ந்து வருபவள்.

இப்படியாக வாழ்ந்து வரும் காலங்களிலே சில தடவை களாக கணவன் தன் கருத்தை மறுதலிப்பதும் நடைபெற்றுக் கொண்டிருந்தது.

அவள், “ஏன் நீங்கள் இப்ப சிலகாலமாக என் கருத்தை வெளியிட சுதந்திரம் அளிக்கிறியள் இல்லை. பேசவே தடை

செய்யிறிள். இப்படி நான் கூட்டங்களுக்கு வந்து பேசா மடந்தையாய் இருக்கிறதைவிட வீட்டிலை இருந்து கொண்டு என்ரமனதோடு சரி பிழை பேசுவனே. இனிமேல் கூட்டத்திற்கு நான் வரத்தேவையில்லை. நீங்கள் தனியப் போங்கோ" எண்டுசொல்லிப்போட்டுக் கொஞ்சக் காலம் வீட்டிற்குள்ளை அடங்கியிருந்தாள்.

அத் தருணங்களில் வழமையாக கூட்டத்திற்கு வரும் அவளினதும் அவரினதும் நண்பர்கள் "ஏன் உங்கடை அவ (wife) வரேல்லை. அவா வந்தால் கூட்டம் நல்ல கலகலப்பாயிருக்கும். அவாதான் கூட்டத்தில் பல கேள்விகளைக் கேட்டு பலவிதமாக சிந்திக்கச் செய்வா." என்றெல்லாம் சொல்வார்களாம். ஒருவர் மட்டும் "உங்கடை wife வராதது கூட்டம் நல்ல அமைதியாய்ப் போச்சுது" என்று கூறியிருக்கிறார், அத்தோடு ஒரு தடவைக்கு இரண்டு தடவையாக "நீங்கள் உங்கட அவவை ஒரு நல்ல சைக்காஸ்ரிற்றிட்டை காட்டுங்கோ. ஏனெண்டால் எல்லா விஷயங்களிலும் சரியான உணர்ச்சியா இருக்கிறா." என்று சொல்லியிருக்கிறார்.

அதன் பிறகு அவவின் கணவனின் நடத்தையிலும் கருத்துத் தெரிவிப்பிலும் மாற்றங்கள் தெரிந்தன. நாளடைவில் இவளை ஒரு மனோதத்துவ டொக்ரரிடம் கூட்டிக் கொண்டேய் காட்டினார்.

அந்த டொக்ரர் மன விசாரத்தோடு வந்தவரின் வருத்தம் பற்றி சொல்லி முடிய முதலே மருந்துகள் சிலதை எழுதி அந்த ரெஸ்ற் இந்த ரெஸ்ற் எண்டு ஐந்தாறு ரெஸ்ற்றுகளுக்கு எழுதி என்ன ஏது என்ற விபரங்கள் எதுவும் நோயாளிக்கு தராமல் அடுத்த பேஷன்ருக்கு பெல்லை அமுக்கினார். அவள் கதிரை யால் எழும்ப முதலே அடுத்த பேஷன் கதிரையடிக்கு வந்து விட்டார். அவளும் அந்தரப்பட்டுக் கொண்டு டொக்ரரின் அறையிலிருந்து வெளியேறினாள் மன அமைதி பெறாமலே. இப்பிடியே அவளுக்கு மனநோயோவென்று பல டொக்ரரையும் மாத்தியாச்சு. அவளுக்கு அந்த டொக்ரேசின்ரை நடவடிக் கைகளின் அசண்டையீனம் காரணமாக அவளால் அந்த டாக்குத்தர்மாற்றை மருந்துகளோடு ஒத்துழைக்கத் தயங்கியது அவளது மனம். மனம் உண்டானால் தான் மார்க்கம் உண்டு.

எல்லாரும் சொல்லுவினம். விசர் ஆக்களுக்கு மண்டை (மூளை) பிழைச்சுப் போச்செண்டு. ஆனால் அவளுக்கு அந்த

நோய் வந்த அனுபவத்தாலை ஒவ்வொருத்தர் எப்பிடி எப்பிடி தங்கடை மனதுக்கை என்ன யோசிக்கினம் என்டதை அறியுற ஆற்றல் அதிகம் இருக்கிறதெண்டதை தெரிஞ்சு வைச்சிருந்தாள். இதை இங்கிலீசிலை சொல்லுவினம் மைன்ட் றீடிங் எண்டு. இதுகளெல்லாம் மற்றவையின்ரை மனநிலை பற்றி புரியுறதாலை மற்றவையளோடை ஒத்தப்போகாத தன்மை மன நோயால் பீடிக்கப்பட்டாக்களுக்கு இருக்கும். இருக்கிது.

இப்பிடி அவள் கொழும்பிலை சரியான வழிகாட்டியான டொக்ரேஸ் இல்லாமல் இருக்கேக்கை "யாழ்ப்பாணத்திலை நல்ல டொக்ரர் இருக்கிறார். அவரிட்டை காட்டலாம்." எண்டு அவர் சொல்லுவார்.

இப்படியாய் இருக்கேக்கை அந்த நல்ல டொக்ரர் கொழும்பு வந்த இடத்திலை அவளின்ரை வீட்டுக்கே வந்து மருந்தெழுதி குடுத்திட்டுப் போனார் டொக்ரர் அவளின் கணவனின் நண்பர். அந்த மருந்து அந்த வைத்தியரின் அமைதியான சுபாவம் நோயாளியின் கதையைச் செவிமடுத்த விதம் என்பவற்றால் அவளின் மனமும் அமைதி பெற அவரின் மருந்திற்கு அவளின் வருத்தம் தணியத் தொடங்கியது.

எனவே தன் நோயின் வைத்திய நிமித்தம் யுத்ததிற்கு தப்பி கொழும்பு போய் இருபத்தைந்து வருஷங்களுக்குப் பிறகு யுத்தம் முடிவிற்கு வந்ததால் தன் வசிப்பிடத்தை யாழ்ப்பாணத்திற்கு மாற்றி விட்டாள் கணவனுடன்.

சொந்த ஊருக்கு வந்தால் அவளுக்குத் தெரிந்த பழைய முகங்கள் ஐந்தாறு பேரைத் தவிர ஏனையோர் எல்லாம் புதியவர்களே.

இதற்குள் அவள் கிளினிக்கிக்குப் போகும் போது பஸ் ஏறுற இடத்தில சில ஊர் ஆட்களும் நிப்பினம். அப்ப ஒருத்தரோடை யொருத்தர் மரியாதைக்காக அவையைக் கனம் பண்ணுறதுக்காக அவள் கதைக்கும் போது "ஆ... ஹலோ. எங்கை போறீங்கள்? பாங்கிற்கோ... நான் ஆஸ்பத்திரிக்கு." "என்ன கிளினிக்கோ என்ன சலரோகமோ, சைக்காற்றிஸ்ட்டையோ!" என்று போகும் இடங்கள் பற்றி உரையாடல் நடைபெறும். யாழ்ப்பாணம் ரவுண் பஸ் ஸ்ராண்டில் நிண்டு ஆக்கள் எல்லாரும் இறங்கினால் ஒவ்வொருத்தரும் அவரவர் பாட்டில் இறங்கி அவரவர் வேகத் திற் கேற்ப நடந்து போவினம்.

அவளும் தான் போக வேண்டிய இடத்திற்குப் போய் கிளினிக் மட்டையை அடுக்கிப் போட்டுப் பார்த்தால் அவளோடை பஸ்ஸிலை, வந்தவை பாங் போறவை, கடைக்கு போறவை, சலரோக கிளினிக்குப் போறவை, இருதயக் கிளினிக்குப் போறவை எண்டு சொல்லுற பல பேரையும் ஒவ்வொரு கிளினிக் நாளிலும் புதுசு புதிசாய் காணுவாள்.

காணுந் தோறும் 'ஐயோ பாவங்கள். நான் போற கிளினிக்கிற்கு வாறவைதான் இன்ன கிளினிக் எண்டு சொல்லுற உளநோய் வெட்கத்தாலை என்னட்டைப் பொய் சொல்லியிருக் கினம். பாவங்கள்'.

அவையின்ரை இந்த நோய் எண்டு சொல்லுற வெட்க நோயை நீக்கும் நோக்கத்தோடை அவையளிட்டை வலியப் போய் "ஆ... நீங்களும் இந்த கிளினிக்கிற்கோ வந்தனீங்கள். நல்லது, இவர் நல்ல டொக்டர். மருந்தை ஒழுங்காய் எடுத்தால் மனதிலை நல்ல சுகமாயிருக்கும். நான் இப்ப ஐஞ்சாறு வருசமாய் இவரிட்டைத் தான் மருந்தெடுக்கிறனான். நீங்களும் எடுங்கோ. இதிலை நாங்கள் வெட்கப்படுறதுக்கு ஒண்டுமில்லை.

இந்த நோய்க்கு மருந்தெடுக்கிறதுக்கு மற்றவைக்காக வெட்கப் பட்டு மருந்தெடுக்காமல் விட்டால் ஆருக்குத் துன்பம், எங்க ளுக்கோ பகிடி பண்ணுறவைக்கோ, எங்களுக்குத்தானே தலைப் பிரகண்டம். இன்பத்தைப் பகிர்ந்தால் நூறுமடங்கு பெருகுமாம். துன்பத்தைப் பகிர்ந்தால் ஆயிரம் மடங்கு குறையுமாம். அதனாலை உங்கடை துன்பங்களை உங்களுக்கை அமுக்கி மன அழுத்தத்திற்கு உள்ளாகாமல் ஆரிட்டையும் பகிர்ந்து மனத்தை ஆத்துங்கோ. உங்களுக்கு நம்பகமான ஆட்கள் இந்தப் பெரிய உலகத்திலை ஒருத்தர் இரண்டு பேர் இல்லாமலா போய் விடுகினம்!

அப்பிடி இல்லாட்டில் உங்களுக்கு உங்கடை மன அழுத்தத்தை வேறை ஆரோடையும் சொல்ல விருப்பமில் லாட்டில் சாமியைக் கும்பிடுங்கோ அல்லது ஒரு பேப்பரிலை நல்லாய் எழுதிப் போட்டு நீங்களே அதை வாசிச்சிட்டு கிளிச் செறிஞ்சும் விடலாம், இது ஒருவித உத்தி. உங்கட மனப் பாரங் களை இறக்க எண்டு உளவியல் சம்பந்தமான செமினாருகளிலை சொல்லியிருக்கினம். ஏதோ எனக்குத் தெரிஞ்சதை நீங்களும் என்னைப்போல மன அழுத்தப்படுகிறதாலை சொல்லுறன். சரி

வரட்டோ" என்று கூறி தான் கூடக் கதைச்சுப் போட்டனோ எண்டு நினைச்சு அவையோடை கதையை முடிச்சுக் கொள்வாள்.

இப்பிடி இருக்க இவளின்ரை மகளுக்கும் ஒரு கலியாணம் பேசி மாப்பிள்ளை என்று கருதப்படுகின்ற x என்ற பேர்வழியின் தகப்பன் வழி மாமியார் பேச்சுக்கால் செய்தார்.

இந்த மன நோயாளியின் மகள் நல்லாய்ப் படிச்சவர் பட்டதாரி. இலங்கையிலுள்ள மும் மொழிகளிலும் தேர்ச்சியும் பெற்றவர். எந்தத் துறையை எடுத்தாலும் வலுகெட்டித்தனமாய் அந்த விடயங்களில் தன்னைப் புலப்படத்துவார். ஊரில் உள்ள படித்த வசதியான கெட்டித்தனமான குடும்பங்களில் y யின் குடும்பம் ஒன்று. முக்கியமாக y சிக்கனமானவர். எல்லாரோடும் அன்பாகவும் பண்பாகவும் பழகக்கூடியவர். தேவையற்ற சோலியளுக்கை தன்னை நுளைக்கவும் மாட்டார். தனக்கு வலியவாற சோலியளை மற்றவையின்ரை அறியாமையை விளங்கிக் கொண்டு தன்னுக்குள்ளை அந்தப் பிரச்சினையை உள்வாங்காமல் மெதுவாக விட்டுகொடுத்து விலக்கி கொள்ளும் உயர் பண்பும் வாய்த்தவர். இவருக்கு திருமணவயது வந்து விட்டது. இதுவரை திருமணம் நடைபெறவில்லை. காரணம் படித்த பண்புள்ள புரிந்துணர்வுள்ள ஒருவர் தான் தன்னைக் கலியாணம் செய்ய வேணும் எண்டதிலை இந்த y என்ற இப் பிள்ளை எதிர்பார்ப்போடை உறுதியாய் இருக்கிறார். இவா ஒரு ரீன்ஏஜ் பிள்ளை எண்டால் உலகம் தெரியாமல் தானே தனக்கொருவனையோ அல்லது பெற்றார் சொல்லுற பொடியனை வாய் பேசாமல் நன்மை தீமை விளங்காமல் கட்டிப் போடுங்கள். ஆனால் இவ வயது வந்தவா. புத்தி தெரிஞ்சவா.

நாங்கள் என்ன செய்யுறது! இந்தப் பேசிவந்த x பொடியனும் படிச்சவனாம். பட்டதாரி நல்ல பிள்ளையாம். பொறுப்புணர் வுள்ள பிள்ளையாம். வாழ்க்கையின்ரை கஷ்ட்நஷ்டம் தெரிஞ்சதாம்.

அப்ப மாப்பிளைப் பொடியன்ரை மாமி தானேயே y என்ற பெண்ணை விரும்பி y ன் தாயான அவளிட்டை கேக்கேக்கை இதுவரை y க்கு பேசிவந்த கேட்டுவந்த புறப்போசல்களுக்கை இது கூடிய பொருத்தமாய் இருக்க அவள் மகளை முதலில் கேட்காமல் தன் மகனுடன் கலந்தாலோசித்து y யின் தகப்பன் பொது சேவையாளன். குடும்பக் கடமைகளைத் துறந்தவர்.

எனவே அவள்தான் அவர்கள் வளவு வேண்டினாலென்ன வீடு கட்டினாலென்ன பிள்ளையள் என்ன படித்தாலென்ன முழுப் பொறுப்பும் அவள் தான். ஆனால் அவளின் பிள்ளைகள் இரண்டும் நல்ல குடும்பப் பொறுப்பானதுகள். மகளின் திரு மண விடயத்தில் மகனுடன் கலந்தாலோசித்து மாப்பிள்ளை பகுதியாலை சாதகமான மறு மொழி வருமெனில் மகளுடன் அவளும் மகனும் கதைக்கலாம் எண்டு தீர்மானிச்சு மாப்பிளை வீட்டுமுடிவிற்காக காத்திருந்திச்சினம்,

இடையில் ஒரு செய்தி. மாப்பிள்ளையின் தகப்பன் அவளின் மகளுக்கு கலியாணம் பேசின தன்ரை தங்கச்சிட்டை y என்ற கலியாணம் பேசப்படும் பெண்ணின் தாய் மருந்தெடுப்பதாகவும், அந்த நோய் பிள்ளைக்கு வராதோ என்று பயந்தாகவும் ஒரு செய்தி.

பூமராங். அவள் என்ன நோக்கம் கருதி மனநோயாளர் களுக்கு மற்றவைக்கு வெட்கப்படாமல் மருந்தை எடுத்து சுகமாயிருங்கோ என்று எப்படித் தன்னை மருந்தெடுத்து சுகமாயிருக்கும் மன நோயாளிகளுக்கு முன்னுதாரணமாக வெட்கப்படாமல் அடையாளம் காட்டி வாழ்ந்தாளோ அதுவே திரும்பி அவள் மகளின் வாழ்விற்கு.

வில்லங்கமான ஆயுதமாய் தன் குடும்பவாழ்வைத் தாக்கும் என்று அவள் சற்றும் யோசிக்கவில்லை. பூமராங். இது தான் பூமராங்கா ?

இச்சிறுகதை அவளின் மனோதத்துவ நிபுணர் - அவர் களுக்கு சமர்ப்பணமாய் - இப் பிரச்சினையை சிறுகதையாக்க முயற்சித்துக் கொண்டிருக்கின்றேன் என்று அவரிடம் அவள் சொன்னபோது அவர் எடுத்துச் சொன்ன தலைப்பே பூமராங்.

o

## மெசி ஒவ்வா. நன்றி, போயிற்று வாறன்

*யுத்த நிறுத்தம் வந்தது வாய்ப்பாய்ப் போச்சுது. அவ வெளிநாட்டாலை பத்து வருசங்களுக்குப் பிறகு கொழும்பிலை இறங்கியிருக்கிறா. அவாடை பிள்ளையளும் அவவுடன் வந்திருக் கினம். ஒரு நாள் தொலைபேசியிலை தாங்கள் எங்கடை வீட்டிக்கு வாறதாய் எங்களுக்குச் சொல்லிப்போட்டு, எல்லாரும் எங்கடை வீட்டிற்கு விசிற் வருகினம்.*

*நான் வெளிநாட்டுக்காரருக்கு எங்கடை நாட்டு வெக்கை யுக்கை தேத்தண்ணி குடிக்கப் பிடிக்காதெண்டு இரண்டு பெரிய போத்தலில் கிறீம் சோடா வாங்கி ஃபிறிட்ஜ்ற்குள்ளை வைச்சி ருக்கிறன். வெளிநாட்டுக்காரருக்கு குளிர் சோடாதான் குடிக்கப் பிடிக்கும் எண்டு.*

*ஆட்கள் நல்லாய் நிறத்து, டெனிம் ரவுசர், சேட், பட்டுச் சீலை உடுத்து, நல்ல சென்ருகள் கமழ, கைகால் கழுத்து காது எல்லாம் தங்கம் மின்ன நல்ல சந்தோசத்தோடை வருகினம். வரவேற்கிறம்.*

*முந்தி கிட்ட நின்றே கதைக்காதவர்கள் எங்கள் எல்லோரை யும் கண்டவுடன் மாறி மாறி கட்டி மோந்து முத்தம் தந்து கதிரையில் அமர்கின்றனர்.*

*இது வெளிநாட்டுப் பழக்க வழக்கம் போலும். நல்ல முறை. இவை எல்லோரும் வெளிநாடு போய் நல்ல பழக்க வழக்கங் களைப் பழகி வந்திருக்கினம்.*

*நாங்கள்தான் பின்தங்கி விட்டம் எண்டு நினைச்சு இவை யோடை கொஞ்ச நேரம் பேசினால் அவை அங்கை பழகின நல்ல பண்பாட்டை அறிந்து நாங்களும் பின்பற்றி நாகரிகமாக நடக்கலாம் என எண்ணுறன்.*

*பிள்ளைகளையும் அந்தக் கலந்துரையாடலில் பங்குபற்ற விடுகிறன். வந்தவர்கள் அந்த ஊர்க்கல்வி முறை, சிறுவர்களின்*

பாதுகாப்பு, அந்த நாட்டு வாழ்க்கையில் பேணப்படும் மனித உரிமைகள், தொழிலாளர்களின் காப்புறுதிகள், சகாய நிதிகள், சோசல் காசு, நிதிநிலமை, சுகாதாரம், முதியோர் பாதுகாப்பு, தம் சாப்பாட்டு முறை, வாழ்க்கை முறை என எமது நாட்டையும் தாம் குடியிருக்கும் நாட்டையும் பற்றி ஒப்பிட்டுச் சொல்லுகிறா.

அவற்றைக் கேட்க எனக்கு நல்ல ஆசையாய் இருந்திது. 'இந்த நாட்டில அடைபட்டுப் பெற்றோருக்கும் சகோதரங்களுக்கும் கணவர்மார் உறவினர் எனப்பலரின் கெடுபிடிக்குள்ளும் இருந்ததுகள் இப்ப சுதந்திர உணர்வு பெற்றிட்டுதுகள்' என நான் மனதிற்குள் சந்தோசப்பட்டன்.

ஒன்றரை மணித்தியால இடைவெளியில் தமக்கு வேறும் பல இடங்களுக்கு செல்ல வேண்டியிருப்பதாகக் கூறி எல்லாரும் சேர்ந்து குறூப் போட்டோ எடுத்து வீடியோ பண்ணிப் புறப்படுகின்றனர். வந்த உறவினர்களின் எண்ணிக்கை பத்துப் பேர் என்பதால் அவர்களுக்கு என்னால் உடனை விருந்தளிக்க முடியேல்லை.

வெளிக்கிடேக்கை "நன்றி நன்றி" என சுத்த தமிழில சொல்லிப் "போயிட்டு வாறம்" எண்டு மீண்டும் மீண்டும் கூறி விடைபெறுகினம்.

பத்துப் பன்ரண்டு வருச இடை வெளிக்குப் பிறகு சந்திச்சதால அவை எங்களைப் பிரிய மனமில்லாமல் பிரிவதாக எனக்குள்ளை யோசிச்சுக் கொண்டன்.

எங்கடை நாட்டில இருக்கிற எங்களைவிட அவேட்டை தாயகம் பற்றிய உணர்வு மேலோங்கியிருந்ததை அவதானிக்க முடிஞ்சிது. நம் நாட்டு அரசியல் பற்றிய பேச்சு எழுந்த போது தான் அவர்களுக்கும் எனக்குமிடையில் கருத்து மோதல் வந்தது. அதில் தமது கருத்தை தாம் கூறும் போது நாம் செவிமடுப்பதைப் போன்று எமது கருத்தை நான் அவர்களுக்கு கூறிய போது அதனை அலட்சியம் செய்யும் போக்குத் தெரிந்தது.

இவ்வாய்த் தர்க்கம் கனநேரமாய்த் தொடரவே என்னுடைய அக்கா அதில் தலையிட்டு "இத்தோடு இந்த ரொபிக்கை விடுவம். இது பிரச்சினை. இவ்வளவு காலத்துக்குப் பிறகு சந்திச்சனாங்கள். இதிலையேன் சண்டை பிடிச்சு நேரத்தை இழப்பான். சந்தோசமாய்க் கதைப்பமே" என பேச்சைத் திசை திருப்புகிறா. நான் சொல்லுறன் "ஓம். ஒருவரின்ரை அரசியல்

உணர்விலை வேறொருவர் தலையிடும் போது பிரளயமே வந்து விடும். அதுக்கு எங்கடை நாடு நல்லதொரு உதாரணம். அதாலை அந்தக் கதையை விட்டிட்டு வேறை எதையாவது கதைப்பம்” என்று கூறி அந்தக் கதை கதைபடாமலேயே போகிறது.

அவ வெளிநாட்டு வாழ்க்கையை வெறுத்துத்தான் தன் தாய் நாட்டிலயே இனி சீவிப்பதற்காகத்தான் இதுவரை அகதியாக் குடியிருந்த நாட்டு அரசாங்கத்திற்கும் கூறி தன்னுடைய ஏதோ ஏதோ காசுகளெல்லாத்தையும் கலக்ற் பண்ணிக் கொண்டு அவான்ரை அஞ்சு பிள்ளையளையும் அங்கை நல்ல வசதியா இருக்கத்தக்கதாகவும் அவையெல்லாரையும் விட்டிட்டு தனிய ஒரேடியா வந்தவ. யாழ்ப்பாணத்திலை ஒரு பெரிய மாடி வீட்டை வேண்டி சகல வசதியளையும் செய்து அங்கை வெளிநாடு மாதிரி குடியேறினா.

ஆனால் அவவுக்கு தாயகம் மீது தணியாத தாகம் இருந்த போதும் அவ யாழ்ப்பாணத்திலை இருக்கேக்கை தங்களை அந்த அந்நிய நாட்டு அரசு எப்பிடிக் கவனிச்சது. தங்களுக்கு முன் னுரிமை அளிச்சுது என அந்த நாட்டு ஆட்சியின் பெருமையைக் கூறிப் பெருமைப்பட்டு கொள்வாவாம்.

யாழ்ப்பாணத்திலை போய்க் குடியிருந்தவ. ஏ9 பாதை பூட்டப்பட நாட்டிலை யுத்தம் வரும் எனப் பயந்து தாயக மண்ணிலை மீதமாயிருந்த ஒரே ஒரு சொத்தான வீடு வளவையும் வித்துக் கொண்டு மீண்டும் திரும்பி வெளிநாடு போக யாழ்ப் பாணத்திலையிருந்து கொழும்புக்குப் பிளேனிலை வந்த மனிசி யின்ரை பாஸ்போட் விசா காலாவதியாகினதால தமிழன்ரை எதிரி எண்டு வெறுத்த சிங்களவன்ரை நாட்டிலை கொழும்பிலை றூமெடுத்து கடையிலை பாசலெடுத்து சாப்பிட்டு வாழ்ந்து வாறா.

நாங்கள் அவவைப் போய் பார்க்கும் போது “ஏன் எங்கடை வீட்டிற்கும் இடைக்கிடை வந்து சாப்பிட்டுப் போகலாமே. ஒரு மாற்றமாயும் இருக்கும்” எனப் பல முறை கேட்டுக் கொண்டதன் பேரில் இடையிடை எங்கடை வீட்டுக்கு வருவா. வரும் போது கையில் ஏதாவது இரண்டு மரக்கறி அரை அரைக் கிலோவுடன் வந்தே சாப்பிட்டுச் செல்வா. போகும் போது தவறாமல் சாப்பாட் டிற்கு “மிக்க நன்றி” என அடுத்தடுத்துக் கூறி “போயிட்டு வாறன். போயிட்டு வாறன்” எனச் சொல்லி விடைபெற்றுப் போவா.

எங்கடை நாட்டிலை 'நன்றி' எண்டு சொல்லுறது வலும் குறைவுதானே. அதுகும் உறவினருக்கிடையில மெத்தக்குறைவு. அது மனசுக்குள் இருக்கும். வாயாலை சொல்லுறதெண்டால் அது உதவி வழங்கியவருக்கும் உதவி பெற்றவருக்குமிடையில் நெருக்கம் சற்றுக் குறைவு எண்டதையே காட்டும். உறவுக் கிடையில் கொள்ளலும் கொடுத்தலும் சகஜம். ஆனால் "வெள்ளைக்காரன் ஒரு ஈ அளவு உதவி பெற்றாலும் நூறு நன்றி சொல்லி அதிலையே விட்டிட்டுப் போயிடுவான்" எண்டு எங்கடை ஐயா தன்ரை அனுபவத்திலை முந்திச் சொல்லு வார். அவர் வெள்ளைக்காரரோடை திருகோணமலையிலை டொக்கியாட்டிலை வேலை செய்தவர்.

அவ ஒரு நாளும் நன்றி சொல்ல மறக்க மாட்டா. என்ன மாதிரி பவ்வியமாக நன்றி சொல்கிறா என என்னுள் சிலாகிப் பேன். எனது பிள்ளையளுக்கும் அவவிலை நல்ல விருப்பம். அவவின் நல்ல பழக்க வழக்கத்தால்.

அவ ஒரு றூமில் தானிருக்க எனது சகோதரம் ஒன்று மறு றூமில் இருக்க என ஒரு வாடகை வீடெடுத்து சமைச்சுச் சாப்பிடத் தொடங்கியிட்டினம். இருவரும் உறவினர். எனினும் தனித்தனிச் சமையல். வீடெடுத்த புதிதில் ஒரு நாள் எங்களுக்கு அந்த வீட்டில் விருந்து. அப்போது அவ சொன்னா. "இது இரண்டு பேரும் சேர்ந்து தாற விருந்து. இன்னொரு நாளைக்கு என்ரை ஸ்பெஷல் விருந்து" என்று. நாங்கள் மறுப்புக் கூறேல்லை. "இன்னொரு நாளைக்கு அவ தனிய விருந்து எங்களுக்குத் தனியனாய் தாறது தேவையில்லை எண்டாலும் அவவின் சந்தோசத்திற்காக அவா எங்களிட்டை வந்து சாப்பிட்டதுக்கு தன்ரை திருப்திக்கு தரப் போகிறாவாக்கும்" என ஒப்புக் கொள்றம்.

மறு கிழமை அந்தப் புது வாடகை வீட்டில் எங்களுக்கு அவவின் ஸ்பெஷல் விருந்து. தானே சமைச்சதாகக் கூறுறா. நாங்கள் சாப்பிடுகிறம். அவா 'சுவை எப்படி?' எனக் கேட்கிறா. நாங்களும் 'நல்லம்' என்கிறம். அவா "இந்த விருந்தோ, அண்டைக்கு நீங்கள் இந்த வீட்டில் சாப்பிட்ட அந்த விருந்தோ நல்லம்" என்கிறா. நாங்கள் 'இதுகும் நல்லம்' எண்டு சொன்னம். 'எது திறம்' என மீண்டும் விடாமல் அவ கேட்க என் கணவன் 'இதுதான் ரொப்' எனக்கூறி அவாவைக் குளிர்விக்க "எப்பவும் என்ரை ரொப்தான்" என்கிறா. எங்களுக்கு ஒரு மாதிரி.

*இதென்ன இது! வெளிநாட்டிலை வெள்ளைக்காரரோடை பழகிப்போட்டு வந்த மனிசி தன்ரை சமையலையும் மற்றவற்றை சமையலையும் ஒப்பிட்டுக் கதைப்பதோடு தன்னுடையதே திறம் எனத் தானே சொல்லுறது எவ்வளத்திற்குச் சரி என யோசிக்கிறன்.*

*ஒரு நாள் எங்கடை வீட்டில ஒரு கொண்டாட்டம். அதற்குச் அவ எங்களுக்கு ரெலிபோனில வாழ்த்துத் தெரிவிக்கிறா. இந்த வாழ்த்தைத் தான் தன்ரை சொந்தப் போனால் தெரிவிப்பதாகச் சொல்லிறா. அவ இருக்கும் வீட்டில் ஒரு சிறீலங்கா ரெலிகொம் போன் இருவரின் பாவனைக்காகவும் இருக்கு. அவ தன்னுடைய கையடக்க தொலைபேசியில் பேசுவதாகக் கூறி அதில் ஒரு விசேடம் இருப்பதாக நினைத்து எங்களுக்குத் தெரிவிக்கிறா. இது வாழ்த்துக்களின் பட்டியலில் விசேட அடைப்புக் குறிக்குள் இட்டு வைக்க வேண்டிய ஒரு விசேட தேவையாக இருந்தது. இதுவும் ஒரு வெளிநாட்டு முறை போலும் என எண்ணுகிறம்.*

*ஒரு நாள் அவவின் கணவனின் திவசத் திதிக்கு எங்களை அழைத்துச் சாப்பாடு தருகிறா. சாப்பாட்டைச் சாப்பிட்டு விட்டு வீடு போக விடைபெற்றுப் போகும் போது "என்ன சாப்பிட்டதற்கு நன்றி சொல்லிப் போறதில்லையா" எனக் கேட்கிறா. சாப்பிட்ட சாப்பாடு இந்தக் கேள்வியின் திடுக்காட் டத்திலை மேலை வந்திருக்கும். அல்லது தீஞ்சிருக்கும். 'நன்றி நன்றி' என அந்த மனிசி சொல்லுறது மாதிரிச் சொல்லி, "என்னண்டு இதை உங்கடை வெளிநாட்டுப் பாசையிலை சொல்லுறது" எனக் கேட்க, அது ஃபிரெஞ்சிலை "மெசி ஒவ்வா" எண்டு என்னவோ சொல்ல, அதை நாங்கள் திருப்பிச் சொல்லிச் சொல்லிச் சிரிச்சுவிட்டு விடைபெற்றுப் போறம்.*

*அதுக்குப் பிறகு இரண்டொரு நாள் அது தேத்தண்ணி, பிஸ்கற் எண்டு என்னாலும் தந்தால் உடனை அவான்ரை நாட்டுப் பாசையிலை மறக்காமல் நன்றி சொல்லுவம். அவா மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்வா. அவ எங்களுக்கு ஏதேனும் தந்தால் அவாக்கு அதற்கு நாங்கள் நன்றி தெரிவிச்ச உடனை தான் வெளிநாட்டில் இருப்பதாக சந்தோசப் பட்டுக் கொள்வா போலை. அவவின் அற்ப சந்தோசத்தை நாங்கள் ஏன் கெடுப் பான். நாங்கள் நன்றி நன்றி என நன்றி சொல்லுறது தான்.*

*அவவிலை ஒரு பழக்கம். அவா தான் ரீ போட்டுக் குடிக்கப் போகேக்கை ஆரும் விசிற்றேர்ஸ் வந்தால் அவாவோடை*

சேர்ந்திருக்கிற அக்கா கேட்கப் பிந்தினாலும் வந்தவையிட்டை'ரீ போடட்டா' என கேட்காமல் தனக்கு மட்டும் ரீ போட்டு குடிக்க மாட்டா. எங்களுக்குப் போடும் போது "அங்கர் எல் லாம் போட்டு கலக்கட்டா" என்பா. 'நெஸ்கபே போடுறதெண் டால் பால்மா போடத்தானே வேணும். என்ன இந்த மனிசிக்கு விசரே. ஒரு தேத்தண்ணிக்கை எத்தினை விடுப்பு விண்ணாளம் விட்டுக் கேள்வியள் கேக்குது' என என் மனதுக்குள் நினைச்சுக் கொள்ளுவன்.

இது வெள்ளைக்காரனிட்டை பழகின பழக்கந்தான். கேட்கிறது சரி. சிலர் எல்லா நேரமும் ரீ குடியாயினம். பால்மா குடியாயினம் என எனக்குச் சமாதானம் கூறி மனிசி தாற நெஸ்கபேயை வாங்கிக் குடிப்பன். மனிசி நல்லா நெஸ்கபே போடும். நான் இந்தியாவிலை எல்லா இடங்களிலையும் இலங் கையிலை கடையளிலையும் நல்ல நெஸ்கபே குடிச்சதுக்கு இந்த மனிசின்ரை கையாலைதான் நல்ல சுவையான நெஸ்கபே குடிச் சிருக்கிறன். இதை நான் எங்கடை அக்காக்கும் அவாக்கும் சொல்லியிருக்கிறன். அதை அவா ஒவ்வொரு தடவையும் பெருமையுடன் கேட்டுக் கொள்வா. அப்போது வெளிநாட்டில் நெஸ்கபேதான் குடிக்கிறதென்பா. நானும் பால்போட்டு தேத் தண்ணி குடிக்கிறதெண்டால் நெஸ்கபே போட்டாதான் குடிப் பன். எனக்குப் பால் அதிகம் பிடிக்காது. அதாலை பால் போட்டு, நெஸ்கபே யாரும் தந்தால் சந்தோசமாய் வாங்கிக் குடிப்பன். பால் போட்டு ரீ தரேல்லையே எண்ட சந்தோசத்திலை.

மனிசி அங்கர் போட்டு நெஸ்கபே தரேக்கை எப்பவும் "இது என்ரை மா சீனி போட்டு ஆத்தின நெஸ்கபே" எனக் கூறித்தான் தரும். "ஏனக்கா இவ இப்பிடிக் கூறுகிறா. இதிலும் ஏதோ வெள்ளைக்காரன் பழக்க வழக்கம் இருக்கோ" எண்டு அறியக் (அக்காவும் வெளிநாடு போய் வாறவா) கேட்க, "என்ன கோதாரியோ தெரியேல்லை. ஒருவேளை இந்தப் பால்மாக்கள் என்ரை எண்டு நீ நினைச்சாலும் எண்டு தன்ர பேரிலை தான் தாற கோப்பியளை வரவு வைக்க கூறுகிறா போலை" எண் ணுறா. எனக்கு இந்த வெளிநாட்டு மனிசியின்ரை வேலையள் ஒரு அதிர்ச்சியாய்த்தான் கிடக்கு.

மனிசி என்ர அங்கர் அப்பிடி இப்பிடி எண்டு சொல்லி நெஸ்கபே தாறதாலை பேந்து நான் சரியில்லை எண்டு போட்டு

நெடுகலும் தேத்தண்ணியை வேண்டாம் எண்டிடுவன். இண்டைக்கு கொஞ்சம் தூரப்பயணம் போய் அவையின்ரை வீட்டை போனதாலை மனிசி 'தேத்தண்ணி வேணுமோ' எண்ட உடனை ஓமெண்டிட்டன். மனிசி கொண்டந்து தந்திது. நல்லாய்ச் சுடச்சுட களைப்புக்கு நல்லதாய் இருந்திது.

பேந்து அக்காவோடை இருந்து கதைச்சுப் போட்டு நேரமாகவே வீட்டை வர செருப்பைப் போட்டன். அந்த மனிசி வந்து என்ரை பேரைச் சொல்லிக் கூப்பிட்டு "என்ன நான் இதிலை இருக்கிறன். போயிட்டு வாறன் எண்டு சொல்லுறேல்லையா" எண்டிது. நான் ஏங்கிப் போனன். நெஞ்சு படார் எண்டுது.

"இல்லை நான் வந்து இதிலை இவ்வளவு நேரமும் இருந்து அக்காவோடை கதைச்சன். நீங்கள் வரேல்லை. சமைச்சியள் றூமுக்கை. ஆரோடையோ ரெலிபோன் கதைச்சியள். பேந்து ரீ.வியப் போட்டு ரீ.வி. பாத்தியள் இன்றெஸ்ராய். நீங்கள் ரீ தந்தனீங்கள் தான். நீங்கள் பிசியாய் இருக்கேக்கை நான் ஏன் டிஸ்ரேப் பண்ணுவான் எண்டு பேசாமல் வந்திட்டன். நான் போயிட்டு வாறன் சொல்லாதது பிழைதான். ஆனால் நீங்கள் பிசி" எண்டு சற்று சத்தமாகக் கூறி விட்டு வீட்டுப் படியால் விறுவிறெண்டு இறங்கி வந்திட்டன்.

நான் இண்டைக்கு அவான்ரை நெஸ்கபேக்கு நன்றி சொல்லாமல் விட்டிட்டன். அதை எதிர்பார்த்துத் தான் மனிசி இதை வேறை விதமாய் கேட்குதோ?

விசிற்றேர்ஸ் வீட்டை போனால் அவை பிசியாய் இருக்கிறதும் (பிசியாய் இருக்கிறது பிழையில்லை) பிசியாய் ரீ.வி. பாக்கிறது சரியெண்டால் அவையை டிஸ்ரேப் பண்ணாமல் நான் யோயிட்டு வாறன் எண்டு சொல்லாமல் வீட்டை போறதும் சரிதான் என்ற அவர்களின் அரைகுறையாய் புரிந்து வைத்திருக்கும் மேலைத்தேய பண்பாட்டை விட கீழைத்தேயப் பண்பாட்டின் மீது நம்பிக்கையுடன் வீறுநடை போடுறன்.

மேலை நாடு சென்று வந்த நங்கைக்கு திரும்பவும் போயிட்டு வாறன் சொல்லாமலே.

*தாயகம்- 68 நவம்பர் - டிசம்பர், 2007*

# எங்கள் ஊர்ச் சாமி

*எங்கடை முகப்புக்கடை அக்கா நல்ல வடிவும் சுறு சுறுப்பும். எந்த நேரமும் எல்லாரோடையும் நல்லாக் கதைப்பா. அவான்ரை கதை கேட்க எல்லாருக்கும் ஆசை. சாமானுக்கு வாறவைக்கு படபடவெண்டு அவை அவை வந்த ஒழுங்கிலை தான் சாமான் குடுப்பா. முந்தின கடை மனிசன் அரசாங்க உத்தியோகத்தர், கைக்காசு வைச்சிருக்கிறவை, நிரந்தர வருமான மில்லாத ஆக்கள் எண்டு சாமான் வேண்டுறவையிலை பாகு பாடு பாக்கிறமாதிரி இவா பாகுபாடே பாக்கமாட்டா.*

*எங்கடை பிறந்த ஊரிலை மூண்டு கடையள் இருக்குது. ஒண்டு ஊர் முகப்பிலை. மற்றது ஊர் நடுவிலை. மற்றது எல்லையிலை. மூண்டு கடையளும் பறவாயில்லாததுகள். எங் கடை ஊர் ஆக்களின்ரை தேவையளைப் பூர்த்தி செய்யுதுகள். ஊர் முகப்பிலை உள்ள கடை கொட்டில் கடை. மற்றது இரண் டும் அவேன்ரை வீட்டின்ரை முன்புறத்திலை இரும்புக்கம்பி போட்டு கிறாதி அடைச்ச கடையள். ஊரின்ர நடுக்கடைக்கும் எல்லைக் கடைக்கும் போனால் சின்னாக்கள் நிக்கிறது முதலாளிக்குத் தெரியாது. அந்த நேரம் கடைக்கு சாமான் வாங்க வந்த ஆரும் பெரியாக்கள் சொன்னால்தான் அந்தக் கடையளிலை சின்னாக்களின்ரை தேவையள் பூர்த்தியாகும். அதாலை கூடுதலாய் குழந்தையள் முகப்புக் கடையிலை சாமான் வாங்குறதுதான் வழக்கம். அத்தோடை அது ஊர்ப் பள்ளிக்கூடத்துக்கு கிட்ட இருக்கிறதும் ஒரு காரணம். குட்டிப் பலசரக்குக் கடையெண்டாலும் ஓமா வாட்டர், கிறைப் வாட்டர், டிஸ்பிரின் என மருந்துச் சாமானுகளோ, பற்றியள், பல்புகள் எனவோ தையல் வேலைக்கு நூல் கட்டை, தையல் ஊசி, மெசின் ஊசி, கழிநூல், புகையிலை, விறகு, சட்டிபானை, அகப்பை, லாம்புச் சிமிலி எண்டு சகல சாமான்களும் கிடைக்கும்.*

ஆனால் இந்தக் கடையிலை சின்னப்பிள்ளையள் புத்தகத்திலை ஒட்டுற தண்ணிப்படம், பச்சை சிவப்பு மஞ்சள் றோஸ் எண்டு கலருகளிலை இருக்கிற நல்ல வித்தை வித்தை உருவம் போட்ட வாயிலை போட்டதும் கரைஞ்சு போற இனிப்பு, இது இரண்டும் இருக்காது. அது வேண்டுறதெண்டால் சின்னாக்கள் ஊரின் நடுக்கடைக்குப் போக வேணும்.

இந்த முகப்புக் கடையிலை இந்த அக்காவுக்கு முந்தியிருந்த ஆள் இந்த இரண்டு சாமான்களையும் குழந்தையள் எத்தினதரம் போய் “இருக்குதோ” எண்டு கேட்டாலும் குழந்தையளின்ரை அரிகண்டம் தாங்கேலாதெண்டு வாங்கியந்து வில்லாது. இது லாபமும் குறைவுதானே.

முகப்புக் கடைக்கார ஆள் விடிய நாலு மணிக்கெல்லாம் கடைக்கு வந்திடும். வந்து கடையை சுத்தம் பண்ணி, தண்ணி தெளிச்சுக் கூட்டி பெற்றோல்மாக்சை கொளுத்தி, கடைக்கு சிரட்டை எரிச்சு சாம்பிராணி காட்டி யாவாரத்தை ஆரம்பிக்கும்.

அண்டைக்கு கடைக்கு ஆர் யாவாரத்திற்கு முதல் முதல் கைவியளத்துக்கு வாறதெண்டதை ஆவலாய் எதிர்பார்க்கும். அண்டைக்கு கைவியளத்துக்கு சாமான் வாங்கப்போற ஆளைப் பொறுத்துத்தான் அவரின் அன்றைய யாவாரத் தினம் அமைதி யாகப் போகுமோ சன்னதத்திலை போகுமோ எண்டது தீர் மானிக்கப்படும். அதாலை ஊராக்களுக்கு விடியப்பறம் கடைக்குப் போறதெண்டால் பயம். பேந்து “தரித்திரங்கள் தரித்திரங்கள். விடிய வந்திதுகள். மூதேசி பிடிச்ச முகத்தோடை நிக்குதுகள். அதாலை என்ரை இண்டைய பொழுது வீண்” எண்டு ஏசும். இந்தளாத்துக்கும் இந்தாளுக்கு வயசொண்டும் அதிகமுமில்லை. ஒரு முப்பத்தைந்து நாப்பது இருக்கும். இதாலை சனங்க ளெல்லாம் விடிய கடைக்கு வராமல் முதல்நாள் இரவு கடை பூட்ட முதலே கையில காசிருக்கிறவை தங்களுக்கு தேவையான சாமானுகளை வேண்டி வைச்சிடுங்கள். இரவிலை பார்த்தால் அந்தக் கடையிலை எங்கடை சனங்களைக் கூடக் காணலாம். அந்தக் கடையிலை மினக்கெடுகிறதுக்கெண்டே சனம் ஆள்மாறி ஆள்மாறி ஒருத்தர் போக ஒருத்தரை ஒருத்தர் விட்டுக் குடுக் குங்கள். ஏனெண்டால் அவருக்குச் சனம் குறைஞ்சுதெண்டால் கொதி குறையும் எண்டதாலை. பெரியாக்கள் என்ன செய்யுறது எண்டால் தாங்கள் கடையிலை நிண்டு களைச்சுப் போய்

*தங்கடை சின்னாக்களை அனுப்பி விடுவினம். அவை வந்து சின்னாக்களோடை சின்னாக்கள் அதுக்கை கூட்டாளி பிடிச்சு சில்லறைக் காசிலை ராசாவோ குருசோ விளையாட்டெல்லாம் சத்தம் போடாமல் விளையாடிக் கொண்டு இருப்பினம். அவைக்கு அண்டைக்கு படிப்பு அவ்வளவுதான். அடுத்த நாள் பள்ளிக்கூட வீட்டு வேலை செய்யாமல் போனால் வாத்தியார் அடிப்பாராக்கும். அதுபற்றி அவைக்கு பரவாயில்லை. ஆனால் அந்தக் கடைக்கு ரோசமுள்ள ஆம்பிளையள் எவையும் போறது இல்லை. வயது வந்த பொம்பிளையளும் குழந்தையளும் கிழடு கட்டையளும்தான். ஆனால் மத்தியானம் போல கடைக்கு பின்புறத்துக்கு ஆம்பிளையள் போவிட்டுப் போவினம். அந்த நேரம் குழந்தையளோ பொம்பிளையளோ கூட கடைக்கு அவ்வளவாய்ப் போறேல்லை.*

*இந்தக் கடையாள் அஞ்சு வருசமாய் அந்த ஊரிலை கடை வைச்சிருக்குது. ஆனால் என்னும் எங்களிலை ஒரு பாசம் பழக்கம் வந்ததா தெரியுறேல்லை. ஒரு சிலரோடை மாத்திரம் நல்ல குளிராய்ப் பழகுவார். அவையின்ரை குழந்தையளுக்கு இனிப்பெல்லாம் சும்மாவும் குடுப்பார். சில பிள்ளையள் இனிப்புக்குக் காசு கொண்டு போனாலே கவனியாமல் அரை மணித்தியாலமும் இருப்பார். போன உடனையே இனிப்புக் குடுக்கிறது ஆருக்கெண்டால் கொப்பி கணக்கு வைச்சு சமான் வேண்டுற ஆக்களின்ரை சின்னப்பிள்ளையளுக்கு. அவையள் மாதம் முடிவிலை கணக்கை வடிவாய்ப் பார்த்து சுளையாய் அப்படியே குடுத்திடுவினம். அவை மாதாந்த வருமானக்காரர். அரச உத்தியோகத்தர்கள். நாங்கள் ஆர்? சாதாரண விவசா யின்ரை பிள்ளையள்தானே. அப்பப்ப வருமானம் வரேக்கை காசை அரையாயோ குறையாயோ குடுத்து கணக்கு முடிக் கிறனாங்கள். அது தான் அந்த மனிசன் எங்களோடை பார பட்சம் போலை. நான் கொப்பியைக் கொண்டேய் சமான் வேண்டுறதெண்டால் அழுவன்.*

*“எனி கொப்பிக் கணக்குக் கூட்ட வேணும். கொம் மாட்டைச் சொல்லு” எண்டு சொல்லியிட்டால் நான் பேந்து கடைப்பக்கம் போகவே மாட்டன். அம்மா அஜஸ்ற் பண்ணி அங்காலை இங்காலை சாமானுகளைக் கடன் வாங்கிக் காசு குடுக்கிறவரையும் வீட்டுச் செலவுகளைச் சமாளிப்பா. ஆனால் நாங்களும் தவணைக்கு முன்னுக்குப் பின்னுக்காய் காசையும்*

*குடுக்கிறது தானே. இந்தக் கடைக்கார மனுசனுக்கு ஒரு பழக்கம். குழந்தையளை நுள்ளுறது. சின்னப்பொடியளுக்கு குண்டியள்ளை கிண்டியள்ளை கிள்ளும். இதை எல்லா அம்மாமாரும் தங்க ளுக்கை கதைப்பினம். இது எங்கடை அம்மாவுக்குத் துண்டற பிடிக்காது. அதாலை குழந்தையளை கடைக்குப் போக விடு றேல்லை. ஒரு நாள் எங்கடை வீட்டை ஒரு சொந்தக்காரர் வந்தவை காரிலை. அவை காரிலைதான் எங்கடை வீட்டை வாறது வழக்கம். அதிலை புதிய ஒரு மருமகன் வந்தார். எங் கடை ஒரு குழந்தை அங்கை இருந்த எல்லாக் குழந்தையளுக்கும் பங்கிட்டுப் போட்டு தனக்கு கிடைச்ச ஒரு சதத்தோடை கடைக்குப் போச்சுது. போய் என்ன சாமான் வேணும் எண்டு கேட்க அது தன்னட்டை உள்ள ஒரு சதத்தைக் குடுத்து "இனிப்பு வேணும்" எண்ண அந்த ஒரு சதத்தை வேண்டி காசைப் பாத்திட்டு "இந்தக் காசுக்கு இனிப்பில்லை. இது தான் தரலாம்" எண்டு நெத்தியிலை அழுத்தி திருப்பி அனுப்பியிட்டார்.*

*வீட்டை குழந்தை அழுகையோடை நெத்தியைப் பொத்திக் கொண்டு வரவே நாங்கள் துடிச்சுப் போனம். விசாரிச்சதில "கடைக்கார மாமா இனிப்புக் கேட்டதுக்கு காசாலை நெத் தியிலை அமத்தினவர்" எண்டு குழந்தை தன்ரை கைக்குள்ளை பொத்தி வைச்சிருந்த செப்பு ஒரு சதத்தை எடுத்துக் காட்டுது. குழந்தையின்ரை நெத்தியிலை ஒரு சதக் குத்தியின் அடை யாளம், தோல் சிவந்து வீங்கித் தெரியுது. வந்த புதிய மரு மகனுக்கு ஆத்திரம் பொங்கிக் கொண்டு வருகுது. குழந்தை யையும் தூக்கிக் கொண்டு விறுவிறெண்டு கடைக்குப் போறார். நாங்கள் மறிக்க மறிக்க கேட்காமல் போய் ஞாயம் கேட்கிறார். கடைக்காரன் பயந்திட்டான். உடனை கூழைக் கும்பிடு போட்டு "நான் சும்மாதான் தொட்டனான். அது பிள்ளையின்ரை பிஞ்சு நெத்தி, ஆளும் நிறம், உண்மையாய் அதுதான். நான் சும்மா விளையாட்டுக்குத்தான் தொட்டனான்" எண்டு சாமாளிக் கிறார். பேந்து அவர் இனிப்புக்கள் அது இது எண்டு குழந் தைக்குக் குடுத்து சமாளிக்க நினைக்க அந்த உறவுக்கார மருமகன் அவர் தந்ததெல்லாத்தையும் பிள்ளையிடம் கேட்டு தனது காசில் குழந்தைக்கு வாங்கிக் குடுத்து வீட்டுக்கு கூட்டி யாறார். "இப்பிடிப்பட்ட பொல்லாதவரை ஊராக்களோடை பழகிற கடை வேலைக்கு விடுகிறதோ. இவர் கசாப்புக் கடை நடத்தத்தான் சரி" எண்டு வந்த மருமகன் தன்ர அபிப்பிராயத்தை சொல்லுறார்.*

இப்பிடி இருக்கேக்கை இந்தக் கடைக்காரனுக்கும் கடையைப் போட்டுக் குடுத்த தமையனுக்குமிடையில ஒரு நாள் விடியப் பறம் கடும் சண்டை. ஒரே சத்தம். அண்டைக்குக் கடை பூட்டு. கடை இண்டைக்கு திறக்கும், நாளைக்கு திறக்கும் எண்டால் கடை தொடர்ந்து திறபடவேயில்லை. பிறகு தான் கதை தெரிய வருகுது. இவை இரண்டு பேருக்குமிடைலை ஏதோ பிரச்சினை எண்டு.

இந்த கடை இல்லாமல் இருக்கவே இந்தக் கடை வாடிக்கைக்கார ஆக்களுக்கு பெரிய கஷ்டமாய் போயிட்டுது. ஊரின்ரை நடுவிலை எல்லையிலை மற்றக் கடையளிருந்தாலும் கிட்டவா ஓடிப்போய் தங்கடை சாமான்களை வேண்டியந்தது களுக்கு கொஞ்சம் தூரப் போறது சிரமமாப்படுகிது. கடை உரிமையாளரிடம் திரும்பவும் கடையைத் திறக்கும்படி வேண்டு கோள் வைக்கினம் ஊராக்கள். அவர் தனக்கு வயது போயிட்டுதென்றும் தன்னாலை கடையைத் தனிய நடத்துறது கஷ்டம் எண்டுஞ் சொல்லிறார். “ஏதோ நல்ல முடிவாய் எடுங்கோ” எண்டு ஊராக்கள் அவர் கையில தங்கடை பிரச்சினையை ஒப்படைச்சு இருந்திச்சினம்.

மனிசன் கொஞ்ச நாளாலை கடைக்கு வெள்ளை அடிச்சு நல்ல நாள் குறிச்சு எல்லாருக்கும் சொல்லி கடையைத் திறந்திது. உதவிக்கு வேற ஆக்களை எடுக்காமல் தன்ர குமர்ப்பிள்ளையை வைச்சுக் கொண்டு கடையைத் திறந்திது. இது ஒரு ஆச்சரியம். பெட்டை கடை நடத்துறது. சும்மாவே கடைக்குச் சாமான் வேண்டவே பெட்டையளை விடுறேல்லை. அப்படியிருக்க அவர் கலியாண வயதிலை இருக்கிற தன்ரை குமரைக் கொண்டந்து கடையைத் திறந்திட்டார். எல்லாருக்கும் ஆச்சரியம். அந்த திறப்பு விழாவண்டு அவர் எல்லாருக்கும் பிஸ்கற் எல்லாம் தந்தவர் காசு வாங்காமலே. அன்றைய தினம் கடையிலை காசு வாங்காமல் தாங்கள் விக்கிற சாமானுகளைத் தந்தது சின்னாக்களுக்குப் புதினம். அவையளிலை இரண்டு மூண்டு பேர் இரண்டு தரமும் சோடா குடிச்சதாச் சொல்லிச் சினம். பெரியாக்கள் கைவியளம் எல்லாம் குடுத்து சாமான்கள் வாங்கி வலு கொண்டாட்டம். அப்ப திறப்பு விழாவுக்கு வந்த சனங்களுக்கு அந்த கடைக்கார அப்பு சொன்னாராம் “உங்களை எல்லாரையும் நம்பித்தான் என்ரை குமரை கடையிலை இறக்கியிருக்கிறன். நான் அங்காலை இங்காலை போகேக்கை என்ரை பிள்ளையை உங்கடை

பிள்ளை மாதிரிப் பாத்துப் போடுங்கோ” எண்டு. ஊராக்களிலை அவ்வளவு நம்பிக்கை அந்தாளுக்கு.

இந்த அக்கா கடைக்கு யாவாரத்துக்கு வந்த பிறகு ஒரு புதினம். எங்கடை றோட்டிலை இருக்கிற குமர்ப்பிள்ளை யளெல்லாம் இப்ப கடைக்கு சாமான் வேண்ட வெளிக்கிட் டினம். வீட்டுக்கை அடைஞ்சு கிடந்தவைக்கு இப்ப வெளி விவகாரங்களை அறியுற அலசுற இடமாய் கடை வந்தது.

மற்றது கடையக்கா தனிய நிண்டால் எல்லா வீட்டுக் காரரும் கவனிச்சு உடனை தங்கடை சின்னப் பிள்ளையளையோ ஆச்சிமாரையோ அவாக்கு துணைக்கு அனுப்பிப் போடுவினம். பத்து மணித் தேத்தண்ணி நாலு மணித் தேத்தண்ணி எல்லாம் அவாக்குக் குடுக்கிறது கடையின்ரை இரண்டு அயலும் தான். இப்பிடி இருக்க அந்த அக்காக்கு கலியாணம் சரிவரவே கடைக்கார அப்புவுக்கு அடுத்தபடியாக கடையைப் பூட்ட வேண்டிய நிலை. சனங்களுக்கு கவலைதான். என்ன செய்யிறது. இப்பிடியே யோசிச்சுக் கொண்டு இருக்க அப்பு தன்ரை மகன்ரை ஓ.எல் படிப்பு முடியும் வரையும் கலியாண நாளை நாலு மாதம் தள்ளிப் போட்டு மகனை கடை யாவாரத்துக்கை விடுறார். அந்தப் பொடியன் ஏ.எல். படிச்சிருக்கலாம். ஆனால் அப்பு அப்பிடி விடேல்லை.

அந்தப் பொடியனும் நல்ல வடிவான குணமான பொடி யன். மூக்கும் முழியும் வெள்ளையும் நெளித்தலையிருமாய் அவனைப் பார்க்க ஆசையாய் இருக்கும். இந்தப் பொடியன் கடைக்கு வந்ததும் முதல்லை செய்த வேலை இதுவரையும் இந்தக் கடையிலை விக்காத தண்ணிப் படத்தையும் வாய்க்கை போட்டதும் கரைஞ்சு போற இனிப்பையும் வாங்கிப் போட்டது தான். அதாலை அந்தக் கடையிலை ஒரே சின்னாக்களின்ரை கும்பல்.

மற்றது வயது போனவைக்கெல்லாம் வாழைப்பழம் பாண் எண்டு சும்மா குடுக்கும். ஏழையளுக்கு அன்றாடம் காச்சி யளுக்கு மற்றவைக்கு குடுக்கிற விலையிலும் பார்க்க விலை குறைச்சுக் குடுக்கும். கடனையும் விட்டுப் பிடிக்கும்.

கடையிலை தன்ரை வீட்டிலையிருந்து வாற சாப்பாட்டை சாப்பிட்டுக் கொண்டிருக்கேக்கை ஆரும் கஷ்ரப்பட்ட பிள்ளையள் வந்தால் அதுகளையும் கூப்பிட்டு பொடியன் சாப்பிடச்

சொல்லும். வேண்டாம் எண்டு வெக்கப்பட்டு அந்தப் பிள்ளை யள் சொன்னாலும் விடாமல் சாப்பாட்டைக் குடுக்கும். அது களின்ரை கதையளை அவைக்கு விளங்காத மாதிரி கதைவிட்டு கேட்டிட்டு அவைக்குத் தேவையான சாமானுகளை அறிஞ்சு குடுக்கும். அப்படியான ஒரு பிள்ளைதான் இந்தக் கடை நடத்திற பிள்ளை.

“இப்பிடி விலை குறைச்சு கடை நடத்துறது உங்களுக்கு நஷ்டமெல்லோ” எண்டு கேட்டால் “அதுக்குத்தான் கடைக்குப் பின்னாலை ஒரு யாவாரம் நடத்துறனே. அதிலை வாற ஆதாயம் இந்த நட்டத்தைச் சரி செய்யும்” என அந்தப் பொடியன் சொல்லும். ஓ கடைக்குப் பின்னுக்கு ஆம்பிளையள் போய்ப் போய் வாறவைதான் காறாப்பித் துப்பிக் கொண்டு.

அந்த வடிவான பொடியன் கடையிலை நிக்க வந்ததும் அந்த றோட்டிலை குமர்ப்பிள்ளையளை வைச்சிருக்கிற தாய்மா ரெல்லாம் வேணுமெண்டு, தங்கடை குமர்ப்பிள்ளையளுக்கு இதுவரையும் சொல்லாத அந்தக் கடைக்காரற்றை குலம் கோத்திரம் பற்றிப் பொய் சொல்லி “எங்கடை ஆக்கள் அவையின்ரை ஆக்களுக்கை சொம்பு தண்ணி எடுக்கிறேல்லை” எண்டு கதையோடை கதையாய்ச் சொல்லிச்சினம். ஆரும் பெட்டையள் அந்தப் பெடியனிலை மயங்கியிட்டாலும் எண்டு. பொடியன்ரை குலம் பற்றி தெரிஞ்சாலும் பெட்டையள் அந்த றோட்டாலை போகேக்கை நைசா ஒருத்தருக்கும் தெரியாமல் பொடியனைப் பார்க்காமல் விடுறேல்லை. அவனைப் பார்க்க வேணும் போலையே இருக்கும். கொஞ்ச நாளாய் அவனைப் பற்றித்தான் பெட்டையளுக்கு கதை. அவன் என்ன ஷேட் இண்டைக்கு போட்டிருக்கிறான் எண்டதெல்லாம்.

ஆனால் நான் கொஞ்சக் காலத்துக்குப் பிறகு அந்தப் பொடியனைப் பாக்கிறதை விட்டிட்டன். அவனும் பாக்கமால் விட்டிட்டான்.

***

இது நடந்தது இப்ப இருபது வருசங்களுக்கு முதல்ல. இப்ப ஊர் ஊராய் இல்லை. சனமெல்லாம் இடப்பெயர்விலை அல்லோல கல்லோலப் பட்டுக் கலைஞ்சு போச்சுதுகள். பழைய சனங்களோ எங்கடை றோட்டிலை இல்லை. ஆர் ஆர் எங்கை

இருக்கினம் எண்ட தகவல்களே சரிவர ஒருத்தருக்கும் தெரியாது.

நாட்டுக்கு யுத்த நிறுத்தம் வரவே யாழ் — கொழும்பு தரை வழிப் பாதை ஏ9 திறக்கப்பட ஊர்விட்டு இலங்கையின்ரை தலைநகரில வசிக்கிற நாங்களும் ஊர் போனால் எங்கடை றோட்டு உருமாறிப் போச்சுது. வீடுகள் எல்லாம் பத்தையள், வீடுகள் பெயின்றுகள் இல்லாமல் புழுதி படிஞ்சு சிதில மடைஞ்சு போய்க் கிடக்குது.

றோட்டாலை போறம். எங்கடை அதே ஊர்க்கடை இருக்குது. கடை தூசு படிஞ்சு ஒண்டிரண்டு போத்திலோடை பாதி வாழைக்குலை கட்டித் தொங்கினபடி. கடைக்கு முன்னாலை இரண்டு நிழல் பூவரசு. அதுக்குக் கீழை ஒரு பனங்குத்தியிலை ஒரு சீவன். அது எங்களை அடையாளம் காணேல்லை. தன்ரை பாட்டிலை எந்தவித விஸ்தாரமுமில்லாமல் பாத்து போட்டு சும்மா இருக்குது. எங்களுக்கு ஆளை விளங்குது.

'ஐயோ ஆள் அரைவாசியாய் தாடி மண்டி ஊத்தைப் பினாட்டாய் எங்கடை சுந்தர். எங்கடை சுந்தற்றை கோலம் மாறினதோ! நீ எத்தினை பேரை வாழ வைச்சனி. எத்தினை பேற்றை பசிச்ச வயித்துக்கு சோறு போட்டனி. உனக்கிந்தக் கோலமோ? கண்ணிலை ஒளியில்லை. ஆனால் அதே பச்சாத் தாபமான பார்வை. சாந்தம். அமைதி.'

நாங்கள் 'சுந்தர்' என்கிறம். அவர் "ஆரது, ஆருங்கோ நீங்கள். ஆக்களைச் சரியாய் விளங்கேல்லை. குரல்தான் நல்லாப் பழகினதாயிருக்குது" எண்டு யோசிச்சிட்டு "நந்தினியோ நீங்கள்" என்கிறார். "ஓம் நான் நந்தினி" என்கிறன். அவர் கண்களில் ஒரு பொறி.

"அடடே நீங்களே, வாங்கோ, வாங்கோ. இருக்க வாங்கும் உடைச்சிட்டுதுங்கோ. இந்தப் பனங்குத்தியிலைதானுங்கோ இருக்க வேணும். பொறுங்கோ பேப்பர் எடுத்துதாறன் போட் டிட்டு இருக்க" எண்டு சொல்லிக்கொண்டே கடைக்குள்ள போறார்.

நான் தடுத்து "இல்லை ஊரைப் பார்க்க வந்தனாங்கள். அப்பிடியே உங்களையும் பாத்திட்டு போகலாமெண்டு" எண்டு சொல்லுகிறன்.

அவர் "வந்திட்டீங்களேங்கோ என்னைப் பார்க்க நினைச்சு" எண்டு சந்தோசப்பட்டுக் கொண்டு ஒரு சோடாப் போத்திலை

*உடைக்கப் போறார். நாங்கள் "வேண்டாம் வேண்டாம்" எனத் தடுத்தும் சுந்தர் எங்களுக்கு அந்தப் பஞ்ச நிலையிலும் கொழும்பின் விலையில் மூன்று மடங்கு விலையான இனிப்புச் சோடாவை உடைச்சுத் தந்து எங்களைக் குடிக்க வைக்கிறார்.*

*நாங்கள் சோடாவைக் குடிச்சுக் கொண்டு கதைக்கும் போது "ஏன் சுந்தர் நீங்களும் உங்கடை சகோதரங்கள் எல்லாரும் இருக்கிற ஜேர்மனிக்குப் போகலாந்தானே" எனக் கூற "எல்லாரும் கேட்டவைதானுங்கோ. நான் போகேல்லை. ஊரிலை எங்கடை சனங்களோடை இருக்குமாப்போலை வருமே" என கலக்கமின்றி சொல்லிறார்.*

*பாவம் பொடி. இல்லை மனுஷன். கிணத்துத் தவளையாய் உலக அனுபவமில்லாமல் கதைக்குது. ஒருக்காய் ரூறிஸ்றாய் வெளிநாடு போச்சுதெண்டால் வெளிநாட்டு ருசி பிடிபட்டிடும். பேந்து ஊர்ப்பக்கம் தலை காட்டாது. ஆளும் வலு லெவலாய் வந்திடுவர் எண்டு நான் அவரை வெளிநாடு போனால் கஷ்டமில்லாமல் வாழலாம் எண்டு புத்தி சொல்லுறன்.*

*அதுக்கு அவர் "நீங்கள் சொல்லுறது உண்மைதானுங்கோ. நீங்கள் என்ரை நல்லதுக்காய் கதைக்கிறது சந்தோசமுங்கோ. ஆனால் இவ்வளவு கஷ்டத்துக்கையும் இங்கை இருந்து வாழ்ந் திட்டம். இதை விட இனி என்ன கஷ்டம் இங்கை வரப் போகுது. பரவாயில்லையுங்கோ. எனக்கு என்னமோ தெரியல்லையுங்கோ. இந்த ஊர்ச்சனத்தோடை சேர்ந்து வாழுற வாழ்க்கை எங்கை போனாலும் கிடைக்காதெண்ட நம்பிக்கை" என்கிறார்.*

*நாங்கள் சரி அது அவர் இஷ்டம் என்று அதைக் கதைப்பதை விட்டு விடுகிறம். அப்போதுதான் என்ர மகள் நின்ற கடையடியால் போக "இஞ்சாருங்கோ உதிலை போற பிள்ளை உங்கடை மகளேங்கோ" என்று கேட்கிறார்.*

*நான் அவவை அறிமுகப்படுத்தாமலே "ஓம் என்னென்டு தெரியும்" என அவரைக் கேட்க, "அவா அப்படியே உங்களை உரிச்சு வைச்சுப் பிறந்திருக்கிறாவுங்கோ. அதே மூக்கு, அதே வாய், அதே கண், அதே நிறம்! என்ரை கண்ணுக்குள்ளை இப்பவும் நீங்கள் அப்பிடியே நிக்கிறீங்களுங்கோ" என்கிறார்.*

*நான் அதிர்ந்து விடுகிறன். என் கணவரும் பக்கத்திலை நிக்கிறார். அவர் சுந்தருடைய பழைய கூட்டாளி. அவருக்கும் தெரியும். சுந்தர் நான் பெட்டையாயிருக்கேக்கை என்னிலை விருப்பம் எண்டு கச்சான் வாங்கித் திருவிழாவுக்குத் தந்ததும்*

நான் மறுத்ததும். நான் மறுத்ததென்று ஒரு சொல்லில சொல்லிப் போட்டன். ஆனால் எனக்கு சுந்தரில் ஒரு ஈடுபாடு என்னையறியாமல் இருந்து தான் இருக்கு எண்டதை சுந்தர் கச்சான் வாங்கித் தந்ததும் எனக்குப் புரிஞ்சுது. அந்த உடனை எனக்குள் ஏற்பட்டிருந்த அந்த வித்தியாசமான உணர்வுபற்றிப் பயந்திட்டன்.

அந்தக் காலத்தில என்ரை உறவினர் சுந்தர் கடைக்கு வேலைக்கு வந்ததும் சும்மா பொய்யாய் அவரின் குடும்பத் துடன் எங்கள் குடும்பம் தண்ணி செம்பு எடுக்காதது பற்றிக் கூறிய எச்சரிக்கை உணர்வு மேலோங்கி விடவே அவர் மீது எனக்கு ஏற்பட்டிருந்த இரசாயன மாற்ற உணர்வு தாழ்ந்து சுந்தர் வாங்கித் தந்த கச்சானை மறுத்ததும் அதன் பின் இன்று தான் நான் சுந்தருடன் கதைத்தது. என் அதிர்ச்சியை மறைத்தபடி நாங்கள் கையில வைச்சிருந்த கன்டோஸ்களில நாலஞ்சை எடுத்து அவர் கையில் குடுத்து, “உங்கட குழந்தையளிட்டைக் குடுங்கோ” எனக்கூறி விடை பெறுறம்.

அப்பால விலகி ஊரில உள்ள எங்களுக்குத் தெரிஞ்ச வீடுகளிற்கு விசிற்போகும் போது தாங்கள் இடப்பெயர்வின் பின் சாப்பாட்டுச் சாமான்களின் தட்டுப்பாட்டால் பட்ட கஷ்டங்களையும் அந்த வேளையில் எங்களூர் கடையில் சுந்தர் சாமான்களை ஞாயமான விலையில் வாங்கியந்து வித்ததையும் காசு இல்லாதாக்களுக்கு ‘எப்பவோ தருவினந்தானே’ எண்ட நம்பிக்கை அடிப்படையில பொருட்களைக் குடுத்ததையும் அகதியாக வெளியேறேக்கை பிள்ளையள் கைவிட்டுப் போன முதியவர்களுக்கு அவர் செய்த உதவியளையும் ஒருவர் மாறி ஒருவர் சொல்லிச்சினம்.

அயன் குலையாத உடுப்புடனும் புழுதியற்ற செருப்புடனும் கத கதப்புடனும் பளபளக்கும் தோலுடனும் இருக்கும் நாங்கள் எங்கை!

ஒட்டி, உலர்ந்த தோலோடை புழுதி படிய ஊத்தைச் சறத்தோடை தாடி மண்டிய முகத்தோடை ஒளி இழந்து போன சுந்தர் எங்கை!

ஓ... சுந்தா! நீ எங்கள் ஊர் மக்களின்ரை தெய்வமாய் எங்கையோ உயர்ந்து விட்டாயப்பா.

உன்ர அன்பு காத்திரமானது எவர் மேலும்.

# எல்லை தாண்டல்

*யாழ்ப்பாணத்திலை எங்கடை ஊரிலை எங்கடை வீடிருக்கிற றோட்டை கொழும்பு செவிண் எண்டு ஆக்கள் சொல்லுவினம். றோட்டுக் கரையெல்லாம் பச்சைப் பசேலென்று மரங்கள் சூழ்ந்து பூமணம் வீச றோட்டெல்லாம் கூட்டப்பட்டு துப்பரவாக இருக்கும்.*

*கொழும்பிலை கான் நாத்தத்தோடை தெருவெல்லாம் குப்பை கொட்டிக் கிடக்கிற அரிகண்டத்தை விட்டு, ஏ9 பாதை திறந்த கையோடை பத்து வருசத்துக்குப் பிறகு ஊருக்கு என்ர பிள்ளையளோடை போனன்.*

*எங்கடை வீட்டடி அடையாளம் தெரியேல்லை. எங்கடை வீட்டு முத்தத்திலை றோட்டோடை நிண்ட வேம்பும் நாவலும் பின்னிப் பிணைஞ்ச மரத்தில அடர்த்தியாய் கொடி விட்ட மல்லிகை முல்லைக் கொடியள் எங்க? நிலவுக் காலத்தில அந்த நாவல் மரத்தில உச்சீலையிருந்து கீழை ஆறு பாயுறது போலப் பூத்திருக்கிற மல்லிகை முல்லை கொடிப் பூக்களின்ரை மணம் எங்க? சின்னனிலை நான் ஆத்தைப் பாக்கேல்லை. ஆனால் இந்தக் காட்சியைப் பார்த்து ஆறு இப்படித்தான் பாய்வதாக நினைவுபடுத்திக் கொண்டன்.*

*பாதையள் எல்லாம் ஒடுங்கி சிறுத்த மாதிரி இருக்குது. எங்களோடை யாழ்ப்பாணம் வந்த என் ஒன்றுவிட்ட சகோதரி தங்கடை வீடு வாசல் வேலியெல்லாம் குறுகிவிட்டதாகவும் தங்கடை அயல் வளவுக்காரன் தாங்கள் ஊரிலையிருந்து இடம் பெயர்ந்த பிறகு வேலிக் கதியாலுகளைத் தள்ளித் தள்ளிப் போட்டு காணியளைப் பிடிச்சு விட்டதாகவும் ஏசுகிறாள்.*

*நான் அவ சொன்னதன் பேரில் அயல் வீட்டுக்காரரின் வளவையும் பார்க்கிறன். பூவரசமரங்கள் பத்து, பதினைந்து வருட*

வளர்ச்சியில் தறுக்கணிச்சுப் போய் நிக்கின. அவ பயப்படுமாப் போல அயல் வீட்டுக்காரனுக்கு கதியாலை தள்ளித் தள்ளிப் போட்டு எல்லை பிடிக்கிற பழக்கம் இருந்தது தான். இந்த வீட்டு அயலில மட்டுமில்ல எங்கெல்லாம் அவருக்குக் காணி இருக்குதோ அங்குள்ள அயற்காரரெல்லாம் இந்த முறைப்பாட்டை அவர் பற்றிச் சொல்லுவினம்.

இந்தாளின்ரை வளவைப் பாக்கிறன். அதுகும் பத்தை பத்தி காஞ்சு சருகாய்க் கிடக்குது. அதுக்குள்ளை முந்தி எத்தினை தென்னை மரங்கள், பலா மரங்கள், மா மரங்கள்! நாங்கள் நெல்லிக்காய் பொறுக்கிறது அந்த வளவுக்கை தான். கற்றாளை, பாக்கு, வெத்திலைக் கண்டு, பாம்புப் புற்று எண்டு எல்லாம் அந்த வளவுக்கை கிடக்கும். பென்னம் பெரிய வளவு. முன்னுக்கு நிண்டு பாத்தால் அடிவளவு ஒரு நாளும் தெரியாது. அவ்வளவு சோலை. அதுக்குள்ளை சில ஆக்கள் முயல் வேட்டை, வெளவால் வேட்டையெல்லாம் ஆடுறவை.

இப்ப அந்தக் காணியைப் பார்த்தால் பழைய சுவடே மறைஞ்சு பாலைவனமாய் வறண்டு போய் அடிவளவெல்லாம் தெரியுது. அந்த மனிசனோ அதின்ரை பிள்ளையளோ கிழமைக்கு ஒருக்கால் தண்ணீர் இறைக்காமல் விடாதுகளே. கிழமைக்கு அவை நாலு, அஞ்சு தண்ணீரும் விடுவினம். ஆனால் அதுக்கே அவைக்கு நேரம் காணாது. ஏனெண்டால் அவைக்கு ஊரிலை இருக்கிற காணியள்ள கால்வாசிக்கு மேல அவையின்ரை காணியள்தான்.

ஆனால் காணியுள்ள எல்லா இடமும் அவைக்கு எல்லைப் பிரச்சினை இல்லாமல் இராது. இதுகள் வயலிலை வரப்பை அடிக்கடி வெட்டி தங்கடை காணியைப் பெரிசாக்கினால் எல்லைக்காரங்கள் விடுறாங்களே.

இப்ப அதுகளை நினைச்சால் இப்பிடியெல்லாம் தேடின சொத்துக்களை எல்லாம் அநியாயமாய் விட்டிட்டு வெளிநாடு போறதுக்கு அதுகளுக்கும் மனம் வந்ததுதானே. அதை நினைச்சதும் இந்த வளவுக்கார அன்ரி கொழும்பிலை என்ரை வீட்டுக்கு வந்தது நினைவுக்கு வருகுது.

நாங்கள் இடம்பெயர்ந்து கொழும்பிலை எங்கடை ஊராக் களிலை ஒராளின்ரை வீட்டிலை வாடைக்கிருந்தனாங்கள். சின்ன அடக்கமான வீடு. எங்கடை தேவைக்கு மட்டுமட்டு.

*வீடெடுக்கேக்கை வீட்டுக்காரரோடை நாங்கள் ஒரு ஒப் பந்தம் செய்தனாங்கள். என்னெண்டால் வீட்டை எங்களுக்கு வாடகைக்குத் தந்தால் உங்கடை சொந்தக்காரரில் ஒருத்தரும் சொந்தம் சொல்லிக் கொண்டு இஞ்சை வீட்டை வந்து ஒரு நாள் இரண்டு நாளுக்கெண்டாலும் தங்கிப் போகப்படாது. அது எங்களுக்குக் கரைச்சல். பிள்ளையள் படிக்கிறது. அவருக் குத் தொழிலலுவல்கள். எல்லாத்துக்கும் எங்களுக்கு இடைஞ்சல் எண்டு சொல்லிப் போட்டம்.*

*அவையும் ஒத்துக் கொண்டினம். தங்கடை தகப்பனைத் தவிர மற்றெவரும் வராயினம் எண்டு. தகப்பனைப் பற்றி எங்களுக்குப் பிரச்சினையில்லை. அந்தாள் ஒரு படிச்சாள். நாகரிகமாய் நடக்கும் எண்டது தெரியும். மற்றது பெத்த பிள்ளையின்ரை வீட்டிலை வருசத்திலை இரண்டொரு நாள் அவர் நிக்கப்படாதே எண்டதும் எங்களுக்கும் ஞாயமாய்ப் பட்டுது.*

*இப்பிடி இருக்கேக்கை ஒரு நாள் தகப்பன் தன்ரை தங்கச்சியாரோடை யாழ்ப்பாணத்திலை இருந்து பிளேனிலை வந்து இறங்கியிட்டுது. வரேக்கை யாழ்ப்பாணத்து பெரிய இதரை வாழைப்பழ சீப்புகள், தங்கடை வளவுக்கை காய்ச்ச தோடம்பழங்கள், நல்ல வெள்ளைப் பால் போல புளுக்கொடி யலுகள், நெய்வாசம் அடிக்கிற மோர் மிளகாயள், இடிச்ச எள்ளுப்பாகு எண்டு எக்கச்சக்கமான சாப்பாட்டுச் சாமானு களோடை வந்து இறங்கிச்சுதுகள்.*

*நாங்கள் அவைக்கு ஒரு அறையை ஒதுக்கிக் குடுத்திட்டு மற்ற றூமுக்கை நாலு பிள்ளையளும் தாய் தேப்பனுமாய் ஆறு பேரும் இருந்தம். கொஞ்ச நாளைக்குத்தானே.*

*அவர்கள் வந்த பிறகு பிள்ளையளை ஹோலிற்குள்ள விளையாட விடுகிறதில்லை. அவையளுக்குச் சினம் வரக்கூடா தென்பதற்காக. எங்கடை பிள்ளையள் எங்களுக்கு அருமை. மற்றவைக்கு எப்பிடியோ தெரியாதே. அதுகும் ஹவுஸ் ஓணேஸின்ரை குணங்களைச் சொல்லேலாது.*

*ஆனால் அதுகள் எங்கடை பிள்ளையளோடை செல்லம் கொஞ்சுதுகள். எல்லாச் சாமான்களும் வாங்கியந்து குடுக்கு துகள். எங்களுக்கும் தாங்கள் யாழ்ப்பாணத்தாலை கொண்டு வந்த புழுக்கொடியல், மோர் மிளகாய், எள்ளுப்பாகு, ஆறு ஏழு தோடம்பழங்களென எடுத்துத் தருகுதுகள். எனக்கு மலைப்*

பாயிருக்குது. வேண்டாம் வேண்டாம் எண்ண எங்களிட்டைத் திணிக்குதுகள்.

சிலர் சொல்லுவினம் “அவை ஒரு பொல்லாத ஆக்கள். அடுத்தவையின்ரை சொத்துகளுக்கு ஆசைப்படுறவை. மனிச ரோடை பழகத் தெரியாதவை” எண்டெல்லாம். ஆனால் எங்க ளுக்கு இவையின்ரை நடத்தை பெரிய ஆச்சரியத்தை தருகுது.

இதுவரை எங்கடை சொந்தக்காரர் பலர் வெளிநாடு போறதுக்கு யாழ்ப்பாணத்துச் சாமானுகளோடை வந்து எங் கடை வீட்டிலையே நிண்டு நாங்கள் வாயூற வாயூற ஒரு துரும்பும் தராமல் எல்லாத்தையும் கொண்டு போவினம். ஆனால் இதுகள் எங்களுக்கும் எல்லாம் தருகுதுகள்.

என்ரை வீட்டு வேலையளையும் இந்த அன்ரி என்னட் டையிருந்து பறிச்சுப் பறிச்சு செய்யிறா. எல்லாரும் வந்து என்னை முறிச்சுப் போட்டுப் போறவையிருக்க இவா எவ்வளவு உதவி செய்யிறா. அவ மார்புப் புற்றுநோய் வந்து ஒரு பக்க மார்பை அறுவைச் சிகிச்சையால நீக்கின மனிசி. புருஷன் செத்து மூண்டு மாதம். அவ எங்களோடை நிண்ட ஒரு கிழமை யிலை என்னாலை அவவோடை அணுகக் கூடியதாயிருக்க ஒரு நாள் நான் அவவின்ரை புருஷன் செத்த கதையைத் துவக்கிறன். அவ எனக்குச் சொன்னா.

“இதுவரை இந்தக் கதையை என்ரை பிள்ளையளும் என்ரை அண்ணையின்ரை பிள்ளையளுந்தான் என்னட்டை கேட்டி ருக்கினம். வேறை ஊரிலை உவ்வளவு சனம் இருந்திது. ஒருத் தரும் இதுவரை இந்தத் துன்பத்தைக் கேக்கேல்லை. மனசுக்கை பெரிய முட்டு மாதிரி. ரெலிபோனிலை பிள்ளையளோடை எவ்வளவு நேரத்துக்கு இந்தக் கதையைச் சொல்லி ஆறுவன். எல்லாம் இந்த மனசுக்கைதான்” எண்டு சொல்லி தன்ரை கதையைச் சொல்லத் துவங்கினா.

உங்களுக்குத் தெரியுந்தானே அவரைப் பற்றி. அவருக்கு ஊரிலை நல்ல பேர் இல்லை எண்டது நான் சொல்லி உங்களுக்குத் தெரிய வேண்டியதில்லை. அவரை எல்லாரும் திட்டினாலும் எனக்கு அவர் புருஷன்தானே. நான் தானே அவரைப் பாக்க வேணும்.

அவர் விடியப்பறம் மூண்டு, நாலு மணிக்கு எழும்பி பிள்ளையளை எழுப்பிப் படிக்க விட்டிட்டு வளவுக்குள்ளை

ஆட்டடி, மாட்டடி வேலை செய்து தண்ணியள் அள்ளியந்து வீட்டுக்கை நிரப்புவார். நான் தேத்தண்ணி போட்டுக் குடுக்க குடிச்சிட்டு மண்வெட்டியைத் தூக்கி கொண்டு வயலுக்கை போயிடுவார்.

பேந்து ஆவாவெண்டு வந்து குளிச்சது பாதி குளியாதது பாதியாய் வந்து வாயிலை கொஞ்சத்தைக் கொட்டிக் கொண்டு காற்சட்டையை மாட்டிக் கொண்டு ஒவ்வீசுக்குப் பறப்பார்.

பேந்து பின்னேரமும் வந்து வயலுக்கும் எங்கடை வளவுகளுக்கும் பிள்ளையளை இழுத்துக் கொண்டு போய் தோட்ட வேலை இறைப்பு வேலையளை கவனிப்பார். ஓய்வு எண்டது கொஞ்சமும் கிடையாது. பேந்து இரவிலை கொஞ்சம் ஆறுதலாய் சாய்மனைக் கதிரையிலை சாய்ஞ்சிருந்து கொண்டு கொஞ்சம் புதினம் கதைப்பார்.

நாங்கள் அன்பான குடும்பம். எங்களுக்கு வருசம் வருசம் பிள்ளையள். பிள்ளையளை வெருட்டித்தான் வளர்ப்பார். ஆனால் நல்ல பாசம். பிள்ளையளுக்கு சாப்பாட்டுக்கு ஒரு குறையும் இல்லை. படிப்புச் சிலவும் அப்பிடித்தான்.

பெடியளோடைதான் வெருட்டு. பெட்டையள் அவரை வெருட்டிப் போடுங்கள். இனி அதுகள் ஆர் வீட்டிலை கட்டிக் கஷ்டப்படப் போகுதுகளோ எண்டு சொல்லி பெட்டையளுக்கு வலு செல்லம். ஆனால் ஆம்பிளைப் பிள்ளையளுக்கும் பொம்பிளைப் பிள்ளையளுக்கும் வஞ்சகமில்லாமல் சொத்து சேர்த்து வைச்சிருக்கிறார்.

நான் இவருக்கு ஊர் பிரச்சினையள் ஒண்டையும் சொல்லு றேல்லை. பிறகு விசுவா பொல்லை எடடா எண்டு கொண்டு அந்தப் பிரச்சனையளுக்குள்ளை போய்த் தலையை நுளைச் சிடுவார். தேவையில்லாத பொல்லாப்பு.

ஆனால் அவரின்ரை அக்கா இருக்கிறாவே. அவ படலேக்கை வரேக்கையே ஆலாபனை பாடிக் கொண்டு ஊரிலை இருக்கிற இல்லாத பொல்லாத கதையளை எல்லாம் என்ரை மனிசனுக்குச் சொல்லி உசுப்பேத்தி விட்டிடுவா. பேந்து கேட்பானேன். மனிசன் அலவாங்குக் கம்பியேனும் பொல்லாங் கட்டையையேனும் தூக்கிக் கொண்டு களத்திலை இறங்கியிடும் 'ஆரடா அவங்கள்' எண்டு கொண்டு.

அப்ப நான் பின்னாலை ஓடுறதுதான். கைக்குழந்தையளையும் அப்பிடி அப்பிடியே போட்டிட்டு. போனால் தமக்கையும் அவரும் ஒரு பக்கமாய் நிண்டு சம்மந்தப்பட்ட ஆக்களோடை வாய்ப் பிடுங்குப்பட்டு கைப்பிடுங்குப்பட்டு தடி அடியும் தொடங்கியிடும். நானும் அப்ப ஞாயம் எந்தப் பக்கம் நிண்டாலும் அவரின்ரை பக்கம் நிண்டு சத்தம் போடுவன். போனால் போகுதெண்டு கல்லெறியும் விடுவன். மனிசன் சண்டையை விட்டிட்டு இடையிலை என்னை வா வா எண்டு இழுத்துக் கொண்டு ஒரு மாதிரி வந்திடும். நான் சத்தம் போடுறதை கல்லெறியுறதை என்ரை மனிசன் கண்டால் சண்டையை இடையிலை நிறுத்தியிடும் எண்டது எனக்குத் தெரியும். எனக்குக் காயம் பட்டிடும் எண்டு பயந்தோ தெரியாது. வீட்டை வந்து 'நீ ஏன் அதுக்கை வந்தனீ' எண்டு என்னைப் பேசுவார். இதை நான் பலமாய்ப் பாவிச்சு அவர் சண்டைக்குப் போனதும் நானும் பின்னாலை போய் சண்டை பிடிச்சு அவற்றை மூர்க்கக் குணத்தை அடக்கிப் போடுவன். என்னோடை வலு பாசம் அந்தாள்.

ஆனால் ஊர்க்காரரர்கள் சொல்லுறது அவள் புரியனோடை சேர்ந்து வந்து மல்லுக்கட்டுறாள் எண்டு! ஆருக்குத் தெரியும் என்ரை நிலைமை.

இப்பிடி ஊர்ப் பகையை நாங்கள் சம்பாதிச்சுக் கொண்டிருக்கேக்கை நாட்டிலை விடுதலைப் போருகள் ஆரம்பிச்சுது. அதோடை என்ரை புருஷன்ரை போக்கு விடுதலை இயக்கத்துக்கு உதவி செய்யுறதில்லை திரும்பியிட்டுது. சனங்களும் அன்றாடம் வயித்துப் பாட்டுக்கு திண்டாடின காலந்தானே. அதாலை அதுகளும் அது அதுகள் பாட்டிலை சோறு கறிக்கு அடிபட்டுக் கொண்டு திரிஞ்ச காலம்.

எங்கடை வீட்டை வாறது எங்களுக்கு கூலி வேலை செய்யிற தாழ்த்தப்பட்ட சனங்கள் எண்டு சொல்லப்படுகிற ஒரு பெட்டையும் பொடியுந்தான்.

எங்கடை இவர் இயக்கத்துக்குச் சப்போட் பண்ணுறது ஆமிக்குத் தெரிய வந்து எங்கடை வீட்டை ஆமி றவுண்ட் அப் பண்ணினதோடை அதுகளின்ரை வரத்தும் குறைஞ்சு போச்சுது.

ஒரு நாள் இரவு எத்தின மணி இருக்குமோ தெரியாது. ஆமி வந்து இவரைப் பிடிச்சுக் கொண்டு போச்சுது. நான் குய்யோ

முய்யோ எண்டு குளறி அழுதும் ஒரு பிரயோசனமும் இல்லாமல் அவரை கூட்டிக் கொண்டு போனாங்கள். நான் விடாமல் யமனைத் தொடர்ந்து போன சத்தியவானின் சாவித்திரியாய் அவரைப் பின் தொடர்ந்து கத்திக் கத்திக் கொண்டு போக, றோட்டிலை ஒரு இடத்திலை என்னைப் பிடிச்சு என்ரை சீலையை உரிஞ்சு அந்த வீட்டுக் கேற்றோடை கட்டி வைச்சிட்டுப் போயிட்டாங்கள். நான் குளறு குளறெண்டு குளறினன். ஒருத்தரும் வந்து பாக்கவுமில்லை. உதவி செய்யவுமில்லை.

கனநேரத்துக்குப் பிறகு ஒரு பொடி றோட்டாலை போனது. அந்தப் பொடியை நான் கெஞ்சிக் கூத்தாடி 'என்ரை கட்டை அவிட்டு விடடா தம்பி. என்ரை மனிசனை ஆமி உதாலை பிடிச்சுக் கொண்டு போகுது' எண்டதும் உதவி செய்ய கிட்ட வந்தவன் அப்பிடியே என்னை விட்டிட்டு வந்த பாதையாலை ஓடிப் போயிட்டான். அந்த மூதேசிக்குப் போன கிழமையும் அவர் குடியிருப்புக் காணி ஒண்டை அரசாங்கத்திட்டையிருந்து பெற வழிவகை சொல்லிக் குடுத்தவர்.

அதுக்குப் பிறகு நான் ஏதோ ஒரு விதத்தில கட்டுக்களை அவிட்டு அண்ணை வீடு வரையும் போய்ப் பார்த்தன். ஒரு பிரயோசனமும் இல்லை. அவரை எங்கை கொண்டு போனாங்கள் எண்ட எந்தத் தடயமும் தெரியவரேல்லை.

இப்பிடியே அண்ணை வீட்டிலை அழுது கொண்டிருக் கேக்கை விடியப்புறமாய் அவரை அடி அடி எண்டு அடிச்சுக் காயப்பட்ட உடம்போடை வீட்டை அனுப்பி வைச்சாங்கள்.

அதுக்குப் பிறகு எத்தினை பாடுபட்டன் அவரை வெளி நாட்டுக்குப் பிள்ளையளிட்டை அனுப்பிப் போடலாம் எண்டு. மறுத்துப் போட்டுது அதின்ரை பிடிவாதத்தோடை.

பேந்து ரண்டு கிழமையால ஒரு நாள் காலமை நாலு மணியிருக்கும். வீட்டைச் சுத்தி அமளி துமளி. நாய் ஒரே குரைப்பு. யமன்கள் எல்லாரும் கையிலை துவக்குகளோடை. முதல் வைச்சாங்கள் நாய்க்கு வெடி. அடுத்து மனிசன். என்ரை மடியிலை மனிசன் அப்பிடியே சாய்ஞ்சிது. விடியும் வரை குளறி அழுதன். ஒரு சனங்களும் வரேல்லை. விடிஞ்சு பொழுது காலிச்ச பிறகு ஒவ்வொரு ஒவ்வொரு ஆளாய் வந்து நடந்ததைக் கண்டிதுகள். அவ்வளவு நேரமும் காலிலை சவத்தை வைச் சிருந்து என்ரை கால் விறைச்சுப் போச்சுது. அதுக்குப் பிறகு தான் தூக்கி வளத்தினது ஆளை.

பேந்து நடந்ததுகளைத்தான் எல்லாரும் அறிஞ்சிருப்பியளே. எனக்கு வீட்டிலை ஒரு குறையுமில்லை. ஊரிலையே தொடர்ந்திருக்கலாம். வளவுக்கை எல்லாம் காயச்சுக் கொட்டுது. ஆனால் ஆபத்துக்கு உதவியில்லாத அந்த ஊரிலை எனிமேலும் நான் இருக்கப்படாதெண்ட வெறுப்பிலைதான் நான் இப்ப ஊரை விட்டு வெளிக்கிட்டனான்.

எவ்வளவு கஷ்டப்பட்டு ஒவ்வொரு கண்டு காலியளையும் வளர்த்திருப்பம். விளாத்தியள்ளை எல்லாம் தோடை ஒட்டி வளவு முழுக்கை தோடை காய்ச்சுக் கொட்டுது. எது காய்க் கேல்லை எண்டு சொல்லுறது. எல்லா மரங்களும் பொலிஞ்சு தள்ளுதுகள். எல்லாத்தையும் விட்டிட்டு இந்த வேலை செய்த கை கால் எனி என்னண்டு அந்தக் குளிர் நாட்டிலை போய் சும்மா இருக்கப் போகுதோ? என்னை செய்யிறது. எங்கடை தலைவிதியை நொந்து கொள்ள வேண்டியதுதான்".

ஒரு மூச்சிலை அவ எல்லாத்தையும் சொல்லி முடிஞ்சதை நினைச்சுப் பாக்கிறன். அந்த நினைவு நெஞ்சை அழுத்திச்சுது.

அவேன்ரை அடிவளவுக்கை நிண்ட சேவலொண்டை நாய் ஒண்டு துரத்திப் பிடிக்குது. ஆற்றை கோழியோ, ஆற்றை நாயோ! ஆக்கள் ஒருத்தரையும் அக்கம் பக்கம் காணேல்லை.

எல்லாம் அமைதியாய் இருக்குது. மரமோ, காத்தோ கூட இல்லை.. சேவலின்ரை சத்தம் அடங்கியிட்டுது போலை.

நான் அழுகிறன்.

ஆனால்...

நான் ஏன் அழுறன் எண்டு எனக்குத் தெரியேல்லை!

*தாயகம் 69, ஜனவரி—மார்ச் 2008*

# அம்மா அறிவது

*அன்புள்ள அம்மா அறிவது.*

*அம்மா இப்ப நான் எழுதுறதை வாசிச்சதும் நீங்கள் நல்லாய்ப் பயப்பிடுவீங்கள். அது எனக்கு விளங்குது. ஆனால் உண்மையைச் சொல்லப் போனால் இது தான் என்ரை உண்மை நிலை.*

*இந்த உண்மையை எழுதினால் நீங்கள் கவலைப்படு வீங்களோ எண்டு பயந்து தான் இவ்வளவு காலமும் இதை வெளிக்காட்டாமல் நல்லாய் இருக்கிறதாய் என்ர குரல்லை நளினம் காட்டிக் காட்டி நடிச்சு உங்களோடை கதைச்சனம்மா. நான் இதை இப்பிடி எழுதுறதுக்கு நீங்கள் என்னை மன்னிக்க வேணும். இப்ப உண்மையை நான் சொல்ல வேண்டி வந்திட்டிது. எனி இதை மறைச்சு எந்தப் பிரயோசனமும் நன்மையும் இல்லை எண்டதாலையும் என்ரை உண்மை நிலை உங்களுக்குத் தெரிஞ்சால் நீங்கள் ஒரு நல்ல மனநிலைக்கு திரும்பலாம் எண்ட ஒரு நம்பிக்கையாலையும் தானம்மா நான் இந்தக் கடிதத்தை எழுதுறன். அம்மா உங்களை நான் இப்பிடித் துன்பப்படுத்திறதுக்கு திரும்பவும் மன்னிக்க வேணும்.*

*அம்மா! நான் இங்கை கனடாவிலை நல்ல வசதியாய்த்தான் இருக்கிறன் எண்டு சொல்லுறதிலை எந்தப் புழுகும் இல்லை. ஆனால் அந்த வசதியளை அடைய நாங்கள் எவ்வளவு கஷ்டப்படுறம் எண்டது இங்கை வராத ஆருக்கும் புரியிறதுக்கும் வாய்ப்பில்லை எண்டதும் எனக்குத் தெரியாததில்லையம்மா.*

*அம்மா! இங்கை நாங்கள் உங்கையுள்ள ஆக்களை மாதிரிச் சும்மாயிருக்கிறேல்லை. ரண்டு மூண்டு வேலையள் செய்யிறது எண்டு நாங்கள் சொல்லேக்கை உங்கை உள்ளவை வேலை வாய்ப்பில்லாததுகளாலை எந்த வேலையும் செய்யாமல், இல்லாட்டில் எட்டு மணித்தியால வேலையோடை வாழுற*

மாதிரி இல்லாமல் உங்கடை பிள்ளை குடும்பம் நல்ல கடும் உழைப்பாளிகள் எண்டு பெருமையாய் நீங்கள் ஆக்களுக்குச் சொல்லுறதும் எனக்குத் தெரியும். ஆனால் உண்மையிலை எங்களுக்கு நாங்கள் எட்டு மணித்தியாலம் உழைச்சு வாற காசு எங்கடை வாழ்க்கைச் செலவுக்குப் போதாததாலை ரண்டு மூண்டு வேலைக்குப் போறதுதான் உண்மையம்மா.

அம்மா நினைச்சுப் பாருங்கோ. நாங்கள் ஊரிலை இருக்கேக்கை எங்கடை அயலட்டையிலையுள்ள எங்கடை சனங்கள், தங்கடை காணியளை கண்ட நிண்ட சனங்களுக்கும் வித்துப் போட்டுதுகள். அதுக்காக எங்களை அதுகள் மத்தியிலை குடியிருத்தி வாழ வைக்கிறது சரியில்லை கௌரவமில்லை அவமானம் எண்டு அருவருப்புப் பட்டியள். அதாலை நாங்கள் எல்லாரும் வேறை ஊருக்கை போயெண்டாலும் எங்கடை ஆக்களுக்கை வாடகைக்கு வீடெடுத்துத்துக் குடியிருப்பம் எண்டு நினைச்சியள். அந்த நேரம் என்னைப் பொம்பிளை கேட்டு வந்திச்சினம். கலியாணத்தைக் கட்டி விடுறது எல்லாப் பிரச்சினைக்கும் நல்ல தீர்வாய் அமையுமெண்டு யோசிச்சியள். நடுக்கடலிலை தத்தளிச்ச உங்களுக்கு தோணியாய் கலியாணம் அமையுறதாய்த் தீர்மானிச்சியள். நீங்கள் உங்கடை நிலைமையை எனக்கு விளங்கப்படுத்தினியள். ஏ.எல்.சயன்ஸ் படிச்ச எனக்கு என்ரை படிப்பை முடிச்சுக் கலியாணமும் முடிச்சு வைச்சியள். கனடா அனுப்பி உங்கடை பிரச்சனேலையிருந்து நீங்கள் விடுபட்டியள்.

கனடா எல்லாரும் சொல்லி நாங்கள் கேட்டது மாதிரி சொர்க்க பூமி தான் அம்மா வாழ்க்கைச் சுமை ஏறாத வரை. ஆனால் இங்கை நாங்கள் ஒரு பக்கம் நாட்டுப் பிரச்சனை யாலும் உங்கையுள்ள இங்கையுள்ள எங்கள் எல்லாற்றையும் சந்தோசத்துக்காக வேண்டி எல்லாத்தையும் பொறுத்துச் செக்கிழுக்கிறம்.

நான் கனடா வந்த பிறகு நீங்களும் எங்கடை ஊரிலை போய் அப்பாவோடை இருக்கிற வரை நீங்களும் மன நிம்மதியாய்த்தான் இருந்தனீங்கள் எண்டது எனக்குப் பெரிய நிம்மதியாய் இருந்தது.

பிறகு அப்பா எங்களை விட்டுப் போன பிறகு உங்களுக்கு தனிய எங்கடை ஊரிலை எங்கடை அயலட்டையிலை எங்கடை ஆக்களின்ரை உதவியில்லாமல் போச்சு. இது

திரும்பவும் உங்களுக்குப் பிரச்சனையாய் வந்த நேரம் உங்கடை சொந்தக்காரரர் ஒருத்தரும் உங்கடை பொறுப்பை எடுக்க முன் வராயினை எண்டதை விளங்கி உங்கடை திருத்திக்காக நீங்கள் கொழும்பிலை வந்து தனிய இருந்ததும் எனக்குச் சந்தோசம் தான் அம்மா.

ஆனால் கொழும்பிலையும் நீங்கள் ஒரு அறையை வாடைக்கெடுத்து இருக்கிறியள். அப்ப சிக்கிண் கூனியா வந்து வேறை ஆக்களின்ரை உதவியில்லாமல் நல்லாய் உடைஞ்சு போனியள்.

'எத்தினை நாளைக்கு இப்பிடி கஷ்டப்படுகிறது. என்னை உங்கை கூப்பிடுங்கோ' எண்டு நீங்கள் கேட்ட நேரம் நான் கனக்க யோசிச்சன். ஒரே ஒரு காரணத்துக்காகத்தான் ரூறிஸ்ற் விசாவிலை ஒரு ஆறு மாதத்துக்குத் தன்னும் நீங்கள் இஞ்சை வந்து எங்களைப் பார்க்கப்படாதெண்டு நினைச்சன். ஆனால் அது பிழைச்சுப் போச்சுது. சரி எனி என்ரை அம்மா என்னட்டை வந்து சேரட்டும். இது தான் உங்கடை விதியும் போலை எண்டு நினைச்சுத்தான் ஸ்பொன்சர் செய்தது.

ஆனால் ஸ்பொன்சர் பிழைச்சுப் போகும் எண்டது ஆரும் நினைச்சிராத ஒண்டுதான். உங்களுக்கு இந்த முடிவாலை இடி விழுந்திருக்கும். ஆனால் எனி என்ன செய்யிறது?

முடிஞ்சது முடிஞ்சிட்டுது. இனி நாங்கள் என்ன செய்ய வேணும் எண்டதை எல்லாருமாய் கலந்து முடிவெடுப்பம் அம்மா. எங்கடை ஊர் அனுபவம், என்ரை கனடா வாழ் அனுபவம், உங்கடை கொழும்பு வாழ்க்கை அனுபவங்களை வைச்சுப் பாக்கேக்கை நீங்கள் திரும்ப ஊருக்குப் போய் எங்கடை வீட்டிலை குடியிருக்கிறதுதான் எனக்கு உசிதமாய்ப் படுகுது.

நான் இப்பிடி எழுதியிருக்கிறனே எண்டு நீங்கள் சீரியஸ் ஆக வேண்டாம். உங்களுக்கு இப்ப கனடா விசா பிழைச்ச தாலை என்னட்டையும் வரேலாத நிலமை. கொழும்பிலையும் அந்தரத்துக்கு ஆளுதவியில்லாத நிலமை. ஊரிலை உங்கடை ஆக்கள் இல்லையெண்ட நிலமை. ஆனால் ஊரிலை உங்கடை இனசனந்தான் இல்லையெண்ட நிலையிருந்தாலும் அயலட் டேக்கை நல்ல உதவி செய்யக்கூடிய சனங்கள் இருக்கினமோ இல்லையோ எண்டதை ஒருக்கா உங்கடை நெஞ்சைத் தொட்டு கொஞ்ச நேரம் யோசிச்சுப் பாருங்கோ அம்மா. அப்பாவின்ரை

செத்த வீட்டு நேரம் அவை எப்பிடி உங்களுக்கு உதவினவை யெண்டெல்லாம் சொன்னீங்கள் அம்மா. அவை ஆர் எப்படிப் பட்ட ஆக்கள் எண்டது உண்மையிலையே அப்பவும் இப்பவும் உங்கடை மனச்சாட்சிக்குத் தெரியும். ஆனாலம்மா அவையை விட்டால் அப்ப எங்களுக்கிருக்கக் கூடிய உதவியாக்கள் ஆர் அம்மா? நாங்கள் இருக்கிறதை விட்டுப் பறக்கிறதுக்கு ஆசைப் பட்டு என்ன பிரயோசனம்? நான் இப்பிடி எழுதினதாலை இனி ஊருக்குப் போனால் அவையின்ரை உதவியை நாடி நீங்கள் வாழவேண்டி வந்திட்டுதே எண்டு திரும்பவும் கவலைப் படுகிறீங்களோ அம்மா.

ஆனால் அம்மா இதை உங்களுக்கு இப்பவும் நல்லாய்ப் புரிய வைக்க என்ரை கனடாச் சீவியத்தின்ரை ஒரு பக்கத்தை கீழை எழுதுறன். எனியும் மறைக்கேலாது. இதை நான் இப்ப கட்டாயம் தெரிவிக்க வேண்டிய சூழ்நிலை.

அம்மா, நான் ஒரு நாளைக்கு ரண்டு மூண்டு வேலைக்கு பாட் ரைமாய் போட்டு வாறனான். ஒரு வேலை எட்டு மணித்தியாலம். ஒரு வேலை ரண்டு மணித்தியாலம். ஒரு வேலை ஒரு மணித்தியாலம்.

ஒண்டு பேக்கறியிலையம்மா. அது தான் எட்டு மணித்தியாலம். மணித்தியாலயத்துக்கு இத்தினை டொலர்ப்படி. போனால் கறணந்தான்.

வேலை செய்யேக்கை எவ்வளவு களையெண்டாலும் என்ன கவலையெண்டாலும் உதட்டிலை புன்சிரிப்புத் தவழ வாற கஸ்ரமேர்ஸோடை சிரிச்சுச் சிரிச்சுக் கதைச்சு பிஸ்னெஸ்ஸைக் கவனிக்க வேணும். இல்லாட்டில் பொஸ்சுக்குத் திருப்தியிருக் காது. நான் தொடர்ந்து இந்த பேக்கறியிலை அஞ்சு வருஷம் வேலை செய்யிறனெண்டால் என்ரை அன்பான பேச்சும் வாடிக்கையாளரைக் கவரிற பண்புந்தான். நான் இரண்டு நாளைக்கு அடுத்து வேலைக்கு போகாத நாளுகளிலை, என்ரை கஸ்ரமர்ஸ் நான் எங்க? ஏன் வரேல்லை? எனிமேல் வேலைக்கு வராவோ? எண்டெல்லாம் கடையிலை விசாரிப்பினமாம். நானும் கடைக்கு வாறவையோடை நல்ல அன்பாய்க் கதைக்கிறதுதானே. பொஸ்சுக்கும் நல்ல மதிப்பு.

இதாலை பேக்கறியிலை எனக்கு நல்ல மதிப்பு. ஆனால் நாங்கள் எவ்வளவுதான் நல்ல பிள்ளையாய் வேலை செய்தாலும் சம்பள அதிகரிப்பெண்டது நாங்கள் நினைக்கிற மாதிரி

யெல்லாம் கிடையாது. என்ன ஒரு நன்மையெண்டால் ஒரே வேலையிலை தொடர்ந்திருக்கலாம்.

அத்தோடை நாங்கள் வீடும் வாங்கினதாலை காசுப் பற்றாக்குறையை நிரப்ப நான் வேறை வேலையும் பாக்க வேண்டிய கட்டாயம். இந்த நேரத்திலை முதியோர் பராமரிப்புக்கு நாங்கள் பேக்கறியிலை மூண்டு மணித்தியாலம் வேலை செய்து வாற காசை ஒரு மணித்தியாலம் வேலை செய்யிறதாலை எடுக்க முடியும் எண்டறிஞ்சன். அதைப் பற்றி விசாரிச்சால் அதுக்கு நேசிங் படிச்சு ஒரு சேட்டிவிக்கற் எடுக்க வேண்டியிருந்திது. அந்த நேரம் நான் சின்னனிலை டொக்டராய் வரவேணும் எண்ட ஆசையிலை ஏ.எல்.சயன்ஸ் படிச்சது; இடையிலை கலியாணத்தாலை குழம்பினதையும் நினைச்சன். சரி டொக்ரர் சேட்டிபிக்கற் எடுக்காட்டிலும் நேசாய்த் தன்னும் வருவம் எண்டு தீர்மானிச்சன். நேசிங் ரண்டு வருஷம் செய்தன். உங்களுக்குப் பெரிய சந்தோசம். ஏதோ சில்லறை வேலை செய்யாமல் என்ரை பிள்ளை நேசாகினது சந்தோசம் எண்டு நீங்களும் போனிலை எனக்குச் சொன்னது இப்பவும் எனக்கு நல்ல ஞாபகம். அப்ப நானும் சந்தோசப்பட்டன்.

பிறகு முதியோர் பராமரிப்பு வேலைக்கு ஜொப் ஏஜென்சி யிலை பதிஞ்சு வைச்சன். கோல் பண்ணினாங்கள். அதிலை ரண்டு வீட்டை என்ரை வீட்டுக்குக் கிட்டவா நான் செலக்ற் பண்ணினன். ஒண்டு ஒரு தொண்ணூற்றொரு வயதுப் பாட்டி. வெள்ளைக்காறப் பாட்டி. அவாவிட்டை நான் ஒவ்வொரு நாளும் விடிய ஆறு மணிக்குப் போவன். அவாவை எழுப்பி பாத்றூமுக்கு விட்டு குளிக்க வாப்பன். லோஷனுகள் போடுவன். உடுப்பு மாத்தி அவான்ரை படுக்கை மாத்தி றூமைக் கிளீன் பண்ணுவன். காலமைச் சாப்பாடு குடுத்து மருந்துகள் குடுத்து படுக்கையிலை ஆளை விட்டுப் போட்டு வந்திடுவன். அவ கொஞ்சம் நடப்பா கொள்ளுவா. ஆனால் அறளை பேந்து போச்சுது. அதாலை நான் அவவுக்கு உதவி செய்யேக்கை என்னை நுள்ளுவா. எனக்குச் சரியாய் நோகும்.

ஆனால் அதை நான் அஜஸ்ற் பண்ணப் பண்ண அவ நெடுகலும் நெடுகலும் நுள்ளுவா. அதாலை அவாவுக்கு “எனக்கு நிகம் இருக்கு. நீங்கள் எனி எனக்கு நுள்ளினால் நானும் உங்களுக்கு நுள்ளுவன்” எண்டு நான் பகிடி விட்டு நுள்ளுற

*மாதிரி அவான்ரை கையள் காலுக்குக் கிட்ட என்ரை கையைக் கொண்டு போகப் போக ஆள் பயந்துபோய் நுள்ளாமல் இருக்கும். இப்பிடி ஒரு பாட்டியின்ரை வேலை எனக்கிங்கை.*

*மற்றது ஒரு எழுபத்தெட்டு வயது அம்மா. தமிழம்மா. அவாக்கு ரண்டு பிள்ளையள். அவை நல்ல வேலை செய்யினம். அவையாலை தங்கடை தாயைப் பாக்கேலாதெண்டு வேலைக்கு ஆள் எடுத்திருக்கினம்.*

*எனக்கென்ன வேலைதானே. சுளையாய்ச் சம்பளம். நான் அவையின்ரை வீட்டை போனன். அவை நல்ல சந்தோசமாய் என்னை வரவேற்றினம். அந்த அம்மான்ரை அறேக்கை கூட்டிக் கொண்டு போய் அவான்ரை நிலைமையளை விளங்கப்படுத்திச் சினம். அவான்ரை சமானுகள் இருக்கிற இடத்தையெல்லாம் காட்டி, "இவ உங்கடை பொறுப்புத்தான். நல்ல வடிவாய்ப் பாருங்கோ" எண்டு வீட்டு வெளித் திறப்பொண்டையும் அந்த அம்மாவையும் என்னட்டைப் பாரந்தந்தினம்.*

*நானும் வடிவாய் அவவைப் பார்ப்பன். அவவுக்கு என்னோடை நல்ல விருப்பம். நானும் தமிழ் எண்டதாலை அவவுக்கு நான் நிக்கிற நேரம் தனக்குப் பேச்சுத் துணைக்கும் ஆள் கிடைச்ச புழுகம். அவவுக்கும் உங்களைப் போலத்தான் இடுப்பெலும்பிலை வருத்தம். நடக்க மாட்டா. வீல் செயரிலை தான் ஆளின்ரை நடமாட்டம். பாவம். எனக்கு அவவைப் பார்த்தால் உங்களைப் பாக்குறது மாதிரி இருக்கும். நான் அவவுக்கு வேலை செய்யேக்கை உங்களுக்குச் செய்யிறதாய்த் தான் நினைச்சுச் செய்வன்.*

*பாவம். எழும்பி நடக்கக் கொள்ள மாட்டாதானே. அதாலை இரவிலை பகலிலை எல்லாம் குழந்தையளுக்குக் கட்டுறது மாதிரி பம்பர்ஸ் தான் கட்டி விடுறது. விடிய நான் போய் எல்லா அலுவல்களும் முடிச்சு குளிப்பு, முழுக்கு, உடுப்பு மாத்தல், கட்டில் விரிப்பு, றூம் துப்பரவு, சாப்பாடு, மருந்து குடுப்பு எல்லாத்தையும் செய்து கொண்டு அவான்ரை மனமாற அவாவோடை கதைச்சு கதைச்சு வேலை முடிஞ்சு போறது தான் என்ரை வழமையான செயற்பாடு.*

*ஒரு நாள் லீவு. என்ரை சின்னனின்ரை ஸ்கூல் நிலவரங்களை அவற்றை ஸ்கூல் ரீச்சரோடை கதைச்சு அறியிற நாள். அண்டு அந்த தமிழம்மாவின்ரை பிள்ளையளுக்கு 'நான் நாளைக்கு*

வர மாட்டன்' எண்டு சொல்லி இருந்தாலும் போனிலை 'அவசரம் உடனை தங்கடை வீட்டை என்னை வரேலுமா' எண்டு கேட்டிச்சினம். நான் என்ரை நிலைமையை விளக்கி பிள்ளையின்ரை அலுவல் முடிஞ்ச உடனை வாறாதாகச் சொன்னன். ஆறு மணித்தியாலத்துக்குப் பிறகு அலுவல் முடியப் போனன்.

அங்கை போய் வெளிக்கதவைத் திறந்து உள்ளுக்கை போனால் ஏதோ ஒரு பாட் ஸ்மெல். அவ என்னைக் கண்டது தான் என்ரை பேரைச் சொல்லி சொல்லி 'என்னைப் பாருங்கோ திரிபுரா என்னைப் பாருங்கோ திரிபுரா' எண்டு குளறி அழுதா. அறேக்கை மணம். றொய்லற் நாத்தம். சரி பாவம். என்ன அவசரமோ கக்கா போயிட்டுது போலை எண்டிட்டு போய் பம்பஸைக் கழட்டினால் சொன்னால் நம்ப மாட்டீங்களம்மா. ஒரே அலங்கோலம். இது இப்ப இருந்த கக்கா இல்லை. இருந்து கனநேரம் எனக்குப் பிரட்டிக் கொண்டு வந்திட்டுது. எனக்குமோ என்னவோ என்ரை அருவருப்பக் காட்டாமல் இருக்கேலாமல் போயிட்டுது. "ஏன் இப்பிடி இந்த மாதிரி எல்லா இடமும் அப்பிப் போய் கிடக்குது. சரி அவசரமா வந்திருந்தாலும் உடனை பிள்ளையளைக் கூப்பிடாதேங்கோவன்" எண்டு நான் கேக்க மனிசி பிள்ளையளைக் கோலிங் பெல்லை அடிச்சுக் கூப்பிட்டுச் சொல்லித்தான் இருக்குதாம். ஆனால் றூமுக்கை வந்த பிள்ளையள் அதை எடுத்து மினக்கெட நேரமில்லாமலோ என்னவோ "பொறுங்கோ உங்கடை கேள் வருவா. எடுப்பா. உதை இப்ப எங்களாலை மாத்தேலாது. ரைம் பாஸ்" எண்டு போட்டு கதவைப் பூட்டி விட்டிட்டு வேலைக்குப் போயிட்டுதுகளாம்.

பெத்த தாயின்ரை வேலையளைப் பெத்த பிள்ளையளே செய்ய முடியாமல்தான் சம்பளத்துக்கு அதுகள் ஆள் போட்டிருக்கினம். நான் லீவு போட்ட நாள் அதுகள் வழக்கத்திலும் விட இன்னும் வேளைக்கே எழும்பித் தாயின்ரை கடமையளை முடிச்சிட்டுத்தான் போயிருக்குதுகள். ஆனால் அண்டைக்கு இப்பிடி நடந்திட்டுது. வயது போனால் எல்லாம் சொல்லிக் கொண்டோ.

நான் கை நீட்டிக் காசு வேண்டுறனான். எடுத்த வேலையை முடிக்கத்தானே வேணும் எண்டு குமட்டக் குமட்டக் அவவை எடுத்துத் துப்பரவாக்கி முழுகவாத்து லோசனும் போட்டு

அவவை கொண்டு போய் வீல் செயரிலை ஹோலுக்கை விட்டிட்டு அவான்ரை உடுப்புக்களை வடிவாய்த் தோய்ச்சு பெட்சீற் சகலதும் துப்பரவாக்கி மருந்துகள் போட்டு றூமெல்லாம் மொப் பண்ணி என்ரை கடமையள் முடிச்சுத் திரும்பினன்.

உண்மையிலேயே அம்மா அண்டு முழுக்க எனக்கொண்டும் சாப்பிடவோ குடிக்கவோ முடியாமல் இருந்ததெண்டது வேறை விசயம். ஆனால் நான் தொடர்ந்தும் அந்த வேலைக்குப் போறது தான். ஏன்? தன்ர பெத்த பிள்ளையளே தாயைப் பக்கத்திலை பாக்க முடியாமல் இருக்கேக்கை என்ரை அம்மா அங்க தனிய. அவாக்கு இப்பிடி ஒண்டு வந்தால் ஆர் பாப்பினம். நான் தானே பாக்க வேணும் எண்டு யோசிச்சதாலை கைவிடப்படாதெண்டு என்னாலை தீர்மானிக்க முடிஞ்சுது.

அவ சாகிறவரை நான் தான் அந்த அம்மாக்கு கடமை செய்தது. அந்த அம்மான்ரை செத்த வீட்டுக்கு நான் போன இடத்திலை அமைதியாயிருந்த பிள்ளையள் எல்லாரும் என்னைக் கண்டதும் என்ரை பேரைச் சொல்லி தங்கடை ‘அம்மாவைப் பாருங்கோ திரிபுரா. எங்கடை அம்மாவை பாருங்கோ திரிபுரா’ எண்டு அழு அழெண்டு அழுகுதுகள்.

இப்பிடித் தான் நான் அம்மா இங்கை. எனவே கொழும்பிலை உங்களுக்கு உள்ளன்போடை பாக்க ஆக்கள் இல்லை எண்டால் எனி எங்கடை ஊருக்குப் போய் எங்கடை அயலட்டை யோடை இருக்கலாந்தானே. எனியும் அவையளோடை சீவிக்கிறதை அருவருப்பாய் நினைப்பீங்களோ. பாக்கப் போனால் இப்ப உங்கடை மகளும் இங்கை ஊரிலை உள்ள உங்கடை பாசையிலை சொல்லப் போனால் “அதுகள் தான்”. என்னம்மா கவலைப்படுறீங்கள். எனியும் அவையின்ரை உறவை நீங்கள் என்ரை கதையைக் கேட்ட பிறகு வெறுக்க மாட்டீங்கள் எண்டு நினைக்கிறன். பிறகும் வெறுப்பீங்களா யிருந்தால் என்னோடையும் அதாவது உங்கடை ஒரே ஒரு அருமைக் குஞ்சின்ரை உறவோடையும் உங்களுக்கு இப்ப அருவருப்புத் தான் வந்திருக்க வேணும். அப்படியே என்ரை அம்மாக்குஞ்சு.

முந்தி குழிக் கக்கூசுகள் ஊரிலை கட்டுறதுக்கு முதல் அவையள் செய்த தொழிலுகள் உங்களுக்கு மனதிலை இருக் கிறதிலை அவையளை எங்கடை அயலட்டேக்கை காணேக்கை வயித்தைப் பிரட்டிக் கொண்டு வாறதாயெல்லாம் சொல்லி

அப்ப நீங்கள் அசூசைப்பட்டது எனக்கு அப்ப ஏற்கக் கூடியதாய்த் தான் இருந்தது. ஆனால் அவை முந்தி காலாலை நடையாய் நடந்து வண்டில்லை வாளி தூக்கினதை நான் இஞ்சை காரிலை பறந்து துப்பரவு செய்து கொண்டு திரியிறன். மனசார இதுதான் இண்டைக்கு இரண்டுக்கும் இடையிலை யுள்ள பெரிய வித்தியாசமே தவிர வேறையொண்டுமே இல்லை.

உண்மையிலேயே அம்மா நான் பாத்த தமிழம்மான்ரை நிலைதான் இஞ்சை உள்ள பல அம்மாமாருக்கும். உங்கை யெண்டால் காசில்லாட்டிலும் இருந்தாலும் அயலட்டைச் சனம் பாவம் பழிக்கஞ்சித் தன்னும் பாத்துக் கரை சேர்க்குங்கள். அதுகள் ஒரு பக்கம் போகட்டும் அம்மா.

என்ரை அம்மா. உங்களுக்கிப்ப மனம் ஒடிஞ்சிருக்கும். ஆனால் என்ன செய்யிறது. நீங்கள் நல்லாயிருந்தால்தான் நான் ஏதோ நிம்மதியாயிருப்பனம்மா. உங்களுக்காக நாங்கள் உங் கையும் இப்ப வர ஏலாது. பிள்ளையள், இளசுகள் படிப்புக்கள் பொறுப்புக்கள் இருக்குது.

அவையின்ரை காலிலை அவை நிக்கத் தொடங்க நாட்டுப் பிரச்சினை தீர்ந்தாலென்ன தீராட் டிலென்ன நான் என்ரை ஊரோடை என்ரை அம்மாவோடை இருக்கக் கட்டாயம் வருவன். அப்ப என்ரை பிள்ளையள் உங்கை வருவினமோவெண்டால் அவை இந்த ஊர்வாசியள். அவைக்கு இந்த ஊர் பழகிப் போகலாம். அதாலை அவை எங்கடை நாட்டுக்குத் திரும்புறதும் திரும்பாததும் அவைய வையின்ரை விருப்பம். இந்த இடத்திலை அம்மா நீங்கள் ஊருக்குத் திரும்பிப் போறதெண்ணுறது முன் வைச்ச காலைப் பின் வைக்கிற பிழையைச் செய்யிறமோ எண்டு நான் சொல்ல மாட்டன். ஏனெண்டால் நாங்கள் முன் வைச்ச கால் எங்களைப் பள்ளத்துக்கை இழுத்து விழுத்தும் எண்டால் எங்கடை முன் வைச்ச காலைப் பின்னுக்கு இழுக்கிறதிலை எந்த ஒரு தடையும் இருக்கேலாதுதானே!

சரி. இதுக்குப் பிறகும் உங்களுக்கு ஊருக்குப் போக இன்னும் மனம் வராட்டில் காசைக் கணக்குப் பாக்காமல் கொழும்பிலை ஒரு ஆளை உதவிக்கு வைச்சிருந்து உங்களைப் பாருங்கோ. அதுக்கு நான் எனக்குத் தெரிஞ்ச ஒரு அங்கிளைக் கொண்டும் ஆளை ஒழுங்குபடுத்தித் தரலாம். மற்றது நீங்கள் உங்கை ஆளை உதவிக்குப் பிடிச்சாலென்ன ஊருக்குப் போய்

*உதவிக்கு ஆரையும் வைச்சிருந்தாலென்ன அவை உங்களுக்கு உதவி செய்யிறதுக்கு நீங்கள் குடுக்கிற காசு அவைக்கும் பெரிய உதவியாயிருக்கும். உங்களுக்கும் ஆத்ம பலமாயிருக்கும். எனக்கும் நிம்மதியாயிருக்கும். இங்கை நான் ஒரு மூண்டு நாளைக்கு உழைக்கிற சாசிலை நீங்கள் உங்கை ரண்டு மூண்டு கிழமைக்கோ ஒரு மாதத்துக்கோ கூட வடிவாச் செலவளிச்சு சீவியத்தைக் கொண்டு போகக் கூடியதாயிருக்கும். அதாலை காசைப் பற்றியும் யோசிக்கத் தேவையில்லை.*

*மற்றது வாற கிழமை உங்கடை செலவுகளுக்கும் காசு ஆயிரம் டொலர் அனுப்பி விடுறன். எடுத்து வடிவாய் உங்கடை தேவையளைப் பாருங்கோ.*

*இனி என்ன. எழுதுறதெல்லாம் எழுதிப் போட்டன். முடிவு உங்கட விருப்பப்படி தான். எது உங்களுக்குச் சந்தோசமோ அதுதான் என்ரை சந்தோசம் அம்மா. இத்துடன் முடிக்கிறன். சந்தோசமாய் இருங்கோ.*

*இப்படிக்கு*
*உங்கள் அன்பு மகள்*
*திரிபுரா*

*அம்மா!*

*ஊரில சனமெல்லாம் இஞ்சை ரூறிஸ்ற் விசாவிலை வந்து போகேக்கை நானும் உங்களையும் ஒருக்காத் தன்னும் ரூறிஸ்ற் விசாவிலை இஞ்சை கூப்பிட்டிருக்கலாம்.*

*ஆனால் இப்பிடிக் கூப்பிடாததுக்கு முக்கிய காரணம் எங்களைப் பற்றி பெருமையாய் நீங்கள் நினைச்சுக் கொண்டிருக்கிற சந்தோசங்கள் இந்தக் கனடாவுக்கு வந்து எங்கடை உண்மை நிலைமையைப் பார்த்து புஸ்வாணமாகிப் போயிடக் கூடாதே எண்டதுக்கே தவிர வேறு எந்தக் காரணமும் இல்லையம்மா.*

*இல்லாட்டில் என்ரை அம்மாவைக் கூப்பிட்டு இந்த வித்தியாசமான காலநிலை, மரஞ்செடி கொடியள், கட்டிடங்கள், றோட்டுக்கள் எண்டு இதுகளைக் காட்ட எனக்கு விருப்பமில்லாமலோ.*

*முடிக்கிறன் அம்மா*

*திரிபுரா*

*தாயகம் 73 ஜனவரி-மார்ச் 2009*

# பிளீஸ் கிவ் மீ 20000/= றுப்பீஸ், ஐ வோண் ரூ சேன்ஜ் மை...!

*எங்கட அம்மான்ர குடும்பம் பெரிய குடும்பம். கூட்டுக் குடும்பமும் கூட. எங்கட அம்மம்மாவுக்கு ஐந்து பொம்பிளைப் பிள்ளையள். அவாக்கு ஏழு சகோதரங்கள். அனேகமா அம் மம்மான்ர சகோதரங்களுக்கைதான் சகோதரங்கள் தங்கடை பிள்ளையளுக்கு கலியாணங்கள் ஒண்டுக்கை ஒண்டு செய்தி ருக்குதுகள். அம்மம்மான்ரை பிள்ளையள்ளையும் இரண்டு பேர் ஒரே குடும்பத்துக்கை மாத்தாய் கட்டியிருக்கினம். உறவு விட்டுப் போகாமல் வேறை ஆக்களுக்கை கட்டினால் சாதியும் கெட்டு விடும் என்றொரு பயமும் கூட.*

*இதாலை எங்கட குடும்பத்துக்கை எப்பவும் பல பேர் ஒண்டாய்க் கூடியிருந்து கதைப்பம், சிரிப்பம், விளையாடுவம், சாப்பிடுவம், குளிப்பம், உடுப்புத் தோய்ப்பம். எங்கையும் போட்டு வருவம். வேலையள் செய்வம்...*

*இதாலை எங்கடை ஊரிலை எங்கடை ஆக்களுக்கு ஒரு பெரிய லெவல். தாங்கள் ஆளணி கூடின ஆக்கள் எண்டு. இதாலை வேறை ஆக்களோடை நாங்கள் பழகிறேல்லை. அந்தத் தேவையும் எமக்கில்லை. அதாலை எந்த நட்டமும் எங்களுக்கு வந்ததாயும் நினைப்பில்லை. எப்பவும் எங்கடை வீடுகளுக்கு ஆரோ ஒரு உறவினரோ பலரோ வந்து கொண்டுதான் இருப்பினை. இரவும் பகலும் அடுப்பு எந்த நேரமும் புகைஞ்சு கொண்டு இருக்கும். எந்த நேரமும் கூடிக்கூடி கதைச்சுக் கொண்டும் இருப்பம். எல்லா வேலையும் கூட்டு வேலைதான்.*

*இப்பிடி இருக்கேக்கை என்ர அம்மா என்னையும் என்ர மற்ற சகோதரங்களையும் மற்ற அன்ரியவையின்ர குமர்ப்பிள்ளையளிட்டை காவல் விட்டிட்டு ரவுணுக்கு ஏதோ அலுவலாய் மற்ற அன்ரிமார் இரண்டு பேரோடை போயிட்டா. அப்ப நாங்கள் விளையாடிக் கொண்டிருக்கேக்கை பெட்டை*

*பொடி எண்ட பாரபட்சச் சண்டை வந்திட்டுது. பொடியள் தான் அதிலை எண்ணிக்கை கூட. அவங்கள் எனக்கு ஒண்டுக்கும் விட்டுத் தாறாங்களில்லை. எதை எடுத்தாலும் அது தங்களுக்கு தங்களுக்கெண்டு பறிச்சு தங்களுக்கை வைச்சு விளையாடுவாங்கள்.*

*எனக்கு எப்பவும் தோல்விதான். அவங்களோடை எதிர்த்து களைச்சு என்ர மூத்த சகோதரங்களிட்டைப் போய் முறை யிடுவன்.*

*ஆனால் அவை எப்பவும் அவங்களுக்குத் தான் சப்போட் பண்ணி என்னைத் திருப்பி அனுப்புவினம். நான் மீண்டும் போய் அவங்களோடை விளையாடுவன். அதிலை எனக்கு அவங்கள் ஒருக்காலும் விட்டுக்குடுப்பெண்டதே செய்யாங்கள். நான் ஓரங்கட்டப்படுவது தொடர்ந்து நடந்துகொண்டே இருக்கும். ரவுணுக்குப் போன அம்மாவையும் காணேல்லை. எனக்குத் தோல்வியைத் தாங்கி அலுத்து விட்டது. கை கால்களால் அவர்களுக்குப் பதிலடி கொடுக்கத் துவங்கி விட்டன்.*

*இந்தக் களேபரத்தில் தலையிட்ட அக்காமார் என்னைத் தம்வயப்படுத்துவினம். என்னண்டு அவை சொல்லுவினம் எண்டால் பெட்டையள் எண்டால் பொடியளுக்கு விட்டுத்தான் குடுக்கவேணுமாம். இதுதான் உலக இயற்கையாம் என ஒருவர் விட்டு ஒருவர் மாறி மாறி என் மூளையைச் சலவை செய்யினம். எனக்கு அந்தக் கருத்துகள் ஒண்டும் சரியாய் என்னுள் எடுபடவில்லை. நான் பெண்கள் பக்க நியாயத்தை முன் வைக்கிறன். இத்தனைக்கும் நான் சின்ன ஆள். ஒரு ஐந்து வயதிற்குள் என நினைக்கிறன். அவை என்ர கதையள் நியாயத்தைக் கேட்டு சிரி சிரி எண்டு சிரிச்சுச் சிரிச்சுக் கேட்டுப்போட்டு, என்ர நியாயத்தை கொச்சைப்படுத்துகினம்.*

*எனக்கு அவேன்ரை அந்த நையாண்டியைத் தாங்க முடியேல்லை. அழத் தொடங்குகிறன் அம்மாவைத் தேடி. நியாயம் வேண்டி. அம்மாவிடமிருந்தாவது நியாயம் எனக்குக் கிடைக்கும் எண்ட நப்பாசையில.*

*எனக்கு எல்லாம் செய்து தருபவள் என் அம்மா. என்னை வண்ணமுறக் காக்கிறவள். என் பக்கம் நியாயம் கூறாமலா விட்டு விடுவாள். அம்மா மேலுள்ள அசைக்க முடியாத நம்பிக்கை.*

*'அம்மா... அம்மா' என அம்மாவைக் கூப்பிட்டு குளறிக் குளறி அழுகிறன். பாலாத்தியந்து அக்காமார் தருகினம். அதெல்லாம் தருவினம். நான் வேண்டாமெண்றன். விடாமல் தருகினம். நான் தட்டி விடுகிறன். பால் விறாந்தையில் சிந்துகிது. அவை எனக்கு அடிக்கினம். பால் சிந்தியதுக்காக. அதுகும் பெண் பிள்ளையாயிருந்து பாலைச் சிந்தினன் எண்டதுக்காக.*

*"பொம்பிளைப்பிள்ளை, பொம்பிளைப்பிள்ளை இப்பிடிச் செய்வியோ, அதுகும் அவா ஒரு பொடியன் எண்டாலும் பறவாயில்லை" எண்டுசொல்லி அடிக்கவே எனக்கு அவைக்கு மேல் ஆத்திரம் அதிகமாகி மூத்திரத்தைப் பெய்துபோட்டன். அதே திண்ணையிலேயே அடி அடி மாறி மாறி அடி. "ஏன் செய்தனி, ஏன் இப்பிடிச் செய்தனி" எண்டு கேட்டுக் கேட்டு அடிக்கினம்.*

*"தாங்க முடியாமல் வந்திது அதுதான். அதுக்கு மூத்திரத்தை பெய்தனான்" எண்டு சொல்ல அவை எல்லாரும் விழுந்து விழுந்து சிரிச்சு "அப்பிடியெண்டால் நீ எனிப் பொடியனாய்த் தான் மாறவேணும்" எண்டிச்சினம். என்ன நான் பொடியனாகலாமா? இந்த இடத்தில் இந்த பொல்லாத பெண் தொல்லையிலிருந்து நீங்க எனக்கு ஒரு ரேணிங் பொயின்ற் கிடைக்கிது. அதைக் கச்சிதமாகப் பிடித்து அப்ப நான் பொடியனாக மாற என்ன செய்யலாம் என அவர்களிடம் அழுகையை விடுத்து ஆவலாய்க் கேட்கிறன். அவையோ விடாமல் ஒரே சிரிப்பாய் சிரிக்கினம்.*

*நான் விடாமல் "சொல்லுங்கோ... சொல்லுங்கோ... நான் பொடியனாய் மாற என்ன செய்யிறது, என்ன செய்யிறது எண்டு தொந்தரவுபடுத்தவே, "அப்பிடியெண்டால் ஒரு ஒப்பிரேசன் செய்யலாம்" எண்ணுகினம்.*

*"என்ன ஒப்பிரேசன் எப்பிடிச் செய்யலாம்" என "உன்ர... வெட்டி இன்னொரு... ஐ வைச்சுத் தைச்சு ஒப்பிரேசன் செய்துவிட்டால் நீ பொடியனாகலாம். நினைச்சதெல்லாம் செய்யலாம், குடிக்கலாம், வெறிக்கலாம், அடிக்கலாம், பறிக்கலாம், வெல்லலாம்."*

*அப்பிடியெண்டால் எங்கை செய்யிறது எப்பிடிச் செய்யிறது அடுத்த என்ர கேள்விகள்.... அவைக்கோ ஒரே சிரிப்புத்தான். அவேன்ரை சிரிப்பு என்னையோ கோவப்படுத்துகிது.*

*பூனைக்கு விளையாட்டு சுண்டெலிக்கு சீவன் போகிது. அவை சிரிச்சு "காசு இருபதாயிரம் ரூபா இருந்தால் ஆஸ்பத்திரியில ஒரு நாளில ஒப்பிறேசன் செய்து விடுவினம். அதோடை நீ பொடி. உன்ர பிரச்சினை முடியுது" எண்டு என்னை ஆசுவாசப்படுத்துகினம்.*

*அப்ப நான் அவேட்டைக் காசு கேட்டு அழுகிறன். "பிளீஸ் give me 2000/ rupees. I want to change my சுச்சி" என கேட்டு கேட்டு அழுதபடி நிலத்தில் பாலுக்கும் சலத்திற்குமிடையில் கிடந்து நித்திரையாகி விடுகிறன். அம்மா ரவுணால வீட்டுக்கு வாறதுக்கிடேலை பொடியனாகி விடும் அவசரத்தில், அவசியத்தில்.*

*இது நான் கண்ட ஒரு கனா, உண்மைக் கனா.*

# துளசி

*காகிதத்தில் கப்பல் செய்து கடல் நீரில் ஓடவிட்டேன்*
*காகிதத்தில் கப்பல் செய்து கடல் நீரில் ஓடவிட்டேன்*
*மணல் மேட்டில் வீடுகட்டி மழைநீரில் நனைய விட்டேன்*
*மணல் மேட்டில் வீடுகட்டி நான் மழைநீரில் நனைய விட்டேன்*
*மணல் மேட்டில் வீடுகட்டி மழைநீரில் நனைய விட்டேன்*

*இப்பாடல் முடிவில் அவள் கண்களிலிருந்து நீர் அருவி யாகக் கொட்டியது. வாடகை வீட்டில் குடியிருக்கும் அவளின் வீட்டு உரிமையாளரின் கண்களில் இவளின் கண்ணீர் தெரிந்து விடுமோ என்ற அங்கலாய்ப்பில் கண்களை அழுத்தத் துடைத்துக் கொண்டாள் துளசி.*

*துளசி குற்றம் பொறுக்காதவள். யார் என்ன அநியாயமாகக் குரல் கொடுத்தாலும் உடனே பொங்கிப் போவாள் அவர்களின் அநியாயத்துக்கெதிராக.*

*ஒருநாள் பஸ்சில் பள்ளிக்கூடச் சிறுவர்களை பாடசாலை முடிந்ததன் பின் ஏற்றிவந்த பஸ் ஒன்றின் நடத்துனர் அந்தப் பிள்ளைகளை முன்பக்கமிருந்து பின் பக்கமாக தான் வந்து காசு வாங்க வரும்போது அந்தப் பாலகர்களை தனக்குப் பின் பக்கமாகவும் சற்று நேரத்தில் அவர்களை முன்பக்கமாகவும் செல்லும்படி அவர்களை நெரித்து நெரித்து அடிக்கடி அங்காலும் இங்காலும் பிள்ளைகளை மாறி தள்ளுவதைக் கண்டு பொறுக் காத இவள்; அவனுடன் பேசுவதற்கு அவனின் பாஷை தனக்குச் சரியாகத் தெரியாத நிலையில் அவனின் அக்கிரமத்தைக் கண்டு அவனை முழுசி முழுசிப் பார்த்தாள். ஆத்தாதவளாய் அவன் வேறெங்கோ பார்த்த போது அவனது வலது முன்னங் காலை தனது வலது காலால் தூக்கி பலமாக உதைந்துவிட்டு எதுவும் நடவாதது போல் நின்று கொண்டாள்.*

கையில் கிடந்த அவனது சில்லறைகள் சிதறிய நிலையில் திடீரென்று ஏற்பட்ட இத்தாக்கத்தை சிறிது நேரம் சுதாகரியாது நின்ற கொண்டக்ரர் சற்று நேரத்தில் தனக்கு ஏது நடந்திருக்கிற தென்பதை உணர்ந்து யார் தனக்கு இப்படி உதைத்தது என்று சற்று பயந்தாலும் காட்டிக் கொள்ளாதவனாய் காட்டுக் கத்தல் கத்தினான்.

அதற்குப் பயந்த சிலர் இவளைத் திரும்பிப் பார்க்கவே தன்னை ஆணென்றும் பாராது உதைத்தவள் ஒரு பெண் என்பதை உணர்ந்து விக்கித்துப் போனானானாலும் “ஆ.. பொம்பிளை, ஒரு ஆம்பிளைக்கு அதுவும் காலாலை உதை யுறியோ, நீ ஒரு பொம்பிளை எண்டபடியால் தான் உன்னை இதிலை விட்டு வைச்சிருக்கிறன். வேறை ஆரும் எண்டால் என்னை உதைஞ்சதுக்கு இப்ப இதிலை செத்திருப்பினம்” எண்டு ஆண் வீரம் பேசினான். மனிதத்தன்மை இல்லாத... துளசி அநியாயங்களுக்கெதிராக எங்கு கண்டாலும் பொங்குவாள்.

ஒரு நாள் அவளது தகப்பன் ஏதோ காரணத்துக்காக சிறு வயதில் (சின்ன வயது என்பதால் காரணம் மறந்து விட்டது) கன்னம் பொழிய அடிச்சுப்போட்டார் தனது மாட்டுக் கையால். அவரின்ர கையைத் தொட்டால் மரமரவென்றுதான் இருக்கும். மண்வெட்டி பிடிக்கிற கைதானே.

குழந்தையின் கன்னத்தில் தந்தையின் நான்கு விரல்களும் பதிஞ்சு போய் கன்றிச் சிவந்துவிட்டது. அடிச்சவர் மறுநிமிடம் தடவி முகம் கழுவி விபூதி பூசிவிட்டாலும் அவள் அந்த சாமியறையில இருந்து அழுது அழுதே ஒரு தீர்மானத்திற்கு வந்தாள்.

எனிமேல் இவர்களுடன் இருந்து சாப்பிடக்கூடாது. இவர்களின் உழைப்பில் வாழக்கூடாது.

எங்காவது போய் வாழக் கற்றுக்கொள்ளவேணும். கற்றுக் கொள்ள வேணும் எனத் தீர்மானித்தவளாய்தான் எங்கு செல்வது எனச் சிந்தித்த வேளை தனிமையில் வாழும் தனது அப்பாச்சியின் வீட்டு நினைப்பு வரவே அவர்தான் தன்னை அன்பாகக் கவனிப்பார் என்று நினைச்சு வெளியேறுகிறாள்.

# ஓ சாரா நீற்றா!

*நீங்கள் எங்கே இங்கே? எப்படி வந்தீர்கள். ஏன் இங்கு வந்தீர்கள் இங்கு?*

*என்னவாயிற்று உங்களுக்கு. ஏன் இப்படி ஆனீர்கள்! இங்கு இதையெல்லாம் எதிர்பார்த்தா வந்தீர்கள் இங்கு.*

*நம்பமுடியவில்லை. இல்லை. இல்லை.*

*இது இப்படி உங்களுக்கு நடந்திருக்கக் கூடாது. இது எதனால்?*

*இதன் காரணம் தான் என்னவோ?*

*அவள் என்னவோ வாடத்தான் செய்தாள்.*

*தனிமை. தனிமை. தனிமை.*

*தொடர்ச்சியான தனிமை. அவள் வாழ்வதோ புதிய பெரிய மாடிவீடு.*

*பளிங்கு மாளிகை என்று சொல்லாவிட்டாலும் ஆள் தன் வீட்டை மிக அழகுற பாங்காக மிகமிக விநோதமான ரசனைக்குட்படுத்தி செம்மையுறப் பராமரித்து வந்துள்ளாள்.*

*அவள் அந்த வீட்டை நேர்த்தி செய்வதிலே மிகவும் அதிகாலையிலேயே சொல்லப்போனால் அதிகாலை 2 மணிக்கும் எழுந்து ஒவ்வொரு நாளும் கூட்டி காலை மாலையும் கீழ்வீடு மாறி மேல்வீடு மாறி மொப் பண்ணி பாத்திரம் பண்டங்கள் கழுவி ஒழுங்கு பண்ணி ஏதோ தன்னாலான மருத்துவ உணவு தயாரித்து உண்டு தன் பணிமனை நோக்கிப் போவாள்.*

*அங்கும் அவள் தன்கடமையில் தவறாது வீடு வரும் விருந்தினருடன் அன்பாய்க் கதைத்தும் தன் பொழுதை ஓட்டி வந்தாள்.*

*இருப்பினும் அவளது லீவு சனி, ஞாயிறு தினங்களில் தன் பணிமனை செல்லும் தம்பதியினர் வீட்டிலிருப்பதால் இவள் தன் வீட்டிலே ஓய்வையும் எடுத்து வந்தாள்.*

*ஓய்வில் கிழமை நாட்களில் செய்ய முடியாத வேலை களையும் செய்து உடுப்புகள் கழுவி பூந்தோட்டம் துப்பர வாக்கி கல்லுகள் புல்லுகள் பிடுங்கி பொறுக்கி தன்வீட்டைக் கோயிலாக்கி முழு எண்ணெய் ஸ்ஞானம் செய்து தன் உடலழுக்கையும் நீக்கி புத்தகங்களை வாசிப்பதால் தன் மன விளக்கிற்கு தன் உயிருக்கு ஒளியூட்டி தெய்வீகக் களையுடன் வாழ்வாள்.*

*இருப்பினும் அவ்வப்போது அவள் மனமென்னும் மேடை யில் எரியும் அகல்விளக்கின் ஒளி களிநடனம் புரிந்தாலும் சுடர் அடிக்கடி அங்கும் அலைந்து அணைந்து இருள் மனதில் புகத்தான் செய்தது.*

*அவ்வேளைகளில் அவள் கண்ணீர் விட்டு அழத்தான் செய்தாள்.*

*அவள் வாழ்வில் வசந்தம் நிலவினாலும் அவள் கடவுள் என்னும் கருத்தில் முற்றுமுழுதாக நம்பாதவளாக இருந்தாலும் அவளைத் துன்பங்கள் வந்து தடவிச் செல்லும் போது எல்லோரையும் போன்ற பழக்க தோஷத்தால்...*

*ஆண்டவரே என் மனம் ஏன் இவ்வாறு தடுமாடுகின்றது!*

# இராஜதிருமணம்

*1*

இன்று திருமண நாள். எங்களுக்கு ஒரு திருமண அழைப்பிதழ் வழங்கப்பட்டிருந்தது. கைபிடியற்ற அரைவட்ட வடிவிலான விசிறி போன்ற அமைப்பு. அந்த அழைப்பிதழுக்கு எவ்வளவு செலவு போயிருந்தாலும் அதிலொரு பிள்ளையாரும், முகப்பில் வீற்றிருந்து அரசோச்சிக் கொண்டிருந்தார்.

கச்சிதமாக இருந்த அழைப்பிதழினுள்ளே ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் சுபமங்களகரமான சர்வசித்து வருடம் கார்த்திகைத் திங்கள் 30ம் நாள் (16.01.2008) ஞாயிற்றுக்கிழமை ஸப்தமி திதியும்... என கூடிய பகல் 9.05 மணி முதல் 10.30 மணிவரையுள்ள... இலக்கின சுபவேளையில் திருநிறைச் செல்வன் ...ற்கும் திருநிறைச் செல்வி ...ற்கும் நடைபெறும் திருமணத்திற்கு எம்மை குடும்ப சமேதராய் வந்து வாழ்த்திச் சிறப்பிக்குமாறு வேண்டப்பட் டிருந்தது. இடம் அமீர் மகால், இல. 4, றோகினி றோட், கொழும்பு 6. (1-ம் மேல் மாடி) என இருவீட்டார் அழைப்பாக எங்கள் நண்பர் இராஜாவின் குடும்பத்தினர் எமக்கு வழங்கியிருந்தனர்.

கட்டாயம் நாங்கள் போகவேண்டிய கலியாணம். மிகவும் வேண்டப்பட்டவர்கள். இந்தத் திருமணத்தின் மணமகன் உள்ளூரிலேயே தெரிவாகியிருந்தார். வெளிநாட்டை நோக்கி மணமகனின் குணத்தின் நல்லது கெட்டது ஆராயப்படாமலே பெண் பிள்ளைகள் பயணமாக்கப்படும் இக்காலத்தில் இது ஒரு மாற்றம். இது வரை கொழும்பில் நடைபெற்ற கல்யாணங்களில் எதுவும் உள்ளூர் மாப்பிள்ளைகளின் கல்யாணமாக இருந்த தில்லை. இந்த மாப்பிள்ளை என்ன உத்தியோகமோ நானறிய முயற்சிக்கவில்லை.

காலைச் சமையலைப் பிள்ளைகளுக்கு முடிச்சுவிட்டு அவசரமாய் உடுத்தி கலியாண வீட்டுக்குப் போறம் எங்கடை காரில. வாசலில மகரதோரணம் கும்பம், அலங்காரம், பூவேலைப் பாடுகள், உள்ளே தாமரைப் பூவாலை கோலம் அலங்கரிக்கப் பட்டு ஒரு இளம் ஜோடிகள் ஆணும் பெண்ணுமாக எமக்கு பொட்டிட்டு கௌரவித்து உள்ள கூட்டிக்கொண்டு போகினம்..

அவர்கள் எங்களைக் கூட்டிச் சென்ற அரைத்தூரத்தில் எங்களைக் கண்ட ஒரு பெரியவர் நஷனலும் பட்டுவேட்டியும், சால்வையும், மொட்டைத் தலையுமாக ஓடோடி வந்து என் கணவரைக் கட்டிப் பிடித்து எங்கள் சுகம் விசாரிச்சு இருக்கை யில் இருத்தி எங்களுடன் இருந்துவிடுகிறார். அவர் எம்மைக் கண்டு இருபது வருடங்கள். எங்களுடன் அளவளாவியபடியே தன்பணி மறந்து வருபவர்களை வரவேற்று கதிரையில் அமர்த்தி விடுகிறார்.

சற்று நேரத்தில் வேறும் ஒருவரை அவ்வாறே ஓடிச்சென்று வரவேற்று எம் கதிரைக்குப் பக்கத்தில் கொண்டு வந்து அமர்த்து கிறார். அவரும் எங்கள் பழைய நண்பரே.

நான் அங்கிங்கு கண்களைத் துளாவ விடுகிறன். எல் லோரும் வடிவான பெண்கள். சர்வ அலங்கார பூசிணிகள். பார்ப்பதற்குக் கண்ணைத் தூண்டும் அழகு, நளினம், மென்மை, அன்பு. எல்லார் கைகளிலும், காதுகளிலும், கழுத்துகளிலும் வண்ண வண்ண நகைகள் மின்னின. நகைக் கடைகள் போன்று எனக்கொரு பைத்தியம் இருக்குது அழகுணர்ச்சி. எந்தப் பொரு ளிலும் அழகைக் கண்டு ரசிப்பது. அது பூவாயிருக்கட்டும், பொட்டாயிருக்கட்டும், பொன்னாயிருக்கட்டும், பட்டாயிருக்கட் டும், இளம் பெண்ணானாலும், ஆணானாலும், கிழடானாலும் எல்லார் செய்காரியங்களையும் இருந்து கூர்ந்து கவனிப்பன்.

ஓர் இளம்பெண் ஓடி ஓடி எல்லாரையும் கவனிக்கிறா. அவவும் தன்னை நன்கு அலங்கரித்து ஆனால் நடையில் மின்னல் துள்ள அங்கும் இங்கும் ஓடி எல்லா அலுவல்களும் அவவின் தலைமையில்தான் நடைபெறுவதாக எனக்குப் படுகிறா. அவா தன்னை நன்கு அலங்கரித்திருந்தாலும் தன் அலங்காரத்தில் கவனமின்றி தன் வேலையில் குறியுடன் செயற்படுகிறா ஓர் ஆண்மகன் போல். அவா, மணமகனின் தங்கையாம். நல்ல ஆளுமையாக மகளை வளர்த்திருக்கிறதைப் பார்க்கச் சந்தோசம்.

இன்னொரு பெண் மிகவும் குறைந்த அலங்காரம். பழம் இலக்கியங்களில் கூறப்பட்ட பெண்ணின் மென்மையுடன். அவாவும் மறுபக்கமாக தன் கடமையில் வந்தாரை கௌர விப்பதில் நேர்த்தியாகச் செயற்படுகிறா. இருவரும் என் கண்ணுக்கு விருந்தாகிறார்கள்.

அவர்களுடன் வேறும் பல பெண்களை நான் நோட்ட மிடுகிறன். எல்லோரும் தான் அழகு, அலங்காரம், அலங்கார மின்மை எனப் பல வடிவங்களில் இருந்தாலும் எல்லோரிடத்தும் நான் ஒரு பொதுத்தன்மையை நன்கு உணரக்கூடிய தாயிருந்தது. அதுதான் அகங்காரமின்மை. எல்லார் முகங்களிலும் எளிமை, அன்பு, பாசம், கடாட்சம் இவையெல்லாம் தெய்வங்களிடம் தான் இருப்பதாகப் பலர் பேசிக்கொள்வார்கள். ஆனால் நேரில் மனிதரில் கண்டேன்.

ஒரு சபையில் ஆட்கள் கூடும்போது என்னைப் பார் என் அழகைப்பார் என்ற தோரணை யார் முகத்திலும் தென் பட்டதாக எனக்குத் தெரியவில்லை. சில வேளை என் முகத்தில் யாருக்கேனும் இது தென்பட்டிருக்கலாம். ஏனெனில் என்னிடம் அப்படியானதொரு சாடையான மிதப்புக்குணம் இருக்கிறதாய் எனக்கு என்ர மகள் குத்திக் காட்டுவா.

அவ்வளவு நல்ல சனங்கள். எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி. நல்ல மனிதரைக் கண்டதில். அதே சமயம் எவ்வாறு இவர்கள் எல்லார் மனதிலும் ஒரே பேதமற்ற புன்னகை என நான் யோசிச்சன்.

கூறைச்சேலை மாற்ற உள்ளுக்கு அழைத்துச் செல்லப்பட்ட மணப்பெண் மேடைக்கு வந்தா. முக்காடு நீக்கப்பட்டு தாலி கட்டியாகிவிட்டது. சபையினர் மலர் தூவி ஆசீர்வதித்தனர். மணமகளின் அலங்காரம் அவவுக்கு நன்கு பொருந்தியிருந்தது. நடிகை ஸ்ரேயா மாதிரித் தோற்றமளித்தாள்.

மணமகளின் கண்களில் கண்ணீர். மணமகள் மேடையில் ஐயரின் மணச் சடங்குகளில் கண்ணும் கருத்துமாக இருக்கும் வழமையான மணப்பெண்கள் போலன்றி மணமகனையும் மாப்பிள்ளைத் தோழனையும் மேடைக்கு முன்பாக ஆரையோ வையும் அடிக்கடி பார்த்து கண்கள் பளபளக்க மூக்கை பேப்பர் ரிசுவால் தன் அலங்காரப் பூச்சுகள் கலையாமல் ஒற்றி ஒற்றி எடுக்கிறா.

*கண்கள் கொவ்வைப் பழங்களாகின்றன. பொம்பிளை அழுகிறா, பொம்பிளை அழுகிறா என்ற கதை சபையில் ஒன்றிரண்டு குரலாக வெளிக்கிடுகிது.*

*சபையைத் திரும்பிப் பார்த்தால் சபையெல்லாம் கண்கள் குளமாக எல்லோரும் தங்களுக்குள் அடக்கி அடக்கி விம்முகிறார்கள்.*

*மணமேடையைப் பார்க்கிறன். ஓ... மாப்பிள்ளைத் தோழனின் கண்கள் செவ்வரிசியாகி விட்டன. மணமேடையின் முன்னே ஒரு தாய் வயதை உடையவள் தன் கண்களை அடிக்கடி தன் கைக்குட்டையால் ஒற்றுகின்றாள். வீடியோக்காரர்களுக்கு நடை பெறும் நிகழ்ச்சியை அப்படி அப்படியே படம் எடுக்கும்படி நிபந்தனை வழங்கப்பட்டிருந்தது.*

*அவர்களின் வழிநடத்துதலுக்கு அதாவது சடங்குகளில் அவர்களின் ஆதிக்கத்துக்கு தடைவிதிக்கப்பட்டிந்தது. காட்சிகள் படமாக்கப்படுகின்றன. பல கோணங்களில் பல கமராக்கள்.*

*ஓ... இவர்தான் மணப்பெண்ணின் தாய். அதுதான் அந்த மணப்பெண். அடிக்கடி மணமேடையின் முன்பக்கத்தைப் பார்த்துக்கொண்டு இருந்திருக்கிறா. அவாவும் நல்ல வடிவு. நெடிதுயர்ந்த தோற்றம். பட்டுவேட்டிக் கலரில் அம்பலவி மாம்பழத்தின் சதையின் கலரில் அகல போடர் போட்ட நல்ல வடிவான விலையான சாறியும் அதே கலரில் பிளவுசும் கழுத் தில் ஒரு மெல்லிய சங்கிலியும், மெல்லிய அளவான முத்து மாலையும் போட்டு மிகவும் அழகாகத் தெரிகிறார். எடுப்பான தோற்றம். சபையில் எல்லார் கண்களுக்கும் அகப்படும்படியான ஸ்மாட் உயரம் ஒரு ஐந்து அடி ஐந்து அங்குலத்திற்கு மேல் இருக்கும். சாடையான பொது நிறம். தீட்சண்யமான கண்கள்.*

*எல்லோருடனும் சகஜமாகப் பழகும் உயரிய குணம் கொண்டவராக உள்ளார். ஆனால் அதே சமயம் அவர் அவரின் மகளின் திருமணத்தில் மணமேடைக்குப் போகாமல் மற்ற ஆக்கள் மாதிரி கதிரையில் வெறுமனே ஒரு பொறுப்பும் ஏற்று கடமை செய்யாதிருப்பது அன்னியமாகப்படுகிறது.*

*தாலி கட்டியாயிற்று. மணமகள் அழுகிறார். எந்த ஒரு கல்யாண வீடுகளிலும் இல்லாத மாதிரி மாப்பிள்ளைத் தோழ னும் (மணமகளின் சகோதரன்) மூக்குச் சிவக்க அழுகிறார். தாயார் அழுகிறார். சபையோரும் உட்பட ஏன் எல்லார் கண்களிலும் குளம்.*

*பின் அறுகரிசி போடும் நேரம் ஆரம்பமாகின்றது. மண மகனிற்கும் மணமகளிற்கும் தாய் தகப்பனாக நடித்த அவர் களிலும் விட ஆறு வயதாவது குறைந்த அன்றைய நாள் அம்மா அப்பா ஆனவர்களின் கால்களில் வீழ்ந்து புதுமணத் தம்பதிகள் ஆசீர்வாதம் வாங்கி அறுகரிசி வாழ்த்துப் பெறுகின்றனர். வேதம் 'சகலதும்' அறிந்த பிராமணரின் வழி காட்டலின் கீழ்.*

*அதன் பின் மணமகனும் மணமகளும் கையில் தட்டத் துடன் அறுகரிசியுடன் மாப்பிள்ளைத் தோழன் வழிநடத்த மணமகளின் தாயாரின் கால்களில் வந்து வீழ்ந்து விடுகின்றனர். கண்கொள்ளாக் காட்சி.*

*சபையோருக்கு மணமக்களின் பெற்ற தாயாரை மண மேடைக்கு ஏற அந்த மேடையில் பிராமணியம் தடுத்து விட்டது. எனவே மணமக்கள் ஐயரின் சடங்குகள் முடிய தம் பெற்றாரின் இருப்பிடத்திற்கு இருவரும் இறங்கி விடுகின்றனர். இது பெற்ற தாயை மணமேடைக்கு ஏறி வாழ்த்த விடாத பிராமணியத்தின் பழம் கருத்துக்கு வீழ்ந்த அடி. சபையினர் சந்தோஷத்தில் பூரித்து விடுகின்றனர்.*

*இத்தனையும் நான் என் கண்களால் நேரில் கண்ட காட்சி. இன்று நேரில் வாயடைத்துப் போனேன். இந்த இடத்தில் இந்தக் குடும்பத்தினரின் பின்னணியை நோக்கி நினைவு போகிறது.*

*அவர்கள் யாழ்ப்பாணத்தில் பழைய மரபுகளால் பின் தள்ளப்பட்டவர்கள் எனக் கருதப்பட்டவர்கள். ஆனால் அவர் கள் இப்போது எத்தகைய முற்போக்கான வேலையை தமது விதவைத் தாயைக் கனம் பண்ணி செய்துள்ளனர்.*

*உலகத்தில் எந்தத் தாயாவது தான் விதவையாயிருந்தாலும் தன் மக்கள் நன்றாக வாழ வேண்டும் என்று வாழ்த்த மாட் டாளா? அந்தத் தாய்மார்கள் எத்தகைய முற்போக்கானவர்கள்.*

*தந்தையார் இறக்க அவர் விட்ட இடத்திலிருந்து அந்தக் குடும்பத்தை மேல் நிலைக்குக் கொண்டு வந்தவர்களல்லவா அவர்கள்.*

*அப்படி இருக்க அவர்கள் அம்மா அப்பாக்கு... சொறி அப்பா அம்மாவுக்கு. மறந்து போய் அம்மா அப்பா என முதலில் அம்மாவின் பெயரைப் போட்டு விட்டேன். பழமையை மதிக்காது.*

ஆசீர்வாதம் பெறுதலில் அறுகரிசி போடலில் முதலிடம் என்பது எந்த வகையில் பொருந்தும். இந்த விதவைத் தாய்மாரி டம் ஆசீர்வாதம் பெற்ற இடத்திலிருந்து கல்யாண சீன் உச்சக்கட்டம்.

கலியாணத்துக்கு நாதஸ்வரம் வாசிக்க வந்த இசைக் கலைஞர்கள் "ஆசைப்பட்ட எல்லாத்தையும் காசிருந்தால் வாங்கலாம். அம்மாவை வாங்க முடியுமா? நீயும் அம்மாவை வாங்க முடியுமா?" என முதலில் கரிசல் குயில் ஒலிப் பேழையில் வந்து தற்போது சினிமாவில் பாடிய அந்தப் பாடலை வாசிக்கின்றார்கள்.

சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமாக எல்லார் காதுகளிற்கும் இதுவரையும் கேட்க மறந்த நாதஸ்வர இசையில் இந்தப் பாடல் வாசித்ததும் அந்த இசையுடன் அந்தச் சந்தர்ப்பத்தில் அனை வரும் ஒன்றித்தனர்.

அதாவது ஐயர் மணமகளினதும், மணமகனினதும் பெத்த தாயாரை விதவையை, மணமேடைக்கு ஏறவிடாது தடுத்து அந்த மணமகன் மணமகளினதும் உற்றார், உடன் பிறந்தார் மனங்களில் துடித்துக் கொண்டிருந்த அந்த சோக நிகழ்ச்சிக்கு பிராயச் சித்தம் தேடியாகி விட்டது. அதுதான் அந்த 'ஆசைப் பட்ட எல்லாத்தையும்...' பாடலை இசைத்து பிராமணியத்தின் சம்பிரதாயக் கொடுமையின் கடுமையைக் குறைத்து விட்டது.

எல்லாம் கற்ற பிராமணியத்திற்கு புரியாத மனிதநேயம் 'விதவைத் தாயை மதித்தல்' மூலம் நாதஸ்வரம் எனும் கலையை படித்த நாதஸ்வர கலைஞனுக்குப் புரிந்துவிட்டது.

அதன்பின் வழமை போலவே உறவினர் அளவளாவுதல், ஒன்றுகூடல், உணவுபரிமாறல் என சகலதும் நடைபெற்றது.

ஆனால் எந்த ஒரு வழக்கமான கலியாணங்களையும் விட ஆடம்பர செலவில் குறைவில்லாவிட்டாலும் எங்கும் எதிலும் எல்லோரிடத்தும் ஒரு அமைதியின்மை.

இது எல்லா இடங்களிலும் நடக்கின்ற பிரச்சினைதான். இதுக்கு ஏன் அலட்டிக் கொள்வான் என்று சிலர் பேசுவது என் காதுகளில் கேட்கிறது.

ஆம் கடந்த வருடம் மிகவும் திடகாத்திரமாக இருந்த மண மகளின் தகப்பன் எங்கே? அவர் எவ்வாறு மரணமானார்?

செயற்கை மரணம் ஏன் ஏற்பட்டது? காரணம் என்ன? அந்த வாழவேண்டிய வைர மரத்தை வளரவிடாது, வாழ விடாது அழிக்கின்ற, மரங்களின் எண்ணிக்கை கூடி நாளடைவில் ஒவ் வொன்றாக இடையில் தமிழன் என்ற தோப்பு தனிமரங்களாகப் போய் விடாதா?

இனி இந்த குடும்பம் என்ற மரத்தின் நாற்றுக்கள் இங்கே பயமின்றிப் பயிர்செய்யப்படுமா? அந்நிய மண்ணிலல்லவா இவை பதிவைக்கப்படப் போகின்றன.

ஏற்கெனவே எமது தாயக மண்ணில் மக்களின் பெருந் தொகையான விருட்சங்கள் என்ன என்ன காரணங்களுக் காகவோ அந்நிய நாடுகளுக்கு அனுப்பப்பட்டு விட்டனவே.

2

ஏன் இந்த நிலை? இந்த நிலை தொடரத்தான் வேண்டுமா?

இந்த வைரம் பாய்ந்த நின்று நிலைத்து சமூகப்பணி ஆற்றிய நாற்பத்தெட்டு வயது ஆண் பனையை குறுக்கத் தறித்துப் போட்டவர்கள் யார், இவரைத் தறித்ததால் அவர்களுக்கு விளைந்த பயன்தான் எனன?

இந்தக் குடும்பத்தை இதுபோன்ற பல குடும்பங்களின் அங்கத்தவர்களை இடையில் அரிந்து வீழ்த்துவதால் சமூக நலன்கள் விளைந்ததா? விளைந்திடுமா?

ஒருவர் எங்கள் கருத்துக்கு முரண் என எங்களுக்குத் தெரிந்தால் அவரைக் கருத்தாலே வெல்லாது எங்கள் வழிக்கு மாற்றாது எமது ஆளணியைப் பெருக்காது மாறாக இடையில் அறுத்து நம் நாட்டில் இருந்த செல்லடிக்கும் குண்டடிக்கும் தப்பிப் பிழைத்து நம் நாட்டில் வாழ்ந்த மரமல்லவா இந்த மரம்.

ஏன் அவர்களாலும் இந்த யுத்தத்தின் கோரத்திற்குப் பயந்து நம் நாட்டிலிருந்து வெளியேறியிருக்க முடியாதா? மனிதன் இன்றி வெறுமனே மதம், மொழி, பண்பாடு என்பவற்றை மட்டும் கொண்டு நம் தாயகம் காக்க ஏலுமா? நல்ல தைரிய மான மரங்கள் நம் நாட்டுக்குத் தேவை. பயந்த கோரைப் புற்கள் பகட்டுப் போதாதா?

எனவே எம் இனிய நண்பர்களே, இது ஒரு வேண்டுகோள். களையப்பட வேண்டியவை, மனித உயிர்களல்ல. மூடப் பழக்க

வழங்கங்களே. எல்லோரையும் கருத்துக்களால் வென்று மேல் நிலைக்கு வாருங்கள்.

தந்தையை அவலமாக இழந்து அந்தரித்து தன் பிள்ளை களைக் கரைசேர்க்கும் போது அதுகள்— விதவைகள் கண்ணீர் விடாது தம் பிள்ளைகளின் சடங்கில் மனச்சங்கோசமின்றி கடமையைப் புரியட்டும். யுத்தத்தின் கொடூரங்களால் தவிர்க்க முடியாதபடி நாம் வடிக்கும் கண்ணீர் போதாதா? போதும்.

எனவே சாதி, சமயம், சம்பிரதாயம், வர்க்க பேதம் பேசாது மனித மனங்களை இனியாவது மதிக்க நினைப்போம். மாறட்டும் மனித மனங்கள்.

இந்தத் திருமணத்தில் முக்கியமாகக் குறிப்பிடப்பட வேண் டியது, இங்கு வந்த உறவினர்கள் எல்லோரும் பரஸ்பரம் ஒருவருடன் ஒருவர் நன்றாக மனமும் முகமும் மலர்ந்து பேசிக் கொண்டார்கள்.

எங்கள் உறவினரின் திருமணங்களில் முகமனுக்கே நாங்கள் சிரிப்போம். கண்டிட்டமே எண்டதுக்காக அவர்கள் போட்ட உடுப்பையோ, நடப்பையோ கூடிப் பார்க்க மாட்டோம். நாம் அவர்களிலும் எமது அந்தஸ்தில் தாழ்ந்துவிட்டோமா, அல்லது அவர்கள் உயர்ந்து விட்டார்களோ எனப் பயந்து விடுவம்! இதுவும் இத்திருமணத்தில் இங்கு குறிப்பிடப்பட வேண்டியது.

இது ஓர் எஜமான் வீட்டுத் திருமணம் போன்று நடந்த தென்பதையும் இங்கு குறிப்பிட்டே ஆக வேண்டும். பல்வேறு சாதியினரும் வந்து சம்பந்தி போசனம் அருந்திச் சென்றனர். இது கொழும்பெண்டதாலேயோ தெரியாது.

இந்த இடத்தில் மலையகத்தில் அப்புத்தளையில் ஒரு திருமணம் கடந்த மாதம் நடந்தது. ‘திருமணம் ஒன்றும் மலர்களின் படுக்கை மட்டுமல்ல. முட்களும் இருக்கும்’ என்ற நிஜவாழ்வின் அர்த்தம் தெரிந்த பல சுலோகங்கள் தொங்க விடப்பட்டு அலங்கரிக்கப்பட்டிருந்த அந்த மேடையில் மணமகனான ஏழை ஆசிரியன் தனது ஏழை விதவைத் தாயை மணமேடைக்குக் கூப்பிட்டு கௌரவித்து தனது திருமணப் பதிவிற்கு சாட்சிக் கையெழுத்துத்திட வைத்திருக்கிறார்.

இதே இடத்தில் நாம் உயரிய நிலையிலுள்ளதாகக் கூறப் படும் யாழ்ப்பாண சமூகத்தின் வளர்ச்சிப் போக்கையும் வறுமைக்

கோட்டின் கீழ் வாழ்க்கை நடத்தும் முற்போக்கு மலையக சிந்தனையாளரின் மனவளர்ச்சிப் போக்கையும் கவனத்தில் எடுத்தல் வேண்டும்.

சிலவேளை இது மணமகளின் தாய் விதவை எனில் இந்த வகையில் விதவைத் தாய் கையெழுத்து வைத்திருக்க முடியுமோ? என்பது கேள்விக் குறி. எனினும் திருமணச் சடங்குகளின் போது எங்கோ ஓர் விதவைத் தாய் கௌரவிக்கப்பட்டிருக்கிறார்!

# ஆண்டாள் பாசுரங்கள்

*உனக்காக என் பக்கத்து இருக்கை எப்பவுமே காத்துக் கொண்டிருக்கிது. என் தோள்பையின் கனதியுடன். என் தோள் பையின் சுமையை கதிரை தாங்குகிது அப்போது. என் மனச்சுமையை தாங்குவது நீ எப்போது?*

*வருவாய் வருவாய் என என் கண்களை அவ்வளவு சபையோர் மத்தியிலும் தேடுவன். உன் வரவை வேண்டி. நீ ஓர் தலையசைப்புடன் அங்கேயே இருக்கின்றாய். நான் வந்த நேரம் தொட்டு போகும் நேரம் வரை எவ்வளவு நாட்களாக.*

*என்னை முதல் முதலில் நீ சந்தித்த நாளில் என் அருகில் நீ வந்தமர்ந்தபோது 'நான் உங்களிடம் இந்த நெருக்கமான இருக்கையை என்றும் எதிர்பார்க்கவில்லை' எனக் குறிப்பிட்ட போது எட்டு அடி தூர இடைவெளியில் இருந்த 'என் கண்கள் உன்னை என்னை நோக்கி வரும்படி அழைத்ததாக' பொருள் கொண்டதாகக் கூறினாய். உண்மையில் நான் உன்னை என் கண்களால் என் அருகில் வா என அப்படி அழைப்பெதையும் விடுக்காதபோதும் உன் அருகாமையை நான் தவிர்க்கவில்லை. உன்மீது நான் கொண்ட நம்பிக்கையில் உன் மன விருப்பை மதித்து! இந்த நம்பிக்கையே ஒவ்வொரு பெண்ணும் தன் வாழ்நாளில் தோல்வியைத் தழுவும் சந்தர்ப்பமாக அமைந்து விடுவதை யாரும் மறுக்க முடியாது.*

*ஆனால் அதன் பின் நீ எங்கு இருந்தாலும் என் அருகில் ஒரு இருக்கையை எப்போதும் ஒதுக்கி வைத்திருப்பேன் உன் அருகாமையை விரும்பி. நீயோ ஏனையோருடன் கூட இருந்து விடுவாய். நானும் சரி சரி உன் அருகாமை வீட்டில் கிடைக்கும் தானே என நீ வேலைக்குச் சென்று மாலையில் நாங்கள் அரங்குகளில் சந்திக்கும்போது உன் பிரிவின் துயரை இன்னும் ஒரு மூன்று மணித்தியாலத்திற்குத் தள்ளிப் போட்டு விடுவேன்.*

*இதேவேளை உன் நண்பர்கள் கணவன் மனைவியினர் ஒரே இடத்தில் வேலை செய்பவர்களே ஒரு சேர வந்து அல்லது முன் பின்னாக வந்தும் ஒன்றாக இருந்து ஒன்றாக கலந்துரையாடி கருத்துக்கள் பரிமாறுவதை நீ கண்டதில்லையா?*

*அதைவிட இப்போது யார் செய்த தவறோ உன்னையும் என்னையும் ஏதோ ஒன்று பிரித்து வைத்து 21, 22 நாட்களாக நான் வேறு கூட்டில், நீ வேறு கூட்டில் வாழ்வது உன் மனதிற்குள் படவில்லையா.*

*என் மூக்கைப் பதம் பார்க்கும் அளவிற்கு மற்றவனின் கைத்தடி நீளும்போது அத்தடியின் தாக்கத்திலிருந்து தப்புவதற்கு சற்றுத் தள்ளி நிற்போம் வா என்றேன். வர மறுத்தாய்.*

*என் போராட்ட முடிவில் என்னுடன் தனி வீடு வாடகை வீடு என்னைத் தனித்துத் தேட வந்தாய். நல்லதொரு வீடு கிடைத்த இடத்தில் வீடெடுக்கும் போது எவ்வாறெல்லாம் கதைக்கக் கூடாதோ அவ்வாறெல்லாம் கதைத்து நீ பேசியவற்றை நான் இதில் கூறி அம்பலப்படுத்தி உன்னை அம்பலப்படுத்த விரும்பவில்லை. என் திட்டத்தை திசைமாற்ற யோசித்தாய்.*

*பின் ஒரு இடத்தில் உன் தொழிலின் நிமித்தம் உனக்கு வீடு தர வீட்டு உரிமையாளர்கள் மறுப்பதாகத் தெரிவித்து என்னை மீண்டும் தனித்து வீடு தேடப் பணித்தாய். உன் தொழிலுக்கு மதிப்புத் தந்து வீடு தர முன்வந்தபோது அந்த வீட்டையும் மறுத்தாய்.*

*என்னுடன்கூட கூடிவாழும் வாழ்வை கேள்விக்குறி ஆக்கினாயா? உனக்கு என்னுடன் சேர்ந்து வாழ விருப்பம் இல்லை என்பதை மட்டும் நீ பூரணமாக ஒதுக்க ஏலாது. ஏனெனில் உனக்கு என் அருகாமை வேண்டும். அதை நான் உன் மனைவியாய் இருப்பதால் நன்கறிவேன்.*

*உனக்கு என் துணை வேண்டும் போதெல்லாம் உடன்பட்ட எனக்கு உன் துணை வேண்டும்போது நீ எனக்கு உடன்பட மறுப்பதேன். எம்மைப் பிரித்து வைத்து சுவைகாணும் அந்நியன் ஒருவனின் திட்டம் அறியாது அவன் பசப்பு வார்த்தையில் மயங்கிப் போயிருக்கும் உன் அறியாமையை நீயாய் உணர்ந் தாலன்றி நான் சொல்லி நீ புரிந்து கொள்வாய் என்ற நம்பிக்கை எனக்கு விட்டுப் போய்விட்டது. இருந்தும் உன் பிரிவால் என் மனம் விம்முகிறது.*

*பெற்ற குற்றத்திற்காய், கட்டிக் கொடுத்த பாவத்திற்காய் பிள்ளையை இழந்து நிற்கும் எவருக்கும் என் கதை நல்லதொரு பாடமாய் அமையட்டும்.*

*எனிமேல் என்னுடன் நீ கதைக்க வேண்டாம் போலிருக்கு. இது எல்லா உரிமைகளும் மறுக்கப்பட்ட உன் மனைவியின் பாசுரம். பிரிவுத் துயரால் நான் என் வீட்டிற்கு நிரந்தரமாய் என் தடை அகலாதவரை தங்க வருவேன் என யாரும் கனவிலும் நினைக்க வேண்டாம்.*

*இலங்கையில் இன்று எத்தனையோ பெற்றோர் தம் வீடுவாசல் மனைவி, கணவன், பிள்ளைகள், உற்றார், உறவினர்களை இழந்து நிற்கவில்லையா! அவர்களில் நானும் ஒருத்தியாய் அவ்வப்போது கவலை மேலிடும்போது கண்ணீர் சிந்தி வாழ்ந்து முடிப்பேன்.*

*என் மகனின் மன அமைதிக்காகவே நான் கொழும்பு வாழ்க்கையைத் தெரிவு செய்துள்ளேன் என்பதும், ஒரு பக்க உண்மை.*

*எனி நானும் நீயும் சந்திப்பது எந்த பொது அரங்கிலுமாக இராது என்பதையும் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.*

*என் எல்லா வேலை வாய்ப்புகளும் அரச பணி, வீட்டுப்பணி பறிபோனது என் பிள்ளைகளால்.*

*என்னால் என் பிள்ளைகளுக்காக உனக்காக வாழ முடியாது. எனக்காக மட்டும் வாழ்வது கஷ்டமாக இருக்கிறது.*

*என் நாதனே ஆண்டாள் பாசுரத்தில் ஒரு பெண்ணின் காதலனின் பிரிவுத் துயர் நன்றாக வடிக்கப்பட்டிருக்கிறது. இப்படி பெண்களின் மன உணர்வுகள் வேறெங்கும் கொட்டித் தீர்க்கப்படவில்லை.*

*இவ்வாறு ஒவ்வொரு பெண்களின் தேவைகள், உணர்வுகளும் பேசப்பட வேண்டும் என்று எங்கெங்கும் பெண் விடுதலைக் கூட்டங்களில் பேசப்படுவதைப் பேசுவாயே!*

*இப்போ எங்கே போய் விட்டது உன் பெண்களுக்கான உரிமைக் குரல்.*

# றோசாப்பூ

பூவெண்டால் எனக்கு நல்ல விருப்பம். அதுவும் றோசாப் பூவெண்டால் கொள்ளை ஆசை. முந்தி நாங்கள் சின்னப் பிள்ளையளாய் இருக்கேக்கை றோசாப்பூத் தெரியாது. அரிவரி தமிழ்ப் பாலர் பாடப் புத்தகத்திலை பூவன்னா எண்ட தமிழ் எழுத்தைப் படிக்கிறதுக்கு றோசாப்பூ படத்தை கலரிலை போட்டிருப்பாங்கள். அதிலை தான் றோசாப்பூவைத் தெரியும்.

பேந்து மூண்டாம் வகுப்பு படிக்கேக்கை எங்கடை அரிவரி ரீச்சர் கண்மணி வாத்தியார் வீட்டிலை, றோசாப்பூ பூத்திருக்கெண்டு ஒரு பொடியன் வந்து வகுப்பில எல்லாருக்கும் சொன்னான். நாங்கள் அதை நம்பேல்லை. ஏனெண்டால் றோசாப்பூவெண்டால் அது இந்தியாவிலை தான் பூக்கும் எண்டொரு நினைப்பு எங்களுக்கு. ஏனெண்டால் அதுவரை எங்களிலை ஒருத்தரும் கண்டில்லை. எங்கடை பெற்றாரும் இந்தியாவிலதான் இருக்கு எண்டு எனக்கு சொன்னதா நினைப்பு.

அவன் சொன்னதை நாங்கள் நம்பேல்லை எண்ட உடனை அவன் தான் றோசாப்பூவை உண்மையிலை காட்டினால் என்ன தருவியள் எண்டு எங்களோடை பந்தயம் கட்டினான். நாங்கள் எல்லாருமாய்ச் சேர்ந்து பத்து சதம் தாறதாய் ஒப்புக் கொண்டு (அப்ப பத்து சதத்துக்கு என்னென்னவெல்லாம் வேண்டலாம் எண்டதும் எங்களுக்கு தெரியாது) மத்தியானம் பள்ளிக்கூடம் விட்டாப் பிறகு கண்மணி ரீச்சர் வீட்டு வாசலடிக்கு பட்டி கட்டிப் போறம்.

அங்கை போய்ப் பாத்தால் அவையின்ர முத்தத்திலை அவன் சொன்ன மாதிரியே மெய்மெய்யாவே றோசாப்பூ பூத்து நிக்குது. எல்லாரும் இடிபட்டுப் பாக்கிறம். பெரிய அமளி துமளி.

இந்த எங்களோடை பெற் கட்டின பொடியன், “எடியே! எடியே! சத்தம் போடாதையுங்கோடி. எக்கணம் வீட்டுக்காரரர் நித்திரையால எழும்பினால் நாயை அவிட்டு விட்டு விடுவினம். பேந்து றோசாப்பூவும் பாக்கேலாது கீசாப்பூவும் பாக்கேலாது” எண்டு சொல்லி எங்களை அடக்குகிறான். பிறகு நாங்களும் கெதியாய்ப் பாத்திட்டு ஒரு மாதிரி வீட்டை வந்தம்.

பேந்து றோசாப்பூவை மணந்தும் பாக்க வேணும் எண்ட ஆசை. அதுக்காக வாத்தியார் வீட்டுப் படலையிலை போய் றோசாப்பூ பூத்திருக்குதோ எண்டு கூப்பிட்டு தண்ணி குடிக் கட்டோமே எண்டு அனுமதி பெற்று றோசாக் கண்டடியாலை மெது மெதுவாகப் போய் வேக வேகமாய் மூச்சை இழு இழுவென்று இழுத்து அந்த சுகந்தத்தை அனுபவிச்சதையும் மறக்கேலாது.

அப்பிடி றோசாப்பூவை களவாய் கண்டு மணந்த எனக்கு றோசாவெண்டால் இண்டைக்கும் பைத்தியந்தான். இப்பிடி இருக்கேக்கை எனக்கு பதினைஞ்சு வயசிருக்கும். அப்ப எங்கடை ஐயா அச்சுவேலியிலை வேலை செய்தவர். அப்ப அங்கையிருந்து ஆரிட்டையோ ஒரு றோசாத்தடி வேண்டியந்து எங்கடை ஒரு பெரியதொரு உடைஞ்ச தாச்சிச் சட்டிக்கை (அது தான் அப்ப எங்கட பூச்சாடி) ஆட்டுப்புழுக்கையெல்லாம் போட்டு வலு பக்குவமாய் நட்டு வளத்த றோசாத்தடி முதல் முதல் பூ பூத்ததும் அதை எங்கட அம்மன் கோயிலுக்கு என்ரை தங்கச்சியைக் கொண்டு பள்ளிக்கூடம் போக முந்தி ஓட ஓட குடுத்து விட்டதும் பேந்து பூத்த பூக்களை ஒரு நாளும் பிடுங்காமல் விழுந்த இதழுகளை பொறுக்கி ஆசைக்கு கழுவித் தின்றதுகளும் பழங்கதை.

இப்பிடி இருக்கேக்கை என்ரை ஐம்பத்தாறு வயசில நான் இலண்டனுக்குப் போறன். அங்கை தெருவெல்லாம் றோஸஸ் றோஸஸ்... றோஸஸ். எல்லா இடத்திலையும் றோஸ். பக்கத்து வீட்டு முத்தத்திலையும் றோஸ். எல்லா இடத்திலையும் வீட்டி லையும் றோஸஸ். சின்னனிலை றோசாவோட இருந்த விருப் பம் இவ்வளவு காலத்துக்குப் பிறகு திடீரெண்டு பிறகும் பைத் தியம் போலை என்னைப் போட்டு ஆட்டுது. இடைக் காலத் திலை நாட்டிலை யுத்தம் நடந்ததாலை ஆருக்கு றோசாவை நினைக்க ரசிக்க ஆசைப்பட நேரம்.

லண்டனிலை போனதும் பூவைக் கண்டதுதான் தாமதம், நான் என்ரை கெடுவடங்க ஐம்பது அறுபது பூக்களை மள மளவெண்டு மரத்திலையிருந்து பிச்சுப் போட்டன். அப்பதான் அங்கை நிண்ட எங்கடை ஆக்கள் சொல்லிச்சினம். “இஞ்சை பாருங்கோ பூக்கள் வடிவுக்குத் தான் மரத்திலை விட்டிருக்கு. பிடுங்கிறதுக்கில்லை. பிடுங்கப்படாது. ஆக்கள் பேசுவினம்” எண்டு.

அதுக்குப் பிறகு நான் களவாய்த்தான் பிடுங்கிறனான். எங்கையும் போய் அங்காலையும் இங்காலையும் பாப்பன். பாத்திட்டு மளமளவெண்டு எப்பிடியும் ஒரு ஏழெட்டு பிடுங்கிப் போடுவன்.

இதாலை என்ரை சொந்தக்காரரர் என்னை எங்கையும் வெளியில கூட்டிக்கொண்டு போகேக்கை அன்ரி, எங்கையும் பூ பிடுங்கப்படாது எண்டு சின்னப்பிள்ளையளை அச்சறுக்கை செய்து ஒரு இடத்துக்கு கூட்டிக் கொண்டு போகுமாப் போலை தான் எச்சரிக்கை செய்து என்னைக் கூட்டிக் கொண்டு போவினம். பாவங்கள் அவையள்.

இப்ப நான் கொழும்பில எந்தக் கோயிலுக்குப் போனாலும் எங்கடை கோயிலாய் இருக்கட்டும், விகாரையாய் இருக்கட்டும், வேதக் கோயிலாய் இருக்கட்டும். மற்றவை பூக் கொண்டு போறதப் போல நானும் பூக் கொண்டு போறதோட வரேக்கை அதவிடக் கூடப் பூவை அங்கயிருந்து எடுத்தந்து விடுவன். நான் இருக்கிற முதியோர் இல்ல றூமிலை எப்பவும் தண்ணிப் பேணிக்குள்ள நான் பூ வைப்பன். அது மணந்து கொண்டு தான் இருக்கும்.

லண்டனில நிக்கேக்க என்ர மனுசனுக்கு பெப்ரவரி பதின்னாலாம் திகதி பிறந்த நாள். அப்ப அவர் வேலையாலை வரேக்கை றெட் றோஸ் கொண்டு வந்து பரிசாய் தந்து, ஏன் பெப்ரவரி பதின்னாலுக்கு றெட் றோஸ் குடுக்கிறது எண்டு வெள்ளைக்காரற்றை தத்துவத்தை எனக்கு விளக்கினவர். பெப்ரவரி பதின்னாலு காதலர் தினமாம். அன்று காதலன், காதலி ஒருவரை ஒருவர் மகிழ்விக்க அன்புப் பரிசாக குறிப்பாக சிவந்த றோசாவை பரிசளிப்பது வழக்கம் எண்டதை புரிய வைத்தார். எனக்கு வலு புழுகம்.

*என்ர புருஷன் பெப்ரவரி பதின்னாலு காதலர் தினத்திலண்டு தான் பிறந்தவர். அவர் எண்டால் காதல். காதல் எண்டால் அவர் எண்டு சொல்லலாம். என்னையும் காதலிச்சுத்தான் மணம் முடிச்சவர். வாட்ட சாட்டமான ஆம்பிளை.*

*அவர் நானில்லாம இரார். ஒரு நேரம் நான் அங்கால இஞ்சால போனாலும் வந்திடுவார் என்னைத் தேடிக் கொண்டு.*

*எனக்கு அவரில நல்ல விருப்பம். என்ர மனசில அவற்றை நினைப்பு எந்நேரமும். நானில்லாம அவர் ஒரு நேரமும இரார். நான் இருக்கிற இடம் தேடி வந்திடுவார். இப்பிடி பிரியாமல் இருக்கேக்கை மேலதிக உழைப்புத் தேடி என்னை அவர் பிரிய வேண்டி வந்திட்டிது. பிள்ளையள் வளர உள்ளூர் உழைப்பு போதாது போக எல்லாரும் போனது போல தானும் சவுதி அரேபியாவிற்கு இரண்டு தரம் போய் வந்தார்.*

*சவுதியில அவர் நிக்கேக்க அவரைப் பிரிஞ்சு நான் இருக்க முடிஞ்சாலும் எனக்கு அவற்றை நினைப்பை அழிக்க முடியேல்லை. பேந்து ஐரோப்பா கண்டத்துக்கு ஆள் ஏற்றுமதியாகி பதினொரு வருச இடைவெளிக்குப் பிறகு லண்டனில ஆளைச் சந்திச்சம்.*

*அவருக்கு தன்ர மரக்கட்டைக் கையால என்ர உடம்பில மத்தளம் தட்டாட்டி அவராலை என்னோட சேர்ந்திருக்க முடியாது என்பதை பேந்தும் உணர்ந்தன். பெண்ணிற்குப் பாதுகாப்புக்கென சட்டம் இருந்தும் என்னால் அப்பாதுகாப்பைப் பெற முடியேல்லை.*

*நாளடைவில அவரது பிரிவைத் தவிர வேறு வழி எனக்கு தெரியேல்லை. இருந்தாலும் நினைவுகள் அழிவதில்லை. பெப்ரவரி பதின்நான்கையும் மறக்கேலாது.*

*இந்த வருசம் நான் இலங்கையில. அவர் லண்டனில. பெப்ரவரி பதின்மூன்று எனக்கு நினைவாக இருக்கிது. நாளைக்கு பெப்ரவரி பதின்னான்கு காதலர் தினம். என் கணவனின் பிறந்த தினம்.*

*பதின்னான்காம் திகதி காலைமை எழும்பி ஒரு தீர்மானத்துடன் எனது தங்கச்சிக்கு போன் பண்ணிறன். அவருக்கு பக்ஸ் நம்பர் இருக்கோ எண்டு கேட்டு. காரணம் கேட்கிறாள் தங்கை. "என் கணவனுக்கு காதலர் தின, பிறந்த தின வாழ்த்துச் செய்தியை பக்ஸில் அனுப்ப வேண்டும்" என்று.*

அவளும் வாழ்த்துக் கூறி என் கணவனின் பிறந்தநாள் கொண்டாட்டப் பரிசு தரும்படி கேட்கவே நான் அவள் குடும்பத்தை மதிய உணவிற்கு சைனீஸ் ஹோட்டலிற்கு அழைத்துச் செல்வதாகக் கூறுகின்றேன்.

என் கணவனுடன் கடந்த வருடம் பிறந்த நாள் கொண்டாட்டத்தின் போது லண்டனில் அவர் எனக்கு றெட் றோஸ் வழங்கியதை அவளுடன் நினைவு கூருகின்றேன்.

அன்று அவருக்கு யாரோ ஒருத்தி குடுத்த காதல் றெட் றோசைத்தான் எனக்கு வாங்கித் தந்து என்னைப் பேய்க் காட்டினதை ஆரிட்டைச் சொல்லி அழ.

என்ரை தங்கச்சியின்ரை வருகையை எதிர்பார்த்து முதியோர் இல்ல வாசலில் காத்திருக்கிறன். அவள் தன் குடும்பத்துடன் கையில் ஒரு பாசலும் மறுகையில் ஒரு பூச் சட்டியுடனும் என்னைச் சந்திக்கிறாள். பாசலில் மூண்டு பட்டுச் சாறியளும் கேக்கும் பூச்சட்டியில் நாளை மலரவிருக்கும் மெட்டுக் கட்டிய றோசாக் கண்டொன்றும்.

அதைப் பார்த்ததும் எனக்கு நல்ல சந்தோசம். அந்த நாள் ஒரு இனிய நாள். இவ்வாறு கொண்டாடிய இவ் வருட காதலர் தினத்தை என்னால் மறக்க முடியாது. சந்தோசத்தை வழங்கிய என் சகோதரி குடும்பத்திற்கு என் நன்றி.

இதே வேளை என் கணவர் இருக்கும் இடத்திலும் பெப்ரவரி பதின்னான்காம் திகதி வந்திருக்கும்.

அவருக்காக யாரோ ஒருத்தியோ ஒருத்திகளோ றெட் றோஸ் வழங்கியிருப்பார்கள்.

தாயகம்

# மயிர் நீப்பின் அல்லது இடைவெளி

*நாயகி:*

*எனக்கு முந்தி நீட்டுத் தலைமுடி. பின்னாலை வாறவை யெல்லாம் என்ர தலைமுடியை இழுத்து இழுத்துப் பாப்பினம் ஆசையிலை. ஸ்ரெயிற் கெயர். இடுப்புக்குக் கீழை இப்பத்தையில் பஷனுக்குத் ஏத்த மாதிரி நுனியை ஒரேயளவாய் வெட்டி வாழைத்தண்டுப் பட்டையை குறுக்கை தறிச்சு விட்டது மாதிரி சாரைப் பாம்பைப் போல வள வளவெண்டு கிடக்கும்.*

*நான் லவ் பண்ணி கலியாணம் செய்தனான். அவற்றை ஊர் ஆக்கள் எல்லாரும் நல்ல வடிவும் நல்ல குணமும். என்ரை அவர் பற்றி நான் அறிஞ்ச கதையள் அவரிலை எனக்குக் காதலை ஏற்படுத்தியிட்டுது. அவர் வெளிநாட்டிலை இருக்கிறார். ரெலிபோன் நம்பர் கிடைச்சிது. தொடர்பு கொண்டன். இனிமையான குரல். இதமாய்ப் பேசுவார். ஆளை ஆள் தெரியாது. அவர் என்ரை படத்தை எடுப்பிக்கிறார். நான் படம் கேக்கேல்லை. படம் வந்தால் அதை நான் ஒளிச்சு வைச்சிருக்கேலாது. அவற்றை கதையளை மனசுக்கை மற்றைவக்குத் தெரியாமல் பூட்டி வைச்சிருக்கிறது மாதிரி. ஆனால் அவற்ரை தம்பியாரைத் தெரியும். நல்ல வடிவு. நடிகர் விஜய் மாதிரி.*

*ஒரு நாள், வீட்டிலை ஒருத்தரும் இல்லாத நேரம் ஓராள் வந்திது. நான் "அப்பா இல்லை. பேந்து வாங்கோ" எண்டன். அந்தாள் போகாமல் எனக்குக் கதை குடுக்குது. எனக்கது பிடிக்கேல்லை. கொஞ்ச நேரத்திலை "பேந்து வாங்கோ" எண்டு கொஞ்சம் எரிச்சலோடு குரலை உயர்த்திச் சொல்லவே வந்தவர் தான் ஆர் எண்டு எனக்கும் தனக்கும் உள்ள உறவைக் கூறுகிறார். நான் ஏங்கிப் போனன். ஏற்க மறுக்கிறன். நான் நினைச்சுக் கதைச்ச ஆள் வேறை. வந்தது ஒரு மனிசமலை.*

*அதுக்கும் மேலை ஆளைப் பாக்கப் பிடிக்கேல்லை. நான் ஆளை காய்வெட்டப் பாக்கிறன். அந்த ஆள் கதையாலை முந்தி நான் அவரை என்ன காரணத்திற்காக பரிதாபப்பட்டு கதைச்சனோ அதைத் தொட்டுக் கதைச்சு தன்னை ஏற்காமல் விடவேண்டாம் எண்டு கவலைப்படுகிறார். என்ரை மனசை மாத்தி அவரை அமைதிப்படுத்துகிறன். பிறகு அவர் வடிவானவராய்த் தெரியுறார்.*

*என்ரை புருஷனாகிறவர் இந்த விஷயத்தை வெளியில கசிய விடுகிறார். ஒருத்தரும் நம்பேல்லை. அந்த ஸ்ரைல் கட்டை அவரைக் காதலிக்குமோ எண்டு அவரை கிண்டலடிக்கினம். ஒரு நாள் எங்கடை வீட்டு ஒழுங்கேக்கை மோட்டச் சயிக்கிளை என்னை ஏத்தினவர். திடீரெண்டு தங்கடை ஊர் றோட்டாலை சயிக்கிள்ளை விட்டு இந்த விசயத்தை ஊர் முழுக்கப் பிரசித்தம் ஆக்கிப் போட்டார்.*

*பேந்து எனக்கு அவரின்ரை ஊர் கோயில் திருவிழாவுக்கு கூட்டிக் கொண்டு போக விதம் விதமான உடுப்பு சாறியள் எல்லாம் வேண்டித் தந்தவர். எனக்கு நல்ல புழுகம். காசுக் கணக்கே பாக்க மாட்டார். பிறகு திரும்ப வெளிநாடு போய் வந்து எனக்குத் தாலிக் கட்டும் முடிஞ்சுது. சந்தோசத்துக்கு என்னை சிங்கப்பூருக்கு கூட்டிக் கொண்டு போறதுக்கு அலுவலுகள் நடந்து கொண்டிருக்கு.*

*ஒரு நாள் விடியப்பறம் போலை எனக்கு வயித்தப் பிரட்டிக் கொண்டு வந்தது. பேந்தென்ன ஒவ்வொரு நாளும் பிரட்டல்தான். வாயில் செழிம்பு எச்சில் ஊறினபடி. தலையை நிமித்த ஏலாது. சாப்பாட்டில மனமில்லை. விளாங்காய் தான் விருப்பம். அதை ஒளிச்சு ஒளிச்சு வைச்சு பல்லுக்க கடிச்சுக் கொண்டு இருப்பன். அவர் எண்டால் அப்பிள்பழம், தோடம்பழம், விளாம்பழம், மீன், இறால் எண்டு குவிச்சுப் போட்டார். நான் எல்லாத்தையும் சாப்பிட்டுப் போடவேணும் எண்டு.*

*எனக்கு உலை கொதிச்சு அரிசி மணக்கப்படாது. மீன் மணக்கப்படாது. மாதுளம்பழமும், விளாம்பழமும் எண்டால் ஆசை. அவர் நான் சாப்பிடாமல் கிடக்க, குளறினபடி "வயித்திலை இருக்கிற பிள்ளைக்கு சத்தொண்டும் சேராமல் போகப் போகுது" எண்டு சொல்லி வெருட்டி வெருட்டி சாப்பிட வைப்பார்.*

என்ரை இவர் மறுபடி வெளிநாடு போக வேண்டி வந்ததாலை என்னைத் தன்னோடை கொழும்புக்குக் கூட்டியந்தார்.

முந்தி நாங்கள் வயித்திலை பிள்ளை வரமுதல் கொழும்பு போய்ப் பாக்கிற இடங்கள் சிங்கப்பூர் போய்ப் பாக்கிற இடங்கள் பற்றி பல தடவை கதைக்கிறம். ஆனால் கொழும்பு வந்த மறுநாள் ஏ9 பாதை பூட்டப்பட்டிது. கொழும்பு அல்லோலகல்லோலப்பட்டுது. என்னாலையும் ஏலாது. ஒரு இடமும் போகேல்லை. ஒரு கிழமையிலை அவரை எயாப் போட்டிலை வெளிநாட்டுக்கு அனுப்பி வைச்சம்.

நாங்கள் அவற்றை ஒரு சொந்தக்காரற்றை வீட்டிலைதான் இருக்கிறம். கொழும்புத் தண்ணிக்கும் வயித்திலை பிள்ளை யின்ரை வளர்ச்சிக்கும் ஏற்ப நானும் சும்மா தளதளவெண்டு தாக்காளிப்பழம் மாதிரி வந்திட்டன்.

போனவர் ஆறு மாதத்தாலை திரும்பி வந்தார். சந்தோச மாயிருந்தம். வந்து ஒரு கிழமையிலை பொடியன் பிறக்கிற டேற்றுக்கு இரண்டு கிழமைக்கு முதலே பிறந்திட்டான். ஒப்பிறேசன் செய்துதான் பிள்ளையை எடுத்தது.

எங்கடை அம்மாவும் அவரும் எனக்கு பிள்ளை பிறக்கிற நேரம் அழுதவையாம். பிறகு அவர் சொன்னார். தான் தங்கடை ஊர் அம்மாளாச்சிக்கு காவடி எடுக்கிறதா நேர்ந்ததாக.

பிள்ளை பிறந்து மூன்று மாதம் போனாப் பிறகு அவையின்ரை சொந்தகாரப் பெடியனுக்கு சிங்கப்பூரிலை கலியாணம் நடக்க இருந்தது. அதுக்கு என்னையும் கூட்டிக் கொண்டு அவர் போறதாய் சொன்னார்.

அப்ப நான் சொன்னன் என்ரை தலைமயிரை ஒருக்கா லெவல் பண்ண வேணும் எண்டு. அவர் மாட்டன் எண்டிட்டாரே. ஏன் எண்டு கேட்டன். தான் மொட்டை மண்டையோடை உன்ரை அப்பா மாதிரி இருக்க நீர் தலைமயிர் ஸ்ரைல் பண்ணப் போறீரோ. அதொண்டும் தேவையில்லை எண்டு பெரிசாச் சத்தம் போடத் துவங்கியிட்டார்.

எனக்கெண்டால் பயங்கர ஆசை. பிள்ளை பிறந்த பிறகு தலைமயிர் லெவல் பண்ணி ஸ்ரைலாய் உடுப்பு போட்டு கொழும்பை சுத்த வேணும் எண்டு. நானே இவர் நோர்வேயிலை இருக்கேக்கை தலைமயிர் வெட்டப்படாதெண்டு நானிருந்த

வீட்டிலை இருந்த ஒரு வயசு கூடின மனிசி சொன்னதாலைதான் அந்தப் பூனை மயிரை வைச்சுக் கொண்டு இருந்தனான்.

இதென்னடா இது! முதல்லை வாழைப்பட்டை போல நீண்ட ஒரே அளவான மயிர் எண்டவள் இப்ப தன்ரை மயிரை பூனை மயிர் எண்ணுறாள் எண்டு பாக்கிறயளே.

அது பெரிய கதை. அதென்னண்டால் இவர் என்னோடை ஊரிலை வந்து கதைச்சுப் போட்டு நான் உண்மையான பொம்பிளையோ எண்டு பார்க்க ஒரு விஷப்பரீட்சை வைச்சவர். அதிலை நான் பாஸ். அதுக்குப் பிறகுதான் அவருக்கு என்னிலை உண்மையான அன்பும், நம்பிக்கையும் பெருகிச்சுதாம்.

ஆனால் இந்தச் சம்பவத்துக்குப் பிறகு அவர் வெளிநாடு போயிட்டார். ஆனால் நான் அதை ஒருத்தருக்கும் சொல்ல முடியாமல் பயந்து பயந்து யோசிச்சுத் தலைக்கொதி. ஆறாச்சாமம் ஏமம் எல்லாம் தலையிலை தண்ணியை அள்ளி ஊத்தி சளி பிடிச்சு நிமோனியாக் காய்ச்சல்லை ஒரு மாதம் யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியிலை ஐ.சி.யு அவசர சிகிச்சைப் பிரிவிலை சாகக் கிடந்தனான். ரிக்கற் வெட்டேக்கை டொக்ரர்மார் நேஸ்மார் சொன்னவையாம். இந்தப் பிள்ளையை நாங்கள் தப்பும் எண்டு நிணைக்கேல்லை எண்டு. அப்பிடித்தான் தப்பின்னான். ஆளும் மெலிஞ்சு தலைமயிரெல்லாம் பந்து பந்தாய்க் கொட்டத் தொடங்கியிட்டுது. எனக்கு என்ரை தலைமயிரைக் காணக் காண கண்ணால கண்ணீர் ஓடும். இப்பிடித் தலைமயிர் கொட்டி இடுப்புக்குக் கீழை நிண்ட தலைமயிர் தோளுக்கு மேலை ஏறியிட்டுது. பேந்து ஒரு தமிழ்ப் பரியாரிட்டை எண்ணை வாங்கி வைச்சுத் தான் கொட்டுறது நிண்டது. இப்ப நாய்க்குட்டி விசரி மாதிரித்தான் என்ரை தலைமயிர் சின்னனும் பெரிசுமாய்.

அந்த மயிரைத்தான் வெட்டி லெவல் பண்ணுவம் எண்ண அந்தாள் தலைமயிரை வெட்டி லெவல் பண்ணினால் தனக்கு நான் சோடி சரியில்லாமல் போயிடுவன் எண்டு மறிக்குது. அந்தாளுக்கு வயது முப்பத்தெட்டு. எனக்கு இருபத்து மூன்று. நான் இரண்டாந்தாரமாய்த் தான் இவரைக் கட்டின்னான்.

என்ரை அம்மாட்டை அவர் தன்ரை நிலைப்பாட்டை தெரிவிச்சு கலியாணம் கேக்கேக்கை அம்மா நெருப்பெடுத்தவா. பேந்து அவாவும் அவற்றை கதையளை அறிஞ்சு தணிஞ்சு போயிட்டா. அவ என்னைப் பற்றி அவருக்குச் சொன்னது.

*“அவ ஸ்ரைல்காறி. விதம் விதமாய் உடுப்புப் போடுவா. மேக்கப் பண்ணுவா. மற்றும்படி வீட்டுக்கை இருப்பா. வெளியிலை எங்கையும் போகமாட்டா” எண்டுதான்.*

*அவர் சொன்னார் “அதொண்டும் பிரச்சினையில்லை. என்னட்டைத்தானே காசிருக்கு. அவ நினைச்ச மாதிரியெல்லாம் உடுப்புப் போடலாம்” எண்டு.*

*இவருக்கு ஒரு நல்ல ஃப்ரண்ட் இருக்கு. அதோடை நேசறியிலை இருந்து இதுவரையும் கூட்டாளியாம். குடுக்கல் வாங்கல் ஒளிவு மறைவெல்லாம் தான் அவரோடைதான் பகிர்றதாம். அவருக்கும் கலியாணம் கட்டி நாலு பிள்ளையள். அவற்றை மனிசி அவரை விட இரண்டு, மூன்று வயதிடைவெளி. ஆள் வலு ஸ்ரைல், ஜீன்ஸ், ரைற் ஸ்கேட், சிலீவ்லெஸ் பஞ்சாபி எண்டு மொடல் உடுப்புகளும் ஐ பிளக்கிங், ஃபேசியல், விதவிமான குதிக்கால் செருப்பெண்டு ஒரு நாள் போட்ட உடுப்பை பேந்து பாக்க கனநாள் எடுக்கும். அப்படி அவ திரியுறா, தன்ரை ஃபிரண்டின்ரை மனுசியின்ரை ஸ்ரைல் பற்றிப் பெருமைப்படுகிறவர் எனக்கேன் இப்பிடிச் செய்யிறார்.*

*பொடி பிறந்த முப்பத்தொரு நாளுக்கு பொடிக்குப் புது உடுப்பெடுக்கேக்கை எனக்கும் ஒரு சட்டை வாங்கியந்தவர். துடக்குக் கழிவுக்கு ஐயர் பூசை செய்ய வரேக்கை அந்தச் சட்டையைப் போடச் சொன்னார். பாத்தால் அறுபது வயது கிழவியள் போடுற கவுஸ் கோர்ட் வீட்டுக்கும் போடேலாது. நான் அந்தச் சட்டையை போடமாட்டன் எண்டிட்டு ஒரு புது ஸ்கேர்ட் அன்ட் பிளவுஸை போட்டன். அவருக்குப் பிடிக்கேல்லைத்தான். ஆனால் நான் அதைத்தான் போட்டன். இந்தப் பிரச்சினை விளங்கினவை ஒருத்தரும் நான் போட்ட அந்தச் சட்டையை வடிவு எண்டு சொல்லேல்லை. முந்தி நான் என்ன சட்டை போட்டாலும் எல்லாரும் நல்ல வடிவு எண்டு சொல்லுறவை.*

*நாயகன்:*

*என்ரை மனிசி நல்ல வடிவு. நீட்டுத் தலைமுடி. வாழைப்பட்டை மாதிரி. நானும் வடிவுதான். ஆனால் தலையிலை நடு மண்டை கொஞ்சம் மொட்டை, என்ரை வாய், கண், மூக்கு, நாடியெல்லாம் வடிவெண்டு என்ரை அன்ரி அடிக்கடி சொல்லுவா. முந்தி தலைமயிர் நல்ல நெளியும்,*

அடர்த்தியும். சின்னனிலை நான் லவ் பண்ணேக்கை எனக்குத் தலைமுடி எல்லாம் இருந்திது.

பேந்து இருபத்தாறு வருட வெளிநாட்டு வாழ்க்கையிலை பனிக்குளிர், சுடுதண்ணிக் குளிப்பெண்டு மாறி மாறி வெதர் மாற மயிர் தானாய்க் கழண்டு போயிட்டுது.

ஒரு நாள் நோர்வேயிலை நைற் வேலை செய்து கொண் டிருக்கேக்கை எனக்கொரு கோல் வந்திது. "நான் உங்களை லவ் பண்ணுறன்" எண்டு. "இதாரடா இது. எனக்கு உங்களைத் தெரியாதே. ஏன் இப்பிடிக் கதைக்கிறயள். நான் என்ன பெலவீ னத்தில் இருக்கிறன் எண்டு அறிஞ்சு கதைக்கிறியளோ. எனக்கு உங்களைத் தெரியேல்லை. ஆளையும் தெரியாது. குணத்தையும் தெரியாது. வையுங்கோ போனை" எண்டு போனைக் கட் பண்ணுறன்.

தொடர்ந்து ஒவ்வொரு நாளும் போன் ஹோல்! அதில் என்ரை பிரச்சினை என்ரை வயசு எல்லாத்தையும் விளங்கப் படுத்துறன். அவள் ஏற்றுக் கொண்டு என்னை விரும்புவதாகவே தெரிவிக்கிறாள்.

ஆனால் அவள் வடிவில்லாதவள் கஷ்டப்பட்டவள் எண்ட தாலை என்னைக் கலியாணம் கட்ட விரும்புறாளோ எண்டு அறிய அவளின்ரை படத்தை எடுப்பிச்சுப் பார்த்தால் அவள் நடிகை மீனா மாதிரி.

இவள் என்ரை பணத்தைச் சுருட்டப் பார்க்கிறாளோ எண்ட சந்தேகத்துடன் ஆளைப் போய் பார்த்து நேரிலை பேசித்தீர்ப்பம் எண்டு திடீரெண்டு ஒரு நாள் இலங்கை வந்து யாழ் போய் அவளுக்கு முன்னால நிக்கிறன்.

அவளுக்கு ஆளை விளங்கேல்லை. தகப்பனிட்டை வந்த ஆளாக்கும் எண்டு "அப்பா இல்லை. பேந்து வாங்கோ" எண்ணு றாள். தொடர்ந்து நான் கதை குடுக்க என்னை ஏசுமாப் போல போகச் சொல்லுறாள். பிறகு என்னை வெளிப்படுத்துகிறன்.

அவள் அசந்து விட்டாள். என்னை நம்ப மறுக்கிறாள். நான் நம்ப வைக்கிறன். அவள் பழைய கதையை முடிக்கப் பாக்கிறாள். 'ஏமாறுவது எனக்குப் பழக்கந்தானே' எண்டு நான் அழுகிறன். அவள் இரங்குகிறாள். என்னை ஏற்கிறாள்.

தொடர்ந்து நான்கு, ஐந்து நாள் அவள் வீட்டை ஆருமில்லாத நேரமாய்ப் போய் கதைக்கிறன். ஒரு நாள் இவள் கெட்டவளோ என்றறிய ஒரு பரீட்சையில் இறங்கினன். அவள் என்னைத் தட்டி விடுகிறாள். என் சத்தியங்களை நம்பி இடம் விடுகிறாள். எனக்கு வெற்றி. நான் அழுகிறன். எனக்கு ஒரு நல்ல மனைவி வாய்த்து விட்டாளே என்று.

பின் அவர்கள் வீட்டாருடன் பேசி அவர்களின் மறுப்பைச் சமாளித்து என் நிலைமையை எடுத்துக் கூறி இரண்டாம் தாரமாக அவளை மணம் பேசி முடிக்கிறன். அவளைப் பணத்தால் குளிப்பாட்டுறன்.

திரும்ப நோர்வே போய் மீண்டும் வந்த போது அவளுக்கு நியூமோனியா வந்து முடி கொட்டிப் போச்சுது. பிறகு வந்து தாலி கட்டி சிங்கப்பூர் போக றேடியாக, அவான்ரை வயித்தில என்ர பிள்ளை. சிங்கப்பூர் பயணம் ரத்து. கொழும்பு வந்து அவள் என்னை நோர்வே பயணமனுப்புறாள்.

ஏ9 பூட்டுப்பட அவர்கள் கொழும்பில பூட்டுப்பட மீண்டும் ஆறு மாதங்களால் நான் கொழும்புக்கு அவளிட்டை வரேக்கை அவள் தங்க விக்கிரகம் போல் தாய்மைப் பூரிப்புடன் திகழ்ந்தாள். என்னைப் பார்த்தால் கிழவன் மாதிரி.

வந்த ஒரு கிழமையில பிள்ளை பிறந்திட்டுது. ஒரு மாதம் போக அவள் தனக்கு கொட்டி ஒழுங்கில்லாமல் இருக்கும் தன்ரை தலை முடியை ஒரே அளவாய் வெட்டி அழகுபடுத்த நினைக்கிறாள். நான் தடை செய்து போட்டன். அவள் சிங்கமுகம் கொண்டாள். அழுதாள். போராடினாள். என்னால் அதுக்கு சம்மதம் குடுக்க முடியேல்லை.

அவளுக்கென்ன தெரியும். அவளும் நானும் வெளியிலை போனால் புடவைக் கடையிலை எண்டாலும் சரி பொலிஸ் காரனெண்டாலும் சரி என்னை அவளின்ரை அப்பாவோ எண்டு கேக்கிறதை! அந்த நேரம் நான் சத்தம் போட்டு சிரிச்சு சமாளிக்கிறதை ஆரிட்டைப் போய்ச் சொல்லுவன். அவள் மாத்திரம் என்ரை வயதுக்குத் தக்கமாதிரி உடுப்புப் போட்டு நடையளை மாத்தினாள் எண்டால் என்னட்டை இருக்கிற பணத்துக்கு என்னைப் பிடிக்கேலாது. இந்த விசயத்திலை அவள் என்னைப் பற்றி என்ன நினைச்சாலும் பரவாயில்லை. நான் அவள் என்ரை வயசுக்கேத்த மேக்கப் போடுறதைத் தான் நான் விரும்புவன்.

*அவளின்ரை தாய் எனக்கு கலியாண சம்மதம் தரேக்கை "அவா ஸ்ரைல்காறி. விதம் விதமாய் உடுப்புப் போடுவா" எண்டதைத்தான் சொன்னவா. அதுக்கு நான் என்ன செய்யிறது. ஆரம்பத்திலை விட்டுப்பிடிச்சனான்தான். இப்ப முடியேல்லை. எனக்கு வயது முப்பத்தெட்டு. அவளுக்கு வயது இருபத்து மூன்று.*

*இது எனக்கு இரண்டாம் தாரமும் எல்லே. பேந்து நான் வடிவில்லை எண்டு இவள் என்னை விட்டுப் போயிட்டால் நானென்ன செய்யிறது. பேந்து இந்தக் குழந்தையும் எனக்கு கிடைக்காமல் போயிடும்.*

*என்ர மூத்த மனிசி மாதுளம்பழம் மாதிரி வடிவு, குணம். அவா ஏதோ வருத்தத்தாலை ஒரே சண்டை பிடிப்பா. அவா தன்ரை வருத்தக் குணத்தாலை என்னை விட்டுப் பிரிஞ்சு போயிட்டா என்ரை பிள்ளையோடை. குழந்தை பிறந்த இருபத்தி நாலாம் நாளே.*

*நாயகியின் தாய்:*

*நான் இந்தக் கதையில வாற இரண்டாந்தரப் பொம்பிளை யின்ரை அம்மா. இவ எனக்கு இரண்டாவது மகள். தமக்கை இருக்க தானாய் கலியாணம் கட்டினவ ஒரு பணக்காரனை. நான் முதல்லை கடும் எதிர்ப்பு. பேந்து மருமேன் தன்ரை நிலைப்பாடுகளைச் சொல்லி எங்கடை மனதை மாத்திப் போட்டார்.*

*மருமேன் சும்மா கத்துவார். ஆனால் பாசத்துக்கு அடிமை யானவர். காசாலை குவிப்பார். என்ரை பிள்ளைக்கு பிள்ளை பிறக்கேக்கை அவரிட்டைக் காசிருந்த படியாலைதானே பிள்ளையை ஒப்பிறேசன் செய்து எடுக்க முடிஞ்சது.*

*இப்பிடியான காசுக்கார மருமேனை என்ரை மேள் கட்டாட்டில் பிள்ளைப் பெத்திலையே அவள் செத்திருப்பாள் என்ன! நாங்கள் இவ்வளவு காசுக்கு எங்கை போவம்!*

*அதுதான் நான் என்ரை மேளுக்குச் சொல்லுறது. நீ அவற்றை விருப்பப்படி நட. உங்க உலகத்திலை கலியாணங் களிலை எத்தினை கொடுமையள் நடக்குது. காசிருந்தால் வாழ லாம். அஜஸ்ற் பண்ணிப் பழகு எண்டு. அவளுக்கு என்னிலை கோவம். நான் என்ன செய்யிறது. நான் இந்தப் புத்திமதியைத் தானே சொல்லேலும். பேந்து குடும்பம் பிரியிறதே.*

*ஆனால் அவள் ஒரு ஸ்ரைல்காரி. எல்லாம் தாயோடை பிள்ளை இருக்கிறவரையுந்தான்.*

*நாயகியின் அக்கா:*

*நான் இந்தக் கதாநாயகியின்ரை அக்கா. என்னைப் பொறுத்த வரையிலை இந்தக் கலியாணம் பற்றி நான் சொல்லுற தெண்டால் என்ரை தங்கச்சி காசுக்காக தன்ரை வாழ்க்கையை வித்தவள் எண்டதைத்தான். அவளுக்கு இப்ப அவளின்ரை புருஷனின்ரை பெமிஷனில்லாமல் ஒரு தலைமயிரைத் தன்னும் அங்காலை இங்காலை ஆட்டேலாது.*

*காசு தான் காசு. காசிருந்தால் கையிலை காலிலை கழுத்திலை தங்கச் சங்கிலியளை மாட்டலாமே தவிர தன்ரை தலைமயிரைத் தன்னும் ஆட்ட ஏலுமோ? இது என்ரை தங்கச்சி, காசுக்காக போய் விழுந்த ஒரு பேய். என்ரை தங்கச்சிக்கு ஒவ்வொரு இடத்துக்குப் போறதெண்டாலும் ஒவ்வொரு புதுச் சட்டை வேணும். ஆனால் நான் எந்தப் பழஞ்சட்டையையும் எந்த இடத்துக்கும் போட்டுக் கொண்டு போவன். நான் புதுச்சட்டை வாங்கினால் முதல்லை அதைப் போடுறேல்லை. அவள் போட்டு நாலு, அஞ்சு தரம் அடிச்சாப் பிறகுதான் நான் போடுறது. எனக்கு அதைப்பற்றி கவலையில்லை.*

*வெளியிலை எங்கையும் போறதெண்டால் தன்ரை வாழைப் பட்டை மாதிரி நீட்டுத் தலைமுடியையே முதல் நாள் முழுகி இறுக்கிப் பின்னி விட்டு என்னென்னவோ ஸ்ரைல்லெல்லாம் செய்து தான் போவாள். ஆள் வலு ஸ்ரைல்காறி.*

*எனக்குப் பூனை மயிர். ஆனால் எனக்கு அதைப்பற்றி யெல்லாம் கவலையில்லை. சீப்பாலை இரண்டு தட்டு, வூல் பான்டாலை ஒரு சுத்து. நான் வெளிக்கிட்டு விடுவன். பாவம் என்ரை தங்கச்சி.*

*எனக்கு வயது இருபத்தேழு. இன்னும் கலியாணம் கட்டேல்லை.*

*நாயகி:*

*நான் தான் கதாநாயகி மறுபடியும் பேசுறன். என்ரை இவர் என்ரை ஸ்ரைல் விருப்பத்துக்கு என்னை விட்டுப் பிடிக்க லாந்தானே.*

*நான் இன்னும் எத்தினை நாளுக்கு ஸ்ரைல் பண்ணப் போறன். இந்தப் பொடி நான் பெத்த பிள்ளை இன்னும் கொஞ்ச நாளாலை வளந்து என்ரை தலைமுடியெல்லாத்தையும் பிய்க்கப் போறானே. அப்ப நான் ஸ்ரைல் பண்ண ஏலுமோ.*

*இது ஏன் என்ரை மனிசனுக்கு விளங்க மாட்டன் எண்ணுது. 'கோடி ஒரு வெள்ளை குமரி ஒரு பிள்ளை' எண்டது என்ரை மனிசனுக்கு விளங்காமல் போட்டுதே! எனக்குச் சரியான கவலை.*

*நான் என்ன செய்யிறது. வாழ்க்கை எண்டது இது தானோ?*

***தாயகம்-59 ஜூன்-ஓகஸ்ற், 2007***

# ஆச்சியும் மண்ணாங்கட்டியும்

நான்: ஆச்சி! உனக்கு என்ன பேரணை

ஆச்சி: பேர் சொல்லுறா.

நான் : பொன்னுவோ?

ஆச்சி: அதோடை வேறையும் ஒண்டு.

நான் : அன்னலட்சுமியோணை. ஏனணை உனக்கு ரண்டு பேர் வைச்சவை.

ஆச்சி: ஒண்டு டாப்பு பேர்.

நான் : அதென்னணை டாப்புப் பேர்.

ஆச்சி: அது தான் பள்ளிக்கூடத்திலை என்னைக் கூப் பிடுற பேர்.

நான் : அப்ப பள்ளிக்கூடத்திலை மட்டும் உன்னை அன்ன லட்சுமி எண்டு கூப்பிடேக்கை நீ உன்ரை பேரை மறந்து போக மாட்டியோணை.

ஆச்சி: மறந்தாலும் பக்கத்திலை இருக்கிற பிள்ளை கையைத் தட்டி ஞாபகப்படுத்திறதிலை உடனை 'வந்திட்டன்' எண்டு கூறி சட்டம்பியைச் சமாளிச்சுப் போடுவன். பள்ளிக் கூடம் போய் டாப்புக் கூப்பிடேக்கையும் வந்திட்டன் எண்டு உடனை சொல்லாட்டால் சட்டம்பியார் கைத்தோலை பிரம்பாலை அடிச்சு உரிச்சுப் போடுவார். வாத்தியார் பாவம். அவருக்கு எத்தினை வேலையள். அதுக்குள்ளை அவர் எங்களுக்கு படிப்பிக்கிறதெண்டால் கஷ்டந்தானே. நாங்கள் எங்கடை கவனம் குலையாமல் வாத்தியாரைப் பாத்தபடி இருப்பம் டாப்புக் கூப்பிடேக்கை. மற்றது எங்க ளுக்கும் நல்ல புழுகம் எங்கடை பேரை சட்டம்பியார் கூப்பிடுறது. ஆனால் என்ரை பள்ளிக்கூடப் பேரை அது தான் அன்னலட்சுமி எண்டதை ஊரிலை

ஒருத்தருக்கும் அவ்வளவாய் தெரியாது. ஏனெண்டால் ஒண்டாம் வகுப்பு மட்டுந்தானே நான் படிச்சனான். படிச்சது கொஞ்சக் காலம் எண்டதாலை அவ்வளவாய் ஒருத்தருக்கும் தெரிய வந்திருக்காதெல்லே. ஆனால் என்ரை பழைய கூட்டாளியள் ஆரையும் விசாரிச்சால் சிலவேளை அவேன்ரை ஞாபகப் பட்டியலிலை என்ரை பேர் இருந்தாலும் இருக்கும்.

நான் : ஏனணை நீ பேந்து படிக்கேல்லை. படிக்கிறது கஷ்ட மோணை. இல்லாடில் வீட்டிலை கஷ்டமோணை.

ஆச்சி : இல்லை. வீட்டிலை கஷ்டம் இல்லை. எங்கடை அப்பு நல்லாய்ப் படிச்சவர். அவாதான் என்ரை தம்பியை படிப் பிச்சு நேசாயிருக்கிறார். அவன் அவன் பரஞ்சோதியை அப்புக்காத்தாக்க வேணும் எண்டு கண்டியிலை நிண்டு றினிற்றிக் கொலிச்சோ எங்கேயோ விட்டு போடிங்கில விட்டு படிப்பிச்சவர்.

நான் : அப்ப ஏனணை நீயும் படிச்சிருக்கலாமே.

ஆச்சி : பொம்பிளைப் பிள்ளையளுக்கு படிப்பு எதுக்கு. வீட்டு வேலை செய்யத் தெரிஞ்சால் காணுந்தானே.

ஆச்சி நல்ல திருப்தியோடைதான் கதைக்கிறா. எனக்கும் அவாவுக்கு எந்தவொரு பிரச்சினையும் இருக்கிறதாய் தெரியேல்லை.

நான் : ஏனணை ஆச்சி நீ என்னண்டணை வளந்தனி. உன்ரை கதையைச் சொல்லணை. கேட்க ஆசையாய் இருக்குது.

ஆச்சி : போ... அங்காலை. உன்னோடை கதைச்சுக் கொண் டிருக்க எனக்கு நேரமில்லை. அலுவலுகள் கிடக்கு. நேரம் போவிட்டுது. போ.. போ... எண்டு துரத்திறா. வயது எழுபத்தைஞ்சுக்கு மேல. கக்கத்துக்கை கடகமும் உழவாரப்பிடியும்.

என் மனம் : ஓ... ஆச்சி உனக்குத்தான் எத்தினை பொறுப்பணை. இந்த வயசிலையும் நீ சலிக்காமல் உன்ரை கடமையளை செய்யிறதை நினைச்சு உன்னைப் பாக்க எவ்வளவு ஆசையாயிருக்குதணை.

நீ இருந்த காலம் வேறையணை. நாங்கள் இருக்கிற காலம் வேறையணை. நீ உன்ரை புருஷனை கலியாணம் கட்டி அஞ்சு வருசத்திலை செத்த உடனையும் புல்லுக் கடகம் தூக்கினனி. தூக்கின

கடகத்தை நீ இன்னுந்தான் வைக்கேல்லை. நீ உன்ரை பிள்ளையளை வளர்த்து அதுகளைக் கரை சேர்த்துவிட, பேந்து ஒரே ஒரு பெட்டைக் குஞ்சின்ரை புருஷனும் நாலு பிள்ளையளோடை உன்ரை மேளை தவிக்க விட்டு இடையிலை உன்ரை மனிசனைப் போலப் பத்து வரியத்திலை செத்துப் போக அதையும் தாங்கி உன்ரை மேளின்ரை குடும்பத்தையும் குழந்தையளையும் வழிநடத்தினவள் நீயல்லோ. என்னண்டாச்சி ஒரு பெண் பிறவியாயிருந்தும், ஒண்டும் படிக்காம இருந்தும் வீட்டுக்குள்ளை வளர்ந்தும் தனியாய் இவ்வளவு துன்பத்தையும் தாங்கினாய்.

உன்னை விசராச்சி எண்டுதான் எங்கடை ஊரிலை சொல்லுவினம். நீ முந்தி கழுத்திலை பல கலருகளிலையும் மணி மாலையள், கையிலை கலர் காப்புகள், காதிலை வேப்பம் குச்சியோடையும் வாயிலை எந்த நேரமும் பாக்கு வெத்திலை சப்பினபடி போவியே. அப்ப நாங்கள் சின்னாக்கள். விபரங்கள் அவ்வளவாய் ஒண்டும் தெரியாத பருவம். விசர் ஆக்கள் எண்டால் எப்படி இருப்பினம் எண்டதை பாக்கிறதுக்கு உன்ரை கலர் கலர் மணி மாலையளைப் பாக்கிறதுக்கு பின்னேரத்திலை எங்கடை றோட்டிலை ஒரு அஞ்சாறு சின்னாக்கள் கூட்டமாய் நிப்பம். நீ எங்களை விலத்திக் கொண்டு கடகத்தோடை வயலுக்குப் போகேக்கை உன்ரை மணி மாலையளை நாங்கள் பாக்கிறதுக்கு உனக்கு கிட்ட வந்து உன்னைக் கேட்காமலே உன்ரை கழுத்து மாலையளை எடுத்துப் பாக்கேக்க ஒரு நிமிசம் நிண்டு எங்களுக்கு அதுகளை எடுத்து காட்டிப் போட்டு ஓடிடுவாய் உன்ரை வேலையை நோக்கி.

ஒரு நேரமும் சும்மாயிராய். உன்னை நம்பி எத்தனை குஞ்சு குருமன்கள். தேப்பனை தின்னியள். நீ வயலுக்கை கூலி வேலை செய்யேக்கை தோட்டக்காரன் தாற பாணுகள் சாப்பாடுகளிலையும் உன்ரை வயித்துப் பசிக்குப் போதுமானதாய் சாப்பிடாமல் மிச்சம் பிடிச்சு வீட்டுக்கு கொண்டு போவியாம் எண்டு உன்னோடு தோட்ட வேலைக்கு வாற மற்றக் கூட்டா ளியள் சொல்லிக் கேள்வி. போதியளவு சாப்பாடு, ஓய்வு இல்லாததாலை தான் உனக்கு அடிக்கடி விசர் வந்ததோணை.

எணை ஆச்சி உனக்குத் தெரியுமோணை உன்ரை பக்கத்து வீட்டு பார்வதி உன்னைப் பேசுறது. 'தேப்பனைத் தின்னியள். வந்து என்ரை வளவுக்கை தேங்காயை எடுத்துக் கொண்டு போட்டுதுகள். அவளவேன்ரை பிள்ளையள் பேரப்பிள்ளை யளின்ரை நெஞ்சிலை நெஞ்சாங் கட்டை வைச்சு எரிக்க வேணும்' எண்டெல்லாம் புழுத்த பாடாய் பேசுறது. நீ பேசாமல் வாயை மூடிக்கொண் டிருப்பாய். நீ எடுக்காட்டால் நீங்கள் எடுக்கேல்லை எண்டதை ஏனணை வாயைத் திறந்து சொல்லுறேல்லை. ஏழை சொல் அம்பலம் ஏறாது எண்டது தெரிஞ்சோ. உன்ரை வீட்டிலை தான் எத்தினை தென்னையள். அதுகள் இருக்க நீ ஏன் தன்ரை வளவுத் தேங்காயை எடுக்கப் போறாய் எண்டதை அந்த மனிசி படிச்ச மனிசி பணக்கார மனிசிக்கு விளங்கிச்சுதில்லை. இது தான் உலகமணை. காசில்லாட்டால் எல்லா பழியையும் அதுகள் மேலை சுமத்தலாம் எண்ட அவேன்ரை திமிரணை.

உங்கடை வீட்டிலை எத்தினை நாள் வயித்துப் பாட்டுக்கு தேங்காயையே உடைச்சுத் திண்டு போட்டு உன்ரை பேரக் குஞ்சு குருமன்கள் இருந்திருக்கும் எண்டது ஊருக்கே தெரியு மணை. அவ்வளவு கஷ்டம் உங்களுக்கு.

ஆனால் நீயும் சிலர் மாதிரி கஸ்டத்துக்கு பசியை நீக்க குழந்தையளைக் களவுக்கு அனுப்பியிருக்கலாமணை. வீட்டிலை மலைபோல ஆம்பிளையள் வைச்சிருக்கிறவையே அநேகம் பேர் தங்கடை புருசன்மாரை இந்த தொழிலுக்கு அனுப்பித்தான் அப்ப வாளை மீன் முறியும் இறால் போட்ட கிழங்குக் கறியும் நல்லெண்ணையும் விட்டு சோறாக்கித் திண்டவை. சீட்டுக் கட்டினவை. காணி பூமி வேண்டினவை. சீலை உடுத்தவை. சீதனம் குடுத்தவை.

அப்பிடி ஊரிலை ஆம்பிளையளே சிலரிருக்க நீ உழைச்சு அதிலை வாற காசிலை போதுமோ போதாதோ வாங்கி நீ வயலாலை கொண்டு வாற கீரையை வயலிலை தோட்டக் காரன் கழிச்சு விட்ட மரக்கறியளைப்போட்டு கறி காய்ச்சி சோறு குடுத்து வளத்தனி.

அதோடை நீ உன்ரை பேரப் பிள்ளையளை உன்ரை

நிலைக்குத் தக்கின பள்ளிக்கூடத்திலை விட்டுப் படிப்பிச்சு ஒண்டை டொக்ரராயும் ஒண்டை நேசாயும் ஒண்டை ரீச்சராயும் ஒண்டைப் புடவைக் கடை முதலாளியாயும் ஆக்கிப் போட்டாய். இது ஆர் சேத்த செல்வமெணை. நீ... நீ ஒராள் தனிச்ச மரமாய் நிண்டு சேர்த்த செல்வம்.

உன்ரை பிள்ளை ஒரே ஒரு மகள். அவ உன்னோடை உன்ரை கஷ்ரத்திலை ஒண்டுக்கும் பங்கு பற்றுறேல்லை. அவ பாவம். அவ எண்டைக்கு தன்ரை புருசன் செத்தாரோ அண்டைக்கு அந்த இடத்திலை நிண்ட வாதான். இண்டைக்கும் அதே நிலைதான். தன்ரை கடந்த காலத்திலையே வாழ்ந்து கொண்டு வாறா. அவாக்கு இப்பவும் அவான்ரை பிள்ளையள் குழந்தை யள்தான். அவாக்கு அந்த வீட்டிலை இருக்கிற ஒரு டொக்ரரையும் தெரியாது. ரீச்சரையும் தெரியாது. ஒருத்தரையும் தெரியாது. அது தன்ரை தேப்பனை தன்ரை எட்டு வயதிலை பறிகுடுத்துட்டு கஷ்டத்துக்கை முன்னேறி வந்து கரைசேர பேந்தும் தன்ரை புருசனும் தன்னைக் கட்டின கையோடை தன்னைக் குஞ்சு குருமன்களோடை இந்த உலகத்தை விட்டிட்டுப் போக கை ஒடிஞ்சு மனம் ஒடிஞ்சவாதான்.

எங்கடை மன்றத்திலை விளையாட்டுப் போட்டி வைக் கேக்கை கலர் கலரா கொடி மல்லிகைச் சீலை. சிவப்பு, கத்தரிப் பூவுக்கு கத்தரிப்பூ, மஞ்சள் கவுசுக்கு மஞசள் சீலை எண்டு கவுசுகளிலை கோடிப் புதுச் சீலையள் பளபளக்கும்.

“இதாற்ரை கவுசுகள் இதுகள். இப்பிடி விலை கூடின சீலையளை கவுசுக்கு கட்டித் தொங்க விட்டிருக்கினமே” எண்டு நான் இதைப் பார்த்த வுடனை சொல்ல, பக்கத்திலை இருந்த ஒரு அன்ரி சொன்னவா “அது அந்த விசருகளின்ரை சீலை. அதுகளுக்கு ஆர் இருக்கினம். இந்த சீலையளை கவுசுக்கு கட்ட கொண்டு போக வேண்டாம் எண்டு சொல்ல. முந்தி அதுகளின்ரை பிள்ளையள் குழந்தையள். ஆனால் இப்ப அவை வயது வந்தவை. பதினெட்டு வயதிலையிருந்து ரண்டு வயது குறைஞ்ச நாலு பிள்ளையளும் அந்தச் சீலையளை

எடுத்தந்து இருக்குதுகள்" எண்டு சொன்னா. "அப்ப பச்சைக் கவுசுக்கு பச்சை சீலையில்லைப் போல" எண்டு நான் சொல்ல, "இல்லை பச்சைக் கவுசுக்கு போன முறை கட்டியிருந்தவை. ஆனால் அதை ஆரோ போன முறை விளையாட்டுப் போட்டி முடிய எடுத்துக்கொண்டு போட்டினமாம். அதாலை இந்த முறை பச்சைக் கவுசுக்குப் பச்சைச் சீலை இல்லை" எண்டு கூறி அந்த அன்ரி சிரிச்சா.

"ஐயோ பாவங்கள். இந்தச் சீலையளின்ரை விலை தெரியாமல் இதிலை கட்டிக் கிழிக்குதுகளே. இதை இப்படியே வைச்சு வித்தாலும் ஒவ்வொண்டும் இரண்டாயிரம், மூவாயிரம் வருமே. பாவங்கள் இல்லாட்டில் அதுகள் கட்டலாமே."

அன்ரி : இல்லை அவையின்ரை வீட்டிலை ஆர் கட்டுறது. எல்லாம் புருஷன் இல்லாததுகள். வித்தால் வாற பெறுமதி திண்டு போயிடுமாம். இருந்தால் ஒவ்வொரு வருசமும் கவுசுக்கு கட்டினால் அதின்ரை பெறுமதி கூடவாம் எண்டு விக்காமல் கவுசுக்கு கட்ட வைச்சிருக்குதுகளாம். அதுகளும் அதுகளின்ரை பிள்ளையளும்.

என் மனம்: பாவங்கள் அதுகள். ஒண்டும் இல்லாததுகளுக்கே அவ்வளவு பொது நோக்கு. இப்படி இருந்ததாலதான் இண்டைக்கு இந்த ஆச்சின்ரை பேரப்பிள்ளையள் தற்திருப்தியோடை ஊரிலை நல்லாய் இருக்குது களாக்கும்.

எங்கடையள் எல்லாம் இருந்தும் ஆலாய்ப் பறந்து அகலக்கால் வைச்சு அரசியல் அகதியாய் இல்லாட்டிலும் பொருளாதார அகதிகளாய் வெளிநாடுகளுக்குப் போய் பொய் சொல்லி ஏமாத்தி சோஷல் காசுகளை வாங்கி கல்வீடு, பங்களா, நகைநட்டு, எக்ஸ்ஸற்றா.. எக்ஸ்ஸற்றா... என ஆவாவெண்டு அலைஞ்சு திரியுதுகள்.

ஒரு நேரம் நிக்க நேரமில்லையாம். இருக்க நேரமில்லையாம். படுக்க நேரமில்லையாம். நித்திரை வடிவாய் கொள்ளுறேலை யாம். சாப்பாடுக்கு ஓட்டமாம். தண்ணி பில்லாம். லைற் பில்லாம். காஸ் பில்லாம். அந்த பில்லாம் இந்த பில்லாம் எண்டு ஓடுப்பட்டு திரியுதுகளாம்.

பெத்த பிள்ளையை பாக்க நேரமில்லையாம். இந்த நிலையிலை, தாய் தேப்பனைப் பாக்கிறதை சொல்ல வேணுமோ? அங்கை ஒரு குடும்பம் ஏதோ ஒரு ஐரோப்பிய நாட்டிலை. அவை எனக்கு எந்த ஊர் எண்டது ஞாபகமில்லை. அங்கை உழைச்சு ரண்டு வீடு வேண்டிப் போட்டுதுகளாம். மூண்டாவது பிள்ளையும் பெத்தால் அரசாங்கத்திட்டையிருந்து இன்னும் கொஞ்சக் காசை கூடச் சலுகையாய்ப் பெறலாமாம் எண்ட துக்கு மூண்டாவது பிள்ளையை பெறுறத்துக்கிடையில அதுக்கு வீடு வேண்ட ஒரு குட்டிக் கடையை தெரு முனையிலை எடுத்து பிள்ளையள் ரண்டையும் காருக்கை விட்டுப் பூட்டிப் போட்டு கடைக்குக் கிட்டவாய் காரை நிப்பாட்டிப் போட்டு திறந்த கடையிலை அந்தக் குளிருக்கை நிண்டு மரக்கறி விக்குதுகளாம். அந்தக் கடைக்கு கண்ணாடிக் கதவில்லையாம். அந்தக் கடை எண்டால் வாடகை குறைவாம். செலவுச் சுருக்க மாம். "கோணர் சொப்" எண்டு சொல்லுறதாம். அதாலை குளிரிலை விறைச்சு சாகுதுகளாம். அதோடை அதுகள் தங்கடை குழந்தையளுக்கு காருக்கை கீற்றரைப் போட்டு விளையாட்டுச் சாமான்களையும் நொருக்குத் தீனியையும் தண்ணிவென்னியளையும் போட்டிட்டு வியாபாரத்தைப் பாக்குதுகளாம். புருஷ னும் பெண்சாதியும் இளம் குடும்பம். வேறை ஆள் உதவி இல்லை. ஒண்டுக்கு ரண்டுக்கு எல்லாம் பம்பஸ் இருக்கிறதாலை பிள்ளையளுக்கு பிரச்சினை இல்லையாம். வீட்டிலை பிள்ளையைத் தனிய விட்டால் குழந்தையள் அழுதால் பக்கத்து வீட்டுக்காரர் பொலிசுக்கு அழுறதை அடிச்சுச் சொல்லிப் போடுவினமாம். நல்ல பிள்ளைப் பாராமரிப்பு நிலையம்! பிள்ளைப் பாராமரிப்பு நிலையத்திலை விட காசும் செலவாம்.

ஆனால் இவையேன் இவ்வளவு கஷ்டப்படினம். 'திரை கடல் ஓடியும் திரவியம் தேடு' எண்டது சரியணை. 'அளவோடு உழைத்து வளமோடு வாழ்' எண்டும் ஒரு பழமொழி இருக்கல்லேணை. எனக்கிப்ப ஒரு சந்தேகம் வலுவாய்க் கூடிக் கொண்டு போகுதெணை. இப்ப 'போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து'.

'அகலக்கால் வைக்காதை' எண்ட பழமொழியளை தமிழ் மொழியிலையிருந்து எடுத்தாச்சுது போலை எண்டு. அது தான் தமிழ்ப் பற்றுள்ள தமிழன் ஆலாய்ப் பறக்கிறான் ஆசை கூடி.

இதுக்குள்ளை அந்தக் குழந்தையள் இரண்டுக்கும் அது தான் அந்தக் காருக்குள்ள கீற்றருக்கை காசுக்காய் பூட்டி வளர்க்கிற குழந்தையள் இரண்டுக்கும் தேகம் எல்லாம் ஒரே கடி சொறியாம். வெளிக்காத்துப் படாமல் வளர்கிற குஞ்சுகள் தானே அதுகள். அது விளங்காமல் அந்தத் தாய் தேப்பன் அது எங்கடை பரம்பரைக் கிரந்தி எண்டு போட்டு தங்கடை யாவாரத்திலை வலு மும்மராமாம். புருஷனும் பெண்சாதியும் ஒண்டுக்கை ஒண்டு ரண்டு மூண்டு தலைமுறை மாறி மாறி கலியாணம் செய்த ஒரே குடும்பமாம். அப்ப இது பரம்பரை நோய் எண்டு பிழையாயும் சரியாயும் நினைச்சு தங்களைத் தாங்களே சமாதானப்படுத்த அவைக்கு ஞாயம் இருக்குது தானே. ஆனால் இலங்கையிலை இருந்து வெளிநாட்டுக்குப் போனவையிலை வெகு விரைவிலை முன்னணியிலை இந்தக் குடும்பம் திகழுவினம் எண்ட நம்பிக்கை அந்த நாட்டிலையுள்ள அந்த ஆக்களுக்கு இவை பற்றி கணிப்பீடு உருவாகியிருக்குதாம் எண்டு ஒரு கேள்வி. காதுவாக்கிலை எங்கடை காதிலையும் பட்டுது.

நான்: எணேய் முந்தி தின்ன வழியில்லாமல் இருந்த உன்ரை பிள்ளையள் இப்ப வீடில்லாமல் இருக்கினமோ. காசில் லாமல் இருக்கினமோ. காரில்லாமல் இருக்கினமோ. உடுக்க உடுப்பில்லாமல் இருக்கினமோ. நாலு மனிசரைப் போல நடக்கத் தெரியாமலும் இருக்கினமோ.

அப்பிடி இருக்க ஏனணை ஆச்சி நீ இப்பவும் இந்த வயதி லையும் வயலுக்குப் போறாய். காலை நீட்டி கொஞ்ச காலமெண்டாலும் படணை. இல்லாட்டில் நீயும் உன்ரை குடும்பத்தையும் ஒரு நாளுக்கு ஒரு சீலை, ஒரு நகை, ஒரு ஃபாசன் எண்டு மாத்தப் போறியளாக்கும். அது தான் நீ இப்பவும் ஓடியோடி வயலுக்குப் போறியோ.

ஆச்சி : (சிரிச்சபடி)

"ஓம், ஓம் அதுதான் இப்ப எங்களுக்கு அவசராமாய்த் தேவை. அது தான் நான் ஓடுறன். விடடி பிள்ளை.

*பகிடியை விட்டிட்டு அங்காலை போ. மாடு அழப் போகுது. அதுக்குப் புல்லுப் போட வேணும். பொழுது பட முதல் வயலுக்காலை திரும்ப வேணும். அது பின்னேரத்திலை ஆமியள் உலாவுற இடம். விடடி, விடடி உழைச்ச கைகாலடி" எண்டு சிரிச்சபடி ஓடுகிறா. நானோ ஆளை விடாமல் கலைக்கிறன்.*

நான்: *"எணை ஆச்சி எணை ஆச்சி இன்னும் ஒரு வியளமணை. இதை மட்டும் சொல்லிப் போட்டுப் போ"*

*எண்டு முன் மடியைப் பிடிச்சு ஆளை மறிக்கிறன். ரண்டு அடி தன்ரை நடையில தாமதிக்கிறா.*

*"நான் கேட்டால் அடிக்கப்படாது கோவிக்கப்படாது. உண்மையைச் சொல்ல வேணும் சரியோ. உண்மையைச் சொல்லுவியோ."*

*ஆச்சி :* *சரி கேள்.*

நான் : *"ஆச்சி ஏனணை உன்னை மண்ணாங்கட்டி ஆச்சி மண்ணாங்கட்டி ஆச்சி எண்ணுறவை" எண்டு எனக்கிருந்த ஐமிச்சத்தைக் கேட்கிறன்.*

*ஆச்சி :* *அதடி பிள்ளை, அப்ப எனக்கு சரியான பசி. சாப்பிட ஒண்டும் கிடைக்காது. அந்த நேரம் மடிக்கை கொஞ்சம் சுட்ட மண்ணாங் கட்டியை எடுத்துச் சரையிலை சுத்தி வைச்சிருப்பன். பசிக்கப் பசிக்க சின்ன சின்னக் கட்டியாய்ப்போட்டு வாய்க்குள்ளை உமிஞ்சனெண்டால் என்ரை பசி போயிடும். அசுர பலம் வந்திடும். நான் என்ரை வேலையளைச் செய்வன். அப்பிடித்தான் நான் என்ரை பசியை அப்ப அப்ப தற்காலிகமாக அடக்கிச் சீவிச்சது. அதை விடடி பிள்ளை. அது பழைய கதை. சரி. நான் இப்ப போகட்டோ" எண்டு சொல்லிப் போட்டு இடத்தாலை விலகுறா. அவ சொன்ன விசயம் எனக்குள் சீரணமாக முதலே.*

என் மனம்: *அப்பாவி ஆச்சி. ஆச்சியின்ரை பேர் அன்ன லச்சுமி. அன்னம் எண்டால் சோறு. லச்சுமி எண்டால் செல்வம்.*

-புது வசந்தம்-

*தேசிய கலை இலக்கியப் பேரவையின் 35வது ஆண்டுமலர்*

# மகரகாவியம்

*1*

*“பேணாடா! (உரத்த குரலில்) கதவைத் திற. பேணாடா! கதவைத் திற. எத்தினை நாளைக்கு இப்பிடியே பூட்டி வைப்பாய். கதவைத் திற. கதவைத் திற.” (வயது போன ஒரு கிழவியின் அலறல்) என்ர ஆச்சி கத்துறா.*

*இது வழக்கமான கத்தல்தான். ஒரு நாளைக்கு இது பலதடவைகள் நடக்கும். இது எங்களுக்குப் பழகிப்போன விடயம். ஆனால் அயலட்டைக்கு இது ஒரு அவலம் நிறைந்த ஆந்தையின் அலறல்.*

*ஓ!... இது எத்தனை வடிவான பூனைக்குட்டி. சின்னக் சின்னக் கண்கள். சின்ன மூக்கு. நல்ல சின்னக் குட்டி வாய். இதைத் தடவ எத்தினை ஆசை ஆசையாயிருக்கு.*

*எனக்கும் உரிய வயதிலை கலியாணம் நடந்திருந்தால் எனக்கும் இப்பிடி இப்பிடிக் குட்டிக் குட்டிப் பிள்ளையள் பிறந்திருக்குந்தானே. அதுகள் பிறந்திருந்தால் இந்தப் பூனைக் குட்டியளோடை பழகிற மாதிரி அழைஞ்சு அழைஞ்சு பழகி யிருப்பன். ஏதோ நல்ல வேளை எல்லாத்துக்கும் கட்டுப்பாடு விதிக்கிற என்ர, எங்கட அம்மா இந்தப் பூனைக்குட்டியளை மட்டும் எங்கட வீட்டிலை சீவிக்க விட்டிட்டா.*

*என்ர மற்றத் தங்கச்சி தன்ர பொழுதை நல்ல நல்ல டிசைனுகளிலை லேஸ் பின்னுறதிலை செலவழிக்கிறா. அவ நல்ல வடிவு. வடிவா லேசுகளிலை டிசைன் பண்ணுறதுகளை எங்கட வீட்டை வாற விசிற்ரேசுக்குக் காட்டி சந்தோசப் படுகிறதிலை நல்ல அலாதிப் பிரியமாயிருப்பா. கண்டிப்பான என்ர அம்மாவும் அவவோடை சேர்ந்து அவவின்ர லேஸ் வேலைப்பாட்டை வடிவா சத்தமா சிலாகிப்பா. இந்த சிறப்பான*

லேஸ் பின்னலைத் தவிர வேற ஏதேனும் பொழுது போக்கே அவாவுக்குத் தேவையில்லையெண்ட மாதிரி.

என்ர இன்னொரு மற்றத் தங்கச்சி சமையல்லை வலு கெட்டிக்காரி. அதை நாங்கள் எல்லாரும் கூடியிருந்து சாப் பாட்டு மேசையிலை சாப்பிடேக்கை எதுக்கும் சட்டம் வைக்கிற அம்மா என்ர இரண்டாவது தங்கச்சியின்ர சமையல் கை வண்ணத்தை வாயூறி வாயூறிப் பாராட்டிச் சாப்பிட்டு அந்த நேரத்திலை என்ர இரண்டாவது தங்கச்சியின்ர எல்லா ஆசைய ளையும் சமையலுக்கையே மையம் கொள்ளப் பண்ணியிடுவா.

என்ர அம்மா நல்ல கெட்டிக்காரி. என்ர அடுத்த மூண்டாவது தங்கச்சியின்ர கெட்டித்தனம், வீட்டை எப்பவும் வலு கிளீனாய் தொட்டால் எந்த இடத்திலையும் தூசை உணர முடியாத அளவுக்கு வீட்டை தளபாடங்களை எந்த நேரமும் தூசு தட்டித் தட்டி வீட்டை மொப் பண்ணி சாமானுகளை விதம் விதமாய் ஒவ்வொரு கிழமைக்கு ஒவ்வொரு டிசைனில அடுக்கி வீட்டை அழகுபடுத்திப் பார்க்கிறதிலையே தன்ர முழுப் பொழுதையும் களைப்பில்லாமல் விடுவா.

இவா இப்பிடி வீட்டை வடிவா அடுக்கி நேர்த்தியாய் வைச் சிருக்கிறதை எங்கடை வீட்டை வந்து போறவையிலை பாராட் டாத சனங்களே இல்லை. இதெல்லாம் தன்ர மூன்றாவது மகளின்ர பெருமைதான் எண்டு வாறவைக்கு முன்னாலை அவவைக் கூப்பிட்டுப் பாராட்டுவா. அவையும் வெகுவாய்ப் பாராட்டுவினம். அவவுக்கும் தன்ர வேலைக்குக் கிடைச்ச பாராட்டாலை வெகு சந்தோசம். என்ர மூண்டாவது தங்கச்சிக்கு இப்ப முப்பத்திரண்டு வயது.

என்ர நாலாவது தங்கச்சிக்கு சந்தோஷம் பண்ணுற பொழுதுபோக்கு வளவுப் பராமரிப்பு. எங்கடை இருபது பரப்பு காணியையும் விடிய நாலு மணிக்கே எழும்பி தலையிலை புழுதிபடாமல் துண்டைக் கட்டிக்கொண்டு அந்தளவு முத்தத் தையும் தண்ணி தெளிக்க வேண்டிய இடங்களுக்கு தெளிச்சு முத்தத்தை கூட்டு கூட்டெண்டு கூட்டி அள்ளி, கல்லுக் குறுணியள் எல்லாம் பொறுக்கி ஒரு இடத்திலை போட்டு வளவைக் கோயில் போலை வைச்சிருப்பா. வீட்டை வாறவை எங்கடை வளவைப் பார்த்தாலே அதின்ர துப்பரவில மயங்கிப் போயிடுவினம். அவவும் தனக்கு மூத்த அக்காவையும் விட இரண்டு வயதுதான் இளமை.

இவவுக்கு இரண்டு வரியத்துக்குப் பிந்திப் பிறந்த மற்றத் தங்கச்சிக்கு தோட்ட வேலைப்பணி. எந்த நேரமும் தோட்டத் துக்கை மண்வெட்டியும் கையும். புல்லுக்கிண்டிற புல்லும் கையும் இல்லாட்டில் மருந்தடிப்பா. இல்லாட்டி கப்பாத்துப் பண்ணுவா எண்டு ஏதோ, ஏதோ அலுவலாய்த்தான் எங்கட வளவைச் சுத்திக்கொண்டே இருப்பா. அம்மாவும் போய் அவவின்ர தோட்ட வேலையளுக்கு அட்வைஸ் பண்ணி வலு கச்சிதமாய் தோட்ட நிர்வாகத்தை என்ர தங்கச்சி திறம்பட நடத்த உதவுவா.

இவவுக்கு அடுத்தவவுக்கு வயது இருபத்தாறு, எங்கட அம்மாக்கு எல்லாப் பிள்ளையளும் ரண்டு ரண்டு வயசு இடை வெளியிலைதான் பிறக்கிறது போலை. ஏனெண்டால் நாங்கள் ஏழு சகோதரங்களுக்கும் உள்ள இந்த இரண்டு வருஷ கால இடைவெளியெண்டது ஒருத்தருக்கும் இடையிலை எப்பிடியோ மாறுபாடில்லாமல் இருக்கிறதுதான்.

அவான்ர வேலைப்பாடு எந்த நேரமும் தன்ர முகத்தை உடம்பைக் கழுவிக் கழுவி விதம் விதமாய் மேக்கப் போட்டு அடிக்கடி உடுப்புகளைக் களட்டிக் களட்டிப் போட்டு ஒரே கண்ணாடிக்கு முன்னாலை நிண்டு தன்னை ஸ்ரைல் செய்தபடியே இருப்பா. என்ர அம்மாவும் ஒரு நாள் தன்னும் அவவின்ர எந்த ஸ்ரைலையும் மேக்கப்பையும் பாராட்டத் தவறவிட்ட நாளில்லை.

என்ர ஆறாவதும் ஏழாவதும் ரண்டும் ஒருத்தரோடை ஒருத்தர் ஓடிப்பிடிச்சு விளையாடிக் கொண்டும் எங்களோடை ஒவ்வொருத்தரோடையும் வந்து செல்லம் கொஞ்சிக்கொண்டும் வீட்டுக்கையே சுத்திக்கொண்டு ஆடியும் ஓடியும் பாடியும் வலும் ஹாயாய்த்தான் அவையின்ர வேலைப்பாடு. என்ர அம்மா தன்ர இளைய சகோதரங்கள் எல்லாரையும் கட்டிப் பிடிச்சுக் கொண்டு சேர்ந்து செல்லம் கொட்டுவினம்.

அம்மா வேலைக்கு ஃபக்ரறிக்குப் போயிட்டு வருவா. வந்து களைக்காமல் வீட்டிலும் எங்கள் எல்லாரையும் மேற்பார்வை செய்து பாராட்டுற இடத்திலை பாராட்டி கண்டிக்கிற இடத் திலை கண்டிச்சு சாப்பாட்டு மேசையிலை ஒண்டாயிருந்து சாப்பிடுகிறதுதான் எங்கட வழக்கம்.

இந்த ஒழுங்கில ஒருநாளும் எந்த மாற்றமும் நடைபெறாது. நாங்கள் வீட்டிற்குள். அம்மா உழைப்பு. பாட்டி பூட்டிய

அறைக்குள் 'பேணாடா கதையைத் திற, பேணாடா கதவைத் திற' அலற லுடன். பாட்டிக்குச் சாப்பாடு கதவுக்குக் கீழால் அவவின் அறைக்குள் தள்ளப்படும்.

இடையில் எப்பிடியோ கதவு பூட்ட மறக்கப்படும் சந்தர்ப் பங்களில் பாட்டிக்கு அவவின் அறைக்கு வெளியே வரும் சந்தர்ப்பம் கிடைத்துவிடும். அப்போது அவ ஒரு ஆட்டுக் குட்டிப் பொம்மையை கையில் வைத்து ஒரு கைக்குழந்தையை அணைப்பதுபோல் அணைத்து தன் பிள்ளைப் பாசத்தை வெளிப்படுத்திப் பாட்டொன்று பாடுவா.

இது ஒரு நாடகம். நான் சின்னனிலை இருபத்தொரு வயதிலை முதல் முதல் நடிச்ச நாடகம். என்னைச் சின்னனிலை நீ பெரியாளாய் வந்து என்னவாய் வர இருக்கிறாய் எண்டு கேட்டால் மற்றவை டொக்ரர், இஞ்சினியர், ரீச்சர் எண்டால் நான் நடிகையாய்த்தான் வர விருப்பம் எண்டு சொல்லுவன். எனக்கு அப்பவே நடிப்பிலை நல்ல ஆசை.

அந்தக் காலத்திலை அறுபத்தேழாம் ஆண்டெண்டு வையுங் கோவன். அப்ப எல்லாரும் அநேகமாய்ச் சினிமாப் பைத்தியங் கள்தான், அப்ப சினிமாவிலை வாறவைதான் எங்கட இலட்சிய புருஷர்கள். அப்ப அவை மாதிரி நான் வர ஆசைப்பட்டது பிழையில்லை. ஆனால் நடைமுறையிலை அப்பிடி ஆகிறதெண் டது அதுகும் இலங்கையிலை இருக்கிற நாங்கள் இந்தியாவிலை இருக்கிற சினிமாப் படத்திலை நடிக்கிறதெண்றது, அதோடை எனக்கப்ப பத்து வயது தானே!

நான் பெரிய மனிசியாய் வளந்தால்தானே என்னை கதாநாயகியாய் எடுப்பினம், எனக்கிப்ப தலைமயிரும் சிலுப்பா. நீட்டுத் தலை மயிரிருந்தால்தானே பூ வைக்கலாம். உயரமாய் வளரவேணும் சீலை கட்ட. சரி காலம் வரும். கனவு கனியும் எண்டு காத்திருந்த எனக்கு என்ர கம்பஸ் வாழ்க்கையிலை, நாடகத்திலை நடிக்க எனக்கு விருப்பம் எண்டதை என்ர றாக்கிங் பீறியட்டிலை கேள்வியள் கேட்டு தரவுகளை அறிஞ்சு கொண்ட சீனியேர்ஸ் பேந்து தாங்கள் ஒரு நாடகம் போடேக்கை என்னையும் நடிக்க எடுத்திச்சினம்.

இது எனக்கு முதலாவது நாடக அனுபவம் எண்டதை நான் அவைக்கு சொன்னன். ஏனெண்டால் நாடகத்திலை ஏதேனும் விசேட உத்திகள் இருப்பின் அவர்கள் எனக்கு அதைச்

சொல்லித்தரவேணும் எண்டதுக்காக. அதனால எனது நாடக கன்னி முயற்சியில் எனக்கு ஒரு சிறு பாத்திரம் தரப்பட்டது. அது நெறியாளர் க.பாலேந்திராவின் “ஒரு பாலை வீடு”. அதுதான் அந்த தொண்ணூற்றுநான்கு வயதில் அறைக்குள் சிறைப்படுத்தப்பட்ட பாட்டிப் பாத்திரம். அதில் எனக்கு வழங்கப்பட்ட வசனம், ‘பேணாடா கதைவைத் திற! பேணாடா கதைவைத் திற! கதவைத் திறந்து என்னை வெளியிலை விடு’ என்னும் அலறல். அந்த நாடகத்தின் ஒவ்வொரு பாத்திரமும் பேத்திமாரும் தங்கள் கருமங்களைச் செய்து தம்முள்தாமோ மற்றவர்களுடன் ஏதேனும் பேசும் போதோ கூட உண்மையில் இந்த என்னுடைய அந்த ஒரே ஒரு வசனம் தான் அந்த நாடகத்தின் கருப்பொருள்.

மற்றும்படி அந்த நாடகத்தில் வந்த அத்தனை பாத்திரங் களையும் நான் நினைக்கிறன் எட்டு பெண் பாத்திரங்களுமே தம் உண்மை மன உணர்வை பிரதிபலிப்பதாய். ஒரு இடத்திலும் ஒரு வசனமும் பேசவில்லை. அத்தனை வயதுகளிலும் தமது கடமையில் மிக்க மன மகிழ்வுடன் வாழும் ஒரு குடும்பமாகவே காட்டப்பட்டிருந்தது.

அந்தப் பாட்டிதான் ‘என்னை வெளியிலை விடு என்னை வெளியிலை விடு’ என்ற அலறலினூடாக அந்த வயது வந்த குமர்ப்பிள்ளைகளை வீட்டுக்குள் விட்டுக் கடமைக்குள் பூட்டி வைக்காமல் அவர்களையும் வீட்டுக்கு வெளியே அனுப்பி வெளி உலக அனுபவங்களைப் பெற்று திருமணமாகும் வயதில் திருமணமாகி பிள்ளை பெறும் வயதில் பிள்ளை பெற்று வாழுற காலத்தில் வாழ்வை அனுபவிக்க வேண்டும் என்கிறது.

இது என் முதலாவது நாடகத்தால் நான் பெற்ற அனுபவம்.

## 2

இந்நிலையில் நானும் உரிய வயதடைந்து திருமணமாகி பிள்ளை பெற்று பிள்ளையின் அணைப்பில் திளைத்து பிள்ளைக்குப் பெண் விடுதலைச் சிந்தனைக் கருத்துக்களை ஊட்டி வளர்த்து உரிய வயதில திருமணம் பேசி வைத்தேன். பேசிய திருமணம் அவர்கள் இருவருக்குமிடையிலான கருத்து வேறுபாட்டால் இருவருடத்தில் இரண்டு பட்டது.

காதல் என்பது வாழ்வில் ஒருமுறை மட்டும் பூக்கும் பூவல்ல. மறுபடியும் என் மகள் வாழ்வில் காதற்பூ பூத்தது. நம்பினாள். மீண்டும் வீட்டுச் சிறைக்குள் அடைத்துவிடும் கதாநாயகன். கதாநாயகனுக்கு தன் மனைவி தன் சொற்படி கேட்டு நடக்கும் கீழ்ப்படிவுள்ள பெண்ணாகவே தேவைப் பட்டாள்.

பெண் விடுதலைச் சிந்தனை அமைப்பில் ஊன்றி ஊறி வளர்க்கப்பட்ட என் மகள் இக்கதையின் கதாநாயகி. "அம்மா இந்த உலகம், நாங்கள் நினைப்பது போல் புதுமைக் கருத்துகள் உடையதல்ல. எனவே நான் தொடர்ந்து என் வாழ்வில் போராடி என் குடும்ப வாழ்வை உடைத்து உடைத்துச் செல் லாமல் நான் இப்பழைய இல்லற வாழ்க்கை முறைக்கு என் னைத் தயார்ப்படுத்தி விட்டன். போராடிப் பயனில்லை. இனி இதுதான் என்ர வாழ்க்கை" என்றாள்.

நாங்கள் முற்போக்குச் சிந்தனை உடையவர்கள். என் மகளின் கணவனோ ஆண் என்பவனே தலைவன். அவன் என்ன முடிவெடுக்கிறானோ அதற்கு அந்த வீட்டில் உள்ள அனைவரும் கட்டுப்பட வேண்டும். அவருக்கு இருபத்தெட்டு வயது. அதற்கு மேற்பட்டவர்களும், கீழ்ப்பட்டவர்களும் யார் எவராயினும் நாம் எல்லாரும் மருமகனுக்கு அடிபணிந்தே ஆகவேண்டும் எனும் கருத்தால் ஊட்டி வளர்க்கப்பட்டவராயிருந்தார்.

இங்கு பெண்விடுதலைச் சிந்தனை அமைப்பிற்கும் ஆணா திக்கத்திற்கு மிடையில் நடந்த போட்டியில் பெண்ணின் வீட் டில் வந்து குடியேறிய மருமகன் தனது மனைவியின் பேச்சுச் சுதந்திரம், விரும்பிய வேலை செய்யும் சுதந்திரம், விரும்பிய வற்றை கொள்வனவு செய்யும் சுதந்திரம், தன் பிள்ளைக்கு தான் விரும்புவதை வாங்கிப் பரிசளிக்கும் சுதந்திரம் சகலதையும் மறுத்துரைத்தார்.

தாய்க்கும் பிள்ளைக்கும் இடையில் தொடுகை உணர்வு பரிமாறப் படுவதையே.

ஓகே! இது அவர்களின் நிலைப்பாடு!

## 3

எனது அயலிலுள்ள உறவினர்களுக்கு அன்று ஒரு உறவுக்கார டொக்ரரின் விசிற் அவர்களின் மாமன் வீட்டிற்கு. அவர் லண்டனிலிருந்து இலங்கைக்கு அடிக்கடி வியாபார விடயமாக

*வருகிறவர். அப்போது இவர்களின் வீட்டிற்கும் வந்து பார்த்துச் செல்வார். எனவே அவரை இவர்கள் பார்க்க வேண்டியிருந்ததால் கைமுறிந்து காச்சலுடன் தனிய இருந்த என்னை அவர்களாலும் பார்க்க வரமுடியவில்லை. அந்நேரம் என் வீட்டின் பத்து அடி முற்றத்தை வழமையாக வந்து கூட்டித்தந்து வேலை முடிய எவ்வளவு காசை நான் கூலியாகக் கொடுக்கிறேன் என்பதைக் கண்ணெடுத்தும் பாராது நான் மனமுவந்து கொடுக்கும் பத்து ரூபாவை மட்டுமே கூலியாகப் பெற்றுச் செல்லும் தொழிலாளி வந்தான்.*

*'அக்கே, அக்கே' எனக் குரல் கொடுத்தான். அவன் குரல் கொடுத்தால் என் வீட்டிலுள்ளவர்கள் அவனுக்கு கூட்ட விளக்குமாறை எடுத்துக் கொடுக்க மாட்டார்கள். என்னைத் தான் அதற்குக் கூப்பிட்டு விடுவார்கள்.*

*ஆள் சாடையான கறுவல், வாடல், மெல்லியவன். அழுக்குக் காற்சட்டை, கைவைத்த வட்டக்கழுத்து பெனியன் அணிந் திருப்பான். உடுப்பு கரி கரியாய் இருக்கும். கையில் எப்போதும் ஒரு இரண்டு, மூன்று அடி நீளத்தடி. ஆனால் ஆளில் ஊத்தையோ, அழுக்கோ, வியர்வையோ ஒருபோதும் மணப்பதில்லை. நான் இவன் குடிகாரனோ என்றறிய அவன் வந்ததும் காற்றை மோந்து பார்ப்பதில் அறிய முயற்சிப்பேன்.*

*அவன் பைத்தியந்தான். எனினும் நாட்டின் அரசியல் பிரபாகரன், ராஜபக்ஷ, சந்திரிக்கா, விஜயகுமாரதுங்க, கருணாம்மான், பொட்டம்மான், L.T.T.E, போம்ப, நழுவ (நடிகன்) என்று எதை எதையெல்லாமோ ஒவ்வொரு சொல் தொட்டு இரண்டு இரண்டு வசனம் அலட்டுவான். சும்மா சொல்லக்கூடாது! அவன் கருணாம்மானின்ரையும் பிரபாகரன்ரையும் பிரச்சினையை அலம்பலிடையே சொல்லித் தான் நான் அறிஞ்சுகொண்டது.*

*இதென்ன இதென்னவோ அலட்டுது எண்டு போட்டு இருக்க ரீ.வி. நியூசில அவன் அலட்டினதுகள் போக நான் உண்மையை அறிஞ்சு கொண்டது. எவ்வளவு வெட்கக்கேடு! நாங்கள் எங்கள் நாட்டில் தீப்பிடித்து எரிந்து கொண்டிருக்கும் அரசியலின் சூடு தெரியாது சோறு கறி காச்சி சோறு திண்டு கொண்டு எப்பவும் ரி.விப் படத்தையும், சீலை சட்டைக் கதையளையும் கதைச்சுக்கொண்டு குளிர் காஞ்சு கொண்டு வாழுறது.*

பைத்தியத்திற்கு இருக்கிற அக்கறை நமக்கில்லையே என்று என் நிலையையிட்டு அன்று நான் வெட்கப்பட்ட தருணம் அது. அதன் பின் அவர் அலட்டும் விடயங்களைச் சற்றுக் கூர்ந்து கவனித்து வீட்டிலுள்ளவர்களுடன் பகிர்ந்து மறந்து போவன்.

ஒரு முறை சொன்னார் "அக்கே பீச் பத்தே சேரி பத்தே மினிசு ஒக்கம ஒல்மன் கூடு, சந்திரிக்கா யக்கா யக்கா மரித்த சைஸ்" என்று கூறி ஒரு ஐந்து நிமிசம் தொடர்ந்து சிரித்திரு ப்பார். (கடற்கரைப் பக்கம் உள்ள மனிசரும், சேரிப்பக்கம் உள்ள மனிசரும் எலும்புக் கூடுகள். சந்திரிக்கா அரக்கி அரக்கி தொக்கை சைஸ்).

நான் 'ஒவ் நேத' என்று கூறி சமாளிச்சிட்டு உள்ளுக்கை வந்திட்டன். ஏனெண்டால் நாங்களும் அரக்கப் புரக்க சந்திரிக் காவின்ர தோற்றந்தான்.

உழைப்புக்கேற்ற உணவுண்ணாது அளவுக்கதிகமாகப் போட்டுக்கட்டி மாமிச மலையை வளர்த்து வைச்சிருக்கிற அசிங்க அறிவில்லாத எங்கடை உடலையே எங்களாலை தாங்க முடியாத அளவுக்கு பாவமூட்டையைச் சுமப்பவர்கள்தானே நாங்கள் என்ற எண்ணத்தில்.

ஒரு நாள் இளநீர் பிடுங்க வீட்டின் பின்புறம் வந்தபோது என் மருமகனைப் பற்றி "ஆள் எங்கை? என்ன தொழில் செய்யுறார்? பொய் சொல்ல வேண்டாம்" எண்ட விதமான கேள்வியள் வரவே இவன் என்ன எங்கடை விபரங்களை ஆராய்வதாக இவனின் கேள்விகள் என்று மனதில் படவே அவர் நாங்கள் தமிழர் எண்டதால் சிங்களப் பைத்தியத்தின் மனதிலும் எம்மைப்பற்றி பிழையான எண்ணம் வீட்டின் உள்ளே உருவாகக் கூடாதே எனப் பயந்து இருந்தாலும் 'நான் வேலைக்கு சென்றுவிட்டார்' என பொய் கூறவே 'அக்கா பொறு கியன்ட எப்பா மம தண்ணவா' (பொய் சொல்ல வேண்டாம் எனக்குத் தெரியும்) எண்டார்.

நான் கதையை மடக்கும் முகமாக 'மல்லி தமாய் பொறு கியன்னே' (தம்பி தான் பொய் சொல்லுறது) என்று சொல்ல 'நா அக்கா ஆகமம் பொய் சொன்னாலும் நான் பொய் சொல்லேன். உழைத்துச் சாப்பிடுவேன். மனிதர்கள் நல்லவர்கள். ஆனால் நகரசபா குப்பையை ஒழுங்காக றோட்டுகளில் எடுக்குதில்லை. றோட்டிலை நிக்கிற மரங்களெல்லாம் வாடுது. தண்ணீர் ஊற்ற

வேணும். நாளை மழை வரவேணும், வரவேணும்' என்று அலட்டியபடியே ஆள் இளநீர் இறக்காமலே விறுவிறெண்டு ஏதோ புறுபுறுத்துக்கொண்டு வீட்டை போயிட்டார். என்னோடை ஏதும் மனத்தாங்கலோ தெரியாது. பைத்தியந்தானே.

## 4

பின் இரண்டு மூண்டு நாள் கழிச்சு வீட்டுக் கேற்றடிக்கு வந்தார். இளநீர் பிடுங்காமல் கூலியும் வாங்காமல் என்னவோ வாய்க்குள் பிறுபிறுத்துக் கொண்டு போனவர் தன்பாட் டிலையே வழக்கமாக நான் விளக்குமாற்றைக் கொடுக்க வாங்கி விறுவிறெண்டு நாங்கள் செல்லும் ஒழுங்கை முழுவதையும் கூட்டித் துப்பரவாக்கி நான் கொடுக்கும் ருப்பியல் தகயாயை (பத்து ரூபா) கூலியின் தொகை பாராமலே வாங்கிச் சென்றான்.

ஆள் வீட்டை வராத மூண்டு நாளாய் முற்றம் கூட்டடப் படவில்லை. அவர் வந்தால் நாம் வேலை வழங்கினால்தானே! அவர் தன் படி பத்து ரூபாவை பெற்றுச் செல்வார். ஆனால் எப்போதும் பத்து ரூபா படியைப் பெறும்போது 'கசிப்பு கசிப்பு பொன்ன' (குடிக்க) என்பதைச் சொல்லாமல் சொல்வான். நான் யார் அவனை கசிப்பு குடிக்காதே என்று மறுக்க. அக்காவா, அம்மாவா, உற்றார் உறவினரே! அவன் யாரோ சிங்களப் பிசு. அவ்வளவே இதற்குள் இன்னொன்றையும் நான் அவரைப் பற்றிச் சொல்லி மூன்று நாள் கழித்து அவர் எம் வீட்டிற்கு வருவதைப் பற்றிப் பார்ப்போம்.

ஒருநாள் என்ர ஐயாவின்ர திவசம். டிசம்பர் மாதம் முப்பத்தோராம் திகதி, வருடங்கள் முப்பத்தைந்தைத் தாண்டி விட்டன. ஆனால் எனக்கு இம்முறை என் ஐயாவின் நினை வாக என் உறவினர்கள் நண்பர்களை அழைத்து ஒரு சைவச் சாப்பாடு போட விருப்பம்.

நாங்களும் இப்ப எங்கடை அம்மா ஐயா தம் வாழ்நாளை முடித்துக்கொண்ட காலகட்டத்திற்கு கிட்ட முட்ட வந்திட்டமோ என்ற பயத்திலோ அல்லது இப்படியான நிகழ்ச்சிகள் இந்தப் போர்க்கால அவசர கால வாழ்க்கைச் சூழலில் உறவினர்கள் நண்பர்களை ஒன்று கூட வைக்கும் ஒரு சந்தர்ப்பத்தை உரு வாக்கும் என்றோ என் மனதில் ஒரு துளிர்விடும் ஆசை தோன்றியது.

இந்தளவிற்கும் இறந்த என்ர ஐயா வந்து நான் காச்சுற சாப்பாட்டை சாப்பிடுவார் எண்ட நம்பிக்கை எனக்கும் இல்லை. ஆனால் அது என்ர ஐயாவுக்கும் இல்லை. இந்த திவச சாப்பாடு கொடுக்கும் என் ஆசை சில பல காரணங்களினால் நடை பெற முடியாமல் போய்விட்டது.

எனவே கஷ்டப்படும் யாருக்கேனும் அச்செலவின் ஒரு பகுதியை கொடுக்க வேண்டும் என நான் தீர்மானித்து மகர இந்த முற்றம் கூட்டும் பைத்தியத்திற்கு கொடுப்போமா என என் கணவனிடம் கேட்டபோது என் கணவன் 'இல்லையம்மா அதுக்கு நீங்கள் ஆயிரம் ரூபாவைக் கொடுத்தால் அது ஒரே நாளிலயே அவ்வளவு காசுக்கும் கசிப்புக் குடிச்சுச் செத்துப் போம். அதாலை ஒரு சிறு தொகையைக் குடுங்கோ' எனக் கூறவே நானும் சரியென ஒத்துக்கொண்டு 01.01.2008 அன்று ஒரு நூறு ரூபாவைக் கொடுத்தேன்.

'மகர' ஏங்கிப் போச்சுது. 'அய் அக்கே மிச்சற சல்லி? ருப்பியல் தகயாய் அத்தி. மம அதுகாவ வித்தரய் நே கரண்ணே' (ஏன் அக்கா இவ்வளவு காசு பத்து ரூபா போதும். நான் முற்றம் மட்டும் தானே கூட்டுறது) என தன் வேலைக்கு மேலால் கூலி தரவேண்டாம் என்று மறுத்து விட்டார்.

பைத்தியம் என்ன செய்வது அந்தக் காசை அவருக்கே சேர்க்கும் நோக்கில் நான் "இல்லை இன்று புதுவருடந்தானே. அதுதான் இது உங்களுக்குப் பரிசு" என்று கூறி காசை நீட்ட இரண்டு கைகளாலும் பொத்தி வாங்கி என் கால்களுக் கிடையில் தெருவில் நின்று பணிந்தெழும்பி அடுத்த கணம் ஓடினார் தெருப்பக்கமாக.

சற்று நேரத்தில் பழுத்தும் பழுக்காத மூன்று பப்பாக் காய்களை பால் வடிய வடிய பிடுங்கி வந்து 'அக்கே இதை என் அம்மா வீட்டில் எடுத்து வந்தேன். பெற்றுக் கொள்ளுங்கள்'. எனக் கூற, நான் கையிலிருந்த நாற்பது ரூபாவை அவருக்கு கொடுக்க; "இல்லை. இது என் தாய்க்கி சுப அவுறுத் தத்வேவா" (புதுவருடப் பரிசு) எனக்கூறி அப்பால் அகன்றார். காசருமை தெரியாத பைத்தியம்.

## 5

சரி இனி நான் உங்களுக்கு மகர பற்றி சொல்ல வந்த உண்மையான சப்ரருக்கு வருவோம். அதுதான் இளநீர்

பிடுங்காமல் என்னவோ பிறுபிறுத்துக்கொண்டு வேலை செய்யாமல் கூலியும் வாங்காமல் போனாரே, போய் இரண்டு மூன்று நாளால் ஆள் மறுபடியும் எங்கள் வீட்டுக் கேற்றடியில் ‘அக்கே’ எண்டு அன்புக் குரலோடை அழைக்கிறார்.

அவன் இன்றும் கூப்பிட்டதும் வீட்டார் என்னைக் கூப்பிட்டு அவர் வரவுச் செய்தி தெரிவிக்க நான் வழமை போன்றில்லாமல் சற்று ஆறுதலாகச் சென்று விளக்குமாறையும் கூட்ட முதலிலேயே பத்து ரூபா கூலியையும் கொடுக்க வழமையாகக் கதைத்து மினக்கெடுத்தாத அந்த கூலித் தொழி லாளி தான் இரண்டு நாள் தொடர்ந்து வராததைத் தெரிவித்து ‘எப்பிடி சுகமாயிருக்கிறீங்களா’ என்று கேட்டார்.

நான் அவருடன் கதையை வளர்க்க விரும்பாது “ஓம் விழுந் திட்டன் அத்த அமாறு” எனக் கையைக் காட்டி காசையும் விளக்குமாத்தையும் குடுத்தன்.

என் கையைப் பார்த்து துடிதுடித்துப் பதைத்து “எப்பா எப்பா சல்லி எப்பா பொட்டக்கின்ட மம இக்மனிட்ட என்னங் ஹொந்த பேத் டிக்க அறங்கென்னம்” (வேண்டாம் வேண்டாம் காசு வேண்டாம். கொஞ்சம் பொறுங்கோ. நான் உடனயே வாறன். நல்ல மருந்து கொஞ்சம் எடுத்துக் கொண்டு) என்று சொல்லி விறு விறெண்டு முற்றத்தை கூட்டி விளக்குமாற்றைத் தந்துவிட்டு ஓடுகிறார்.

நான், ‘கடவுளே இந்தப் பைத்தியம் இண்டைக்கு ஒரு மாதிரி அலட்டி என்ர நேரத்தை எடுக்காமல் போயிட்டுது’ என்று சந்தோசப்பட்டுக் கொண்டு போய் படுத்திட்டன், காச்சல் காயுது. படுத்து கொஞ்ச நேரத்திலை ஆரோ ஹோலிங் பெல்லை அடிக்கினம். நான் என்ர உறவினர்கள் யாரோ என்னை வருத்தம் பார்க்க வந்திருக்கினமாக்கும் ‘அப்பாடா நல்லதாய்ப் போச்சுது எனக்கு பிராக்கு’ எண்டு சந்தோசப்பட்டுக் கொண்டு போய் கேற்றைத் திறந்தன்.

ஐயோ வாசல்ல அந்த விசர் அழுக்கு. கூலிப் பைத்தியம். திரும்பவும் ‘இதென்னடா இந்த விசர்’ எண்டு ‘என்ன’ என்று சற்று சினத்துடன் கேட்டால் கையில் ஒரு பிடி பச்சிலை வகைகளுடன் அவர் எனக்கு கை விழுந்த நோய் மாற்றும் மூலிகைச் செடிகள் அவையெனக் கூறி அவற்றையிடித்து வாகனங்களுக்கு விடுகிற பிறேக் ஓயிலும் சித்தாலெப்பையும்

மஞ்சள் உப்பும் போட்டு தண்ணி விட்டு விழுந்த கையை அரை மணித்தியாலத்திற்கு அந்த நீருக்குள் இரண்டு நாளைக்கு வைச்சிருந்தால் இரண்டு நாளில் என்ர வருத்தமும் பறந்தோடி விடும் எண்டு சொல்லிறார்.

நான் ஓமோமென அவசர அவசரமாகக் நன்றி கூறி அவற்றை வாங்கி கேற்றைப் படக்கெண்டு பூட்டுகிறன் என்னை மினக்கெடுத்தாமல் போக விட்டால் காணும் எண்ட நோக்கில. காச்சல் எண்டால் நல்லாய் காயுது, அதுக்கை இந்த விசரோடை என்னாலை செல்லம் விட ஏலாது. மீண்டும் நான் என்ர பங்கர் அறைக்குள் கொதி வலியுடன் அழுகையுடன் தனியே.

## 6

ஒருவாறு மாலை வந்தது. என் வீட்டுக் கூட்டிலிருந்து காலை 8.00 மணிக்கு தங்கள் தங்கள் அலுவல்களுக்குச் சென்ற பறவைகளெல்லாம் ஒன்றொன்றாய் மாலை 6.00 மணியிலிருந்து என் வீட்டில தங்கள் கூட்டிற்குத் திரும்பிக் கொண்டிருந்தனர்.

என்னிடமும் ஒரு திறப்பு. என் வீட்டிலுள்ள சக உறுப்பினர்களிடமும் ஒவ்வொரு திறப்பு. எல்லாரும் தத்தம் பாட்டில் இன்று நான் கேற் திறவாமலே வீட்டுள் நுழைந்து விட்டனர்.

வாசலில் ஒரு அழைப்பு மணி, மகள் செல்கிறார். எமது நண்பர் ஒருவர் வைத்தியசேவைப் பிரிவைச் சேர்ந்தவர். அவர் வந்து முன் மேசையில் நான் போட்டுவிட்டுச் சென்ற பைத்தியம் தந்த மூலிகைகள், இலை குழைகளை சும்மா பார்த்துவிட்டு எங்கள் ரீப்போவில் இருந்த ஏதோ ஒரு புத்தகத்துள் தன்னைப் புதைக்கத் தொடங்கினார் என் கணவனின் வரவு வரும்வரை.

மறுபடியும் ஓர் அழைப்பு மணி வந்தது. பைத்தியம் என் நோவிற்கு மூலிகை தந்து சென்ற பைத்தியம்.

“அக்கே தங் சனிப்பத (அக்கா இப்ப சுகமா) பேத் தம்மத? (மருந்து போட்டதா?) என விசாரிக்கிறார்.

எனக்கு எதுவும் சொல்ல முடியாமல் “வீட்டில் ஒருவரும் இன்று இல்லை. அதனால் நாளை அந்த வைத்தியத்தைச் செய்கின்றேன்” என்று எனக்குத் தெரிந்த சிங்களத்தில் பொய் சொல்லவே “இன்ட அக்கா இன்ட” என்று கூறிப் போய் விடுகிறார்.

நான் வீடு வந்திருந்த வைத்திய சேவை அதிகாரியிடம் அவரின் செயலைக் கூறி அவர் தந்த மூலிகைச் செடிகளைக் காட்டி “இது என் விழுந்த கை நோவினை எடுப்பதற்கான மருத்துவ குணம் உள்ளவையோ” எனக் கேட்டன்.

“ஓம் கோரைப் புற்களைத் தவிர்த்து அனைத்தும் நோய் நீக்கும் நிவாரணிகள்” என்கிறார்.

எனினும் என்னால் அவற்றை இடித்து என் கைக்கு நானே பத்துப் போட ஏலாத நிலைமை. மற்றவர்களுக்கு பைத்தியத்தின் வைத்தியத்தில் நம்பிக்கையின்மை. அவரின் செய்கையை இட்டு அவர்களுக்கு ஒரே பகிடி.

அடுத்த நாள் மகளுக்குப் பள்ளிக்கூடமில்லை. மகள் வீட்டுக்கடமையில் மூழ்கிவிட்டா. வீட்டின் அனைத்து வேலை களும் படிக்கும் அவளின் தலையில். காலை 10.00 மணி இருக் கும். வீட்டில் அழைப்பு மணி அழைக்கிறது. மகள் சென்று பார்க்கிறார்.

மகளிடம் பைத்தியம் பாவிக்காத பெரிய பாத்திரம் கொண்டு வரும்படி கேட்டுக் கொண்டு நிற்கிறது. என்ன வாசலுக்குச் சென்ற பிள்ளையை இவ்வளவு நேரமும் காணவில்லை. யாரோடு கதைத்துக்கொண்டு நிக்கிறா என நான் சென்று பார்க்கவே, வந்தாரே ராசா கையில ஒரு பொலித்தீன் பாக்கோட. பாக்குக்குள் ஏதோ கறுப்பாய் கரும்பச்சையாய் தண்ணீராய் எண்ணெய்த் தன்மை சார்ந்ததாய். இலை குழைகளை கோரப் புல்லை நருவல் நொருவலாய் இடிச்சுப் போட்டுள்ள தண்ணிக் குளம்போடை சாணியைக் கரைச்ச நிறமாயும் கிடக்குது.

என்ர பெட்டைக்கு அருவருக்குது. மகள் பைத்தியம் சொல் லுற வேலையெல்லாம் நிண்டு வேலை செய்யுறா. வழமையாய் அந்தப் பைத்தியத்தை ஒளிச்சு நிண்டுதான் கிரகிப்பா பயத் திலை. அவாக்கு என்ர வயதுப் பக்குவம் இல்லைத்தானே. பைத்தியத்தோட அனுசரிச்சுப் பழக.

அந்த தண்ணியை பழைய வாளிக்குள் ஊத்தினார். என்னை என்னுடைய முழங்கைகள் அந்த நீருக்குள் மூழ்கும்படி அரை மணித்தியாலங்கள் வைக்கச் சொன்னார். நானோ சுடு தண்ணி வைச்சு குளிச்சிட்டு சனல் பண்ணின முறிவுதறிவு ஸ்பெஷலிஸ்ட் டொக்ரரிட்டை போக ரெடி.

*தண்ணியை மணந்து பாத்தன். அப்பாடா சாணி மணக் கேல்லை. ஏதோ இஞ்சின் ஒயில் மணம். ஒன்றும் செய்ய முடியேல்லை, ஆபத்துக்குப் பாவமில்லை. விட்டன் கையை அவரின் மூலிகைச் சாற்றினுள். அவர் பதினைந்து நிமிடம் என் வீட்டு கேற் வாசலில் நின்று நான் மருந்து வாளிக்குள் கையை அவர் சொன்ன முறையில் சரியாக வைத்திருக்கிறனா எண்டு பாத்துப் போகும்வரை அப்படியே இருக்க வேண்டியதாய்ப் போய் விட்டது. பாவம் அந்தாளையும் திருப்திப்படுத்த வேணுமே.*

*அது அந்தளவு பாடுபட்டு எனக்கு மூலிகை தேடி இடித்து அதை திரவமாக கொண்டு வர பாத்திரமில்லாமல் பொலித் தீன் பைக்குள் ஊற்றி அந்த நீர் பையால் ஓடி முடிய முதல் வேர்க்க விறுக்க ஓடி ஓடி வந்து என்னட்டைச் சேர்ப்பித்த அன்புக் காணிக்கையை— மருத்துவ சிகிச்சையை எவ்வாறு மறுக்க முடியும்.*

*ஆனால் சும்மா சொல்லக்கூடாது. அவர் தந்த மூலிகை பிறேக் ஒயில் கலந்த தண்ணீர்க் கலவைக்குள் கை வைத்ததும் எனது வீங்கின கையில் மசமசவெண்டு கடி ஏறவே ஆள் போனதும் டப்பென்று நான் உடனயே வெந்நீர் சோப் போட்டு கையை கழுவி விட்டன்.*

*முற்றம் கூட்டிவிட்டு நான் பரோபகாரமாய்க் குடுக்கும் பத்தே பத்து ரூபாவை பெருமனதுடன் பற்றிச் செல்லும் பைத்தியத்திற்கு எனக்கு விழுந்து கை நொந்ததும் மனவருத்த மாக அமைந்து விடுமோ என வருந்தி தொடர்ந்து இரண்டு நாட்களாக அவரின் மேற்பார்வையின் கீழ் அந்த அவரின் வைத்தியத்தை நான் தவறவிட முடியவில்லை.*

*பிறேக் ஒயிலைத்தான் கராஜ்களில் வேலை செய்யும் தொழி லாளர்கள் ஏதேனும் தங்கள் உடலில் ஆயுதங்கள் அடித்து விட் டால் உடன் அந்த இடத்திற்குப் போடுவார்களாம் என்றதை ஒரு கார் மோட்டார் கடை வைத்திருக்கும் உரிமையாளரும் ஒத்துக் கொண்டார்.*

## *7*

*என் கணவனுக்கு இதெல்லாம் ஒரு வேடிக்கை. பைத்தி யத்தின் பெயர் மகரவாம். தனக்கு வயது நூற்றிஎட்டு என்பார்,*

மறுநாள் நூற்றிப் பதினேழு என்பார். இரண்டு மூண்டு நாலு நிமிடம் கதைப்பது வழக்கம்.

என் கணவர் அந்த பைத்தியத்துடன் எதற்கும் கவனமாக இருக்கும்படி என்னை எச்சரிக்கை செய்து கொள்வார். சிங்கள வனாம், விசரனாம், குடு பாவிச்சு பைத்தியமானவனாம். சேரி யனாம். உதிரி பாட்டாளி வர்க்கத்தோடு நேரம் மினக்கெட்டு அவர்களை திருத்த முடியாது. எனவே அவர்களுடன் ரைம் வேஸ்ட் பண்ணுவது தப்பு என்பது என் கணவனின் ஒரு அபிப்பிராயம். அவனிலை வயசும் தெரியேல்லையாம், அரசியலும் பேசுறானாம். C.I.D யோவும் தெரியாதாம்.

"நாங்களில்லாத நேரம் கதவு திறந்து போடாதை. நாங்க ளெல்லோரும் வெளியிலை போக பாத்து வைச்சிட்டு வந்து தனிய இருக்கேக்கை கொலை கிலையும் செய்து போடுவானாம்" எண்டு என்னைப் பயங்காட்டி வீட்டில எல்லாரும் எச்சரிக்கை செய்து வைச்சிருக்கினம்.

நானும் என்ர வீட்டிலை ஆக்கள் இருக்கேக்கை மகர வந்தால் மட்டுமே மகரவுக்கு கேற் திறக்கிறது. மற்றப்படி அந்தப் பொடி எத்தினை வயதிருக்குமோ தெரியாது. சிலவேளை வயது இருபத்தைந்திலையிலிருந்து ஒரு முப்பதுக்குள்ளைதான் இருக் கும் எண்டு நினைக்கிறன். என்ர மகனிலும் விட வயது கூட வாத்தான் இருக்கும். காலைமை தவிர்ந்த ஏனைய நேரங்களிலை எனக்கு மருந்து கொண்டரேக்கை வந்ததுக்கு சத்தியமாய் வேறை ஒருநாளும் வரேல்லை. பாவம் அந்தப் பிள்ளை. நல்ல பிள்ளை.

நான் அவரை (மகரவை) முதலிலை சந்திச்சது ஒரு இன்றெஸ்ரிங் மற்றர். அதையும் நான் உங்களுக்கு ஒருக்கா தெளிவாய்ச் சொல்லவேணும்.

நாங்கள் 90ம் ஆண்டு யாழ்ப்பாணத்திலையிருந்து கொழும்புக்கு வந்து இப்ப இருக்கிற வீட்டை வாடகைக்கு எடுத்திருந்த காலத்திலை ஒரு பைத்தியம் நடு ரோட்டாலை கையிலை ஒரு இரண்டு அடி மூன்று அடி நீளத் தடியும் கொண்டு தரையைத் தட்டித் தட்டி தமிழர், சிங்களவர் எல்லாரையும் ஏசிக்கொண்டு என்னவோ புலம்பிக் கொண்டு நடு ரோட்டாலயே போகும். அப்ப எனக்கு சிங்களம் விளங்காது. ஆனால் கொட்டிய, திறஸ்த வாதி LTTE எண்டது மட்டும் விளங்கி 'தமிழரை என்னவோ ஏசுது பைத்தியமே'

எண்டபடி நான் பயத்தில பிள்ளையள அப்ப சின்னாக்கள் றோட்டுக்கு கரையாலை கானோடை அணைச்சு அணைச்சு அவரைத் தாண்டி கொண்டோடி விடுவன். இது இப்பிடியே வருசக் கணக்காய் நான் பிள்ளையளை பள்ளிக் கூடம் கூட்டிச் செல்லும் ஒரு வழமையான நடைமுறை நிகழ்ச்சி.

கொஞ்சக்காலம் ஆறேழு வருசம் போக பிள்ளையள் ஓயெல், ஏயெல் வர தாமே தனித்து தங்களின் விடயங்களிற்கு போய்வரத் தொடங்கி விட்டினம். இந்நிலையில் ஒருநாள் அதி காலை கனகால இடைவெளியின் பின் எங்கள் வீட்டின் அண்மையிலுள்ள பேக்கறிக்கு நான் பாண் வாங்க பத்து ரூபாவுடன் சென்றிருந்தவேளை சப்தம் எதுவுமின்றி நிசப்தமாக விறுவிறுவென்று நடந்துகொண்டு ஏதோ அவசர காரியமாகப் போவது போல் நான் குறிப்பிடும் மகரவைக் கண்டன். அவருக்கு ‘இப்போது பைத்தியம் மாறிவிட்டது போல’ என நினைத்து என் கையில் உள்ள காசை அவர் கண்படும் படியாக என் காலுக்கருகில் இந்தக் காசை அவரைப் பெறும்படி நீட்டினேன். அவர் பார்க்க வில்லை. மீண்டும் நீட்டினேன். மீண்டும் நீட்டினேன். அவர் கண்ணில் காசு பட்டுவிட்டது. வாங்க மறுத்தார். கண்கள் என்னைப் பார்க்காமலே கைகளால் நான் மீண்டும் மீண்டும் சைகையால் அந்தக் காசைப் பெறும்படி வற்புறுத்தவே நிமிர்ந்து என் முகம் நோக்கினார். கண்ணில் ஆயிரம் தேடல். ஒரு பைத்தியத்தின் கண்களில் இத்தனை கேள்விக் கணைகளா? எதையோ தேடினார். அப்படியே போய் விட்டார்.

மறுநாளும் அதே சந்திப்பு. அதே என் காசு சைகை காட்டல். அவரின் மறுப்பு அதற்கடுத்த நாளும். நான் காசை அவருக்கு நீட்டவே மூன்றாம் நாள் ஆள் நின்றார். என் சைகை தொடர்கிறது. அவர் பேச வெளிக்கிட்டார். எனக்குப் பயம் வந்திட்டுது. ‘ஐயோ எனக்கிது தேவையில்லாத வேலை. யாரோ பைத்தியம் சாப்பிடாமல் கிடந்தாலென்ன விட்டாலென்ன’ என்று தீர்மானித்து விட்டு அப்பால் நகன்றேன்.

“அக்கே ஒயாட்ட பிஸ்சுத? மம பிஸ்சுத் தமாய். ஆனால் நான் ஒருநாளும் உழைக்காமல் யாரிட்டையும் பிச்சை வாங்கி உண்ணமாட்டன். உங்களுக்கு விருப்பமெண்டால் உங்கள் வீட்டுக்கு வெளியே ஏதேனும் வேலையிருந்தால் தாருங்கள்.

நீங்கள் தரும் பத்து ரூபாவைப் பெற்றுச் செல்கிறேன்” என்றார் சிங்களத்தில்.

நான் என் பின்னே அவரை வரும்படி சைகை காட்டினேன். பின்னே வந்தார். விளக்குமாற்றை எடுத்து கேற்றுக்கு வெளியே குடுத்தன்.

முற்றத்தை விறுவிறெண்டு வடிவாய்க் கூட்டினார். குப்பையை அள்ளி உரப்பைக்குள் போட்டார். விளக்குமாற்றைத் தந்தார். பத்து ரூபாவைப் பெற்றார். நடையைக் கட்டுகிறார். இதுதான் மகர.

ஆனால் நான் மகரவுடன் இரண்டொரு சொல் செவிமடுத்துப் பேசுவது அயலில் சிலருக்கு அவமானம் போலும். அதால ஆட்கள் இல்லாத வேளைகளில்தான் அது பாவத்தோடு நான் மற்றவர்கட்குப் மனப்பயமின்றி ஓரளவு அதன் கதைகளைக் கிரகிப்பது. பைத்தியங்களின் பேச்சுக்குள் எவ்வளவு அர்த்தங்கள், மனிதநேயங்கள் உள்ளன என்பது என் அனுபவத்தின் கண்கூடு.

நான் இந்த இடத்தில் உலகப் புகழ்பெற்ற நூலான லூசுன் எழுதிய “பைத்தியக்காரனின் டயறி” (mad man's diary) என்ற கதையை நினைவு கூருகிறன். என் தோழன் ஆபத்து வேளையில் என்னை வந்து பார்த்து சுகம் கேட்டு நோவுக்கு சுகம் செய்தவன். இன்னும் என்னும் எந்தன் உறவினர்கள் என்னை வருத்தம் பார்க்க வந்தார்களில்லை. என் கை நோ மாறிவிட்டது.

நாளைக்கு ஒருக்கா வீடு வாசலெல்லாம் தூசுதட்டி துடைச்சு உடுப்புகள் வோஷிங் மிஷினிலை போட்டு எடுத்து வீடு மொப் பண்ணி பாத்திரங்கள் எல்லாம் மினுக்கி வடிவாய் நாலைஞ்சு கறியோடை என்ர கையாலை வடிவாய் பல்லுக்குப் பதமாய் சமைச்சு சாப்பிட்டு பின்னேரம் தமிழ்ச் சங்கக் கூட்டத்துக்குப் போகவேணும். கூட்டத்துக்கு வாற பிரண்ட்ஸ்ஜயும் கண்டு கனநாள் (பத்து நாள் ஆகுது).

வேலை நிறைய எண்டு யோசிச்சுக் கொண்டு என்ர வேலையளைச் செய்து கொண்டிருக்கேக்கை ஒரு தொலைபேசி அழைப்பு. எங்கள் வீட்டிற்கு என் விழுந்த கையில் வந்த நோவை வருத்தம் பார்க்க இன்று மாலை தாம் வாறதாக உறவினர் என்னிடம் அப்பொயின்ற்மென்ட் வைக்கினம்.

*அவர்கள் வரும்போது என் பைத்தியக்கார நண்பன் எனக்கு நோயுற்ற காலத்தில் "உடுக்கை இழந்தவன் கைபோல் ஆங்கண் இடுக்கண் களைவதாம் நட்பு" செய்த தொண்டினைக் கூறி யாராயிருந்தாலும் ஒரு ஆபத்து வேளையில் உதவிசெய்வது என்ற பைத்தியத்தின் வைத்திய வாழ்க்கைத் தத்துவத்தை எப்படி அவர்களுக்கு புரியவைப்பன்?*

*அவர்களின் காதுகளுக்குள் மகரவின் வாழ்வின் பெருமை கள் பிடிபடுமா என்ற சந்தேகத்துடன் வேகமாக மிக வேகமாக என் வேலைகளில் கை காலை ஓட விடுறன் தூர நோக்கோடை.*

o

# குறிப்புகள்

## வாழ்க்கை

*வாழ்க்கை என்பது பல துன்பங்களின் கலப்பான சாகரம்.*

*அதில் பல மீன்கள் வந்து போகின்றன.*

*சில மீன்கள் எம் அன்புடன் மனதுடன் கலந்து போகின்றன.*

*சில வந்து போய்விடுகின்றன.*

*நிரந்தரமாக எம்முடன் கலந்துவிட்ட மீன்களையும் விட எம் கையில் வந்து நழுவி விட்ட மீன்களின் நழுவல்கள் ஏனோ மீண்டும் மீண்டும் வந்து துன்பத்தைத் தருகின்றனவே.*

*ஏன்*

****

*உண்மையான குழந்தைகளைப் பெறாதவன் மற்றவர்களின் குழந்தைகளையும் நேசிக்கத் தவறி விடுகிறான்.*

*13.12.2011*

****

## எந்த உறவு

*எந்த உறவு நிரந்தரம்.*

*இந்த உலகத்தில் வரும் எந்த உறவும் நிரந்தரமானதல்ல.*

*வழிப்போக்கில் வரும் பயணிகள் ரயில் சிநேகிதங்கள்.*

*யார் உறவினன்.*

*ஒரு துன்பம் உற்றவேளை வந்துதபுவனே நண்பன்.*

*உண்மையான உறவினன்.*

*யார் கண்டோம். இப்பிடிப் பிரிந்துபோவோம் என்று.*

*சில உறவுகள் காசுகளை அடிப்படையாகக் கொண்டன.*

*சில சுயநலத்தை அடிப்படையாகக் கொண்டவை.*

*யாரறிவர் உறவுகள் இன்னின்ன வகையின தாமென்று.*

*எல்லாம் பட்டுத் தெளிவானவாயே உள்ளன..*

*உறவும்தான் உலகமும் தான்.*

*எது எப்படி இருப்பினும் உலகம் பலவிதம்.*

*ஒவ்வொன்றும் ஒருவிதமே.*

****

# *நீ நீதான் நான் நான்தான்*

*நீயுமோ பலதடவை உன் அந்தக் கல்லால் என்மேல் உன் சொல் அம்புகளைச் செலுத்துகிறாய்.*

*நானுமோ பலதடவைகளும் உன் அந்தச் சொல்லம்புகளே என் அந்த சொற்கள் என்னும் மெத்தைகொண்டு தடுக்கிறேன்.*

*எனினும் உன் சொல்லம்புகளும் குறைந்தபாடில்லை.*

*என் மெத்தைகளும் உன் வலியை உணர்வதாயில்லை.*

*இது ஏன்?*

*என்னை நான் உணரத் தவறுதனாலா?*

*அல்லது*

*உன்னால் இன்னும் என் சொல்லம்புகளில் வலியை உணர்வதனாலா?*

*எது வரினும் ஆண்டவரே– நீ*

*நீதான்*

*நானும் நான் தான்.*

*என்னை உன்னாலும் மாற்ற முடியாது.*

*உன்னை என்னாலும் திருப்திப் படுத்த முடியாது.*

*ஏனெனில்*

*நீ நீ தான்*

*நான் நான் தான்.*

****

## சுயம்

மனிதர்கள் அநேகமாகத்

தம்மைத்தாம் புகழ்பர்களாகவே இருக்கின்றனர்.

இது என்னிடம் மட்டுமல்ல உன்னிடமும் உங்களிடமும் மிகுதியாகவே உணர்கிறோம்.

அப்போது எம் சகிப்புத் தன்மைக்கேற்படும் சவாலானது ஒருவனைப் பூரணப் படுத்தும்.

ஒவ்வொரு மனிதனுமே சுயநலப் பிராணிதானே,

ஆகவே அவன் சுய(நலப்) புராணம் பாடுவதில் ஆச்சரியம் தான் என்ன?

***

## சமநிலை

ஆண்

நான் இன்று என் சுயத்தை இழந்துவிட்டேன்.

இன்று அதிகாலையிலேயே என் நெஞ்சு துடிக்கிறது.

இது ஏன் ஏன்.

என் தப்பா? யார் தப்பு.

கடந்த ஒரு வாரகாலமாக என் நெஞ்சு இச் சேதியை வெளிப்படையாகக் கேட்டதிலிருந்து நெஞ்சு பொறுக்குதில்லை.

உலகத்தில் மனிதர் என்னவோ என்னவோ பிரச்சனைகளுக் கெல்லாம் அலறித் துடித்துக் கொண்டிருக்க.

இந்த ஒரு அற்ப பிரச்சினைக்கு உன் நெஞ்சு கலங்குவது சரிதானா?

எத்தனை பேர் இப்பூமியிலே கைகால்களை இழந்தும்

உறவினர்களை இழந்தும் உதவியற்று

உண்ண உணவிருந்தும்

ஊட்டிவிட எவருமில்லாமலும்

உண்ண உணவே இல்லாமலும்

உடுக்க உடுபுடவையிருந்தும் உடுத்திக்கொள்ள தன் சொந்த பலமில்லாமலும் அவதிப்படுகின்றார்களா?

என்ன?

*உன் நிலையும் அது போன்றது தான் என உன் உள்ளம் உருகுகிறதா.*

*சரி நீ காலிருந்தும் கையிருந்தும் காசிருந்தும் உறையுள் இருந்தும் எதுவும் இருந்தும் எல்லாம் இல்லாதது போல் இருக்கின்றதா?*

*எல்லாம் உன் வாழ்நாளில் ஒரு நாளில் இரவும் பகலும் மாறி வருவது போல் உன் வாழ்க்கைப் போக்கும் பொருளாதாரமும் 50:50ஆக இருந்தும் இல்லாமலும் இருக்கின்றதா!*

*என்ன செய்வது. நீ கவலைப்படுவது ஞாயம்தான். வாழ்க்கை என்ற ஆனால் அத்தியாயத்தில் நாணயத்தின் இரு பக்கங்கள்தான்.*

*இன்பமும் துன்பமும் என்பதை இதுவரையும் நீ உணர்ந்திருக்கிறாயா?*

*உன் அனுபவங்கள் இப் பாடங்களைக் கற்றுத் தரவில்லையா?*

*மனித மனம் எப்போதும் சந்தோஷத்தை விரும்பும் சுபாபம் கொண்டதென்பதாலா இன்பத்தை மகிழ்வுடன் ஏற்கும் குதூகலிக்கும் மனம் துன்பத்தைக் கண்டு துண்டுவிடுகிறது.*

*இது இயற்கை. ஆனால் நீ இன்பத்தைக் கண்டு மகிழ்வதை விடுத்து குதூகலிப்பதை என்று நிறுத்தத் தொடங்குகிறாயோ அன்றே நீ துன்பப்படுவது நின்றுபோகக் காண்பாய்!*

*மலபரிபாக்கம்.*

***

# *சுயநலம்*

*அவள் ஒரு அழகிய தேவகி. சிறுக்கி. அவளின் அழகு (அவளுக்கு மட்டும் தெரிவதில்லை.*

*எல்லோருக்கும் தெரியும். (சிறுவர் முதல் கிழவர் வரை)அத்தகைய அழகு அவளது.*

*பார்ப்பவரை மயங்க வைக்கும் கிறுங்க வைக்கும் அழகு.*

*ஆனால் அவளோ எப்போதும் ஏதோ ஒரு எதிர்பார்ப்புடன் அவர்களுக்குள் அழுது கொண்டே இருப்பாள். மற்றவர்களின் துயர் கண்டு.*

*ஆனால் என்னமோ தெரியாது. மற்றவர்களுக்கு அவள் ஒரு அழகு தேவதையாகத் தெரியுமே தவிர அவள் மன அழகு ஒரு போதும் தெரிவதில்லை. அவள் கணவன் உட்படவா? ஊரில் அநேகம் பேர்வழிகளுக்கு.*

இளமைக் காதல் அவளுள் துளிர்த்தபோதெல்லாம் அவள் தனது அழகை அவளுள் வளம்படுத்தத்தான் செய்தாள்.

ஆனால் இன்றோ அவள் தனது கூந்தலை மழிக்கத்தான் செய்கிறாள். முடி பெண்ணுக்கு அழகென்று பலபேராலும் பாராட்டவும் புகழவும் செய்கிறாள். ஆனால் அவளுக்கோ தன் முடி நரக வேதனையாக தற்போதுணர்கிறாள். ஏன் இவளுக்கு நடந்தது என்ன. இவள் ஏன் இப்படி ஆனாள். யார் இவள்.

யார் பிறருடைய துன்பங்களைக் கண்டு தன் துன்பங்களாக எண்ணித் துவண்டுபோவார்களோ அவர்கள் வாழ்வில் ஒருபோதும் நிம்மதி, நிம்மதியான தூக்கங்கள் கனவுகளையும் தொலைத்தே விடுவார்கள்.

ஒரு துளியாவது ஒரு மனிதனுக்கு சுயநலமும் இருந்தாலே அவன் வாழ்வில் கொஞ்ச சந்தோஷமாவது நிலவ முடியும்.

இது எம்போன்ற பலரின் அனுப உண்மைக்கூற்று.

***

# ஒஸ்ரியோ ஆதரைட்

*(8.12.2011ல் பிறந்தநாள் விழாவில் கலந்துகொள்ள முடியாத சூழ்நிலையின் போது விழுந்த எழுத்துக்கள் இவை.)*

*கடல் கன்னிபோல் கால்களை இழந்துவிட்டு கட்டிலில் துவண்டுபோய்க் கிடக்கும் என் கால்களைப் பார்த்து காரில் போய் வரலாம் என்று கெஞ்சுகிறாய். என் கண் அவனே.*

*நானோ கால்களைத் தொலைத்துவிட்ட பாவி. காரில் தன்னும் வரமுடியாத பாவி. என் கால்கள் எனக்கு ஓய்வு கொடு ஓய்வு கொடு என என்னிடம் கெஞ்சுவது உன் காதுகளுக்குக் கேட்கின்றனவா.*

*கேட்டிராதே.*

*ஏனெனில்; நான் கால்களைத் தான் இழந்துவிட்ட பாவி. ஆனால் நீயோ காதுகளையும கால்களையும் தொலைத்துவிட்ட பாவியல்லவா!*

*அன்றொருநாள் நான் உன்னிடம் "இங்காருங்கோப்பா என் கால்களுக்குக் கொஞ்சம் எண்ணெய் போட்டு நீவி விட முடியுமா" என்று பலமுறையும் இரவுப் படுக்கையில் உன்னை வைத்துக் கேட்டேன்.*

*நீயோ பலமுறையும் திரும்பிப் படுத்துப் படுத்து ஆத்திரம் தாங்கமுடியாது என் அரிகண்டம் தாங்கமுடியாது என் கால்களுக்குத் தைலம் போட்டு நீவி விட்டாய் அரைகுறைத் தூக்கத்தில்.*

*அது என் அடுத்த கால்களுக்கு என்பதை உணராது.*

*உன்னிடம் போய் அப்போது என் கால்களின் வலியைத் தான் தெரிவிக்கமுடியுமா. என் கால்கள் நடமாடத் தடுக்கின்றன. கால்கள் நடுங்குகின்றன என.*

*என் கால்களோ சபை நடுவில் நர்த்தனமே ஆடுகின்றன என்பதை நான் உனக்குத் தெரிவியாமலே.*

*So*, நான் எப்படி உன்னுடன் சதுர்க்கச் சேரிக்கு வரமுடியும். என் வலிகளை மிகவும கஷ்டப்பட்டுத் தாங்கும் நிலையில், நீ கேட்பதோ ஒரு பேர்த்டேப் பாட்டிக்கு.

நானோ பாட்டி பாட்டி.

எனினும் நீ கேட்பது ஒரு கஷ்டப்பட்ட மனிதனுக்கு உதவி செய்ய வேண்டிய இடமாயின் நான் என் கால்களையும் இழந்துவிட்டு உதவி செய்யத் தயங்கமாட்டாதவள் எனத் தெரிந்திருந்தும் தெரியுயாத நிலையில் நீ.

எனவே என்னவனே! என்னை மன்னித்துவிடு. உன்னுடன் என் கால்கள் பாட்டிக்கு பாட்டிசிபேற் பண்ண முடியாத பரிதாப நிலைக்கு.

அங்கு ஒரு கால்களுக்குப் பரிகாரம் வரும் எனினும் வருவதற்கு யோசிக்கும் நிலையில்.

*So* என்னவனே என்னை மன்னித்துவிடு மறந்துவிடு. நான் உன் மனைவி என்பதையும். அதனால்தான் நான் இப்போது என் கால்களைப் பராமரிக்கும் நிலையில் உனக்கு சொக்ஸ் எங்கை சூஸ் எங்கை, சீப்பு எங்கை பவுடர் எங்கை பென்ரர் எங்கை பெனியன் எங்கை நேற்றுப்போட்ட றவுஷர் எங்கை.

எங்கை என் ரவல் சாரம். ஐயோ சோப் எங்கை பிறஷ் எங்கை உண்மையிலையே உனக்கு உன் பிறஷ் கலா சோப் எது ரவல் எது சறம் கூட எது சேவிங் றேசர் வைச்ச இடம் எது என்று நீ நேற்று வைத்த இடத்தையே இன்று தெரியாத நிலையில்.

சத்தமோ உச்சஸ்தாயி.

அடுத்த வீடுகளுக்கு உன் அவலம் போய்க் கதவைத் தட்டாத நிலையில்!

நான் அவசர அவசரமாக ஒரு பொருள் எடுத்துத் தர முதல் அடுத்த பொருளின் வரவை நீ அவதியாய் அவாவும்நிலையில்!

இரண்டு கைகள் இருந்தும் ஒரே நேரத்தில் பத்து இலையான்களைக் கைப்பற்ற முடியா கையறு நிலையில் எனி என்னால் முடியாதப்பா.

நான் என் சமநிலையைத் தொலைத்துவிட்ட பாவி.

எனினும் என்னை நான் பாதுகாக்கத் தவறிவிட்டாலோ நாயும் நரியும் தான் என்பிணத்தை எடுத்துச் சுடுகாட்டில் எரித்து விட்டுப் போகும் நிலையில்.

*So*, கணவனே குட்பாய் ராசா. போய் வா புன்னகை சிந்தி உன்முகம் சிவக்கப் போய்வா.

*எனியும் நான் என் முகத்தையும் தொலைத்துவிட விரும்பாத என் அவல நிலையிலிருந்து.*

★★★★

*ரஜனியின் பிறந்த நாளுக்கு அடுத்த நாளில் எழுதியது.*

*13.12.2011 மாலை 7.05.*

*மாலையில் கடல்கன்னி நான் காலையிலோ கட்டிளம் பாலகி.*

*என் கடமைகளை அதிகாலை முதல் மதியம் 2 மணிவரை ரிதம் பிசகாத நடையில்.*

*செய்வன திருந்தச் செய்வேன்.*

*மாலையில் கால்கள் துவழ படுக்கையில் தடுமாறியபடி ஏறி சினிமாவில் சுதி ஏறி காது புளிக்கப் புளிக்க கண்கள் மயங்க அரைக்கணம் கண்ணயர்ந்து ஐயோ ஒரு கணத்தையும் வீணாக்கிவிட்டேன் எனப் பயந்துவிடுவேன். ஆழ்ந்த மூச்சு நிமிடத்திற்கு மூன்றரை விழ.*

*சாதாரணத்தில் 8ற்கும் 10ற்கும் இடையில் உள்ள என் ஒரு நிமிட மூச்சை நிமிடத்திற்கு மூன்றரை ஆக்கி என் உடலில் ஜீவ களை ஏற்றி மீண்டும் பழமைக்குத் திரும்புவேன்*

*மீண்டும்,*

*ஒருமுறை வாழ விரும்பி திறம்பட!*

# திண்...டாட்...டம்

ஓ கடவுளுக்குந்தான் திண்டாட்டமாம்.

என்ன இது நம்பமுடியவில்லை. கடவுள் இருக்கும் போது எல்லோரும் கடவுளிட்டைத்தான் தங்கடை குளறுபடியளை குழப்பங்களை தேவைகளை வேண்டிக் கொள்வார்களா? முறை யிடுவார்களா,

கடவுள் எல்லாம் தீர்த்து வைப்பார் என்ற நம்பிக்கையின் அடிப்படையில்தான்.

சிலர் சிறு குழப்பங்களுக்கும் பலர் பெரிய பெரீய குழப்பங் களுக்கும் கூட.

என்னதான் தங்கள் குழப்பங்களைக் கடவுளிட்டை முறையிட்டு தீர்த்து வைக்கும்படி வேண்டிக் கொண்டாலும் சிலற்றை பிரச்சனை என்னவோ தீர்ந்தது உண்மைதான்.

எனினும் பலரின் பிரச்சினை நான் அறிந்த மட்டில் தீர்ந்த பாடாய் இல்லை.

எல்லாம் அவன் செயல்.

எம் செயலாவதொன்றும் இல்லை. ஒரு நாள் எனக்கும் ஒரு பிரச்சனை. நானும் கடவுளிட்டை கடைசியாய் வேண்டிக் கொண்டன்.

“அப்பா பிதாவே எல்லாம்

உன் திருவிளையாடலப்பா”

“ஏனப்பா எனக்குள் ஆசையை விதைத்தாய்.

பேசாமல் என்பாட்டிலை ரூபவாஹினியிலை வாற நோமல் சனல்களிலை வாற புறோகிறாமுகளைப் பாக்கிறதை விட்டுட்டு எல்லாரும் சொல்வினமே.

கேபிள்ச் சனலுகள் வலு விஷேசம். அதிலை அந்தப் புறோகிறாம் திறம், இந்தப் புறோக்கிறாம் திறம். அந்த அதிலை இப்பிடிச் சொன்னவங்கள். இதிலை இப்பிடிச் சொன்னவங்கள் என்ன உலகமப்பா, அதையெல்லோ பாக்கவேணும்.

உங்கடை வீட்டிலை இல்லையே. நீங்கள் பாக்கிறேல்லையே எண்டிட்டு எல்லாரும் என்னை விட்டிட்டு தங்களுக்கை கூடி குலுகுலுவெண்டு ஏதோ கதைச்சுக் கொண்டு இருந்திச்சினம்.

அப்ப நானும் யோசிச்சன். அப்ப நானும் எனி இந்தச் சனலைப் போடத்தான்வேணும்.

இல்லாட்டில் இந்தச் சமுதாயத்திலை எனி எனக்குக் கதைச்சுப் பேசுறதுக்கு விஷயமும் ஆக்களும் இல்லாமல் போய்விடுவினம் எண்டு.

ஏனெண்டால் எனக்கு இப்ப ரண்டு முழங்கால்ச் சில்லும் தேஞ்சு போச்சுதாம்.

அது தானாம் எனக்கு இப்ப காலிலை சரியான வலி. காலும் ஏலாது எண்டு டொக்ரர் எக்ஸ்றே எடுத்துப் பாத்து மருந்து தந்து சொன்னவர்.

முந்தி யெண்டால் நான் இப்பிடி நிண்டு இவையின்ரை வாயைப் பாக்க ஆசைப்படுவனே. இவை என்ன சொல்லினம். நான் கேக்க எண்டு!

கால் நடக்கேலாத்திலை எல்லே இவேன்ரை வாயை ஆவெண்டு பாத்துக்கொண்டு இவேக்கால ஏதாகிலும் உலக ஞானங்களைப் பெறலாம் எண்டு நினைக்கிறன்.

இப்ப எனக்கு கொஞ்சத் தூரமெல்லே நடக்கேலும். அதாலை இப்ப எங்கடை நாட்டிலை நடக்கிற சொறி எங்கடை ஊரிலை நடக்கிற சொறி சொறி எங்கடை பட்டணத்திலை நடக்கிற கூட்டங்களுக் கெல்லாம் போகேலாமைக் கிடக்குது.

முந்தியப் போலை இப்பயும் என்ரை கால் ஏன் உடல்நிலையே இருந்தால் இப்ப நான் உவயளுக்குக் கிட்ட நிற்பனோ?

இப்ப எந்தெந்தக் கூட்டத்திலையோ கருத்தரங்கிலையோ.

என்ன செய்யிறது? ஆனைக்கொரு காலம் வந்தால் பூனைக்கும் ஒரு காலம் வருந்தானே,

ஆனால் இப்ப எனக்கு இதிலை இப்ப ஆர் ஆனை?

ஆர் பூனை எண்டதையும் உண்மையாய்க் கல்குலேற் பண்ண

முடியாமல்த் தான் கிடக்குது.

ஏனெண்டால் அவ்வளவுக்கு வீட்டுகுள்ளை முடங்கிக் கிடந்து கிடந்து என்ரை மூளையும் முடிஞ்சிட்டுதுபோலை.

என்ன செய்யிறது தலையிடியும் காச்சலும் தனக்குத் தனக்கு வந்தால் தாங்கத் தானேவேணும்.

சரி இந்தா விடு;

நானும் பூட்டுறன் கேபிள் ரீ வி எண்டிட்டு ஒரு நாயோடை ஒப்பந்தம் செய்தன். இந்தக் கேபிள் ரீ. வியைப் பூட்டித் தாறியோ வெண்டு.

மூதேசி ஒரு நாள் வந்துது ரெலிபோன் பண்ணின முதல் நாளே.

சனியனிலை நான் மயங்கிட்டன். அவன்ரை பேச்சிலை அழகிலை.

மூதேசி கால் நட்டக்க மாட்டாதனீங்கள் தனிய இருக்கப் படாது.

ஆரையும் துணையாய் வைச்சிருக்க வேணும்.

நான் அப்பிடி தனிய இருக்கிற சில அன்ரிமாருக்கு என்ரை ரெலிபோன் நம்பரைக் குடுத்து வைச்சிருக்கிறன்.

நீங்கள் எந்த நேரமெண்டாலும் ரெலிபோன் அடியுங்கோ அன்ரி வருவன் எண்டு சொல்லியிருக்கிறன்.

உங்களுக்கும் வேணுமெண்டால் என்ரை ரெலிபோன் நம்பரைப் பிடியுங்கோ. நான் உடனை வருவன்.

யோசிக்காதையுங்கோ அன்ரி, உங்களுக்கு என்ன வயசு. வயசைக் கேக்கிறன் எண்டு குறை நினையாதையுங்கோ.

எனக்கும் அம்மா இருக்கிறா. அதுதான் சும்மா உங்கடை வயசைக் கேட்டனான்.

கேக்கிறன் எண்டு குறை நினையாதையுங்கோ.

உங்கடை அவர்? கலியாணம் கட்டிட்டீங்களோ? பிள்ளையள் இல்லையோ?

எதுக்கும் நான் இரவிலைதான் வருவன்.

பகலிலை எண்டால் நான் வந்து வேலையள் உதவியள் செய் யேக்கை சில புருஷன்மாருக்கு நான் அவையின்ரை மனிசிமாரோடை கதைக்கிறது பிடிக்காமல் இருக்கும்.

உங்களுக்கு எந்த நேரம் வசதி. இரவோ, பகலோ?

எந்த நேரம் வர.

# நான் யார்

*பெயரை மறந்தேன் என் உயிரே*
*நானாக வாழாமல் போனதாலா!*
*என்னில் பலகுறைகளும் நிறைகளும்*
*நிறைகள் தெரியாமல் போனதேன்!*
*பெயரிழந்தேன், திருமதி ஆனேன்*
*முகவரி இழந்தேன்.*
*காலிழந்தேன், அடுத்தவன் காலைநம்பி,*
*சொந்த உருவையே இழந்தேன்*
*நல்லவள் எனும் அடையாளத்துக்காய்!*
*நல்ல மனைவி நல்ல மருமகள்*
*நல்ல மச்சாள், நல்ல தாய், நல்ல மனிசி!!!*

*தயவுடன் சோதரர்களே*
*காலிழந்து கால் அவதியாகாதீர்,*

*இப்படிக்கு*
*உங்கள் நலன்விரும்பி*
*காலாவதியாகிவிட்ட*
*க.லா(அ)வதி*

*- பயில்நிலம் 2004 .*

## கலாலக்ஷ்மி கதைகள் பற்றி

அகநிலை சார்ந்து புற உலக நிகழ்பாங்கை விமர்சன கண்ணோட்டத்தில் பார்க்கும் பார்வை கலாலக்ஷ்மி தேவராஜாவிற்கு வாய்த்திருக்கின்றது.

போர்க்கால சூழல் யாழ்ப்பாணத்தில் நிலவியபோது இடம்பெயர்ந்தும் புலம் பெயர்ந்தும் வாழ்ந்த மக்கள் கூட்டத்தின் துன்பங்கள், அவர்களிடையே ஏற்படும் மனக் கசப்புகள், எதிர்பார்ப்புகள், உணர்வுகள், போராட்ட குணாம்சம், ஆணாதிக்கத்திற்கெதிரான பெண்ணியல் பார்வை என்பன அவரது கதைகளில் இழையோடும்.

மனச்சிக்கல், மனப்போராட்டம் என விரிந்து செல்கின்றது அவரது கதைகள்.

நிகழ் காலப் பாத்திரங்களூடாக சிறு வயதில் நாடகராக அறிமுகமாகி நாடக துறையில் தடம் பதித்த அவர் சிறுகதையாளராக மிளிர்ந்திருக்கின்றார்.

பைத்தியக்காரனாக பார்க்கப்படும் மாந்தரிடம் உள்ள மனித நேயம், மனிதாபிமானம் அறிவுசால் மக்களிடம் இல்லையே என்ற அவரது ஏக்கம் யதார்த்தமான நிலைமை என்பது கண்கூடாகத் தெரிவது,

அவரது கதைகூறல் பாங்கு யாழ்ப்பாண பேச்சுவழக்கை அவ்வாறே தருவது வாசிப்போரை வசீகரிக்கும் வகையில் அமைந்தமை தமிழ் மொழியின் தொடர்பாடல் நவீனத்துவத்தின் மக்கள் இலக்கியப்பண்பைப் புலப்படுத்தும்.

– அழ. பகீரதன்

ரூபா 400/–

J S Printers, Sillalai Road, Pandatharippu

கலாலயம் பதிப்பகம்